பலதேவர் எண்மர் மோக்ஷித்தனர். பத்ம பலதேவன் ப்ரஹ்மகல்பம் புகுந்து வந்து உத்ஸர்ப்பிணீ காலத்தில் கிருஷ்ணன் தீர்த்தகரனாகும்பொழுது கண தரத்வம் எய்தி முக்தி பதமடைகுவர்.

ஸ்ரீமத்குண்டு ஜினபதி புராண மாதியாக ஸ்ரீவர்த்தமான ஜிநபதிபர்யந்தம் ஸ்ரீபுராண மணிப்ரவாள [வி]ப்ரதிவரிவஸரவ்கு: ||
ஸ்ரீவாரமேச்வரவெநம: * * * * * * *

ஸ்ரீமத் பவ்யோர்ன வத்ஸோம பர்த்த ப்ரவர்த்திகாநாம் ஸ்ரீயாய ஸ்ரீவஸ்துகாநாம் வர்த்தமாநஸகலாசார்யாணாம் நமோ நமோ நமோ நம: நமோ நம:.

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 459-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம்.

ஸ்ரீமத்ஸாக்ஷ விதாவிசேஷ பார்ச்வநாதாய நமோ நம:.

(கு-பு.)—

இந்நூல், ஜைனமத சம்பந்தமானது. அம்மதத்தைச் சார்ந்த அறுபத்து மூன்று சலாகாபுருஷர்கள் சரித்திரங்களை விளங்கக் கூறுவது.

மணிப்ரவாள நடையிலமைந்தது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. எழுத்துப் பிழைகள் சிற்சில வடமொழி ச்லோகங்களிலும், வாக்கியங்களிலும் உள்ளன. இது, நான்கு வாலியங்களில் உள்ளது. இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 459-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும்.

ஆயினும் ஷை நம்பர் பிரதியில் முதலிற் சிறிது பாகமே வந்துள்ளது.

R. No. 870.

Paper. 10½ × 9½ inches. Foll. 68. Lines, 20 on a page. Tamil. Good.

Transcribed in 1926-27 from a MS. of Malayappiḷḷai Kavirāyar of Āḻvārtirunagari.

சுப்பிரமணியக்கோவை.

SUBRAHMAṆIYAKKŌVAI.

A kind of poem technically known as Kōvai. The hero in this poem is Subrahmaṇyapiḷḷai, son of Tiruvēṅkaṭanātha of Tirukkuruhūr.

Complete.

Beginning:

சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் கோவை.

(காப்பு)

மதகுஞ்சரசும் வண்டார்க்குங் குருகைவரோதயனம்
மதகுஞ்சரவிழியார் மோகன் சுப்பிரமணிய னெங்கோன்
மதகுஞ்சரப்புயன் மேற்கோவை பாடமதுர கவி
மதகுஞ்சரஞ் செஞ்சரணா ரவிந்தம் வழுத்துவனே. (க)

* * * *

உன்னைப் பொதுவரநானம் பிரானென் னுடைய கவி
தன்னைப் பொருட்படுத்தாதது ராசத தாமதமோ
பொன்னைப் பிரதானமென்றெண்ணார் புகழ்ப்பொருள் போற்றுவர் பூ
மின்னைப் பொருந்திய மீளுட்சிநாத தெய்வேந்திரனே. (சு)

(காப்பு முற்றும்.)

(கோவை நானூற்றைம்பது.)

பூமாதுசேர் திருவேங்கடநாதன் புதல்வன் கல்வி
மாமாதுவாழ் குருகூர் மேவுஞ் சுப்பிரமணியன்வெற்பி
லாமாதருள்ளமு வப்பத்திணை மலரைந்துங் கற்ப
காமாதர் வல்லிக்கொடியொன்று பூத்தது காரணமே. (க)

(காட்சி.)

திரைவஞ்சி வெள்ளைக்கவிச் சிவப்பேறி நெருங்கிதழ்த்தா
மரைவஞ்சி மேவுங் குருகூரன் சுப்பிரமணியனின்சொ
லுரைவஞ்சி யோவெற் புறைவஞ்சியோ வளமோங்குவசுந்
தரைவஞ்சியோ விண்ணுளிர் வஞ்சியோ சுந்தரவஞ்சியே. (உ)

End:

(மீண்டேர் வந்த தலைமகன் பாகனொடு அதிசயக் குறிப்புக் கூறல்.)

ஆரியமுத்தமிழ் தென்குருகூர் மலரன்ன மன்ன
பாரியும்யாமுங் கலந்தின்பம் பெற்றனம் பார்வடகா
வேரிதிகரின் சொற்சுப்பிரமணிய தெய்வேந்திரன் போல்
மாரிவி[ச](சி)திச் சொரிந்தருள் மீன்கொண்டவான் கொண்டலே.

(கவி நானூற்றைம்பது.)

வாழிவகுளப் பெருமானியல் திருவாய்மொழிச் சொல்
வாழிவழுதி வளநாடு செல்வமலி குருகூர்
வாழிவளர் திருவேங்கட நாதனவர்சு புத்ரன்
வாழிதுரைச் சுப்பிரமணியன் வங்கிஷம் வாழியவே.

சுப்பிரமணியக்கோவை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், திருக்குருகூரில் இருந்த திருவேங்கடநாதன் என்பவரது புதல்வரான சுப்பிரமணியப் பிள்ளை யென்னும் ஒரு பிரபுவின் மீது இயற்றப்பட்ட கோவை யென்னும் ஒரு வகைப் பிரபந்தம்.

நானூற்றைம்பது கட்டளைக் கலித்துறைகளாலாயது. செய்யுள் நடை சாதாரணமானது. இந்நூல் முடிந்த பின்னர் 15 பக்கங்களில் இக்கோவைத் துறைகளும், செய்யுட்களின் முதற் குறிப்பும் எழுதப்பட்டுள்ளன.

R. No. 871.

Paper. 10½ × 9½ inches. Foll. 153. Lines, 20 in a page. Tamil and Grantha. Good. New.

Transcribed in 1926—27 from a MS. brought by Ayyana Nāyanār of Madras.

அஷ்டபதார்த்தஸாரம்.
AṢṬAPADĀRTHASĀRAM.

A work explaining the 8 Padārthas or categories of the Jaina religion.

Complete.

Beginning :—

ஓம் நமஸ்ஸித்தேப்ய:.
அஷ்டபதார்த்தஸார:.

மோக்ஷமார்க்கஸ்ய நேதாரம் பேத்தாரம் கர்மபூப்ருதாம் ।
ஜ்ஞாதாரம் விஶ்வதத்த்வாநாம் வந்தே தத்குணலப்தயே ||

வீதராகஸர்வஜ்ஞப்ரணீதமாகிய மோக்ஷமார்க்கம் த்ரிவிதம் - ஸம்யக்தர்ஶநம், ஸம்யக்ஜ்ஞாநம், ஸம்யக்சாரித்ரம் என. தத்ர ஸம்யக்தர்ஶநம், தத்த்வார்த்த[ஶ்ரத்தா](ஶ்ரத்த)நம். ஸம்யக்ஜ்ஞாநம் - தத்த்வாவபோதநம். அவ்விரண்டோடு கூடிய ஸம்யக்விரதி ஸம்யக்சாரித்ரமாம். ஸத்தர்ஶநவிஷயமாகிய பதார்த்தம் அஷ்டவிதமாகும்; ஆப்தாகம நவபதார்த்த ப்ரமாண ப்ரவ்ருத்தி நிவ்ருத்திசாரித்ரமென. ஶ்லோக:—

ஆப்தப்ரத்யக்ஷகாருத்யமகலஸகலார்த்த
ப்ரயோஜநகாரணோ
விஶ்வப்ரமாணமாநா ப்ரதிஹதபவ
ஸம்பத்திப்ராப்ததோஷ: |
அத்யந்தமேத ஸுமேத்ராஜ்ஞதாவிதந
கோஹந்நாத்வக (?) வ்ருத்தி:
பரிஷஸ்ஸ்ராத்வாதவதாத்ரா த்ரிஹந(வ)நவகிஹி
நிர்த்ரோமாராஜ்ய[யா]மாந: ||

ஆப்தர் இருவகையர், ஸகலாப்தர், விகலாப்தரென. ஸகலாப்தர் இருவகையர்; நிஷ்கலாப்தர், ஸகலாப்தரென. நிஷ்கலாப்தராவார், கர்மாஷ்டகபந்தோதய காரணகார்ய ஸர்வவிகார விநிர்முக்தராகி, அநந்தஜ்ஞாந தர்ஶந ஸுகவீர்ய நிரஞ்ஜந நிர்மல நிர்லேப நிராமயாக்ஷய ஸகலஸம்யக்த்வ ஸ்வபாவமென்றும் விஶேஷகுண ஸ்வபாவத்தராகி யஞ்சசரீரபரிதத்யசதராகி, த்யக்ததேஹ *ஸாகாரராகி த்ரிஜகமஸ்தகஸ்தாயிகளாகிய ஸித்தபரமேஷ்டிகளாவார்.

சகலாப்தர் மூவகையர், தீர்த்தங்க(ர)ர், ஸாமாந்யகேவலிகள், ஸமுத்காத கேவலிகளென. தேஷு, தீர்த்தகரரென்பார் * *

End:—

இந்த ஸப்தப்ரமாணங்களுக்கு விஷயமான வஸ்த்வாஸ்திகாயாதி பதார்த்தங்களெல்லாம் விஷயமாகும்.

Colophon :—

வஸ்துஸ்வரூபாதிகாரம் முற்றும்.

ஜீவனுக்கு முக்தியென்பது வைராக்யாஸாவஸாவஸத்தால் விஷயஸந்தாந(ம்) நிஶ்ஶேஷமாகக் கெடுதலாகுமெனில், அதுவன்று. ஸம்ஸாரக்ஷயணமாகிய விஷயத்திற்கு * * * * * * * * * * ஜீவன் நிஶ்ஶேஷநிர்மூலனாகுமெனில், பாபபுண்யாதிஸுகாஸாவனுக அநுபவிக்கப்படாநின்ற அவனுக்கு தத்க்ஷேத்ரகத்து ஸபாவம் வரும். * * * * * * * * * * * அசேதநஸ்வபாவமாகில் பாஷாண கல்பமாம். இப்பெற்றி பரவாதிகளால் பரிகல்பிக்கப்பட்ட முக்தியினுக்கு ஸத்யத்வமாதல் பொருந்தாமையில், ஸமவாஸமந்த ப்ரவசநத்தால் அறிவிக்கப்படுவதான நிரதிசயஸஹஜ ஜ்ஞாநதர்ஶநஸுகவீர்யாதி ஸ்வஸ்வாஸ்தாதிபோக[த]ஸ்வரூபாதிகட்கு ஸமுமென்றவாறு.

Colophon :

நமஸ்ஸமஸ்தநாதாய வாமநாய நமோ நம: ।
நமஸ்ஸ்வயம்புவே தஸ்மை நமஸ்த்ரைலோக்யவக்ஷஸே ॥

ஸ்ரீமத்ஸமந்தபத்ராதிகுரு ஸூத்ர[ஸூ]த்(ஸ்)ரம்
வஸ்துஸ்வாதீநஸத்த்வம் நிர்மலஜ்ஞாநதீப்யம் ॥

ஸ்ரீவஸுபூஜ்யஜிநநாதநம் வாமநம் நிவஸஜ்ஜ்வம்।
ஸவர்ஜிதத்ரயவாஸம் வஜ்ர ஸர்வம் ஸர்வஸாஸ்த்ரம்,

ஸிம்ஹம் நம:, வஸுமானந்தம் நம:
ஸ்வஸ்வரூபாதிகாரஸம்பூர்ணம்[ஸ்](ம்).

(கு-பு.)—

இந்நூல், ஜைனமத ஸம்பந்தமானது. மணிப்ரவாள நடையிலமைந்தது. அம்மதத்தில் கூறப்படும் ஆப்த ஆகம முதலான எட்டுப் பதார்த்தங்களின் ஸ்வரூபங்கள் இன்னவென விளக்குவது. இந்தப் பிரதியில் முற்றும் இருக்கிறது.

R. No. 872.

Paper. $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 159. Lines, 20 in a page. Tamil and Grantha. Good.

Transcribed in 1926—27 from a MS. brought by Mr. Ayyan-Nāyanār, Madras.

ஜைனவிரதம்.
JAINAVRATAM.

On the details of procedure for the observance of certain Vratas of the Jains. The religious efficacy resulting from the due observance of these Vratas is also given. As many as 45 Vratas are dealt with and explained herein.

Beginning :—

ஓம் நம: ஸித்தேப்யோ நம:.

ஸம்யக்த்வம் ஶ்ராவகாசாரம் வ்ரதம்.

ஸமீசீநகுணஸ்தாநி[ஸ](த)யம் [ஹ்ரு](ஹ்ரூ)த்வா
விஷ்ணோர்நேமிஜிநம் வந்தேஹம்லோகநாயகம் |
ஸமீசீநகுணஸ்தாநம் ஶ்ராவகாசாரம் மேவாஹம்
ஸம்யக்த்வநிர்மலம்வக்ஷ்யே ஹேதுநாநாவ்ரதாநிச ||

அதெப்படியென்னில் :— ஜம்பூத்வீபத்து பரதக்ஷேத்ரத்து ஆர்யகண்டத்து மகதவிஷய ராஜ[க்ரு](க்ரு)ஹநகராதிபதி ஸ்ரீமஹாமண்டலேஸ்வர ஶ்ரேணிக மஹாராஜாவென்பான் அவ[னி]னு(டை)டைய மஹாதேவி ஸகலகுணஸம்பன்னை ஸம்யக்த்வப்ரசாரிணி சேலினிமஹாதேவி யென்பாள். அவ்விருவரும் ஸம்யக்த்வப்ரபாவத்தினால் ராஜ்யம்பண்ணுகின்ற காலத்து ஒருநாள் வநபாலகன் காலோசிதத்தில் புஷ்பபலங்களைக்கொண்டு மகாபக்தியினால் வந்து, ராஜாவுக்குக்கொடுத்து, நமஸ்கரித்துச் சொல்லக்கேட்டு, ஆநந்தபேரியறைவித்து, வநபாலகனுக்கு ஸ்வாங்கஸ்த வஸ்த்ராபரணத்தைக் கொடுத்து, புரஜன பரிஜன ஆப்த ஜனங்களுடன் கூடின சேலினிமகாதேவிஸஹிதம் பாதமார்க்கத்தினால் பொதிலமவஸரணமடைந்து மாநஸ்தம்பத்தை த்ரி(ஃ)ப்ரதக்ஷிணம்பண்ணி பரமேசுவரனுக்கு அஷ்டவிதார்ச்சனை * * * * * * * * * * * * * * * கௌதமகணதர ஸ்வாமியை வெளிநிஷ்ப்ரஹாரத்தில் நமஸ்கரித்து கரகமலமுகுளிதையாகி, வாராய் ஸ்வாமீ எனக்கு ஸம்யக்த்வகாரணமான யாதானுமொருநோன்பை யருளவேண்டுமென்ன, இவரும் இப்படிச்சொல்லுவார். மாகமாலைநோன்பை இரண்டும் தத்வார்த்தத்தையும் அருளிச்செய்வார்.

ஶ்ராவகாசார்ய வர்ணித்த திவஸத்து நோற்பவரெல்லாம் * * * * * *

End :

கேவலபோதி நோன்பு.

ஸ்ரீவர்த்தமாநஜிநம் கேவலபோதாய்வாநம் வந்தே நம: வக்ஷ்யே வீநாதம் ஸம்யக்த்வஹேது ஸகலம் ஸுகலாப ஸுரிமெல்வாயக்கமேவ வதேத் ” அதெப்படியென்னில்; — * * *

* மகததேசமென்பது நாடு, ராஜக்ருகமென்கிற பட்டணம்

* * * * * * * * *

* * * * பூர்வத்திலே ஶ்ருதிவியாநம் பண்ணின பலத்தினால் அந்த ஜ்ஞாநாவலியைப் பெற்றனரென்று அருளிச்செய்ய, ஶ்ரேணிகமகாராஜன் கேட்டு, தானும், சேலினி மகா தேவியும் அந்த நோன்பையுங் கைக்கொண்டு ஸர்வஜ்ஞனை விடைகொண்டு புரத்தில் மனையை யடைந்து நோன்பை நோற்று அநேக நிதி நிதானங்களுக்கு உடையராயினர். பின்னையும் அநேக ஸ்திரீகளும் புருஷரும் நோற்று த்ரிகரணசுத்தியினால் நோற்று ஸ்வர்க்க சுகமனுபவித்து, கிரமத்தினால் மோட்சத்தையடைகுவர்.

இந்த நோன்பை நோற்றவர்கள், நோற்பித்தவர்கள், உடன்பட்டவர்கள், கதை கேட்டவர்கள், அநுமோதித்தவர்கள் மங்களமாக ஸ்ரீ. ஸ்ரீ. ஸ்ரீ.

Colophon:

கேவலபோதி நோன்பு பரிஸமாப்தம்.

(கு-பு.)—

இது, ஜைன மதத்தைச் சார்ந்தது. இதில் மாகமாலை நோன்பு முதலாகக் கேவலபோதி நோன்பு ஈறாக 45-நோன்புகளை நோற்பதன்முறையும் நோற்றாரடையும் பயனும் கூறப்பட்டுள்ளன.

R. No. 873.

Paper. 10½ × 9½ inches. Foll, 135. Lines, 20 in a page. Tamil and Grantha. Good.

Transcribed in 1926–27 from a MS. of Mallinātha Nayikar of Madras.

நீலகேசி.
NĪLAKĒŚI.

A Jaina poem in Tamil stating that a Jaina lady established the Jaina religion after successfully refuting the Bauddha and other religions.

Incomplete with commentary, which, from the heading, is inferred to be Samayadivākaram.

Beginning:

நீலகேசி உரையுடன்.

ஓம். ஸமயதிவாகரம். நமோஸ்து.

நல்லார் வணங்கப்படுவான் பிறப்பாதி நான்கு
மில்லா னுயிர் கட்கிடர்தீர்த்து யரின்பமாக்குஞ்
சொல்லான் றருமச்சுடரானெனு ந்தொன்மையினா
னெல்லா முணர்ந்தானவனே யிறையாகவேத்தி.

நல்லார் வணங்கப்பகடுவானென்பது - தேவேந்த்ராஸுரேந்த்ரநரேந்த்ராதிகளால் உலகிற்கொரு பெருந்தெய்வதை நீயென்று நமஸ்கா

ரஞ் செய்யப்படுவான் எனறவாறு பிறப்பாதி நான்குமில்லானென்பது - ஜாதி ஜராமரண ரோகங்களையும், உபாதிகர்மங்களையுங் கெடுத்து அவற்றி னீங்கினுனென்றவாறு. உயிர் சொல்லானென்பது - ஸவ்வஜீவன்கட்கிட ராகிய வஸ்துவறிவகத்தைக் கெடுத்துச் சுகத்தை யெய்துவிக்குந் திரு மொழியுடையானென்றவாறு. * * * * * * * * * * * *

* * * * * * *

அன்றியும் மாம்ஸம் பக்ஷிப்பார்க்குக் கொலையுண்டு. மாம்ஸத்தின் பொருட்டு நிகழுங்கொலே, மாம்ஸம் பக்ஷிப்பாருண்டாய வழியுண்டாய், [வி](இ)ல்லே யாயபோது இல்லையாமாதலால், கும்பகாரன் உண்டாயவழி கும்பம் உண் டாய், இல்லையாய வழி இல்லையாய் இல்லையாங் கடக்கிரியை கும்பகாரண(த்த) தாயினவாறு போலவென்பது.

* * * * * * *

அன்னுன் பயந்தவறவா ரமிர்துண்டு நின்று
ரின்னுரினைய ரெனவேண்டுவ இல்லையார்க்கும்
பன்னுந்துணையும் பணிந்தாகிய பததியினு
னென்னு னுரைகப்படுகின்ற தொன்றிங்குளதே. ‘(க)

அறவாரமிர்துண்டு நின்றுரென்பார் - யதோக்தமுண்டு நின்ற வஸிஷ்டாதி மஹாவ்ரதர்களென்றவாறு. யார்களுமென் பது - யதாகத மஹாவ்ரதிகளும் சொன்னவாறு. அஃதாவது, இன்ன ஜாதி, இன்ன ஆசிரமம் என்பது வேண்டாவென்பது. பன்னு - துணி ந்தென்பது.

* * * * *

இத்துணைப் பாகுபாட்டாலும் நமஸ்காரஞ் செய்தென்றவாறு. ஈங்கு என்பது, தமிழ் நாட்டுள் என்றவாறு. அன்றியும்.

பண்டாகமற்றும் பயிலாவுரை யென்றுமிக்கார்
விண்டுங்கிதனை வெகுளார்விடல் வேண்டுவன்யான்
தண்டாமரை மேனடந்தான் நடந்தாள்வணங்கித்
கண்டேன் கிடந்தேன் களவின்னிது கண்டவாறே. ‘(உ)’

* * * * *

* * * * *

அகிற்புகையா வியுமணி சொள்வீதியிற்
றுகிற் கொடித்தொகுதியுந் தூயசுண்ணமு
முகிற்றலே கலவிவான் மூடிமாநகர்
பகற்கிடை கொடாதேதோர் பான்மைமிக்கதே. ‘(உரு)’

Colophon:

பதிகவுரைச் சருக்கமுற்றும்.

ஆங்கமா நகரணைந்தது பலாலயமென்னும்
பேங்கொள் போதவ்லூரது பிணம்படுபெருங்கா
டேங்குங் கம்பலையிரவினும் பகலினுமிகலி
யோங்குநீர்வையத் தோலசயிற்பேரய் தோன்றுளதே, (உசு)

End:

அல்லென் றுரைத்த வுரைதானு மெம்மாகமத்து
னில்லென்றவா றென்றிவையிங்ஙனம் வேண்டுகின்றாய்
சொல்லென் று நாயைந்நரிதானென்னச் சொல்லுகின்றா
ரில்லென்றவாறோ நரிதன்னையு மென்றன்னே '(௪௧௧)'

இது, நீயன்றென்றுரைப்பது (இதன் பொருள்)திவ்யாவ்ருத்திதமாவது ஒன்றொன்றல்லனம யென்றற்கணல்ல ெ[ய](வ)ன்பதற்கு மில்லென்பதற்கும் பொருள் ஒன்றாகல் வேண்டும். வேண்டா நாயைக்கண்டு இது நரியன்றென் றானரியில்லையாகாதே வென்றாளென்றவாறு. அன்றியும் ;—

நாய்கொன்னரி கொலெனத்தோன்று முணர்வுநண்ணி
யாய்சொல்விரண்டின் னுணர்ந்தல்லதுவன் னை[க](ம)மென்றா(ன்)
நீசொல்லறியா யறிவார்நெறி நேடுகில்லாய்
பேய்சொல்லுபவே பலசொல்லிப் பிதற்றலென்றாள்.

இது, [ஈம]இதன் பொருள் :—நாயோ, நரியோ வென்றையந் தோன்றி, நரியன்று நாயென்புழி, நரியன்மை நாயிற் கிடந்ததெனில், நாயாதலும் நரி யன்றாதலும் நாயிற்கிடந்ததாம். அவ்வழி நரியன்மை யாதினாற் பெற்றாய்? நரியாந்தன்மையின்மையினெனின், * * * * *
* * * * * ஙநஸூ: என்றவழி - ஙஸூாஹா வத்தைக் காட்டுவது வ்யவஜ்ஹவ்யதிஷெயம். இனி அஸ்வமல்லாப் பிறிதைக் காட்டுவது வ்யாவர்தகவ்யதிஷெயம். அவ்விரண்டும் அர்த்தத்திலும் இல்லை யென்பதூஉம், அல்லென்பதூஉம் வந்த தாகலின் அவ்விரண்டு சொலலும் ஙக்ஷஸம்ஷிஙாயஙெ்களல்லவா தலின் நீ சொல்லறியாமையும், சொல்லறிவாரோடு சேராமையும், காரண மாகப் பேய்போலப் பல பிதற்றுகின்றாய் என்றவாறு.

இரண்டின்னுணர்ந்தல்லது வன்மையென்றான் - என்பதனுல் பொருள், இல, அல எவ் இரண்டுங்கூடியல்லது அன்(மை)[பெறப்]பெறப் படாதென றாயிற்று என்றவாறு.

Colophon:

[நீலகேசி முற்றுப்பெற்றது.]
[நீலகேசி முற்றிற்று.]

(கு-பு.)—

இந்நூல், ஜைனமதத்தைச் சார்ந்தது. நீலகேசியென்னும் மாதுபௌத்த முதலிய பலவேறு மதத்தர்களை வாதில் வென்றதாக வமைந்துள்ளது.

412 செய்யுட்களே உளவாதலின் இந்தப் பிரதியில் உரையுடன் பூர்ண மாக இல்லை. இவ்வுரை 'ஸமய-திவாகரம்' என்னும் உரையாகவிருக்கலாம். இதுவும், இதன் தலையங்கத்தால் தெரிகிறது. எழுத்துப்பிழை யதிகம்.

R. No. 874.

Paper $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 41. Lines, 20 on a page. Tamil Good Restored in 1926–27 from a Ms. in the Library.

சதுரகராதி.
CATURAKARĀDI.

Same work as that described No. 12 of the D.C.T. MSS., Vol. I, from which this was restored.

Incomplete.

(கு-பு.)—

இது டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 12-வது நம்பர் பிரதியைப்பார்த்து எழுதப் படடது. அதனளவே இதிலுமுள்ளது.

R. No. 875.

Paper $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 142. Lines, 20 in a page. Tamil. Good. Restored in 1926-27 from a MS. in the Library.

வேதாளக்கதை.

VETĀḶAKKATHAI.

Same work as that described under No. 121 of the D.C.T. MSS., Vol. I.

Complete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 121-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

R. No. 876.

Paper $10\frac{1}{2} \times 9\frac{1}{2}$ inches. Foll. 170. Lines, 20 in a page. Tamil. Good. New.

Transcribed in 1927-28 from a MS. of Vaḍamalainambi Chettiyar, Pudunagaram, Palghat.

பகவத்கீதை, உரையுடன்.

BHAGAVADGĪTAI WITH COMMENTARY.

A Tamil rendering in verse of the Sanskrit Bhagavadgītā. The Tamil rendering which is printed is by Śrībhaṭṭar and is followed by a commentary written in accordance with the views of the Advaita vēdānta. The name of the commentator is not given.

Beginning:—

பகவற்கீதை, உரையுடன்.

அரியயனே டரனுகி யகிலந்தன்னை (க)
யாக்கியளித்தழிக்கின்ற வவிச்சைக்கென்றுங்,
கருதுவதாய்க் காந்தத்தினிரும்புபோலக்
கரணத்தின் சலனத்துக்கேதுவாகி,
யரியமருமரவணை மேனெளியவேறி
வைகுந்தத்தினிதமருமாயோன் மண்மேல்,
பரிபுணரும்படர் நெடுந்தேர் பார்த்தற்கூரும்
பாண்டவர்கள் சாரதிநாம் பரவுந் தெய்வம்.

ஒருபத மடித்தொருபதம் பொற்றேர்மிதித்
தொருகையிற் குசைகசையொருகை ஞானமாய்ப்
பொருகையில் விசையனைப்புரிந்துநோக்கிமெய்த்
தருபொருளுரைத்தவர் சரணம் போற்றுவாம். (உ)

ஐவகைப்பொருளு நான்கு கரணமுங் குணங்கண் மூன்றுஞ்
செய்வினையிரண்டு மொன்றியாவருந்திகைப் பதின்ற
பொய்யிருளகலஞானப்பொருட்கதிர் விரித்தபுத்தேள்
கைவளராழிச்செங்கண் கண்ணனைக் கண்ணுள்வைப்பாம். (ங)

என்றது :—இதன்கருத்துரைக்கு மிடத்துப் பாயிரமுரைத்துக் கருத்துரைக்கற்பாற்று. சச்சிதாநந்த ரூபமாய்ச் சர்வவேதமயமாகி, யுற்பத்தி, திதி, நாசமின்றியேயிருந்த ஆதிபுருஷன் நரநாராயணப் பெயரையுடைத்தாயிருந்து அவ்யக்தந் தோற்றத்தையுடைத்து. * *

* * * * *

கர்மத்தினாலே ஞானங்கெடுதலானும், அதர்மத்தாலே தர்மம்போய், அதர்மமே விருத்தியாகின்ற விடத்துச் சகத்தினுடைய ஸ்திதியினைப் பரிபாலிப்பான் வேண்டி, ஆதிபுருஷன் நாராயணன், பூமியிலுண்டாயிருந்த பிரம்மமாகிற பிராமணமதத்தினுக்கு ரட்சையின்பொருட்டு ஞானத்தினாலும் சக்தியினாலும், பலத்தினாலும், வீரியத்தினாலும், தேசசினாலும் எப்பொழுதும் சம்பன்னனாய்த் தன்னுடைய * * * * *
பிரகிருதியைத் தன்வசத்த தாக்கித் தனக்குப் பிறப்பின்றியே, பிரபஞ்சத்துக்கெல்லாம் ஈசுவரனாய் நித்ய, சுத்த, பத்த முக்தபாவனாய் மாயையினாலே சரீரத்தைப் பரிக்ரகித்துத் * * * * *
அந்தப் பகவான் எழுலோகத்தை ரட்சிப்பான்வேண்டிச், சோகமோக ஸமுத்திரத்திலேயழுந்துகிற வருச்சுனன் நிமித்தமாக வுபதேசித்தருளினான், அவவாறு, உபதேசிக்கப்பட்ட தருமம் காலாந்தரத்திலுண்டாகவேணுமென்று, ஸ்ரீ வேதவியாஸபகவான், எழுநூறு சுலோகத்தாலே பண்ணியருளினான். இந்தக்கீதா சாஸ்திரமானது வேதங்களின் சாரமெல்லாந் திரண்டுள்ளது. யாவராலுமறிதற்கரிதாயுள்ளது. இதனை ஞானவிரோதங்கள் வாராதவண்ணம் ஸங்க்ஷேபத்தாலே (பகவத்பாதாசார்யன்) வியாக்யானம் பண்[ணப்பட்டது] (ணினார்)

* * * * *

தாமாரம்பிக்கின்ற நூலுக்கு மூலத்தைக் காட்டவேண்டி யெழுகிறது மேலிற் செய்யுள் :—

மன்னருள் விசயன்கேட்ப வாளமரதன்மேலிட்டு
மின்னமர்படைக்கை மாயனுரைத்த மெய்ப்பொருளையெல்லாம்
பன்னருமறைகள்கோத்த பழமுனிபணித்தவண்ண
மென்னறிவளவினாலே தமிழினாலியம்பலுற்றேன். (ச)

* * * * *

இந்நூலின் பெயர்.

உன்னு நான்மறை மால்வரையுச்சிமேல்
மன்னுமேகம் முழக்கியவாக்கினைப்
பன்னுசீர்ப்பரமார்த்ததரிசன
மென்று நாமத்திதனையியம்புவாம். (ரு)

* * * * *

உயுத்தம்வேண்டித் திரண்டாரென் செய்தாரென்று திருதராஷ்டிரன் வினவ அவனைநோக்கி யுத்தபூமியில் நிகழ்ந்த தெ[த] (வ)ல்லாம் சஞ்சயன் அறிவிக்கலுற்றானென்றவாறு.

புண்ணிய பூமியென்ற புகழுகுருபூமிதன்னில்
நண்ணிய பின்னை நண்ணுதவர்களு நமருமங்குக்
கண்ணிய தென்னேயென்று கண்ணிலாவரசன் கேட்பத்
தண்ணியவினைய சொல்லாற் சஞ்சயனுரைக்கலுற்றான்.

(எ-து) புண்ணிய க்ஷேத்திரமாயிருந்த குருக்ஷேத்திரத்திலே யுத்தம் வேண்டித் திரண்ட வெனது புத்திரரும், பாண்டுவின்புத்திரரும் பின்னை யென்செய்தாரென்று, திரிகாலஞானியுமாய்த் தனக்கு மந்திரியுமாயுள்ள சஞ்சயனைநோக்கித் திருதராட்டிரன் வினவ, அவனைநோக்கி மெத்தென்றினியவாயிருக்கின்ற சொற்களால் யுத்தபூமியிலே நிகழ்ந்தவெல்லாம் சஞ்சயன் அறிவிக்கலுற்றானென்றவாறு.

End :—

இப்படிப்படவுள்ள பொருளை உணரவுணர என் புந்தி யின்னவண்ணஞ் செய்யா நின்றதென்று சஞ்சயன் சொன்னானென்றவாறு.

அப்பொருளை நினைதோறு மற்புதமாயகங்குழையு
மெப்பொழுதும் வருமவன்றானிருக்கின்றவகைவிரித்த
வொப்பரிய திருக்கோல முணர்தோறு முணர்தோறுஞ்
செப்பரிய பெருங்களிப்பென் சிந்தையிலே நிற்குமால் (அக)

(எ-து) அர்ச்சுனனை நோக்கிப் பகவானருளிச் செய்த பொருளை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், அற்புதமான வுவகை யெப்பொழுது முண்டாகா நின்றது; அவன் காட்டியருளின திருக்கோலத்தை யுணருந்தோறும் உணருந்தோறும் செப்புதற்கரிதாயிருந்த பெருங்களிப்பு என் சிந்தையிலே யுண்டாகா நின்றதென்று சஞ்சயன் சொன்னானென்றவாறு.

* * * * *

திருவறம் நீதிசெயம்புகழெல்லாம்
மருவரும் மாயைசெய் மாயவன்வாய்மை
தருமம்விடாத தனஞ்செயனென்னு
மிருவரும் நின்றவிடத்தனவென்றான். (அ௩)

(எ-து) ஸ்ரீயுந், தருமமும், நீதியும், செயமும், புகழுமிவையெல்லாம் மருவுதற்கரிதாயுள்ள * * * * * தனஞ்சயனென்னுமிருவரும் நின்றவிடத்தே யுண்டாமித்தனை யென்றான் [திருதராட்டிரன்] ஸஞ்சயன் என்றவாறு. (அ௩)

இப்பொருள் இந்த வாசுதேவனுயுள்ள பகவானும், வேதவியாஸபகவானும் அறியுமத்தனையல்லது மற்றொருவர்க்கு நேர்படுவதன்றென்று இந்நூலுடையார் தங்கருத்து.

வேதநூல்களின் முடிவினை வியாதனிற் பின்னை
யோதநீள் கடலு(லகிலு)ண்டாக்கிய (வுரவோன்) (பெரியோன்)
கோதிலாநெறி கோவிந்தமாமுனிவன் றன
பாததாமரைபற்றி வீட்டின்பமே யடைந்தோம்.

(எ-து.) ஸ்ரீவேதவியாஸ பகவானுக்குப் பின்பு * * * * * * கோவிந்தமாமுனிகளுடைய ஸ்ரீபாதபங்கஜங்களைக்கூடி வீட்டின்பம் பெற்றேன் என்று, நூலுடையார் தங்களாசார்யனைத் துதித்தாரென்றவாறு.

* * * * *

ஆற்றியல் வழுவிய புலன்களைந்தையும்
மாற்றிய சங்கரபகவற்பாதனென்
றேற்றிய பெயரினா னருளினாலியான்
சாற்றிய இப்பெருந் தருமநூலையே.

(இதன் கருத்து) முத்தியென்னாநின்ற * * * * * * * சங்கரனென்னுந் திருநாமத்தையுடையனாய பகவத் பாதாசார்யனுடைய பிரசாதத்தினால் இப்பரமார்த்த தர்சனம் என்னும் மகாபுண்ணிய கதையினை நான் தமிழினாற் சொல்ல வல்லேனாயிற்றென்றவாறு. (அஎ)

சூத்திரங் காட்டிய தொல்லைத்தமிழின் றுறை யறிந்து
சாத்திரங்கற்ற சதுரனல்லேன் றண்ணரங்கமென்றே
நாத்திரங்கப் பலகால் நமோநாராயணாயவென்று
மாத்திரங் கற்றதல்லாற் கற்றிலேன் மற்றோர் வாசகமே. (அஅ)

Colophon:

ஸ்ரீபரமார்த்த தர்சனத்துப் பதினெட்டாவது மோக்ஷயோக வத்தியாயம் முற்றும். ஆக வத்தியாயம் பதினெட்டுக்குத் திருவிருத்தம் 561.

விசுவாவசு௵ சித்திரை௴ 6௳ குருவாரமும் சதுர்த்தியும் மிருகசீர்ஷ நக்ஷத்திரமுங்கூடிய சுபதினத்தில் கரியமாநகரத்தில் இருக்கும் தருமஞ் செட்டியார் குமாரன் ராமையஞ் செட்டியார் பகவற்கீதை எழுதி நிறைந்தது முற்றும்

இந்தப் பகவற்கீதா சாஸ்திரஞானத்தை யாதாமொருவர் உணர்ந்தறிய வல்லவர்கள் மீளாநெறியாகிய பரமபதமடைவர்கள். பிறவிசாகரமதின் கரைகண்டவர்கள் அவர்களாகும்.

(கு-பு)—
இது, வடமொழி பகவற்கீதையின் மொழிபெயர்ப்பாய்ச் செய்யுள் நடையிலமைந்தது. இந்தப் பிரதியில் உரையுடனுள்ளது. பெரும்பாலும் அத்வைத மதத்தைச் சார்ந்தது. நூலாசிரியர், ஸ்ரீபட்டர் எனபார்கள். உரையாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. மூலம் அச்சிடப்பட்டுள்ளது செய்யுளின் தொகை 545.

R. No. 877.

Paper. 10½ × 9½ inches. Foll. 262. Lines, 20 in a page. Tamil and Grantha. Fair. New.

Transcribed in 1927–28 from a MS. brought by Ayyana Nāyanār, Madras.

பதார்த்தஸாரம்.
PADĀRTHASĀRAM.

A work in jaina religion explaining in 30 Adhikāras, 30 topics such as the Padārthas 9, Tattvas 7, Dravyas 6, Nyāsas 4, etc. The author is made out to be Vītarāgasarvjña.

Contains 1—22. Paricchedas only.

Incomplete.

Beginning:

[illegible]

பதார்த்தஸாரம்.

[illegible]

[illegible] |

[illegible] ||

இப்படி [illegible] மாகவும், [illegible] மாகவும், [illegible] மாகவும், [illegible] மாகவும், [illegible] மாகவும் நமஸ்காரம் பண்ணி பதார்த்தஸாரம் என்கிற க்ரந்தத்தைச் சொல்லுகின்றேன்.

அதெப்படியெனில் :—[illegible].

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

நவபதார்த்தமும், ஸப்ததத்வமும், ஷட்த்ரவ்யமும், பஞ்சாஸ்திகாயமும், [illegible]மும், [illegible]மும், [illegible]மும், [illegible]யும், [illegible]மும், [illegible]மும், [illegible]மும், [illegible]யும், [illegible]யும், [illegible]ணும், [illegible]யும், [illegible]யும், [illegible]மும், [illegible]மும், [illegible]மும், [illegible]மும், [illegible]மும், [illegible]மும், [illegible]மும், [illegible]

யம், த்ரவ்யஸ்வரூபமும், க்ஷேத்ரஸ்வரூபமும், த்ரவ்யஸ்வரூபமும், ஸ்யாத்வாதமும், த்ரவ்யோபயோகமும் என்கிற முப்பது அதிகாரங்களை யதா ஸம்க்ஷேபம் சொல்லுகிறேன். அதெப்படியெனில் —

ஜீவபதார்த்தம், அஜீவபதார்த்தம், ஆஸ்ரவபதார்த்தம், பந்தபதார்த்தம், புண்யபதார்த்தம், பாபபதார்த்தம், ஸம்வரபதார்த்தம், நிர்ஜரபதார்த்தம், மோக்ஷபதார்த்தமென்கிறவிவை நவபதார்த்தங்கள். (இவை) ஒன்பதுக்கும் பதார்த்தமெனகிறபெயர் எப்படியெனில்.—ஜ்ஞானத்தினால், பரிச்சேதிக்கப்படுகிறவஸ்துவுக்கு பதார்த்தமென்கிற பெயராகும். அவற்றுள் ஜீவபதார்த்தஞ் சொல்லுமிடத்து மூன்று நயங்களையறியவேண்டும்.

End :

பரிஹார விஶுத்தி ஸம்யமத்தில் மனப்பர்யய ஜ்ஞானமில்லையென்று சொல்வது. கேவலஜ்ஞானத்துக்கு ௰, ௨, ௰, ௪, ஜீ, வ, ௨, ப, அ, அதீதஜீவஸமாஸமு உண்டு. பர்யாப்தி ௬. ௬. அதீத பர்யாப்தியுண்டு. ப்ரா. ௪. ௨. ௧. அதீதப்ராணம். க்ஷீணஸம்ஜ்ஞை உண்டு. ௧. மநுஷ்யகதியுண்டு. ௧. அதீந்த்ரியமுண்டு. ௧. த்ரஸகாயமுண்டு. ௭. யோகமுண்டு. அபகதவேதர். அகஷாயர். கேவலஜ்ஞானிகள். யதாக்யாதஸம்யதரும் ஸம்யமாஸம்யமரஹிதரும் கேவலதர்சனமும் த்ரவ்யத்தினால் ஆறு லேஶ்யை ௬. பாவத்தினால் சுக்லலேஶ்யை. அபவ்யரும், பவ்யரும், பவ்யாபவ்ய விகல்பரஹிதரும க்ஷாயிகஸம்யக்த்வமும், ஸம்ஜ்ஞாஸம்ஜ்ஞிரஹிதரும், கேவலதர்சனமும், ஆஹாரிகளும் அநாஹாரிகளும், இரண்டு உபயோகிகளும், ஸயோகி அயோகிஜினர்க்கும் மேற்சொன்ன ப்ரரூபணமாம். ஜ்ஞானமார்க்கணையிலே ஸாமான்ய பந்தித்ரஹஸ்யியில் அறிந்துகொள்வது.

காதா.—

மதிஸுதஓஹிமணபஜ்ஜவகேவலணாணாணி[1] கக ள

வெஹ்ணெவிணமாதவி திவிஹத்தியயதாவராணவளை

* * * * * * * *

இது உதயகீர்த்திஸம்ஹிதையான ஜ்ஞானமார்க்கணையின் ஆஹாரமார்க்கணை பர்யந்தம் ஸாமான்யாலா(ா)பமாம்

அஜ்ஞானத்ரயம் ஹேயம், க்ஷயோபஶமஜ்ஞான சதுஷ்டயம்

உபாதேயம், கேவலஜ்ஞானம் ஸாக்ஷாதுபாதேயம்.

Colophon:

இதி வீதராக ஸர்வஜ்ஞப்ரணீதமும் ஸம்பூர்ணஸாராம்சிகமு மாகிய பதார்த்தஸாரஸமுச்சயத்தில் ஜ்ஞானமார்க்கப்ரகரணம் நிரூபணம் ௨௨. த்வாவிம்சதிபரிச்சேதம் ௨௨.

ஸ்ரீஸித்தபரமேஷ்டிப்யோ நமோநம:. ஸ்ரீஸித்தஸம்ப்ரதாயாசார்யபரமேஷ்டிப்யோ நமோநம:.

கரக்ருதமபராதம் க்ஷந்துமர்ஹந்தி ஸந்த:.

(கு-பு.)—

இந்நூல் ஜைனமதத்தைச் சார்ந்தது. இதில் அந்த மதரீதியாக ஒன்பது பதார்த்தங்களும், ஏழு தத்துவங்களும், ஆறு திரவ்யமும், பஞ்சாஸ்தி காயங்களும், நாற்பத்திரண்டு நயங்களும், நால்வகை ந்யாஸமும், இருவகைப் ப்ரமாணமும், ஏழு பங்கியும், ஐந்து ஸூத்ரமும், ரத்ந த்ரயமும், பதினான்கு குணஸ்தானங்களும் முதலாக முப்பது விஷயங்கள் முப்பது அதிகாரங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்ணமாக இல்லை: (22) இருபத்திரண்டு பரிச்சேதங்களே உள்ளன. மிகுதி எட்டு பரிச்சேதங்கள் இல்லை. இந்நூலாசிரியர் வீதராக ஸர்வஜ்ஞரென்று இந்நூலால் தெரிகின்றது. இதில் வடமொழித் தொடர்மொழிகளும், பதங்களும், பிராகிருத பாஷாச்லோகங்களும் மிகுதியாக வந்துள்ளன. எழுத்துப்பிழை சொற்பிழைகள் மிகவதிகம்.

R. No. 878.

Paper. 10½ × 9½ inches. Foll. 13. Lines, 20 in a page. Tamil. Good. New.

Transcribed in 1927–28 from a MS. of M.R.Ry., Nārāyaṇan Nambūdirippād, Kaniyur mana, Ottapalam Malabar district.

(a) கோலாபுரிச்சிற்றடியந்தாதி.
KŌLĀPURICCIṚṚAḌIYANTĀḌI.

Foll. 1*a*—2*b*.

A eulogy on God Śiva worshipped in the shrine at Kolapurisirraḍi Contains 1 to 15 stanzas.

Beginning:

கோலாபுரிச் சிற்றடியந்தாதி.

குஞ்சரமாமுகக் குன்றருண்ஞானக் கொழுந்திருதைக்
குஞ்சரமான கட்கோமளமாய பொற்குன்றிலனக்
குஞ்சரமாவினை தீர்க்குங் கோலாபுரிச் சிற்றடிதங்
குஞ்சரமாவிடையான் மகப்பாதங் கைகூப்புதுமே. (க)

* * * * *

சிதையாத வன்புகழ்ச் சிற்றடிவாழ் சிவதேவர்கணஞ்
சிதையாதவனினை யென்னவுணர் செல்வதிகழ் பதகுஞ்
சிதையாதவ னெடுமாற்கரியாய்த் திறல்வேள்வியிலெஞ்
சிதையாதவ ன்கைசெற்று யென்றீவினை செற்றருளே. (கரு)

End :

> உன்னிளைவாமனமோர் வாமனுரு முருகிநின்ரு
> ருன்னிளைவாமன மோர்கிலைநீ யொழியாதுநிறைந்
> துன்னிளைவாமன மாலயன்றேடு மொருவடிவ
> முன்னிளைவாமன மேவுமொண் சிற்றடியுத்தமனே. (கச)

(கு.பு.)—

இந்நூல், கோலாபுரிச் சிற்றடியென்னும் தலத்திலமர்ந்துள்ள சிவபிரானுடைய ஸ்தோத்திரரூபமாகவமைந்தது. யமகமாகப் பாடப்பெற்ற கட்டளைக்கலித்துறையாலாயது. இந்தப் பிரதியில் காப்புச்செய்யுளுடன் 15 பாடல்களே உள்ளன. இயற்றியவர் இன்னரெனத் தெரியவில்லை.

(b) சிவராத்திரிபுராணம்.
ŚIVARĀTTIRIPURĀṆAM.

Foll. 3*a*—13*b*.

A poem written with a view to bringing out the religious importance and efficacy of duly observing the Śivarātri

Contains 1 to 58 stanzas.

Beginning :

சிவராத்திரி புராணம்.

> பொற்பதப் பொதுவார்புலியூர் புகழ்
> சொற்பதப் பொருளாகுவ தூயவ
> ரற்பகற் ரெழுவாழணி கோபுரக்
> கற்பகத் தனியானை கழல்களே.
>
> திருந்துமினபமுஞ் சீர்தருமுத்தியுந்
> தருந்தவம்புரி தாழ்குழல்காணமா
> திருந்தசெஞ்சடை யெம்பெருமானடம்
> பொருந்துதில்லை வளநகர்போற்றுவாம்.

* * * * *

> ஓங்குவடகயிலை மிசை யுமையாளோடு
> மும்பர்பிரானுயர் பொழிலி லணையுமாறுந்,
> தீங்ககல மலைவல்லி தனக்கு நாதன்
> திருந்துசிவ ராத்திரிமுன் செப்புமாறும்,
> ஆங்கொரு நாள்வன வேடன் வேட்டைதானே
> யவனறியாவகை தவமாயணையுமாறு,
> நீங்கலறு நமன்றூதர் பலருங்கூடி
> நெருக்கிவனவேடனுடல் நீக்குமாறும். (கஉ)
>
> களங்கமுற வருங்கால படரைவென்று
> கணநாதர் சவரனுயிர் கவருமாறும்,
> விளங்குவடகயிலை மலைவிமலன்பாத
> மேவிநமன்விண்ணப்பஞ் செய்யமாறும்,

வளங்கொளுநாள் கொடுத்ததுலகவனுக்கென்று
வானவர்கோனருளிவரங் கொடுக்குமாறு,
முளங்கொளருந்தவமுடைய வன்பர்கேட்ப
வுற்றுணர்ந்தபடியடியே னுரைக்கலுற்றேன். (கூ)

End:

நின்னுடையதிருவருளால் நாங்கணிங்கி
நீடுசெவரன்றனுயிர் நெருக்கிவாங்கிப்,
பின்னிருகையுநப்பாசம் பிணித்துக்கொண்டு
பெருகுமருங்காவலொடு பெயருபோது,
பொன்னுலகர்புடைசூழக் கணங்கள்வந்து
பூசல்பிடித்தவர்வென்றப் புளினனுவி,
மின்னுமொளிவிமானத்தி லிருத்தியேத்தி
விடாதகன்றுரென்றுபடர் விளம்பினார்கள். (ருஅ)

அருந்தவர்போல் வனவேடன்விமானமேறி

. . . .

(கு-பு.)—

இந்நூல், சிவராத்திரியின் மகிமையை விளக்குவது. அங்கிலனென்னும் வேடனொருவன், காட்டில் வேட்டையாடிப் பசியால் மெலிந்து சிவராத்திரி யன்று ஊணுறக்கமின்றி வருந்தும்போது, அவனுயிரைக் கவரவந்த யம படர்கள், சிவபிரான் கட்டளையின்படி நந்தி முதலிய பூதகணங்களால துரத் தப்பட்டுச் சிவராத்திரி கண்விழிப்பின் பயனுகப் பிழைப்பிக்கப் பெற்றுப பெரும்பேருன நற்பதவியடைந்தானென்று கூறுவது.

இந்தப் பிரதியில் 1—58 பாடல்களே உள்ளன. இந்நூலாசிரியர் இன்னு ரெனத் தெரியவில்லை.

R. No. 879.

Paper. 10¼ × 9½ inches. Foll. 83. Lines, 20 in a page. Tamil. Good. New.

Restored in 1927–28 from a MS. in the Library.

(*a*) தசகாரியக்கருத்து.
DAŚAKĀRIYAKKARUTTU.

Foll. 1*a*—6*a*.

Same work as that described under No. 1346 of the D.C.T. MSS., Vol. III.

Complete.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1346 நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப் பெற்றது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(b) தசகாரியவநுபூதிவிளக்கம்.
DAŚAKĀRIYAVANUBHŪTIVIḶAKKAM.

Foll. 6b—9a.

Same work as that described under No. 1351 of the D.C.T. MSS., Vol. III.

Complete.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1351 நம்பர் பிரதியைப் பார்தது எழுதப் பட்டதே. இந்தப் பிரதியில் இது முற்றுமுளது.

(c) ஞானோபதேசம்.
ÑĀNŌPADĒŚAM.

Foll. 9b—15a.

Same work as that described under No. 1345 of the D.C.T. MSS., Vol. III.

Incomplete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1345-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டுள்ளது. முற்றுப் பெறவில்லை.

(d) சொக்கநாதர் வெண்பா.
ŚOKKANĀTHAR VEṆPĀ.

Foll. 15b—19b.

Same work as that described under No. 1341 of the D.C.T. MSS., Vol. III.

Incomplete.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1341-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டது. இந்தப் பிரதியிலும் அதனளவேயுள்ளது.

(e) சிற்றம்பலநாடியார்கலித்துறை.
ŚIṞṞAMBALANĀḌIYĀRKALITTUṞAI.

Foll. 20a—25b.

Same work as that described under No. 1321 of the D.C.T. MSS., Vol. III.

Incomplete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1321-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பெற்றதே. அதனளவே இந்தப் பிரதியிலுமுளது. முற்றுப் பெறவில்லை.

(*f*) சிற்றம்பலநாடியார் தாலாட்டு.
ŚIṞṞAMBALANĀḌIYĀR TĀLĀṬṬU.

Foll 26*a*—29*a*.

Same work as that described under No. 1322 of the D.C.T. MSS., Vol. III.

Incomplete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1322-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பட்டுள்ளது. இந்நூல் அந்தப் பிரதியளவே இதிலுமுள்ளது.

(*g*) ஞானநன்மைபஞ்சாக்கரம்.
ÑĀNANANMAIPAÑCĀKKARAM.

Foll 29*b*—32*a*.

Same work as that described under No. 1343 of the D.C.T. MSS., Vol. III.

Incomplete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1343-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பெற்றதே. இந்தப் பிரதியில் இந்நூல் அவ்வளவேயுள்ளது.

(*h*) ஞானவிளக்கம்.
ÑĀNAVIḶAKKAM.

Foll. 32*b*—43*a*.

Same work as that described under No. 1344 of the D.C.T. MSS., Vol. III.

Complete

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1344-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதியதே. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது

(*i*) சைவசித்தாந்தசந்திரிகை.
ŚAIVASIDDHĀNTACANDRIKAI.

Foll. 43*b*—59*b*.

Same work as that described under No. 1330 of the D.C.T. MSS., Vol. III.

Complete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1330-ஆவது நம்பர் பிரதியின்காபி. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

(*i*) சைவாநுஷ்டானபூஜாவிதிமுதலியன.
ŚAIVĀNUṢṬĀNAPŪJĀVIDHIMUDALIYANA.

Foll. 60*a*—62*b*.

Same work as that described under No. 1339 of the D.C.T. MSS., Vol. III.

Complete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1339-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பெற்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. இதன் பின்னர் 63*a*–81*b* வரையிலுள்ள ஏடுகளில் திருமொழி முதலிய பல பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

(*j*) ஓரெழுத்துண்மை.
ŌRELUTTUṆMAI

Fol. 82*a*.

Same work as that described under No. 1244 of the D.C.T. MSS., Vol. III.

Complete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1244-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதப்பெற்றது. இந்தப் பிரதியில் அவ்விரண்டு செய்யுட்களும் உள்ளன.

(*k*) ஐந்தெழுத்துண்மை.
AINDELUTTUṆMAI.

Foll. 82*a*—83*b*.

Same work as that described under No. 1241 of the D.C.T. MSS., Vol. III.

Complete.

(கு-பு.)—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 1241-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்து எழுதியதே. இந்நூல், இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 880.

Palm-leaf. $13\frac{1}{4} \times 1\frac{3}{8}$ inches. Foll. 56. Lines, 7, 8 in a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1927–28 by M.R.Ry. Sundara Rāghavachāriar Avargal, Chintadripet, Madras.

நான்முகன் திருவந்தாதிவியாக்யானம்.
NĀNMUKANTIRUVANTĀDIVYĀKHYĀNAM.

A commentary by Parakālasvāmin on the Nānmukan tiruvantādi (a portion of Nālāyira divyaprabandham) of Tirumaḻiśaiāḻvār. This commentary has not been printed and is bigger than the commentary of Periyavāccānpiḷḷai.

Complete.

Beginning:

<u>நான்முகன் திருவந்தாதி வியாக்யானம்.</u>

ஸ்ரீமந்நாதமுநீந்த்ராதி திவ்யஸூரிமுகோத்பவ |
ஶ்ரீஶாவாப்த்யுபாயாய ஸாரார்த்தாய நமோ நம: ||

ஸ்ரியப்பதியான ஸர்வேஶ்வரன் . . . . முதலாழ்வார்களும மூவ ராய் அவதரித்து, வையந்தகளி, அன்பேதகளி, திருக்கண்டேன் என்று உபக் ரமித்து ஸ்வஸ்ரீ . . . . ஷ விஷயர்க்கு ஸ்விஷயஜ்ஞானஸக்திகளை ஜநிப்பிக்க ஜகத்விலக்ஷணமான விளக்குக்களை ஏற்றிக்கொ(ண்டு) தத்வத்ர யத்தில் ஸம்ஶயவிபர்யயங்களைப் பிரகாசிப்பித்து * * * தன்னொளி ஜ்யோதியையும், அதற்கு எதிர்த்தட்டான ஸௌஶீல்யஸ்வாபத்தையும் ஸகடாக்ஷவிஶேஷ விஷயர்க்கு அறிவிப்பித்து[ய] (அ)வர்களை உஜ்ஜீவிப் பிக்கிறான்.

இதில் முதல் பாட்டால் சதுர்முக சிவாதிகளிலுள்ள காரணத்வஶரண்யத்வாதிகளால் அவர்களுக்கு * * * * * ஜகத்காரணத்வாதிப்ரயுக்த ஶாஸ்த்ரம் ஸமவேதக நிஷ்டமான ஸம்ஶயம் என்னுமத்தை அந்தாதி ப்ரபந்த முகத்தால் அவன் முகங்கொண்டு * * * * * * ஆழ்பொரு ளாய்த்து - ஸமாஶ்ரயணீய நிர்த்தாரணகடகங்களுக்கு(ஸ)த்ர்யோபாதான மானுற்போலாய்த்து. [யெ](எ)ன்முகத்தாலுத்தரிக்கப்பட்டவிவ்வர்த்தத் தை, நீ[ற்] நீங்கள், தே[ற்](ர்)ந்து தேறின ஜ்ஞானத்தால் கே[ழ்](ள்) * * * மகாநிதியைக் கைக்கொண்டா(ற்) போலே * * * * * * *

End:

இனியறிந்தேனித்யாதி :—

இனியறிந்தே னீசற்கு நான்முகற்குந் தெய்வ
மினியறிந்தே னெம்பெருமானுன்னை—யினியறிந்தேன்
காரணனீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை
நாரணனீ நன்கறிந்தே னான்.

யதோபக்ரமம் நாராயணனுடைய பரத்வத்தை மஹோபநிஷதாதிப்ர க்ரியையாலே உபஸம்ஹரித்து ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார். ஒன்றும் மறந்தறியேனென்று ஸ்திரவ்யவஸாயத்வத்தை வெளியிட்டவர் இனி யறிந்தேனென்று திர்வாரம் அருளிச் செய்வது விரோதமன்றோ வென்

னில், * * * * * * * * * * * நிர்த்துஷ்டமான க்ரியைகளை உகந்து பண்ணுவிப்பான் நீயே யாகையால், நீ நற்கிரிசை, நாரணனென்னும் நான் நின்னுள் நன்றாக அறிந்தேன். * * * * * * நாலாயிரத்தெழுநூறு வர்ஷமென்னை யிந்த ப்ரகிருதியில் நியமித்து வைத்து, என்னுள் சிலரைத் திருத்த * * * * * * மிகவும் நிரதிசயாநந்தியானேனென்று திருவுள்ளம். திவ்ய ப்ரபந்தத்துக்கு இவ்வகையான வ்யாக்யானத்தை அடியேனைக்கொண்டு உதிப்பித்துக்கொண்டு * * * * * * * * * இப்பிரந்தவைலக்ஷண்யத்தையும், இவ்வாழ்வாருடைய திருவுள்ளக் கருத்தையும் பார்த்தால்.

[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] ||

Colophon:

ஸ்ரீபரகாலஸ்வாமி நான்முகன் திருவந்தாதி வியாக்யானம் ஸம்பூர்ணம்.

ஶ்ரீமதே பரகாலயதீந்த்ராய நம:.

(கு-பு.)—

இந்த நூல், திருமழிசையாழ்வார் அருளிய நான்முகன் திருவந்தாதி. யென்னும் நூலின் விரிவுரை. பரகாலஸ்வாமியா லியற்றப்பெற்றது பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானத்திலும் விரிவானது. இதுவரை அச்சிடப்படவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. இதன் ஏடுகள் சிதைந்துள்ளன.

R. No. 881.

Palm-leaf. 16¾ × 1½ inches. Foll 75. Lines, 7 in a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1927–28 by M.R Ry. Sundara Rāghavācāriar Avargal, Chintadripet, Madras.

நான்முகன்திருவந்தாதி வியாக்யானம்.

NĀNMUKANTIRUVANTĀDIVYĀKHYĀNAM.

This commentary, which is different from the commentary described above, is by Śrīnivāsa Raṅganātha.

Complete.

Beginning :

நான்முகன் திருவந்தாதி.

ஸம்க்ஷேபமான காரணத்வாதிவ்யாபாரங்களை ஸர்வேஶ்வரனாக ஶ்ரிய:பதியி னுடைய ஸர்வேஶ்வரத்வ, ஸர்வகாரணத்வாதிகளை வெளியிடுகிறார்.— யதாக்ரமப்ரத்யயத்தாலே ப்ரதானவிஷயமான காரணவஸ்துவைத்தானே ஸர்வேஶ்வரத்வ, நிரதிஶயஸௌந்தர்யாதிகளோடே அநுபவிக்கையும் பலமா கையால் அவ்வர்த்தத்தைப் பிரதிபாதிக்கிறவித, சதுர்த்தமான வியல்பாவில் * * * * * * * முதல்பாட்டு.

நித்யம் ஸம்நாஸ்தி ஜகதி ஹேதுகம் ஸ்ராவமஜ்ஜ்ஞம் |
ஸ்வதேதேஶ்வரம் ஸர்வபாஷம் வாஸுதேவம் ஸநாதநம் ||

என்கிறபடியே ஸர்வகாலவர்த்தியான ஶ்ரிய:பதி, ப்ரஹ்ம(ா)ண ஶிவாதிகளுக்கு ஸர்வேஶ்வரனென்னும்படி,

யஸ்மாத்கோடிஸஹஸ்ராணி விஷ்ணோரமிததேஜஸ: |
ஸந்தநேஷு ப்ரஹ்மோக்ய யாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶாஶ்வத: ||

* * * * * * * *

நான்முகனித்யாதி—நாராயணன் 'ஏகோ ஹவை நாராயண ஆஸீத்' இத்யாதிஶ்ருதிஜகத்காரணத்வேந ப்ரஸித்தனான

End :

இனியறிந்தேன் எம்பெருமானுன்னை :—இப்போது எனக்குக் கைவந்த படியால், எம்பெருமானுனவுன்னை நீயானபடியே யறிந்தேன். இனியறிந் தேன் : காரணன் நீ :—ஸர்வத்துக்கும் நிருபாதிககாரணம் நீயே யென்று உன்னை யிப்போதறிந்தேன். கற்றவை நீ :—இதுக்கு முன் நான் கற்கப்பட் டனவும் நீயே. * * * * *
* * * * * * *

ஸர்வஜகத்காரணத்வேந அநுபவித்து, இப்போது ஸர்வஸ்வாமித்வ ஸால ரக்ஷகத்வ நிரதிசய போக்யத்வாதி குணங்களோடே அழகிதாக வறிந்தனு பவிக்கிறேனென்று தாத்பர்யம். * * * *

ஶ்ரீபக்திஸாரமாயாயத்ராத்ர நஜாநே கிஞ்சித்ப்ரஹ்ம |
கயாவிமிவிகம் ஸர்வெவ: க்ருதாம் வ்யாவ்யாம் விஶ்ரப்ய ||

ஶ்ரீ . . . . ரொஜாஸஜகீவஶோ ||
கவயர்த்தாஶ்ரக: வீரகொஹவெக்ஷ்யவஶ்த்ருதி ||

ஶ்ரீபக்திஸாரயோகீஶ: கத்தாயாயவிஜஸ்யா ||
ஸபகேத்ரவிகப: வீரதிஶாவஹோயபஶ்ஜபக்திக: ||

Colophon

இதி ஸ்ரீகௌஶிககுலதிலகஸ்ய ஸ்ரீதேவராஜதேஶிக கடாக்ஷலப்த ஸார்வஜ்ஞஸ்ய ஸ்ரீவேதாந்தாசார்யஸம்யமீந்த்ர ஸூனு[ஸ]ோதரஸ்ய ஸ்ரீவத்ஸதேஶிக[ம](ஸ)கஸ்ய ஸ்ரீநாராயணவேதாந்ததேஶிகஸமாராத்யேந கடாக்ஷலப்த வேதாந்தஶாஸ்த்ரஸ்ய ஜாதேந கல்யாணவேங்கடாசார்யேண ஸ்ரீநிவாஸரங்க நாயகா[ந]்ே(ஸ)நயயா ஸங்க்ரஹம் விவிதா ஸ்ரீஹஸ்திஶைலயோகீந்த்ர மாயாவைதிகா ஸம்பூர்ணா.

(கு-பு.) --

இவ்வுரைநூல், ஸ்ரீநிவாஸ ரங்கநாதரென்பவரியற்றியது. முன் பிரதியினும் வேறானது. இது அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நூல், இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 882.

Paper. 9 × 6½ inches. Foll. 32. Lines, 12—16 in a page. Tamil Slightly injured. Old.

Purchased in 1925-26 from M.R.Ry. C. V. Jambuliṅgam Piḷḷai Avargal, Mylapore.

திருமயிலை யமகவந்தாதி.

TIRUMAYILAI YAMAKAVANTĀDI.

Foll. 9*b*—13*b*. 1—9*a* and 14—32 are left blank.

Same text as that described under R. No 314 ante.

Incomplete.

(கு-பு)—

இந்நூல், மூவருடைக் காட்லாக் 314-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே; ஆயினும் இதில் மூலம் மாத்திரம் இருக்கிறது. இந்தப் பிரதியில் 1—27 பாடல்களே யுள்ளன.

R. No. 883.

Paper. 8¾ × 6¾ inches. Foll. 25. Lines, 20 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1925-26 from M.R.Ry. C. V. Jambulingam Piḷḷai Avargal, Mylapore.

திருமயிலையுவமை வெண்பா.

TIRUMAYILAIUVAMAI VEṆPĀ.

Foll. 1—13. Foll. 14—25 are left blank.

A poem in 130 stanzas in praise of the sacred shrine at Mylapore dedicated to the worship of God Śivā. By Naṭaliṅgakavirāja of Tinnevelly

Complete.

Beginning :

திருச்சிற்றம்பலம்.

திருமயிலை வெண்பா.

பூமான் மகிழ்மயிலைப் புண்ணியனைப் போற்றிசெய்து
நாடா னுவமை வெண்பா நானபாடக்—காமானுங்
கூத்த விநாயகனுங் கும்பமுலை யாரிருவர்
காத்த விநாயகனுங் காப்பு.

* * * * * * *

புட்கர[ளி](ணி)தீர்த்தம் புனைவளத்தாற் பாவைமுகம்
முட்குதிரைமுகத் துண்டாக்குதலாற்—கட்செவியா
னோங்குநகரிக குருகீழ்க்காற் செந்தூரான்
ருங்குமயிலா புரிவேள் தான். (௩)

End :

ஆவினிறைவா வயனும் விரும்புதலால்
மாவின்முகநாடி மருவுதலால் - காவி
பயில்விழிப் பூம்பாவை பறிவுறலாலென்று
மயிலையிரு தாமரைப்பூ வாம். (௧௨௯)

மயிலையுவமை வெண்பாவாசிப்போர் கேட்டோர்
பயிலுமிகச் சிந்தைபதிப்போர்—கயிலைமுத
லெல்லாத்தலமு மிறைஞ்சுதவப் பேறெய்தும்
வல்லார் சுகம் பெறுவார். (௧௩௰)

Colophon :

முற்றும்.

துறைசை - நமச்சிவாய குருபாதந் துணை.

திருநெல்வேலி நடலிங்க கவிராஜர் பாடியது.

(கு.பு.)—

இந்நூல், மயிலாப்பூர் என்னும் சிவக்ஷேத்திர விஷயமானது. நூற்று முப்பது வெண்பாக்களாலாகியது. ஒவ்வொரு வெண்பாவிலும் மயிலை நகர்க்கும், மன்மதன், தாமரைப்பூ முதலிய பொருள்களுக்கும் உவமை யமையுமாறு பாடப்பட்டுள்ளது. நூலாசிரியர், திருநெல்வேலி நடலிங்க கவிராஜாவென்று நூலினிறுதியில் குறிக்கப்பட்டுள்ளது. நடை சாதாரண மாகவிருக்கிறது. இந்தப் பிரதியில் முற்றுமுளது. இஃது இன்னும அச்சிடப்படவில்லை.

R. No. 884.

Paper. 8 × 6½ inches. Foll. 97. Lines, 30—34 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1925-26 from M R Ry. C Jambulingam Pillai Avargal, Mylapore.

திருமயிலைக்கோவை.
TIRUMAYILAIKKŌVAI.

Foll. 1—87. Foll. 88—97 are left blank.

A kind of love-poem having for its hero Śingāravēlar, i.e, god Subrahmaṇya of Mylapore.

Contains 438 stanzas.

Beginning :

திருச்சிற்றம்பலம்.

இஃது

நளவருடம் ஆவணி மாதம் உஎ ந் தேதி திங்கட்கிழமை பூரணைசதயத்துச் சித்தயோகத்தில், பொய்யடிமை யில்லாத புலவர்க்கு அடியனாகிய மயிலை - சீனி - கோவிந்தராசன் பார்வையிடத் தொடங்கினான்.

Sep. 11—1916.

வேலுமயிலுந் துணை.

திருமயிலைக்கோவை.

விநாயகர் வணக்கம்.

பெருகாரணம் புகழ் சிங்காரவேலர் பெருமை சொல்ல
வருகாதல் சேரும் பலன்மேவி வண்டு மலர்ப்பசுந்தேன்
பருகாவி சூழு மயிலைநற் கோவை படர்வதற்கு
முருகாரொடு கொம்பிற் கூத்தாடும் போத்தி முன்னிற்குமே.

அவையடக்கம்.

வியலா ரொளிர்மணிக் கோவையுங் கானின் மிகப்படருஞ்
செயலாருங் கோவையுங் கோவையென்றே புவிசெப்புதல்போல்
மயலான தின்றிப்பல நூலுங்கற்றவர் வாய்மொழியால்
இயல்கோவை தானுமென் கோவையுங் கோவையெனத்தகுமே

நூல்.

கைக்கிளை.

காட்சி.

நீர்கொண்ட கொண்டல் செழுநதாமரைகுமிழ் நீலமலர்
ஏர்கொண்ட கோங்கு செவ்வாம்பல் பைங்காந்தளிவை மலர்ந்து,
சீர்கொண்ட சுந்தர சிங்காரவேலர் திருமயிலைக்
கார்கொண்ட காவிலொரு காமவல்லியென் கண்ணுற்றதே.

ஐயம்.

கானிடமாமயிற் சிங்காரவேலன் கயின்மயிலைத்
தேனிடமாமலரோ புனலோ பணிசேரிடமோ
வானிடமோ மலர்மல்லிகையோ மன்மதனிடமோ
மானிடமோ வல்லியோவென்ன நின்றவிம்மானிடமே.

End

கூத்தர்வாயில் மறுத்தல்.

தொடிக்காலன் செங்கையன் சிங்காரவேலன் சுகமயிலைக
குடிக்காவலர் செல்வழிநோக்கி நோக்கிமெய்க் கூத்தர்மனு
கடிக்காவியங் கொளிமாழ்கி னென்முன்பு காட்டிலென்னும்
படிக்கான நட்டத்தைப் பார்த்தா விலாபம் பரத்தையர்க்கே.

பாங்கிமறை.

அணிவாழ் மயிலையிற் சிங்காரவேல ரருவிவெற்பில்
மணிவாய்மதலை பிறந்தானவ ளாறவளாரைக்கிண் ?
கிணிவாய்மிழற்ற நடைசெயும் போதன்பர்கேண்மனைப்பால்
பணிவாய் மணியுன்ற [வ] பாங்கிவந்தாரென்னபாங்கிதுவே.

(கு-பு.)—

இந்நூல் திருமயிலைச் சிங்காரவேலரை (முருகக் கடவுளை)ப் பாட்டுடைத் தலைவனாகவைத்துப் பாடப்பட்டுள்ள கோவையென்னும் ஓர் வகைப் பிரபந்தம். சிற்றின்ப விஷயமானது. கடவுள்வணக்கம், அவையடக்கத்துடன் நானூற்று முப்பத்தெட்டு கட்டளைக் கலித்துறைகளையுடையது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப்பிரதியில் ஒருபுறமே எழுதப்பட்டுள்ளதோடு இப்பாடல்கள் மசியினால் எழுதப்பெறாமல் பென்ஸிலினாலேயே எழுதப்பட்டிருக்கின்றன.

R. No. 885.

Paper. $8\frac{1}{4} \times 6\frac{1}{2}$ inches. Foll., 41. Lines, 20 in a page. Tamil. Fair. Old.

Purchased in 1925–26 from M.R. Ry. C. Jambulingam Piḷḷai Avargal, Mylapore.

பேரூர்க்கோவை
PERŪRKKŌVAI.

Same work as that described under R. No. 279 ante.

Incomplete.

(கு-பு.)—

இந்நூல், மூலருடக் காட்லாக் 279 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே; ஆயினும் இந்தப் பிரதியில் 325—334 வரையில் பத்துப்பாடல்கள் அதிகமாகவுள்ளன. இதிலும் 159—183 வரை 25 பாடல்கள் இல்லை

R. No. 886.

Paper $7\frac{3}{4} \times 6\frac{1}{2}$ inches. Foll 13. Lines, 16 in a page. Tamil. Injured. Old.

Purchased in 1925–26 from M.R.Ry. C. Jambulingam Piḷḷai Avargal in Mylapore.

திருமயிலைவெண்பா.
TIRUMAYILAIVEṆPĀ

A Prabandha technically known as Veṇpā in praise of God Śiva worshiped in the shrine at Mylapore.

eems complete.

Beginning:

கணபதி துணை.

திருமயிலை வெண்பா.

காப்பு.

சீர்மல்கு பூம்பாவைச் செல்வன் திருமயிலைப்
பார்வெண்பா மாலைசொல வுன்னுவா—மேர்மலிபொற்
கார்முகத் தானைக் கனிக்குவலஞ் செய்நடனக்
கார்முகத் தானை கழல்.

* * * * * *

நூல்.

கங்கை முடியோன் கயிலாய வெற்பினை
மங்கைக் கியம்பு மயிலையே—துங்க
வொளியா ரரியார்க் கொளிப்பா ரடியார்க்
கொளியா ரரியா ருறை. (க)

End:

வானிலவுங் கற்பகத்தாற் மேனுவான் மானிலத் . . .
வானுலக மானுமயிலையே—கூனிலவுந்
தேய்ஞ்சமதியார் திருநீ றிடார்க்கருளத்
தாஞ்சம் மதிபார் தலம். (கக)

பொய்யா மொழியார் புகழாற் புராரியருள்
வையா புரிவேள் மயிலையே—நையாக்
கயிலை யிடத்தான் கடியவிழ்பூங் கோதை
மயிலை யிடத்தான் மலை. (க00)

(கு-பு.)—

இது, மயிலாப்பூரில் உள்ள சிவபிரான் தோத்திர விஷயமானது. காப்புச் செய்யுட்களிரண்டு நீங்கலாக நூறு வெண்பாக்களாலாகியது. இயற்றியவ ரின்னாரெனத் தெரியவில்லை. இந்தப்பிரதியில் இது முற்றுப்பெற்றுள்ள தென்றே தோற்றுகிறது. இந்தப் பிரதி மிகப்பழைய தாதலின் எழுத்துக்கள் நன்றாக விளங்கவில்லை.

R. No. 887.

Paper. 7½ × 6 inches. Foll. 82. Lines, 20 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1925-26 from M.R. Ry. C. V. Jambulingam Pillai Avargal, Mylapore.

திருமயிலைப்பிள்ளைத்தமிழ்.

TIRUMAYILAIPPILLAITTAMIL.

Same work as that described under R. No. 861 *ante*.

Incomplete.

(கு-பு)—

இந்நூல், மூவருடக்காட்லாக் 861 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது காப்புப்பருவந் தொடங்கிச் சிறு தேர்ப்பருவம் 1-4 பாடல் வரையுமே உள்ளது. இந்நூலில் ஒரு புறமே எழுதப்பட்டுள்ளது இந்தப் பிரதி சிறிது சிதைந்திருக்கிறது.

R. No. 888.

Palm-leaf. 16 × 1⅝ inches. Foll. 138. Lines, 10 in a page. Tamil and Grantha Injured. Old.

Purchased in 1925–26 from M.R.Ry. R. Varadāchāriyār, Siṟudāmūr

(a) நாய்ச்சியார்திருமொழிவியாக்யானம்
NĀYCCIYĀRTIRUMOḺIVYĀKHYĀNAM.

Foll 1a—101 a. 101-b–is left blank.

A commentary by Priyavāccān Piḷḷai on the Nāyacciyārtirumoḻi a poem in praise of God Viṣṇu by Gōdā or Āṇḍāḷ. R. No. 234 (b) contains brief notes on the commentary described herein.

Complete.

Beginning:

நாய்ச்சியார் திருமொழி ப்ரவேசம்.

வ்யாவகஸ்ரீகாரமும் பண்ணி, ப்ராப்யத்தையும் நிஷ்கர்ஷித்தாராய்த்துகீழ்; இந்தப் பிரதிபத்தியேயிறே யித்தலைக்குவேண்டுவது. இத்தலையில் கண்ணழிவற்றிருந்தது; அவன்பக்கலிலே அபிநிவேசங் கரை புரண்டிருந்தது. ஐநஹார ஐஷிநிவெஶாநுாா—ஞுவமாகப்பெற்றுக்கொடு திற்கக் கண்டதில்லை;

* * * * * *

இவளுடைய ப்ராப்யத்வரையிருக்கும்படி ;—காமன் காலிலே ஒரு மதமத்த மலராகிலும் முருக்கம் மொட்டாகிலும் வெடிக்கவேணுமென்று, மதமத்தம், முருக்கு இவற்றை ஶ-ஶஶுஷியா நிற்கும். கடகருகந்ததே தேடியிடவேணுமிறே.

(முதற் பாட்டு)—(தையொரு திங்களும்) மார்கழிமாஸம் ஒரு மாஸமு நோற்றார்களாய் நின்றதிறே. இனி தையொரு மாஸமும் அவன் வரும் ஸ்தலத்தை அலங்கரித்து, (தையொரு திங்களும்) "செங்கண்மா லெங்கண் மாலென்ற நாளெந்நாளும் நாளாகும்"—என்று ஸர்வேசுவரன் நம்பக்கலிலே சூஷிசேவ்யம் பண்ணிறுனென்று அறிவதொரு நாளுண்டாகில் காலத்ரயமும் அடிக்கழஞ்சுபெற்றுச் செல்லாநிற்குமிறே. இப்படி யொருநாளை யாநுகூல்யம் மிகையென்றிருக்கும் விஷயத்தைப் பற்றி ஸவத்திறே இவன் காலிலே யொருமாஸமாகத் துவளப் பார்க்கிறது. (துறைவிளக்கி) திருக்கண்ணமங்கை யாண்டானைப் போலே இதுதானே பிரயோஜனமாய்ச் செல்லுகிறபடி. ஸர்வேஶ்வரனுக்கு அஸாதாரணமான ஸ்தலங்களிலே புக்குப் பரிசர்யை பண்ணிப்போரும் குடியிலே பிறந்தவளிறே. பகவத் கைங்கர்யம்

பண்ணுகைக்கு ஶுஶ்ரூஷை பண்ணுகிறபடியிறே இது. (தண் மண்டல மிட்டு) குளிர்ந்த தாசநீயமான மண்டலத்தையிட்டு. * * * *

* * * (வெய்யதோரித்யாதி) ஸ்ரீ வைகுண்டத்திலே நித்ய ஸூரிகளுக்கு ஓலக்கங்கொடுத்துத் தன்செருக்குத்தோற்றஇருக்கக்கடவன், ஸம்ஸாரிகளும் இப்பேற்றைப் பெற்று வாழவேணுமென்று அங்கு நின்றும் போந்து முதல் பயணம் எடுத்துவிட்டு, ஆஶ்ரிதவிரோதி நிரஸநஸமர்த்தனான திருவாழி யாழ்வானைக் கையிலே யுடையனாய்க்கொண்டு திருமலையிலே வந்து நிற்கிறவர்க்கு; அக்கையுந் திருவாழியுமான சேர்த்தி யழகைக்காணவேணுமென்று ஆசைப்படுகிறவென்னை அவனுடனே சேர்த்துவிடவில்லையே. அவனோ அண்ணியனாய் வந்து நின்றான்; எனக்கு அவனையொழியச் செல்லாமை யுண்டாயிருந்தது. இனி சேர்த்துவிட வல்லையோ. இப்போது (வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை) என்றதுக்குக் கருத்து—உகவாதாரை அழியச் செய்கைக்கும் உகப்பார்க்குக் கண்டுகொண் டிருக்கைக்கும் இதுதானே பரிகரமாயிருக்கை. "கூராராழி வெண்சங் கேந்தி வாராய்"—என்றிறேயிருப்பது.

End:

நிகமத்தில் (பருந்தாளித்யாதி) பருத்துப் பெரியகாலை யுடைத்தாய்; சரீரம் பெருத்ததத்தனையும் பாடாற்றவரிதா யிருக்குமிறே; அப்படிப்பட்ட ஆனை யானது, தன்னிலமல்லாத வேற்று நிலத்திலே புககு முதலையின் வாயிலே யகப்பட்டு இடர்ப்பட அதனுடைய ஜகத்யோநி செவிப்பட்ட வநந்தரம் ஆயுதாபரணங்களை அக்கிரமமாகத் தரித்துக்கொண்டு மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து அது பட்ட புண்ணாறும்படி முகங்கொடுத்து ரக்ஷகத்வத்தில் தன்னை யெண்ணினால் பின்னை ஒருவரில்லாதபடியா யிருக்கிறவனை "வாஸோவஹோ வஸ:"—என்னுமாபோலே இதனுடைய விடா யடையத் தனக்குப் பூர்வக்ஷணத்திலுண்டானபடியும், அதனிடரைப் பரி ஹரித்தாற்போலே தன்னிடரைப் பரிஹரித்தபடியையும் சொல்லுகிறது. (பாரித்யாதி) ஸ்ரீ வைகுண்டத்திலன்றிக்கே பூமியிலேயாய், அது தன்னிலும் திருவாய்ப் பாடியிலன்றிக்கே ஸ்ரீ பிருந்தாவனத்தே கண்டமையை. (விட்டு சித்தன் கோதை சொல்) காட்சிக்குக் கைம்முதலிருந்தபடி. (மருந்தா மென்று) இதுதான் ஸம்ஸார பேஷஜமென்று தந்தாமுடைய ஹ்ருதயத்திலே வைத்துக்கொண்டு "நஸீதந்திகதாசந"—என்கிறபடியே யிருக்குமவர் கள், பரமப்ராப்யமாய் நிரதிசய போக்யமாயிருந்துள்ள திருவடிகளை யுடை யவன் திருவடிகளிலே. (பிரியாதென்று மிருப்பாரே) சிலரைக் "கண்டீரே" என்று கேட்கவேண்டாதே, என்று மொக்கத் தங்கள் கண்ணாலேகண்டு நித் யாநுபவம் பண்ணு மிதுவே யாத்ரையாகப் பெறுவர். (௧௰)

ஹரி: ஓம். நாய்ச்சியார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீவரவரமுநயே நம:.

(கு-பு.)—

இவ்விரிவுரை, மூவருடக் காட்லாக் 234(b) நம்பர் பிரதியில் வந்துள்ள குறிப்புரைக்கு மூலமாக உள்ள வியாக்யானம். பெரியவாச்சான் பிள்ளை

யியற்றியது இந்தப் பிரதியில் இவ்விரிவுரை முற்றுமுள்ளது. இதன் முதலேட்டில்

ஸ்ரீவாநமஹாஸௌக²யாநநாயகே,
ஸ்ரீக்ருஷ்ணதீர்த்தாம்ஶவிஜயராஜஸம்பதா |
நாராயண ஸ்ரீ ஸ்ரீக்ருஷ்ணகல்பவ்ருக்ஷ,
தத்வார்த²ஸாரம் ஶரணம் ப்ரபத்³யே ||
ஸ்ரீவாநமாலாய ஸமாஹாயஶிஷ்டம்,
ஸ்ரீக்ருஷ்ணத்ரு ஸ்ரீபதயே ஸ்துதம் ஶிஷ்டம் |
ஸ்ரீநித்யஶக்தவிஜயநாயஶிஷ்டம்,
ஸ்ரீஶைலமந்த்ரபதநாய ஶிஷ்டம் ||

என்ற வானமாமலையில் கோயில்கொண்டுள்ள திருமாலின் ஸ்தோத்ர ரூபமான வடமொழி ஸ்லோகங்களிரண்டும், இரண்டாவதேட்டில். "திருப்பாவை வியாக்யானம்-பூர்வமீமாம்ஸா ஸூத்ரபாஷ்யமிதி வ்யவஹாராத்'

நாய்ச்சியார் திருமொழி வியாக்யானம்.—" உத்தரமீமாம்ஸா ஸூத்ரபாஷ்யமிதி வ்யவஹாராத் "—என்றிருத்தலால், ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில், திருப்பாவை வியாக்யானத்துக்கும், நாய்ச்சியார் திருமொழி வியாக்யானத்துக்கும் முறையே பூர்வ மீமாம்ஸா ஸூத்ரபாஷ்யம், உத்தர மீமாம்ஸா ஸூத்ரபாஷ்ய மென்ற பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன வென்பது தெரிகின்றது.

(b) நாய்ச்சியார்திருமொழிவியாக்யானவரும்பதவிளக்கம்.
NĀYCCIYĀRTIRUMOḺIVYĀKHYĀNAVARUMPADA-VIḶAKKAM.

Foll. 108a—138b.

Same work as that described under R. No. 234(b) ante.

Complete.

(கு-பு.)—

இக்குறிப்புரை, மூவருடைக் காட்லாக் 234(b) நம்பர் பிரதியில் வந்துள்ளதே; இந்தப் பிரதியில் முற்றுமுளது.

R. No 889.

Palm-leaf. 18⅝ × 1½ inches. Foll. 45. Lines, 8—10 in a page. Tamil. Injured. Old.

Purchased in 1925–26 from M.R.Ry. R. Varadāchariyār, S rudmūr.

சதுரகராதி.
CATURAKARĀDI.

Same work as that described under R. No. 527 ante.

Contains the Poruḻakarādi (அ to து).

Beginning :

பொருளகராதி.

காப்பு—விருத்தம்.

அருளகத் தனைத்தையு மாளு நாதனை
மருளகத் தகற்றிட(வணங்கி) நூற்படி
தெருளகத் தொருபொருள் செப்பும்பற்பெயர்ப்
பொருளக ராதியைப் புகலுவாமரோ.

அகத்தியன் பெயர்.—கும்பயோனி, குறுமுனி, முத்தமிழ்க்குரியோன்.
அகத்தியின் பெயர்.—அச்சம், கரீரம், முனி.
அகப்பையின் பெயர்.—கோரிகை, மூழி.
அகலத்தின் பெயர்.—அகலுள், அகறல், அயர்வு, ஆன்றல்; இடம், இடம்பாடு, கணம், கண்ணறை, கனம், சேண், ததம், ஞாட்பு, நளம், நளி, நனவு, நியக்குரோதம், படர்தல், பாழி, மார்பு, வாவு, விபுலம், விசாலம், வியல், விரவு, விரிவு, தகழி.

End :

துணிவின் பெயர்.—உத்தியோகம், தெளிவு, நேரல், தேற்றல், தேற்றம், இவற்றுள் கருமம் முடியுந்தனையும் விடாத்துணிவின் பெயர்.—ஓர்ப்பு, கடைப்பிடி, குறிக்கோள், தேற்றம். துணையின் பெயர்.—இணை, சகாயம், தஞ்சம், துணை, துப்பு.

(கு-பு.)—

இது, மூவருடக் காட்லாக் 527-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள சதுரகராதி யென்னும் நூலின் ஒரு பகுதி. இந்தப் பிரதியில் பொருளகராதி யொன்றே (அகரந் தொடங்கி தகரம் வரையி)லுள்ளது. ஏடுகள் சிதைந்துள்ளன.

R. No. 890.

Palm-leaf. $13\frac{1}{8} \times 1\frac{1}{4}$ inches. Foll 107. Lines, 6—8 in a page. Tamil. Much injured. Old.

Purchased in 1925–26 from M.R.Ry. R. Varadāchāriyār, Siṛudāmūr.

செய்யுட்டிரட்டு.
SEYYUṬṬIRAṬṬU.

A collection of select stanzas dealing with different subjects and apparently taken from different works.

Some stanzas are in praise of the goddess Sarasvatī, Śriraṅganāyaki and Mīnākṣi of Madura.

Beginning:

சுப்பிரமணியர்பேரில் தோத்திரம்.

வெண்பா.

(சரஸ்வதி துதி)

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பள்—வெள்ளை
யரியாசனத்தில ரசருடனென்னைச்
சரியாசனத்து வைத்த தாய்.

ஏறுமயி லும் பன்னிரண்டுடைய தோளும்
சீறிவரு சூரருடல் சிந்தியிடுவேலும்
மாறுருவில் வள்ளியைமணந்த வடிவமும்
ஆறுமுகமும் பதமுமன்பின் மறவேனே. (க)

(வேறு)

வீரதத்துவமு மேறுமாமயிலு மெய்க்கடம்பு முயர்குக்குடஞ்
சேருநற்கொடியு மூவிரண்டெனுமொர் திருமுகத்தழகு பெருமையும்,
ஆறொருத்தர்தா னந்தியும்பகலு மதிவிதத்திறெடு துதிசெய்தார்,
சூரரைத்துணிசெய் கையும் வேலு மெதிர் தோற்றுமே
[வினைகண்மாற்றுமே. (உ)

End:

ம-பர-பத்ந்தான் இரண்டு பதமாயிருக்கும். அதாவது:— த்வாகா த்வம் உபகாரகத்வமென்று. அதுதானென்றென்று இரண்டுபதமாயிருக்கும் உத்தாரகத்வமும், ஸவோத்தாரகத்வமுமென்று. உபகாரகத்வமும், ஹோபகாரகத்வமுமென்று. அதிலிரண்டு வ்யவஹித விஷயமாயிருககும் இரண்டு ஸாதாரணமாயிருக்கும். முதல் சொன்னதுவுமப்படியே. அதாவது. ஒருத்தர்க்கொருவர் உத்தாரகனையும், எல்லார்ககுமொருவன் உத்தாரகனையும், ஒருவர்க்கொருவர் உபகாரகனையும், எல்லார்க்குமொருவன் உபகாரகனையும். அதாவது, ஒரு ஸம்ஸாரியைத் தன்னுடைய நிர்ஹேதுககிருபையாலே அமரர் குழாங்களுடன் கூட்டுகைக்காகக் கடாக்ஷித்து, தாபாதி பஞ்சஸ்ம்ஸ்காரங்களைப்பண்ணி, குருபரம்பரை முன்னாகப் பெரிய திருமந்திரார்த்தத்தைப் பிரஸாதித்து * *

End:

சரமாதிகாரிக்கு ஸ்வரூபஸ்வரூபத்திலிழிகை விரோதியிறேயென்றுப்போலே இந்தப் பாபமாகிற அந்தகாரத்தைப் போக்குகைக்காகவன்றோ இராமாநுசன் இந்த லோகத்தில் அவதரித்தது. ஆக இவ்வெழுத்து ஒண்டியெழுத்தும் பத்தெழுத்துமான இவ்வாக்யத்ரயத்தில் ஸ்ரீவராஹன் இராமாநுசனென்றபடி. இம்மூன்றுக்கு விவரணமாகிறது. சதுர்த்தவாக்கியமென்றறிய வேணும். ஆக ஸஹஸ்ரநாமங்களும் ஸ்வாரஸ்யங்களும் மூன்றும் எம்பெருமானாரிடத்திலே கண்டு கொள்வது. இவ்வர்த்தத்துக்கு ப்ரமாணமே தென்[று](றி)ல் ஏதொன்று மற்றிலேனென்கிற பாட்டும், நாவினுலென்கிற பாட்டும், இதுக்கு அர்த்தமாக அநுஸந்தேயம். இவ்வாக்யத்ரயம் திருநாட்டிலே அடைவே திருமாலினின்றும் முதலியார்நின்றும் அவதரித்தது. எம்பெருமானார் ஸரஸ்வதிபீடத்திலே இம்மூன்றுவாக்கியம் எழுதியிருக்கத்தாமங்கே எழுந்தருளி அங்கே கண்டு அதுக்கு விவரணமாக 'ஸ்ரீமதே ராமாநுஜாய நம:' என்று எழுதியருளினார். ஆகையாலே இம்மூன்று வாக்கியத்துக்குத் தாத்பர்யம் 'ஸ்ரீமதே ராமாநுஜாய நம:' என்பதாம் என்க.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இது, ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில், 'அஸ்மத்குருப்யோ நம:' முதலிய மூன்று வாக்கியங்களின் பொருள் 'ஸ்ரீமதே ராமாநுஜாய நம:' என்பதாம் என்று பல காரணங்களுடன் விளக்குவது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

R. No. 914.

Palm-leaf. $13\frac{3}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 39. Lines, 6 in a page. Tamil and Grantha. Much injured. Old.

Purchased in 1926-27 from M.R.Ry. Dāśarathi Ayyaṅgār Avargal Mannārguḍi.

(*a*) பூர்வாசார்யத்யாநச்லோகா:.
PŪRVĀCĀRYADHYĀNAŚLŌKĀH.

Foll. 1*a*—4*b*.

See the Sanskrit part of this Triennial Catalogue.

(*b*) வானமாமலை மடத்து வாழித்திருநாமம் முதலியன.
VĀNAMĀMALAI MAṬATTU VĀLITTIRUNĀMAM MUDALIYANA.

Foll. 5*a*—39*b*

Stanzas in praise of God, Ālvārs, and the Ācaryas usually repeated by the discriples of the Vānamāmalai Mutt after reciting the Divyaprabandham.

Beginning :

திருமகளும்மண்மகளுஞ் சிறக்கவந்தோன்வாழியே
செய்யவிடத்தார்மகளாய்ச் சேவிப்போன்வாழியே,
இருவிசும்பில்வந்திருக்கு மிமையவர்கோன்வாழியே
இடர்கடியப்பாற்கடலை யெய்தினான்வாழியே,
அரியதயரதன்மகனா யவதரித்தான்வாழியே,
அந்தரியாமித்துவமா யாயினான்வாழியே,
பெருகிவரும்பொன்னி நடுவிற்றுயின்றான்வாழியே
பெரியபெருமாளெங்கள் பிரானடிகள்வாழியே.

End :

சித்திரையில்சித்திரைநாள் சிறக்கவந்தோன்வாழியே
திருக்கோளூரவதரித்த செல்வனார்வாழியே,
உத்தரகங்காதீரத்துயர் தவத்தோன்வாழியே
ஒளிகதிரோன்தேர்க்குதிக்க வுகந்துவந்தான்வாழியே,
பத்தியோடும்பதினொன்றும் பாடினான்வாழியே
பராங்குசனேபரனென்று பற்றினான்வாழியே,
மத்திமமாம்பதப்பொருளை வாழ்வித்தான்வாழியே
மதுரகவிதிருவடிகள் வாழிவாழிவாழியே. (கஉ)

*   *   *   *

நாமார் பெரிய[திரு]மண்டபமார்நம் பெருமாள்
தாமாகவென்னைத் தனித்தழைத்து—நீமாறன்
செந்தமிழ்வேதத்தின் . . . .

. . . .

(கு-பு.)—

இது, ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் வானமாமலை மடத்தார், தங்கள மடத்தில் தினந்தொறும் பிரபந்தம் முதலிய சேவித்தபின்னர்ச்சொல்லி வருகின்ற வாழித்திருநாமம் முதலியவைகளடங்கிய சிறு நூல். இந்தப் பிரதியில் முற்றுமுள்ளதென்றே தோற்றுகிறது. இதன் ஏடுகள் மிகவுஞ் சிதைந்துள்ளன. இந்தப் பிரதியின் முதலில்

[illegible] |
[illegible] ||

என்னும் ஸ்லோகம் எழுதப்பட்டுள்ளது.

R. N.. 915.

Palm-leaf. $8\frac{1}{2} \times \frac{5}{8}$ inches. Foll. 23. Lines, 5 in a page. Tamil and Grantha. Much injured. Old.

Purchased in 1926–27 from M.R.Ry. Dāśarathi Ayyaṅgar Avargal, Mannārguḍi.

ஆளவந்தார் ஸ்ரீ சூர்ணபரிபாலனம்.
ĀLAVANDĀR ŚRĪCŪRṆAPARIPĀLANAM.

A description of the funeral rites performed to Āḷavandār one of the chief spiritual preceptors of the Śrī Vaiṣṇavas, immediately after his demise.

Beginning :

ஆளவந்தார்க்குச் செய்தருளின ஸ்ரீ சூர்ண
பரிபாலனக்கிரமம்.

ஆளவந்தார் திருநாட்டுக்கு எழுந்தருளினவன்று, திருவரங்கப்பெருமாளரையர் முதலாக எல்லாரும் வேரற்ற மரம்போலே விழுந்து வேஷ்டித்துக்கொண்டு சோகிக்க, அங்குள்ளவர் அவர்களைத் தேற்றி, ஆளவந்தார் குமாரரான பிள்ளைக்கரசு நம்பியைக்குறித்து, இனி முன்பு நடக்கும் கிரமத்தைச் செய்தருளவேணுமென்ன, தேவதாஸிகளைக் கொண்டு மடத்ததுத் திருவாசலில் திருவலகிட்டுத் திருநீர்பரிமாறி ஸ்தலசுத்திபண்ணித் திருக்காவணமிட்டுக் கோடித்துத் தர்ப்பமாலைகட்டிச் செங்கழுநீர் மாலைகட்டிப் புலபட்டுக்களாலும், புஷ்பஹாரங்களாலும் கொச்சுக்கட்டியலங்கரித்து, திருக்காவணத்து நாலுவாசல்களிலும் வாழைத்தாறுகள் நாட்டி, இளங்கமுகு பசும்பாளைக் கரும்புகளை நாட்டி, பலபலங்கள் நாட்டி, நாலுவாசல்களிலும் கொடியாடைகட்டி, சித்ரத்வஜங்களை நாட்டி, ப்ரதக்ஷிணவஸ்திமோத்தாசாரங்களிலே வஜ்ரஸாலூத்வாதிரளக்ஷம்பார தோரணங்களை நாட்டியலங்கரித்து * * *
* * * * காவேரி நதியினின்றும திருமஞ்சனங்கொடுவித்து, உபநிஷத்ஸம்ப்ரவர்த்தகமாகத் திருவீதிவலமாகவந்து * * * * * *
ஸர்வவாத்யாநுஸந்தாநத்துடன் கலசங்களையும், ஈசாந்யே-ஸ்ரீ நாராயணாஹ்ராம்நம:, ஆக்நேயே - ஸ்ரீவாஸுதேவாஹ்ராம்நம:, நைருதே-ஸ்ரீஸங்கர்ஷணாஹ்ராம்நம:, வாயவ்யே *
* * * * *

End :

ப்ரஹ்மமேதவிதிப்படி ப்ரஹ்மமேதம் தொடங்கி நடத்தி ஸ்ரீபாதந்தாங்கிக்கொண்டு திருச்சங்கம் பணிமாற, நாதஸ்வரவாத்யங்கள் எங்கும் முழங்க நடைபாவாடையிட்டுக், கரும்புங் குடமுமேந்திப் பொரியும் புஷ்பபுஞ்சமும் தயிரும் பாலுமெங்கும் சிதற விறைத்து, சுமங்கலிகள் மங்களதீபமேந்தி முன்னே செல்ல, இருபக்கமும் சாமரமிரட்டிக்க, வெள்ளைவட்டமிட, ஸ்வாமி திருநாட்டுக்கு எழுந்தருளினாரென்று ஒற்றைச்சின்னம் பணிமாறத் திருவீதி வலம்வந்து, ஸ்மஶாநத்திலேயெழுந்தருளுவித்து * * * *

* * உத்தரவாக்கியத்தாலே வைராக்ஷித்து ஸம்ஸார ஸாதநவர்க்கங்களையும் வைராக்ஷித்து விரக்தமானபடிகளடங்கச் செய்து பள்ளிபடுக்கவேணுமென்று அருளிச்செய்தார் முதலிகளனைவர்க்கும் உடையவர் . . . என்ப.

அண்ணன் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இது, ஸ்ரீவைஷ்ணவாசார்யருள் பிரதானரான ஆளவந்தார் என்னும் யாமுனாசார்யர் பரமபதித்தபோது, ஸ்ரீரங்கத்தில் உள்ள திருவரங்கப்பெருமாளரையர் முதலானோர், அவர்க்கு நடத்திய சரம கைங்கர்ய முறையின்னதென விளக்குவது. உடையவர், மற்றை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு எடுத்துக் கூறியதாக இறுதிவாக்கியத்தால் புலப்படுகின்றது. இந்தப்பிரதியில் முற்றும் இருக்கிறது. இதன் ஏடுகள் சிதைந்துள்ளன.

R. No. 916.

Palm-leaf. 13⅝ × 1⅛ inches. Foll. 35. Lines, 9 in a page. Tamil and Grantha Injured. Old.

Presented in 1927–28 by M. R. Ry. T. R. Sundararagavāchāriar Avargaḷ, Purasavakkam, Madras.

பெரியதிருவந்தாதிவ்யாக்யானம்.
PERIYATIRUVANTĀDIVYĀKHYĀNAM.

A commentary by Parakāla Svāmi on the Periya Tiruvantādi, a poem by Nammāḻvar in praise of God, Visṇu. It has not been printed.

Beginning·

ஹரி: ஓம் ஶுபமஸ்து.

முயற்றி சுமந்தெழுந்து முந்[தித்து](துற்ற)நெஞ்சே
யியற்றுவா யெம்மோடுநீ கூடி—நயபபுடைய
நா[விந்து](வீன்)தொடைகிளவி யுட்பொதிவோம் நற்பூவைப்
பூவீன்ற வண்ணன் புகழ். (க)

ஸ்ரீஶடகோபமுநிவரர், இந்தப் பெரிய திருவந்தாதியில் ஸம்வத்ஸரவத்தில் தமக்குள்ள தீவ்ராபேக்ஷையைத் திருமாலுக்கு வெளியிடுகிறார் இதில், முதற்பாட்டில் ஸர்வஜ்ஞமான பகவானை அநுஸந்திப்பதில் எனக்கு முற்பட்டு நிற்கிற என்னெஞ்சே! உனக்குப் பிற்படவென்னையும் கூட்டிக்கொண்டு நீ தொடுத்தகைங்கர்யத்தை நடத்தாயென்கிறார். முயற்றி *
* * * பூவண்ணன புகழ்.

நீ சுமக்கமாட்டாத முயற்றி–உத்ஸாஹத்தை(ச்) சுமந்துகொண்டு எழுந்து கிளம்பின முந்துற்ற எனக்கு முற்பட்ட நெஞ்சே, எம்மொடுகூடி–என்னொடு கூடின நீ இய[த்து](ற்று)வாய்–, இத்திவ்யப் பிரபந்தத்தை நடத்துவாய்

ஞயப்புடைய - பகவத் விஷயத்தில் அதிஶாஸ்த்ரவ்யுத்பத்திகமான நாக்கால் உண்டான. [து](தொ)டைகளில் - ஸம்ஶ்லேஷங்களில், உள் பொதிவோம் - உள்[ப]பட்டதாக்குவோம். * * * * * * புகழை யுட்பொதிவோம். (க)

End:

இப்போது மின்னுமினிச்சிறிது நின்றூனு
மெப்போது மீதேசொல்வென்னெஞ்சே-யெப்போதுங்
கைகழலா நேமியானம் மேல்வினைகடிவான்
மொய்கழலே யேத்தமுயல்.

அதந்த்ரஜ்ஞாநிகளான தோஷதோஷ[க்]களை(க்)குறித்துத் தன் நெஞ்சுக்கு நியமி(க்கிறதாய்)த் தற்கால ஸாதநத்தால் அவன் திருவடிகளை உபயாநுஷ்டாநத்திலேற்றி மோக்ஷத்தைப்பெறவவன் கைபார்த்திருங்கோளென்[னி](று) இந்த ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார். நீ கடுகமோக்ஷத்தைப் பெறவேண்டினையாகில், உனக்குச்சொல்லுவது * * நைஹேயபிரஸாதகரக்ஷண ஸாதநத்தால் யாதா த்யேவகமாக உபயாநுஷ்டாநத்திலே * * * அதுவே நமக்கு ப்ரபத்நோபாயமென்றறி. ஸத்ராதிகள் நம்மாகிஞ்சிந்ய . . . ஸார்வவிராஜம் * * * * விஶிஷ்டஸம்ஸீவராஶா ப்ரபஞ்சகம்.

Colophon:

ஸ்ரீயேஷதந்த்ராதிகம் கஸ்ராஸ்ரோஸிம்ஶரணம் . . . .
அவிவந்தாகாராவெராவராவரம்விதுதஹிஷ்டகாரி||

பெரிய திருவந்தாதிக்குப் பரகாலஸ்வாமியால் பண்ணப்பட்ட
வ்யாக்யாநம் ஸம்பூர்ணம். (அஎ)

ஹரி: ஓம் ஶுபமஸ்து.
ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகாய நம:.

(கு-பு.)—

இவ்வுரை நூல் நம்மாழ்வார் அருளிய பெரிய திருவந்தாதி யென்னும் பிரபந்தத்துக்குப் பரகாலஸ்வாமி யியற்றியது. பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்துடன் சிறிது மாறுபாடுடையது. வடகலை ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது ; ஆயினும் இடையிடையே சிற்சில எழுத்துக்களும் பதங்களும் தொடர்மொழிகளும் விடப்பட்டுள்ளன. இந்தப் பிரதி மிகவுஞ் சிதைந்துள்ளது. இதுவரை இவ்வுரை நூல் அச்சிடப்பெறவில்லை.

R. No. 917.

Palm-leaf. 14½ × 1½ inches. Foll. 73. Lines, 7 in a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1927–28 by M.R.Ry. Sundara Rāghavāchariyar Avargal, Chintadripet, Madras.

முதல் திருவந்தாதி வியாக்யானம்.
MUDAL TIRUVANTĀDI VYĀKHYĀNAM.

A commentary by Śrīnivāsaraṅganāthācārya of Kauśikagōtra on the Mudal Tiruvantādi forming part of the Nālāyiradivyaprabandham. This commentary is bigger than the commentary of Periyavāccānpiḷḷai

Complete.

Beginning:

ஸ்ரீமத்பாஷ்யவேதாந்தமஹாதேசிகாய நம:.

ஸ்ரீபாஷ்யநிகமாந்தார்யவேதாந்த
யுக்மஸம்ஹிதாதி மநஸாவசஸா பஜந்தம் |
யஸ்மிந்ஹரீ ஸம்ப்ரா[ஸரோஜ]கஸிந்நஜன்மா:
ஸ்ரீரங்கநாதம் ஸுதியா மமஸாரமஸ்து[:](௧).

ஸ்ரீவத்ஸ ஸந்நிமவேதஶிரோமணீந்த்ர
யோகீஶ்வரா(த்)நிகமயோர்மஹாநுஜ்[ஸா]ஸேவ|
ராமாநுஜாய மமயாதிநயோகிவர்யம்
ஸ்ரீநாமயோகிமமஸம்ப்ரபதநஸம்ஶ்ரமீ௨ ||

* * * *

ஸ்ரீபாஷ்யவேதாந்தமஹாநந்தேஶதாதய: |
காஸாரயோகிமா யம்(ஂ)ஸம்ஸ்தாநதியமாமி ||

ஸ்ரியபதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய். * * * ஸர்வேஸ்வரன், ஸ்வயோகீந்த்ராதி ஸூரிவர்யமான கலங்கா(ப்)பெருநகரிலே அயர்வறுமமரர்களென்கிறபடியே * * * * * * * * முதல்வரான முதலாழ்வார்களை அவதரிப்பித்தருளினான். இவர்களாகிறார்:— * * * * * * * * * * * * * * * ஸந்நஹவவரீவாஹநமாகமாக வையந்தகளியருளிச்செய்தார்.

* * * * * * * *

இப்பிரப்ந்தங்களால் பரஹக்தி பரஜ்ஞாநபர(ம)ஹக்திகள் வெளியிடப்[டுதுகள்](டன.) இதனால், திருமந்திரத்தில் ஹயவதிவாதகாம்ஸ

மான வசநங்கள் இப்பிரபந்தங்களுக்கு வ்யாக்யாநங்களென்றதாய்த்து * . * *

* * . * *

முதற்பாட்டு :—விசித்ரகார்யமான ஜகத்துக்குக் காரணமாம்போது, விசித்திரஜ்ஞான சக்தியுக்தனாய், சக்ராத்யாயுததரனான ஸர்வேஸ்வரனே காரணமாகவேணுமென்று, அநுமானத்தாலே ஜகத்காரணவஸ்துவை நிர்ணயியாநின்றுகொண்டு ஸர்வஶேஷியான ஸர்வேஸ்வரன் திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமான வாசிககைங்கர்யம் பண்ணப்பெ[த்தே](ற்றே)னென்று ஸூத்ரதாரராகிறார். வையந்தகளியித்யாதி :—

ஶாஸ்த்ரயோநித்வாதிகரணத்தில் ஈஶ்வரன் ஶாஸ்த்ரைகப்ரமாணகனென்று பாஷிதமாயிருக்க, இவர் அநுமானப்ரமாணகனென்றால் விருத்தமன்றோ என்ன, "ஸூக்ஷ்மம் ப்ரத்யக்ஷதோ ஜ்ஞேயம் வேதஶாஸ்த்ர விரோதிநா। யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:" என்று அவிருத்ததர்க்கம் ஸ்வீகரிக்கையாலும், ந்யாயாநுக்ருஹீதஸ்ய வாக்யஸ்யார்த்த நிஶ்சாயகத்வம் என்று பாஷிதமாகையாலும், விருத்ததர்க்கத்தாலே ஈஶ்வரனை ஸாதிக்கையுபபந்நமிறே.

வையம் - ப்ருதிவீ, தகளியா - தகளியாக, ஶ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமாக "காஷ்டாந்யக்நேர்ஜ்வலிஷ்யந்தி" என்கிறபடியே ஸம்வத்ஸரத்தாலேகாஷ்டத்தையுடைய ஸம்ருத்தியானது மேல்நெய்யுந் திரியுமாக நிரூபிக்கப்படுகிறவஸ்துக்களுக்குஆதாரமாக என்கை. வார்கடலே- சூழப்பட்ட முத்திரந்தானே, நெய்யாக—த்ரவமாக, அத்யந்த மாய்ப் பிருதிவியைச் சூழ்ந்திருக்கச்செய்தே, "தேநவக்ரதவீரோ நாஜ்வாஸ்யா:" என்கிறபடியே, ஸம்வர்த்தாக்நிவும் வநம்பண்ணுமல் அடங்கிக்கிடக்கிறகடலில் ஊர்த்வாம்சமானது மேலோதப்புகுகிற விளக்கைஅபிவ்ருத்திமாக்கும் நெய்யென்றதாய்த்து. வார்கடல் - பூர்ணமான கடலெனவுமாம். வெய்யகதிரோ[ரு](ரா)ன் உக்ரகிரணங்களையுடைத்தான சூர்யன், விளக்காக - தீபமாக, உக்ரகிரணத்தாலே ஜலத்தை க்ரஸித்துக்கொண்டு, "ஶீஷோதேதிஸூர்ய:" என்கிறபடியே. * * * * *

சூட்டினேன் - ஸமர்ப்பித்தேன் ; நித்யகைங்கர்யம்பெறுத என்னுடைய உக்திவிஶேஷநாமிநீஸ்ரக்விஷயவாசிககைங்கர்யம் அநுஷ்டித்தேன் என்றதாய்த்து.ஈஶ்வரஸ்வபாவத்தையறியாதே ஸம்ஸாரத்தில் கிடந்து துக்கப்படுகிற சேதனருக்கு ஸம்யக்ஜ்ஞாநோபதேஶகமான விப்பிரபந்தாப்யாஸத்தால் அந்த(த்)துக்கம்தீரவேணுமென்று சொனமாலை சூட்டினேனென்றுமாம.

இப்படி விசித்ரவைபவந் நிரூபணாநந்தரமானன ஜ்ஞாநஸக்த்யாதி ...ணவைசித்ர்யத்தையும், ஸம்வதஸ்ராநந்யாயாமயாநுவஸர்வே ...வரனே ஜகத்காரணமென்று சுருதிப்ரதத்தாலே ஜகத்காரணவஸ்து ...வ நிர்ணயித்தாராய்த்து.

...nd :

இப்படி மேல்விழுந்து நம்மை ஆதரிக்கிறவனைப் பெறுகைக்கு ...பாயமேதென்ன, ப்ராப்யமும் அவனே, அவனைப் பெறுகைக்கு ...ப்ராபகமும் அவனே என்றத்யவஸிப்பாய் என்று தன் திருவுள்ள...ளைக்குறித்து அருளிச்செய்கிறார்: ஓரடி யித்யாதி. என் நெஞ்சே ...ரணவேணுமென்று அபிநிவேசிக்கிற என்னுடைய நெஞ்சே, ஓரடி...ல் - ஒரு திருவடி[களா]யாலே, தாயவனை * * * * * * * * * * மாயவனையே - ரக்ஷணத்திலே ஸஹாய நிரபேக்ஷ...ய் * * * * மனத்துவை - உபாயமென்று மனஸ்ஸிலே ...த்ருவவ்யவஸாயமாக வைத்துக்கொள்ளு. இப்படியவனேயுபா...மென்று அத்யவஸித்தால் பலம் என் என்ன(ச்)சொல்லுகிறார் ஓர்...யும் * * * * * ஆஸ்ரிதபரிபாலனமும் 'சொல்லித்து. ...ப்பாட்டில், "தண்டுழாய்மாலை சேர் மாயனையே மனத்துவை" ...ன்று சொன்ன[த்]தால் எம்பெருமானுடைய போக்யதையை ...நுபவித்தார் என்றாய்த்து. இத்திருவந்தாதியில் ஸர்வேஶ்வரன் ...நந்தோபஹ்ம, ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்" என்றுஞ் சொல்லுகிற, ...டியே * * * ஆநந்தகுணசாலியென்ற[த்]தையே மிகவும் ...நுபவித்தா[ன்](ர்) பொய்கையாழ்வாரென்னுமிடத்தை ஸ்வாசா...ர்யன் ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்தில் இன்பத்திலென்கிறபாட்டிலே * * * * கண்டுகொள்வது

* * * *

...olophon

காஸாரயோகிநாம்நா ... |
... ||
ஸ்ரீ... |
... ||
ஸ்ரீ...[ஸ்ர](ஶ்ரீ)...|
[ஸ்ரீ]... ||

ஸ்ரீகாஸாரயோகிநே நம:,

இதி ... ஸ்ரீ... ஸ்ரீவேதாந்த ...

𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌦𑍇𑌶𑌿𑌕𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌵𑌾𑌤𑍍𑌸𑍍𑌯𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑌹𑌾-
𑌗𑍁𑌰𑍋𑌃 𑌪𑌾𑌦𑌕𑌮𑌲 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌲𑌬𑍍𑌧 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰
𑌤𑌨𑍍𑌤𑍍𑌰[𑌾](𑌣)𑌨𑌵𑌮𑌣𑌿𑌜𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌮𑌨𑌨𑌾𑌮𑌨𑌵𑍇𑌨 𑌕𑍃𑌤𑌾𑌨𑌿𑌷𑍍𑌠𑍇𑌨
𑌕𑍌𑌮𑍁𑌦𑌿𑌕𑌾𑌯 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌘𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌪𑌾𑌦𑌂 𑌵𑌿𑌵𑍃-
𑌤𑌾 𑌕𑌾𑌵𑍍𑌯𑌸𑌾𑌰𑌯𑍋𑌃 [illegible]

(கு-பு)—

இது, நாலாயிர திவ்யப்ரபந்தத்தின் ஒரு பிரிவாகிய முதல் திருவந்தாதி. யின் விரிவுரை. பெரியாச்சான்பிள்ளை வியாக்கியானத்தினும் விரிவானது., வடகலை ஸம்பிரதாயத்தது. இயற்றியவர், கௌசிக ஸ்ரீநிவாஸரங்கநாதாசாரியர் என்று தெரிகின்றது இந்த ப்ரதியில் இவ்வுரை பூர்ணமாகவுளது. இதுவரை இந்நூல் அச்சிடப்படவில்லை.

R. No. 918.

Paper. 9½ × 6½ inches. Foll. 303. Lines, 23 in a page. Tamil. Good Old.

Presented in 1927-28 by M.R.Ry. Rajagopala Mudaliyar of Mylapore.

(*a*) கைவல்யநவநீதம், முதலியன (செய்யுட்டிரட்டு).

KAIVALYANAVANĪTAM MUDALIYANA (SEYYUṬṬIRAṬṬU.)

Foll. 1*a*—14*a*.

A collection of stanzas with meaning bearing on Advaita Vēdānta and taken from 37 different works such as Kaivalyanavanītam, Uḍalarivilakkam, Bhagavadgītai, etc.

Incomplete.

Beginning :

கைவல்ய நவநீதம்.

அத்திமுகனடி, நித்தநினைப்பவர்
சித்திதிருவொடு, முத்திபெறுவரே.

எவருடையருளால் யானே யெங்குமாம் பிரமமென்பால்
கவருடைப் புவனமெல்லாங்கற்பிதமென்றறிந்து,
சுவரிடை வெளிபோல் யானென் சொரூபசுபாவமானேன்
அவருடைப்பதுமபாத மநுதினம் பணிகின்றேனே.

(இ-ள்)—

எவரது கிருபையினால், யானே சுவரின் கணுள்ள ஆகாசம்போன்று, சர்வவியாபகமான பிரஹ்மம் பிரஹ்மசொரூபமாகிய என்னிடத்துப்பல கூறுபாடுடைப் பிரபஞ்சமியாவும் கயிற்றரவுபோல்.

End :

(பகவற்கீதை.)

அறிந்ாதபருவத்து மகன் செய்குற்றமருத்தாதை
பொறுத்தெனவு மாவிபோலவ்,
பிறியாத தோழன் செய்குற்ற நட்பிற் பெரியோர்கள
பொறுத்தெனவும் பேதையேனுய்க்,
குறியாது செய்துவரு - விளம்பலுற்றான்.

(இ-ள்.)--

அறியாத பருவத்து - விவரமறியாத பால்ய பருவத்தினையுடைய, மகன் செய் குற்றம் - புத்திரன் செய்யுமபராதத்தை, அருந்தாதை பொறுத்தெனவும் - பிதாவானவன் பொறுத்தாற்போலவும், * * * * * * * * * * * வெறியாரும் மலர்ப்பாதங்களிடையே வீழ்ந்து - வாசனை தங்குந் தாமரையொப்பான திருவடிகளில் வீழ்ந்து வேண்டிக்கொண்டு - இரந்து கொண்டு, இவை இன்னும் விளம்பலுற்றான் - இவைகளை மேலுஞ் சொல்லத் - தொடங்கினன். எ---று.

கண்டவரில்லை நீமுன்கண்டவிக்கோலங்காண
வண்டருமிரும்பா நின்றாராதவாலன்புகூருந்
தொண்டருமாகியென்னையன்றியோர் தொடக்கிலாமை
தொண்டவரடைவரென்றான் கோகுலமேய்த்த கோமான்.

(இ-ள்.)--

நீ முன்கண்ட இக்கோலம் - அர்ச்சுனா ! நீ முன்னே தர்சித்த என்னுடைய விசுவரூபத்தை, கண்டவர் இலலை - வேதாத்யயனம், தபசு, தானம், கர்மம்- இவைகளால் தர்சித்தவர்களாக முன்னேயும் ஒருவரில்லை, இனிமேலும் ஒருவருளராகார், காண-இங்ஙனம் அறிய * * * * * * * * * * * * * அநந்யபக்தியினாலே காண்டற்கும், வாஸ்தவரூபமாக ஸாக்ஷாத்கரித்ததற்கும், அபேதரூபமாகவடைதற்கும் உரியனாவேனென்பது எஞ்சி நின்றது.

இனி ஸ்ரீபகவான், கீதா சாஸ்திரத்தின் சாரபூதமான அர்த்தங்கள் முழுவதுந்தொகுத்துக் கூறுகின்றார்; ஆதலால் - ஆதலின், அன்புகூருந் தொண்டருமாகி - என்னிடத்து அன்புமிக்க பக்தரூபமாய், என்னையன்றி - பரமேசுவரனை என்னையல்லாயவ் * * * * * அடைவரென்றான் - பரமேசுவரனை என்னை அபேதமாக அடையா நிற்பர் என்று அருளிச் செய்தனர். கோகுல மேய்த்த கோமான் - பசுவினை மேய்த்த ஸ்ரீபகவான்.

(கு பு.)---

இதில், கைவல்ய நவநீதம், உடலறி விளக்கம் முதலாகப் பகவற் கீதையீறாக 37 நூற்களிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்ட பல் பாடல்களும் அவற்றின் பதவுரையும் உள்ளன. முழுவதும் அத்வைதமதத்தைச் சார்ந்தன. தொகுத்தவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுப்பெறவில்லை.

R. No. 919.

Paper 8¼ × 8½ inches. Foll. 198. Lines, 22 in a page. Tamil. Fair. Old.

Presented in 1927-28 by M.R.Ry. Rājagōpāla Mudaliyar of Mylapore.

ஞானவாசிட்டச் சுருக்கம், உரையுடன்.

ÑĀNAVĀSIṬṬACCURUKKAM, WITH COMMENTARY.

A collection of select stanzas taken from Ñānavāsiṭṭam which work is described under R. No. 138 Vol II, Part II of the Tamil Triennial Catalogue. These stanzas are accompanied with meaning.

Incomplete.

Beginning:

ஞானவாசிட்டம்,

சுருக்கம்.

மூலமும், உரையும்.

பெண்மைபாதியன் பெற்றகளிற்றினை
யண்மைதூரமறவகத் துன்னுவாம்
திண்மை(ஞானச் சிறப்புயர் வாசிட்ட
முண்மை)யாக வொருங்குரை செய்யவே.

(இ-ள்.)—

இடம்பொருந்திய வாக்கியார்த்தபோத(ச்)சிறப்பினால் மேன்மையாக விளங்கிய ஞானவாசிட்டத்தைக் கீர்வாணத்திலுள்ள பிரகாரமாகத் தமிழிற் செய்யுளான் முழுதுஞ் சாற்றும்பொருட்டு, உமைபாகனாகிய பரமசிவன் ஈன்றருளிய யானைமுகத்தினையுடைய விநாயக மூர்த்தியை, அணிமை சேய்மையின்றி இடைவிடாமல் உள்ளத்தின்கண் சிந்திப்பாம்.

* * * * * * *

* * * * * * *

அதிகாரி குருமுகமாய் விசாரித்தல்.

ஒருங்குணர் குரவனுமுயர்வான்மீகனை(ப்)
பொருங்குறப் பரத்துவன் வணங்கிவன்)பவ
நெருங்குவெந்துயரிலே நின்றதெங்ஙனம்
அருங்குணத்திராமனீயருளிற் கூறென்றான்.

(இ-ள்.)—

முழுவதை(யு)முணர்ந்த ஆசார்யனாகிய மேலான வான்மீகி முனிவரை யடைந்து பரத்துவாச முனிவர் நமஸ்காரஞ் செய்து, "கொடிய பிறவியிற் செறிந்த மகாஸம்ஸாரதுன்பத்தில் அரிய சத்துவ குணத்தையுடைய ஸ்ரீராமன் இருந்ததெப்படி? தேவரீர் கிருபையால் அநுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று மிருதுவாக விண்ணப்பித்தார்" என்பதாம்.

End:

(31) அத்திறந்தானே தமரெலாமிறப்பவன்னியதேசத்தையடைந்தான்
சத்திர நிழற்றக் கீரதேசத்திற்றலைவனாய்ப்பின் கனல்புககான்
உத்தமமா நின்னுளத்திலே வெறிதேயுன்னா சம்பந்த மாயதனாற்
பத்திபாய்ந்துளதாலப்படியாகப்பகர் புலைக்கடைஞ்சனதியற்கை.

(இ-ள்.)—

அக்காரணத்தினால் உறவினரனைவரு மரணமடைய அயலான நாட்டையடைந்தான்.

வெண்கொற்றக்[கொ](கு)டை நிழலைச் செய்ய(க்) கீரமண்டலத்தில் இராசாவாகிப் பின்பு, அக்கினியிற் பிரவேசித்து, உத்தமமான உன் மனதில் வீணாக நினைக்கின்ற சம்பந்தமாயிருக்கின்றவதனால் சொல்லப்பட்ட நீசனியல்பானது, அந்தப் பிரகாரமாகப்(பி)ரதிபலித்தது.

சகல கற்பனையும் வைத்திருக்கின்ற மனம் ஓர் காலத்தில் ஒன்றை வெளிப்படுத்தில், அதில் என்னவியப்பென்றும், காகதாலீய ஞாயத்தைப்போல உன் மனதில் நீசத்தன்மை பத்திப்பாய்ந்தபடியே அதிதி மனத்தினுங் கீரமண்டலத்தார் மனத்தினுமேக காலத்தில பத்தி(ப்)பாய்ந்தபடியால் விசித்திரமாகக் காணப்பட்டதென்றும், அநேகர் ஒரு சொற்பனங் கண்டதுபோலச் சொல்லப்பட்ட யாவரும் ஏக காலத்தில் * * * * * உனக்குத் தோற்றின சாக்கிர சொற்பனம் சாக்கிரமாகத் தோற்றினதென்றும் அறிவாயென்பதாம் இம்மாயையின் மயங்கினவர்கள் அஞ்ஞானியென்றும், மயங்காதவர்கள்
. . . . . .

(கு-பு.)—

இதில் ஞானவாசிட்டமென்னும் வேதாந்த நூலின் செய்யுட்களில் சிலவற்றைத் தொகுத்து, அவற்றுக்கு உரையும் எழுதப்பட்டுள்ளது. காதிகதை வரையிலுமே உள்ளபடியால் முற்றுப் பெறவில்லை. இது பெரும்பாலும் அத்வைத மதத்தைச் சார்ந்தகாம் இதன் பின்னர் 66 பக்கங்களில், சைவ புராணம், திருவிளையாடல் புராணம், தேவாரம் முதலியவற்றினின்று சிற்சில பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன.

R. No. 920.

Paper, $8\frac{1}{4} \times 6\frac{1}{2}$ inches. Foll. 35. Lines, 12, 13 in a page. Tamil Fair. Old.

Presented in 1927–28 by M.R.Ry. Rajagopala Mudaliyar of Mylapore.

(a) ஆத்திசூடித்திறவுகோல்.
ĀTTIŚŪḌITTIṞAVUKŌL.

Foll. 1*a*—7*a* 7*b* is left blank.

Twelve didactic stanzas embodying respectively in the end each of the stanzas of Āttiśūḍi beginning with vowels.

Beginning :

ஆத்தி[ச்]சூடி உயிரெழுத்து 12-க்கும் திறவுகோல்.
அறஞ்செய விரும்பு

(இ-ள்.)—
அர[ன்யெ](னெ)ன்ற பொருளல்லா லுலகிலண்
டருக்குத்தான் முனிவருமே காணு(ர்) சூக்ஷ(ம)ம்,
சரமென்னும் பெயர்பெற்று வுலகில்தானும்
தனக்குள்(ளே)தானாகி யண்டமாகி(ப்),
பரமென்றகீர்த்தியுள்ள சித்தர்யோகி
பரிவாக வஷ்டரித்தும் நமனைவெல்வார்,
குருவென்றுஞ் சீஷரென்றுங் கற்பமென்றுங்
குவலயத்தில[ர](ற)ஞ்செய்ய விரும்புமாச்சே.

End :

அஃ(க)ம் சுருக்கேல்.

(இ-ள்.)—
சுருககுவது மயிர்ப்பாலமீதில் தானுந்
தூண்டாத தீபம்போலிருக்க வேணும்,
பழக்கச்சே தெரியுமல்லோ காயின்போகம்
பலிதமாமில்லையென்றறிந்துகொள்ளு,
பெருக்க[ப்](வே) போசனமு நீருமுண்டால்
பேதைகளே மனிதருக்குச் சாவுமுண்டோ,
உருக்கலந்தபோதே தானெல்லாமாச்சு
[உளவ] (அ∴)க்கஞ் சுருக்கமதை யுன்னிப்பாரே.

Colophon :

ஆத்தி[ச்]சூடி, குருமுனி தி[ர](ற)வுகோல் உயிரெழுத்து 12-க்கும்
வி[பற](வர)ம் முற்றும்.

(கு-பு.)—

இது, ஔவையாருடைய அமுதமொழியாகிய ஆத்திசூடி யென்னும் நூலின் உயிர்வருக்கப்பன்னிரண்டு சூற்பாக்களையும் தனித்தனியே ஒவ்வொரு செய்யுளினீற்றிலமைத்துப்பாடப்பட்டதொரு நூல், 12 பாடல்களே யுள்ளன. இதன் பின்னர் 8-வது ஏட்டில்—

“நன்னிலஞ் சதிரம்நான்கு நாளிரு நாளிற்சோமம்,
வன்னி(யு) மூன்றுகோணம் வாயுமே யாறுகோணம்,
மின்னியவெளியேட்டம் மெய்யென்பதிதுவே காணுந்,
தன்னிலே பிறந்து பின்னுந் தன்னிலே யொடுங்குந்தானே.”

என்னும் சரீரத்தின் அமைப்பை யுணர்த்தும் பாடல், உரையுடனும், ஐம்பத்தோரட்சரங்களும், உடம்பில் இன்ன இன்ன அவயவங்களில் உள்ளன என்பதை யுணர்த்தும் செய்யுளொன்றும், அதற்கு விவரமான உரையும் 9, 10 ஏடுகளிலும் எழுதப்பட்டுள்ளன.

(b) கணபதி துதி.
GAṆAPATITUDI.

Foll. 11a—12b.

A eulogy on god Gaṇapati or Vināyakar.

Contains eight stanzas.

Beginning :

பந்தமகற்று மனந்த குணப்பரப்பு மெவன்பா லுதிக்குமோ,
எந்த வுலகுமெவனிடத்தி லீண்டிருந்து காக்குமோ,
சந்த மறையாக மங்கலைக ளனைத்துமெவன்பாற் றகாவருமோ
அந்த விறையாங் கணபதியை யன்புகூரத் தொழுகின்றோம். (௧)

End :

பாசவறிவிற் பசுவறிவிற் பற்றற்கரிய பரன்யாவன்,
பாசவறிவும் பசுவறிவும் பயிலப்பணிக்கு மரன்யாவன்,
பாசவறிவும் பசுவறிவும் பாற்றிமேலாமறிவான
தேசனெவனக் கணபதியைத்திகழச் சரணமடைகின்றாம்.

(கு-பு.)—
இதில், விநாயகர் தோத்திர விஷயமாகிய எட்டுப் பாடல்கள் உள்ளன. நடை தாழ்ந்தது.

(c) நிரதிசயானந்தம்.
NIRATIŚAYĀNANDAM.

Foll. 13a—39a.

Stanzas of a philosophical nature. The style is very commonplace and the name of the author is not known.

Contains 107 stanzas.

Beginning :

ஆத்ம சொரூப விநாயகர் வணக்கம்.

சத்தோடு சித்தாய்ச் சார்ந்தும் சாராத
வித்தாகி யானந்த விளைவாய்—முத்திநிலை
நல்கிய பேரானை நாங்கண்டுங் காணு
வல்லபையானையே வாழ்த்து. (௧)

தலைவனைப் பணிதல்.

அறிவாயிருந்து அநந்தசென்மந்தோறும்
குறியா யெனையாண்ட கோவே—நெறிகாட்டி(ச்)
சத்தியனுய்ச் செய்த தனித்த சிவலிங்க
ஆத்மரூ பாயநம வே. (௨)

End :

ஆயின் எல்லாம் போச்சுதோ.

வெம்மாயை பட்ட வெளிகடந்துபோனல்
சும்மாவிருப்பது வாய்(த்) தோன்றுதே—நம்மா
எரிக்காதுனைப் போத மெங்கு திறைவ(ா)
மறிக்கு முதலது நீயானுய்.

* * * *

கண்டேன் களிகூர்ந்து சிவலிங்கநாமங்
கொண்டோங் குருவோ டிவணுற்றெனையாண்ட கோவே
பண்டேயொரு நீ வகுத்திட்டபடிக்கி யானுன்
தொண்டாகி வந்தின்றுனைப் பாடத் தொடங்கினேனே. (எஎ)

(கு-பு.)—

இந்நூல், வேதாந்த விஷயமானது நூற்றேழு பாடல்களையுடையது இதிலுள்ள வெண்பாக்கள் தளைதட்டல் முதலிய பிழைகளுடன் இருக்கின்றன. நடை சாதாரணமானது. இயற்றியவர் இன்னரெனத் தெரியவில்லை.

R. No. 921.

Paper. 6 × 4½ inches. Foll. 107. Lines, 19 in a page. Tamil and Grantha. Much injured. Old.

Presented in 1927–28 by M. R. Ry Rājagōpāla Mudaliyār of Mylapore.

(*a*) மாணிக்கவாசகர் சரித்திரச்சுருக்கம். MĀṆIKKAVĀCAKAR CARITTIRACCURUKKAM.

A short account of the leading incidents in he life of the Māṇikkavācakar, a famous Śaiva devotee.

Complete.

Beginning:

சிவமயம்.

மாணிக்கவாசக சுவாமிகளது சரித்திரச்சுருக்கம்.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலு மெஞ்சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேனீ றெங்கே மாமறைநூ லெங்கே
யெந்தைபிரா னஞ்செழுத்தெங் கே.

மாணிக்கவாசகவாமிகள், அரிமர்த்தனபாண்டியராஜன் காலத்தில், திருவாதவூரில் அமாத்தியரென்கிற அந்தணர்குலத்தில் திருவவதாரம் செய்தருளினர். வாதவூரரென்பது அவரது பிள்ளைத் திருநாமம், அவர் இளமைப் பருவங் கடப்பதன் முன்னரே, தம்மரபுக்குரிய வேதசிவாகம முதலியவற்றையும், பிறநூல்களையும் கற்று வல்லவராயினர், அவர் குணாதிசயங்களைத்

தும் மதுரை அரிமர்த்தனபாண்டியன் கேள்வியுற்று, உடனே வாதவூரரை வருவித்துக் குணங்களையெல்லா நன்காராய்ந்து மேலான சிறப்பு(க்)கள் செய்து தென்னவன பிரமராயன் என்னும் பெயரும் கொடுத்துத் தன்னிடத்தே முதல் மந்திரியாக்கினர்.

End :

திருக்கோவையார் பாடவுங்கேட்டு அவர் திருவாய்மலர்ந்தவண்ணம் அவற்றைத் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி, அப்புத்தகங்களில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எனக் கையெழுத்து(யிட்டு) மறைந்தருளி(ன)ர்.

அதன்பின்பு, மாணிக்கவாசகசுவாமிகள் சோதிமயமாக விளங்கிய சிதாகாசத்திலே கலந்தருளினார்.

Colophon

சரித்திரச்சுருக்கம் முற்றிற்று.

(கு-பு.)—

இது, மாணிக்கவாசகரது சரித்திரத்தைச் சுருக்கியெழுதப்பெற்றது; இதன் பின்னர், 9-107 வரையுள்ள ஏடுகளில் திருவாசகச்சிறப்பென்ற தலைப்பில் திருவாசகப் பாடல்களில் பல எடுத்து எழுதப்பட்டுள்ளன.

R. No. 922.

Palm-leaf. 16¼ × 1⅜ inches. Foll. 79. Lines, 7 in a page. Tamil and Grantha. Injured. Old.

Presented in 1927–28 by M.R.Ry. Sundara Rāghavāchāriyar Avargal, Chintadripet, Madras.

இரண்டாந்திருவந்தாதி வியாக்யானம்.
IRAṆḌĀNTIRUVANTĀDIVYĀKHYĀNAM.

A commentary by Kauśika Śrīnivāsaranganthācārya on the Second Tiruvantādi forming part of the Nālāyiradivyaprabandha. This commentary is complete and is not printed.

Beginning :

ஸ்ரீமத்³வாத்ஸ்யவேதா³ந்தமஹாதே³ஶிகாய நம:.

ஸ்ரீவாத்ஸ்ய நிக³மாந்தமஹார்யாம் வேதா³

யஜ்ஞஸம்ஹநாதி மேதா⁴வாக்³விதா³ந்தகா |

யஸ்ய ஸூக்திஸ்ஸ்ரீஹரோ மேதா⁴வீ

ஸ்ரீகாவ்யயோகி³ பாண்டி³த்யவாக்³மிதா ||

தா⁴வாத்மவதி மேதா⁴ வேத³ஸ்வரூபஸ்ய

யோக³(ஸ்ய)ஸ்ய[யா](து) நிமேஷேண ஸம்ஸாரஸாக³ரே ||

ஈாஜோநஜாய-ஃ(ஜய)யாஜநயொஸி(வய-ஃ)
ஸ்ரீநாயயொஸிநஜ[ா]ஹஂஸஂகொவஸ-ஞிஜ ||

*   *   *   *

ஸ்ரீவாஷயஜ்லீவெஷாஸ ஶஈஈஸ-ஞஈஸூஷாதயீஃ |
ஸ-ஞகாவஜ்யொஸிஶாஷாய-ஃாஜ ஸஂஶூஸ்ஷாதி யஜாஜகி||

இப்படி முதலாழ்வார்களில் முதல்வரான பொய்கையாழ்வார், கீழில் திருவந்தாதியில், உஃயவிஸ-ஞதிநாயனுய், ஸவ-ஃஸொதானுய் * * * * * * ஸவெ-ஃஸூானுடைய * * * * * * * திருவடிகளே யென்னுமிடத்தையும் அறுதியிட்டார். அநந்தரம், இரண்டாவரான பூதத்தார் வையந்தகளியருளிச்செய்த * * * * * * நடைவிளங்கு தமிழாலே செவிக்கி(னிமை)யாகப் பேசித்தலைக்கட்டுகிறுர்.

*   *   *   *

"வாஸக்திவாஜநவாஜஸ்தெந்ஜக லூஹாவஂஜோகஈஈஷ" என்று முத்திதசையிலுண்டாகக் கடவவிம்மூன்றும், மயர்வறம[த](தி)நலம் அருளப்பெற்ற வாழ்வார்களுக்கு "ஜஈக்தாநஈஷ-ஞதிஜிஹஷாஸஜ்திஜெஜ ஜஈகஈஷஃ" என்கிறபடியே ஹஶவஜ்ஸாஷத்தாலே யிங்கேயுண்டாயி[த்தி](ற்ற)ன.

முதல்பாட்டு:—ஹஶவஜ்ஸாஷஷூமான தம்முடைய வெஜாவஸூா விஶேஷங்களைத்த (க)ளியும் நெய்யுமாக ரூபியாநின்றுகொண்டு சேஷியான நாராயணனுக்கு, வாஜ்ஞமாகிற உஜ்ஷீவத்தை யேற்றியடிமைசெய்யப்பெற்றேனென்று கிருதார்த்தராகிறுர் 'அன்பேதகளி'யிதி:—

அன்பேதகளியா - விஷய வெஷக்ஷண்யஜதமாக உண்டான வாஸக்ஜவகஜோ-ஞமான ஸ்நேஹமானது, மேல் சொல்லுகிற நெய், திரிமுதலானவற்றுக்கு ஆஸாராமான தகளியாகவும்,

ஆர்வமே நெய்யாக - அதடியாகப் பிறந்து வஸிவஜுஷஸாவஸமான அபிநிவேசமானது, மேலேத்தக் கடவ விளக்குறுப்பான நெய்யாகவும், ஆர்வம்-அன்பின் தீக்ஷியவஸ்ஂ, இன்புருகு * * * * எற்றினேன் - ஸூஈ-ஞவாஜிகள் யஷாவஜ்ஜகாஶிக்கும்படி எற்றினேன்.

End :—

வஜயொஜநாஜஈவாஈர் நம்மையாஶ்ரயித்தபடி சொன்னீர்; உமக்குச் செய்யவேண்டுவது சொல்லீரென்ன, கொள்கொம்பு மூடப்படர்ந்த வெஜஜத்தையாஶ்ரயத்தளவாக்கித்தரவேணுமென்கிறுர்.

மாலேயிதி—மாலே, நெடியோனே, கண்ணனே - ஸ்வரூபகுணங்களால் வந்த பெருமையுடையவனாய், விபூதியோகத்தால் வந்த வைபவத்தையுடையவனாய், ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களுக்கும், நிர்வாஹகனாய் யதா, ஸ்வப்ரகாசாத்மனாய், அந்த ப்ரகாசத்துக்கு எல்லையில்லாதபடியிருக்குமவனாய், நித்ய ஸூரிகளுக்கும் அவ்வருகான பெருமையையுடையவனுயென்னுமாம் * * * * * உன்பக்கத்திலுண்டான பரேமத்தை நித்யமாகச் சொல்லும்படியமைத்தருளவேணுமென்கை. * * * * * அவனுடைய ஆஶ்ரயணத்திலே வ்யவதானமான வைரத்தைச் சொல்லி, வைரவிஷயதயா அவனையே சரணமாக ஆஶ்ரயித்தாராய்த்து. (௩)

Colophon :

ஶ்ரீஸூக்திபோதி ஜாமாத்ரு ஸுஜாதேநோக்திஸாரவாந் |
கதாவிவிதகம் கஷ்டேஜ்ஞை: ஸ்ரீகாந்தவ்யாக்யாவிஸ்ரஸ்யஹி ||
ஶ்ரீஸூக்திமுக்தாமஹோதீ ஸ்ரீஸூத்ராயாமதிஸ்ஸ்யா |
ஸதோக்த்யவிகா: ஸ்ரீநிவாஸஹ்ருதயாநாந்தஸக்திக: ||
ஶ்ரீவாத்ஸ்யவேதாந்த மஹாமஹோபாத்யாயஸ்ரீதாதிமஹா |
கவயோர்வ்யாக்யாஸ்ரீகஸ்யாஸ்ரீ ஜயவேதாந்தரஸ்ரவாந் ||

இதி ஶ்ரீ கௌஶிக குலதிலகஸ்ய, ஶ்ரீமதாத்ரேய தேஶிக கடாக்ஷ லப்தஸாரஸ்வதஸ்ய * * * * ஶ்ரீநிவாஸராகநாதஸ்ய க்ருதௌ அந்தாதித்வயவ்யாக்யாகுஞ்சிகா ஸூக்திபோதிஜாமாத்ருஸம்ப்ரதாயப்ரகாசிகா ஸம்பூர்ணா

(கு-பு.)—

இவ்விரிவுரை, நாலாயிர திவ்யப்ரபந்தத்தின் ஒரு பாகமாகிய இரண்டாந் திருவந்தாதிக்கு கௌசிகஶ்ரீநிவாஸரங்கநாதாசார்யர் இயற்றியது. இதுவரை அச்சிடப் பெறாதது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R No. 923.

Palm-leaf. 14¼ × 1⅛ inches. Foll. 56. Lines, 8 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. P. S. Swaminātha Bhaṭṭar Avargal, Shoranur, S. Malabhar.

அகத்தியர் கர்மசூத்திரம், முந்நூறு.

AGATTIYAR KARMASŪTTIRAM, MUNNŪṞU.

A medical treatise in 300 stanzas dealing with certain kinds of diseases and laying down the method of preparing certain medicines. The work is attributed to Akattiyar.

Complete.

130A

Beginning :

அகத்தீசுவரர் அருளிய கன்மசூத்திரம் முந்நூறு.

பூரணமாய் மும்மூலம் பொறியிற்கூடாய்ப்
பொம்மிபவ மேகமதாய்ச் சிரசில்கூடாய்க்,
காரணமாய் நீர்கலந்து கணிகமேபோம்
கொள்ளுகன வெழுந்த வாயுமூத வெட்டுமெல்லாம்,
சீரணமாய்ப் போகாது வாதபித்தஞ்
சிலேட்பனந்தான் மூன்றுமே நோய்களெல்லாம்,
தாரணமாய்த் தசவாயு மூனறுவாயுவில்
சமானனொடு பிராணனோ டபானந்தானே. (க)

* * * *

காணவே சொல்லுகிறோம் மேகரோகங்
காயத்தில் வரவெல்லாம் நீரழிவினாலே,
தோணவே சொல்லுகிறேன் வாதத்தாலே
தொடுக்கின்ற மேகசலக் கழிச்சல்நாலும்,
பூணவே பித்தத்தால் மேகமாறு
புதியசிலே[ழ்ப் (ட்)]பனத்தாலே மேகம்பத்து,
நாணவே யிருபதுக்கும் பேரைச்சொல்வேன்
நலமான பிரமனென்று ருத்திரனென்றும். (௨)

End:

வாரானகற்பம் பாதகத்தைச் சொன்னேன்
வரிசையுடன் வதவங்க ளனுஷ்டானங்கள்,
கூறுன கிருதங்களி லேகியங்கள்
கோடானகோடி செந்தூரஞ் சொன்னேன்,
பேறுன தைலங்க ளிரசாயனங்கள்
பிழைப்பதற்கு நோய் தீர்ப்பித்துமாற்றி,
நீறுன நீற்றினங்கள் குருவுஞ் சொன்னேன்
நிசமாகப் பிடித்தவர்க்கே சித்தியாமே. (௩௭)

சித்தியுண்டாம் மவுனத்திற் செல்லுவோர்க்கு
தெளிவான மனதுரிமை யறிவினோடும்,
பத்தியாய் நிலைத்தபின்பு பாவம்போச்சு,
பஞ்சபொறி புலனுண்மை பறந்துபோச்சு,
புத்தியாய்ப் பிழைப்பதற்குச் சாகாதசொல்லும்
புகழான மனவாசி வாயுயோகம்,
முத்தியா யிருவினையு மற்றதேசி
முதலான சொர்க்கபத முத்திதானே. (௩௭க)

பூரண கடாக்ஷமுண்டாகவும். தேவி சாமுண்டி துணை.

(கு-பு.)—

இது, வைத்தியத்தைச் சார்ந்தது. இதில் வாதம், மேகம், பித்தம், சிலே ஷ்மம், மூலம், குன்மம், க்ஷயம், கிராணி முதலிய நோய்களின் வகைகளும், திரிலோக சிந்தூரம், அமிர்தசஞ்சீவி லேகியம், பவழ பஸ்மம், வங்க பஸ்பம்

முதலிய மருந்துகள் செய்யும் முறைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் முந்நூறு பாடல்களாலாகியது. அகத்தியர் இயற்றியதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 924.

Palm-leaf. 11½ × 1 inches. Foll. 38. Lines, 5—7 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. P. S. Swaminātha Bhaṭṭar Avargal, Shoranur, S. Malabar.

(*a*) நந்திநூல்.
NANDINŪL.

Foll. 1*a*—28*a*. Fol. 28*b* is left blank.

A treatise on astrology dealing with palmistry etc.

Complete.

Beginning :

திரிபுரமெரித்தோன் மைந்தன் தினகரனடியை வாழ்த்தி
மருவியநந்திநூலின் வளமையைப் புகலக்கேளீர்
சரிவரமுனிவர்தாமுஞ் சரநூலாகத் தோன்றிக்
குருவருளாலேபோற்றிக் குணமுடன் செப்புவேனே. (க)

* * * *

தரணிதனிலுள்ள மானிடர்க்குச் சொல்வேன்
தன்மையுடன் குருபாதந் தஞ்சமென்றேன்,
கரணமுட னிக்குறிகள் தோற்றமாகுங்
கசடர்குறிப் பறியாமற் பொய்தானென்பர்,
திரணமுமே தெரியாத மூடர்க்கிந்தால்
தெரியாது இந்நூலையவர்க் கியாதே,
அரணமுனிவோ ருரைத்த சரநூல்தன்னை
யாராய்ந்து குறிப்பினிமே லறிவிற்கேளே. (ங)

* * *

வாரென்ற நெற்றிதனில் வரைகள்கண்டால்
வளமையுட னுட்கழுத்தில் வரையுங்காணும்,
பேரென்று லக்குறிகள் விவரமெல்லாம்
பிரித்தினிமேல் சொல்லுகிறோம் பிரியமாகப்,
பாரென்று சொல்லுகிறே முயுத்தியாலே
பார்மிசையி லுள்ளவரைக் குறியாராய்ந்து,
கூறென்று விவரமெல்லாம் வெளியாய்ச்சொன்னோம்
குறிப்பறிந்து ரூபத்தைக் கூறுமன்றே. (அ)

மன்னியதோர் நெற்றிதனில் வரைகள்நாலும்
வானுலக முட்கழுத்தில் வரைமூன்றாகில்,

உன்னியமாங் கனகபதி வாழ்மன்னுனி
ஹுத்தமனே சொன்னபதி யோகங்கேளீர்,
எண்ணியதோர் நாலுபத் தையா றுக்குள்ளே
எளிதாகத் தாரமிரண் டிதமாய்த்தோன் றும்,
வன்னியவ னுதைவிந்து வகையதாகில்
வானுலகில் பிதாவுக்கு வியாதியாமே. (சு)

End:

காலில்முன் சொன்னுற்போலே காட்டியசுழியுமாகில்
சீலமாய்விலங்கு வந்துசேர்ந்திடு மென்றேசொல்லும்
பால்வலம் பிரியாதாகிற் பகன்றிடவேண்டாஞ் சொன்னேம
கோலமாய் முனிவர்சொன்ன குறிப்பினியறிந்துகொள்ளே. (௱அ)

Colophon:

நந்திநூல் முற்றும்.

பானுமதி தேவர்மலே வேலேநந்தி கூபம்.

(கு-பு.)—

இந்நூல் சோதிடத்தைச் சார்ந்தது. 'சரநூல்' என்று மற்றொரு பெய ரும் உண்டெனத் தெரிகிறது. மனிதர்களின் உடம்பிலுள்ள சுழி ரேகை முதலியவற்றைக்கொண்டு இன்னின்ன பலன்களுண்டாம் என்று கூறுவது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(b) கர்ப்பசிந்தாமணி.
GARBHACINTĀMAṆI.

Foll. 29*a*—38*b*.

A treatise on astrology predicting the characteristics and fortunes of persons by observing the lagna and the periods of time in a lagna in which they were born.

Incomplete.

Beginning:

கர்ப்ப சிந்தாமணி.

மேஷம்.

சீர்மேவு லக்கினத்தின் பாவந்தன்னைச்
சாற்றுகிறேன் சுந்தரமே தயவாய்க்கேளு,
பூமேவு மேடலக் கினத்திலேதான்
புகழ்ந்தமுதற் பாதமதிற் பிறந்தபாலன்,
நாமேவுங் கவிழ்ந்துதான் பிறக்குமைந்தன்
நடுவயதில் நயனத்தில் நோயுண்டாகும்,
ஆமெனவே யாண்டொன்றீ ராறில்தத்து
அதுகடந்தா லறுபத்து எட்டுத்தானே. (க)

எட்டான மேடத்தி லிரண்டாம்பாதம்
ஏந்திழையாள் மல்லாந்து பிறக்கும்பிள்ளை,
மட்டாக வொருவயது கழிக்கவேணும்
வாழ்வுமிக வுண்டாகும் பொன்னுண்டாகும்,

செட்டான வம்பியவள் வாய்மூப்பாவாள்
செல்வர்களைப் பெற்றிடுவா ளழிவுகாணும்,
ஒட்டாத மறுமுகமும் பார்க்கமாட்டாள்
உத்தமியாய் யாவருக்கு மிரங்குவாளே. (உ)

End :

உண்டான மீனத்தில் முதற்பாதத்தில்
ஒருக்கணித்து ஆண்பிறக்குஞ் செல்வமுண்டாம்,
கண்டாயோ மூன்றுபத்து முப்பத்தாறில்
கண்டமுண்டு கடந்துவிட்டா லெழுபத்தாறில்,
பண்டான திரவியங்கள் சேர்ந்துவாழும்
பலதுயர முண்டாகும் பலனுண்டாகும்,
சென்றவிடம் நன்மைதீமை யிரண்(டு)

* * * *

(கு-பு.)—

இதுவும் சோதிடத்தைச் சார்ந்ததே. மேஷம் முதலாக மீனம் வரையி லுள்ள பன்னிரண்டு லக்கினங்களின் 1, 2, 3, 4 ஆகிய பாதங்களில் பிறக்கும் குழந்தைகள் ஆண் என்றும், பெண் என்றும், அவை தாம் இன்னின்னகுண முடையனவாயிருக்குமென்றும், அவற்றுக்கு ஆயுள் ஐசுவரியம் முதலியவை இத்தகையனவென்றும் விளக்குவது. இந்நூல் சோதிடம் கற்கின்றார் ஆய் கின்றார் இவர்களுக்கு இன்றியமையாததென்றும் தெரிகிறது.

இந்தப் பிரதியில் மேஷம் முதல் கும்ப லக்னம் நான்காம் பாதம் வரை யிலும் பயன் கூறப்பெற்றுள்ளது. மீன லக்ன முதற்பாதப் பாடலில் மூன் றடிகளேயுள்ளன. ஆதலின் முற்றுப் பெறவில்லை. இயற்றியவர் இன்னா ரெனத் தெரியவில்லை.

R. No. 925.

Palm-leaf. 8½ × 1 inches. Foll. 151. Lines, 6, 7 in a page. Tamil. Injured. Old.

Purchased in 1927–28 from C. V. Jambuliṅgam Piḷḷai Avargal, Mylapore.

(*a*) தேரையர் வைத்தியம், ஆயிரத்தொன்று.
TĒRAIYAR VAIDYAM, ĀYIRATTONṞU.

Foll. 1*a*—124*a*. Fol. 124*b* is left blank.

A treatise dealing with the preparation of medicines for various kinds of diseases.

Contains 1 to 517 stanzas.

Beginning :

<u>தேரையர் வைத்தியம் ஆயிரத்தொன்று.</u>

ஆதிசத்தியருள் புதல்வர் சரண
மாதிலுற்ற பிணி யகலும்படி
வாதியுத்தமர் சித்தர் பதம்பணிந்
தோதிவைத்ததோ ராயிரத்தொன்றுமே.

ஒன்று மாத்திரை யோங்குமுடு குபா
ரன்றுலேகிய மாடுகை கண்ணின்மை
மன்றுசூரண மாக்கிராணஞ் சர்க்கரைக்
கன்றுதேறிக் கருததிலிருத்திடே. (உ)

இருத்திடு மருந்தெண்ணெய் ரசாயனந்
திருத்திடும் பாலேச்செந் தூரமூலிகை
கருத்திடுங் கலிக்கங் கஷாயங்கிருதங்
குறித்திடுந் தயிலங் கூழப்பாண்டமே. (௩)

பாண்டதுநற் குழம்பாஞ்சிலே யெண்ணெய்
கூண்டது மெழுகொடு பதங்கமும்
வேண்டதுநெய்யும் விளங்குங் கிருதையு
பேண்டதுக் களியோ புகைபத்திடே. (௪)

* * * *

பார்த்திடுவனப் பச்சிலேக் கட்டுகள்
சாற்றிடு நசியஞ் சாறுபூசுதல்
போற்றிடு சூலே புட்டணகேசரி
யேத்திடுந்தேரை யென்மொழி யொன்றுமே. (௬)

ஓண்டரிசியின் திப்பிலி யுள்ளிடை
விண்டரிவகை வீதம் பலமரைக்
கண்டரிமுருங் கைப்பட்டைச் சாறரைத்
திண்டரி சயித்தியம் விடும்பார்த்திடே. (எ)

End :

விக்கல், வாந்தி, இருமல் இவைகளுக்குக் கல்கம்.

பார்பருத்திப் பருப்பொடு சீரகம்
ஏர்மதுரமோ டேலம் நெல்லுப்பொரி
சேரரியின் திப்பிலி கெந்தமும்
கார்வகைக் கெடைக்காற்பலந் தேர்ந்தெடே. (௩௱௫)

தோற்றிடு பொடித் தூளிற் கழஞ்சிடை
சாற்றிடு பழச்சாறு தேன் சர்க்கரை
போற்றிடு விருபோது மோரேழு நாள்
ஏற்றிடு வாந்தியிருமலும் பேருமே. (௩௱௬)

பேருங் கிராணியும் பித்தம ரோசகம்
வாருஞ் சுற்று மயக்கொடு விக்கலும்
பாருநாவிற் பசைத்தலுந் தாகமும்
தீருங் கற்க மிதைச் செய்து பார்த்திடே. (௩௱எ)

(கு-பு.)—

இந்நூல் வைத்திய விஷயமானது. இதில் சைத்தியம், சொறி, வயிறு கடுப்பு, மூலக்கிராணி, மூலவாயு, கல்லடைப்பு, கக்குவாய், இடுப்பு வாதம், குடல் வாதம் முதலிய பலவகை ரோகங்களின் பெயர்களும் அவைகளை நீக்குதற்குரிய வைத்திய முறைகளும் கூறப்பட்டுள்ளன. இதிலுள்ள முறைகள் மிகவும் சிறந்தவைகள். தேரையர் இயற்றியதாகச் சொல்லப்படுகின்றது.

இந்தப் பிரதியில் 1—517 பாடல்களே உள்ளன. ஆதலின் முற்றுப்பெற வில்லே. இதன் ஏடுகள் சிதைந்துள்ளன.

(b) தேரையர் வைத்தியம் நூறு.

TERAIYAR VAIDYAM NŪṞU.

Foll 125a—151a. Fol. 151b is left blank

Similar to the above.

Complete in 100 stanzas.

ஸ்ரீதேவீஸஹாயம்

Beginning :

தேரையர் அருளிச் செய்த வயித்தியம் நூறு.

திரு விநாயகன்றென் கைலாசத்தில்
அருமையா யெனக்கன் றுரைத்தபடி
வறுமையில்லா வயித்திய நூற் சொல்லக்
குறுமுனிப் பதங்கொண்டு துதிசெய்வாம். (க)

செய்யும் வாதமுஞ் சிலேஷ்மமும் பித்தமும்
நையும் மார்க்கம் நலமுட னின்னமுங்
கையு நெல்லிக்கனிபோல் மருந்தெலாம்
ஐயன் தேரையனன்பான நூறிதே. (உ)

நூறுக்குள்ளே நொடிப்பேன் வியாதியை
ஆர் சொல்வார்க ளிங்கங்கத்தி லுள்ளதை
மீறுகின்ற சுரங்கள்தனை மிகக்
கூறுசெய்யுங் குருமொழி பார்த்திடே. (ங)

(சுரங்களின் தொகுப்பு.)

பார்த்துவாத சுரம் பத்துப் பன்னிரண்
டேற்று வன்னிசுரமோ ரிருபதுஞ்
சேர்த்து மத்தின்சுர மிருபத்திரண்
டாற்ற வேண்டி யறிவுதனைச் சொல்வேன். (ச)

சொல்லுஞ் சூதங் கெந்திவாளந் தன்னுடன்
வெல்லுந் திரிகடுகந்திரி பாலேயும்
கொல்லுங் காக்கணத்தின்விரை யோர்வகை
நல்ல கள்ளுடன் நற்கையரன் பாதியே. (ரு)
கள்-தேன். கையான்-பொற்கையாந்தகரை. என்க.

பாதிரண்டுமே பாகுபதத்தினிற்
சோதியா மப்பேற்றி யெரித்திடின்
நீதியான கஷாயமது விட்டுக்
கோதிலா தரைத்துக் குன்றியாக்கிடே. (சு)

End :

ஆமே யம்புலி வியாழ மப்பனே நெய்யிற் போடு,
தாமே செவ்வாய் புதற்குத் தாழ்வில்லா பாலிற்போடு,
நாமந் தன் தயிரிற்போடு நன்றதாய் வசிய மோதில்,
சோமன்போ லொளியுமாகுந் துரைகள்தாம் வசமாவாரே.
(ள)

வசமதாயிந்த நூறும் வாகுடன் பார்த்த பேர்கள்
திசமுள்ள வைத்தியராவார் நெடும்புவி யுள்ளோரெல்லாம்,
திசை முகனருளாற் சொன்ன தேரையன் மருந்துகொண்டோர்,
புச பலமிகவுண்டாகிப் புவிதனில் வாழ்வர்தாமே. (௱க)

Colophon :

துன்மதி ஷ்ஸ்ரீ கார்த்திகைமீ . . . ௳ சனி வாரம், பரணி நக்ஷத்திரத்தில் உதயாதி நாழிகை 23-க்குத் தேரையர் அருளிச் செய்த வைத்தியம் நூறும் எழுதி நிறைந்தது, முற்றும்.

(த-பு.)—

இதுவும், தேரைய ரியற்றிய வைத்திய விஷயமானதே. இதில், பூபதி குளிகை, சுக விரேசனம், மாந்தஞ்சவலை, இராமபாணக் குளிகை, குளிர் சுரக் குளிகை, காரீயச் சிந்தூரம் முதலியவைகளின் முறைகள் தெளிவாக விளக்கப்பட்டு உள்ளன. நூறு பாடல்களாலாகியது.

R. No. 926.

Palm-leaf. $8\frac{3}{4} \times 1\frac{7}{8}$ inches. Foll. 105. Lines, 5 in a page. Tamil Fair. Old.

Purchased in 1927-28 from C. V. Jambulingam Pillai Avargal, Mylapore.

(*a*) சுப்பிரமணியர் ஞானம் நூறு.
SUPPIRAMAṆIYAR ÑĀNAM NŪṞU.

Foll. 1*a*—58*b*.

Same work as that described under R. No. 170(*b*).

Complete.

(த-பு.)—

இந்நூல், மூலருடக் காட்லாக் 170 (*b*) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் முற்றுமுள்ளது.

(*b*) கொங்கணர் ஞானம்.
KOṄKAṆAR ÑĀNAM.

Foll. 59*a*— 95*b*.

A treatise of a philosophical nature attributed to Koṅgaṇar. The first seven stanzas of this work are the same as those found in Koṅgaṇa Dēvar Ainnūṟṟiaṭṭu described under R. No. 19.

Beginning :

கொங்கண நாயனாரருளிச் செய்த ஞானம்.
ஆதியந்தமில்லாத வெளியுந் தாண்டி* *
* * * *
மனோன்மணித்தாய் பதங்காப்பு மகிழ்ந்துபாரே. (க)
* * * *

ஞான வுற்பத்தி.

மணியான மனோன்மணியைப் பணிந்துபோற்றி
மாதாவே யுன்வரைக்கோ யிருவினையினூட்டு,
அணியாகப் பிறப்பிறப்பி ரண்டினாலே
ஆசையென்ற வலை விசிறிப் பெண்போல் காட்டிப்,
பிணியான வறுமையி ரண்டாய்ப் பெண்ணி ரண்டாய்ப்
பேரின்பச் சிற்றின்பப் பிரிவி ரண்டாய்க்,
கணியான சிவ செந்து கரையேறவாகி(க்)
கரையற்ற வேழுவகைத் தோற்ற நீயே. (அ)

End:

தானென்ற பொருளாகு பூரணந்தான்
சஞ்சார விலட்சணனாய்த் திரிவே னென்பான்,
மானென்ற விழியுடைய பெண்ணைக் கண்டால்
மயங்கி யவள்பின் சென்றுதாரஞ் செய்வானும்,
தேனென்ற தினியிலே ருசியைப் பார்ப்பான்
திரவியத்தை யபகரிப்பான் செகம் பொய்யென்பான்,
ஊனென்ற வுடம்பேது நமதல்லவென்பான்
உற்றநோய் வந்தக்கா லுளறுவானே. (சுஅ)

(கு-பு.)—

இந்நூல், ஞான விஷயமானது. கொங்கண நாயனார் இயற்றியதாகச் சொல்லப்படுகிறது. இதன் முதலிலுள்ள ஏழு பாடல்களும் மூவருடக் காட்லாக் 19 ஆவது நம்பர் பிரதியாகிய கொங்கண தேவர் ஐந்நூற்றிரட்டில் முதலில் வந்துள்ளவைகளே,

---

(c) வான்மீகி சூத்திரம் பதினாறு.
VĀNMĪKISŪTTIRAM PADINĀṞU

Foll. 96*a*—105*b*.

Similar to the above ; By a person named Vālmīki.

Complete in 16 stanzas.

Beginning:

வான்மீகி சூத்திரம் பதினாறு.

இருள் வெளியாய் நின்ற சிவபாதம் போற்றி
யெழுத்தினுடை விவரத்தை விரித்துச் சொல்வேன்,
அருவுருவாய் நின்றதுவே யெழுத்தேயாகு
மாதியந்த மண்டபிண்டமதுவே யாகும்,
திருவுருவாய் ரவிமதியாய் நின்ற ரூபஞ்
சிவசத்தி திருமாலி னுருவமாகும்,
வருவுருவே சிவசத்தி வடிவமாகும்
வந்ததிலும் போனதிலும் மனதைவையே. (க)

வந்ததும் போனதுவும் வாசியாகும்
வானில்வரும் ரவிமதியும் வாசியாகும்,
சிந்தை தெளிந்திருப்பவனே யவனே சித்தன்
செகமெல்லாஞ் சிவமென்றே யறிந்தோன் சித்தன்,
நந்தியென்ற வாகனமே தூலதேகம்
நான்முகனே கண்மூக்குச் செவி நாவாகும்,
தந்திமுகன் சிவசத்தி திருமூச்சாகும்
தந்தைதாய் ரவிமதி யென்றறிந்த கொள்ளே. (உ)

End:

தானவனுயிருக்கவென்றால் வாசிவேணும்
தனக்குள்ளே தானிற்கவிடமும் வேண்டும்,
வானவனாய் நின்றவற்கே யெல்லாஞ்சித்தி
வானுலகில் மனமிருக்க மதிபோறகாணும்,
[தேவ]னவனுஞ் சித்தருக்குத் தெவிட்டாமூலி
சீரப்பா வுடலுக்குப் பதியே யாகும்,
கோனின்ற வட்டத்துள் நடுவே நின்றால்
குமரியவள் வாலைசிறு பெண்தான் தேவி,
கோனவனுயிருக்கவென்று குறுக்கிச் சொன்னேன்
குவலயத்திற் பதினாறுங் குருதான் முற்றே. (கசு)

ஸ்ரீதேவி துணையுண்டாகவும்.

முற்றும்.

Colophon:

யுவ வருஷம் சித்திரை மாதம் 23 தேதி தண்டையார்பேட்டையிலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ வைத்திய முகுந்த நாயரிடத்திலிருந்து வாங்கி வந்த வான்மீகி சூத்திரம் ஞானம் பதினாறும் எழுதி முகிந்தது. ஸ்ரீ குருவே துணை.

(கு-பு.)—

இந்நூல், ஞான விஷயமானது. மனதை யடக்கி யோக மார்க்கமாய் ஞானத்தை யடையக்கூறுவது. பதினெண் சித்தர்கள் நூல்களின் பொருளை யறிய இது துணையாகுமென்று இதிலுள்ள பாடலால் தெரிகின்றது. இந்தப் பிரதியில் 16 பாடல்களும் உள்ளன. வான்மீகி யென்னுமொருவர் இயற்றியதாகச் சொல்லப்படுகிறது.

R. No. 927.

Palm-leaf. 10½ × 1 inches. Foll. 205. Lines, 5, 6 in a page. Tamil Fair. Old.

Purchased in 1927-28 from M.R.Ry. C. V. Jambulingam Piḷḷai Avargal, Mylapore.

(*a*) புலிப்பாணி வைத்தியம் ஐந்நூறு.
PULIPPĀṆI VAIDYAM AINNŪṚU.

Foll. 1*a*—157*a*.

On the preparation of suitable medicines for curing certain kinds of diseases.

Complete.

Beginning:

விநாயகாயநம:

புலிப்பாணி மாணுக்கர் வயித்தியம் ஐந்நூறு.

தேவி சகாயம்.

அண்ட ரண்டமாகி நின்றவரனே காப்பு
ஆனந்தமாகியதோ ருமையாள் காப்பு,
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
குமரகுரு வேல்முருகர் பாதங் காப்பு,
புண்டரிகமானதொரு மாலுங் காப்பு
புகழ்பிரமன் முதற்றுலிச னவர் காப்பு,
சண்டமெனு மாருதம்போல் வயித்தியத்திற்
சாற்றுகிறேன் போகருடைப் பாதங் காப்பே. (௧)

காப்பான சுரக்குளிகை சொல்வேன் கேளு
கருவான கெவுரியது விராக னந்து,
தேப்பான மிளகதுவு மதிலே பாதித்
திறமான வுளுந்ததுவு மதநேர் பாதி,
மாப்பான கல்வத்திலிதனைப் போட்டு
மைந்தனே முலைப்பாலாலாட்டிப் பின்பு,
வாப்பான கெவுரிமேற் கவசங் கட்டி
வாகாக ரவிமுகத்தில் வைத்திடாயே. (௨)

வைத்தவுடனெடுத்துவந்த துணிமேற் சுற்றி
வகையாக வெள்ளாவி தன்னில் வைத்துக்,
கைத்தவுடனெடுத்ததைப் பின் கவசம் வாங்கிக்
கனமான வமுரியிற் கழுவிப் போடு,
பத்தவுடன் ரவிதனிலே கடிகை வைத்துப்
பதராமல் கல்வத்திலிட்டு நீயு,
முத்தவுடன் பாச்சானை மாட்டத் தண்ணீ
ருத்தமனே நாற்சாம மரைத்துத் தீரே. (௩)

தீரப்பா குளிகையது பயறுபோலே
திறமாகவுண்டையது நிழலுலர்த்திச்,
சேரப்பா சிமிழ்தன்னி லடைத்துக்கொண்டு
செகத்திலுள்ள மனிதருக்குச் சுரத்துக்கெல்லாம்,
பாரப்பா சுக்கினுடைக் கஷாயந் தன்னில்
பண்பாகக் குளிகை யொன்று கொடுத்தாயானல்,
வீரப்பா மூன்றுநா ளுண்ணும் போது
விதமாக நாலுமுறைச் சுரமும் போமே. (௪)

End:

எண்ணவே தலையிலுள்ள பேன்கள் சாக
வெடுத்துரைப்பேன் சூதமொரு கழஞ்சு வாங்கி,
தண்ணவே மேனியின் சாறுவிட்டே யாட்டி
நன்னூலின் தான்புரட்டி நவிலக் கேளு

திண்ணவே சிகையில் சிக்கம்போல் சொருகச்
சிரசிலுள்ள பேன்களெல்லாஞ் செத்துப் போகும்,
கண்ணவே போகருடைக் கடாட் சத்தாலே
கலையறிந்து புலிப்பாணி காட்டி னேனே. (௪௯)

*   *   *   *

ஆமேதான் பண்டிதரே யறையக் கேளும்
மாதரையி லெளியோர்க் கௌடதமு மீந்து,
தாமேதா னன்னமிட்டு வஸ்திர மீந்து
தயவாகத் தன்னுயிர்போ லவரைக் காத்துத்,
தீமேதான் சேராமற் புண்ணிய வானாய்த்
தீர்க்கமுள்ள வயித்தியனா யிருந்து வாழ்வாய்,
நாமேதான் போகருடைக் கடாட்சத் தாலே
நலமாகப் புலிப்பாணி நவின்றிட் டேனே. (௫௱)

நவின்றிட்டே[ர](ன்)ம் புவிதனிலே வைத்திய மார்க்கம்
நன்றாகச் சொல்லிவைத்தே னிந்நூல் வேண்டும்,
பவினறிட்ட நோயாளர் வைத்தி யர்க்குப்
பண்பாகத் தொழுதேற்றித் தாம்பூல மீந்து,
இவின்றிட்ட மவையெல்லா மவர்க்குச் சொல்லி
யிதம்பெறவே செய்தபின் பவுஷதங் கொள்வாய்,
கவின்றிட்ட போகருடைக் காடாட் சத்தாலே
சாசினியில் புலிப்பாணி யைஞ்ஞூறு முற்றே. (௫௱௧)

Colophon :

புலிப்பாணி மகாமுனிவரருளிச் செய்த வயித்தியம் ௫௱௧ எழுதி நிறைந்தது. சித்தார்த்தி௵ மார்கழி௴ ௫௨ ஆதிவாரம் எழுதி நிறைந்தது.

(கு-பு.)—

இந்நூல், கவுரி மாத்திரை, நளிர்ச்சுர மாத்திரை, ஜன்னிக்குத் தைலம், சூதகவலிககு உப்புச்சிந்தூரம், அஷ்டகுன்மத்துக்கு உப்பு, நீரடைப்பு, தலைவலி முதலிய நோய்களுக்கு உப்பு முதலிய பலவகை மருந்துசெய்யும் முறைகளையும், அவற்றை யுபயோகிக்கும் முறைகளையும் விளக்குவது. ஐந்நூறு செய்யுட்களையுடையது. இயற்றியவர் புலிப்பாணி யென்பவர். இவ்வாசிரியர் வடமொழியார் கூறும் வியாக்கிர பாதர் என்று சிலர் ஐயுறுவர் ; இவர் போகருடைய சீடர் ஆவர் ; அவ்வியாக்கிரபாதர் ‘பால முனிவர்’ என்று பிரசித்திபெற்று மத்தியந்தின முனிவரது புத்திரரும் ஆவர். இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. நூற்றைம்பத்தெட்டாவது ஏட்டில் சில மூலிகைகள் இன்னவென விளக்கப்பட்டுள்ளன.

(b) அகத்தியர் மந்திரசூத்திரம்.
ĀKATTIYAR MANTIRASŪTTIRAM.

Foll. 159a—197b.

A treatise on Mantra-śāstra dealing with the eight ways of doing harm to one's enemies.

Contains 107 stanzas.

Beginning :

அகத்தியநாயனாருளிச்செய்த கட்சிப்படலம்

பஞ்சபக்ஷி வாலைமந்திரம். சாக்ஷி சூக்ஷ்மம்.

திருமகள் கைலைவாழுஞ் சிவநாதர் தேவிக்கீந்தக்
கருவளர் மாந்திரீகங் கட்சியின் பீடம்பாட
மருமக ளானசோதி மலர்திருப் பாதம்போற்றி
யுருவிலா னருவுமில்லா னுமைமகன் காப்புத்தானே.

* * * *

காப்பெனு நந்திமூலங் கதிர்மதிச் சுழியுநேர்மை
மாப்பெனு நஞ்சபிஞ்சு வளர்கொடி நாதவிந்து
ஆப்பெனு முதயநீரு மாறது மெழுகுமாக்கிச்
சேப்பெனு மாந்திரீகஞ் செய்தொழி லாதிதானே. (௩)

(வெண்பா.)

ஆதியென்ற மந்திரந்தான் சிவ னுமைக்கு
சோதியுமை சண்முகற்குச் சொல்லியதாம்—நீதியாய்
என்குருவு காட்சிதன்னை யேகமாய்ச் சோதிவைத்தார்
தன்குருவு சண்முகந் தானே. (௪)

தானுதி யென்ற சண்முகமா மென்குருவு
மோனுதி யென்றகட்சி முத்திதனை—யேனுட்சி
பஞ்சபட்சி பஞ்செழுத்துப் பஞ்சகரு நெஞ்செழுத்தும்
அஞ்செழுத்து மூன்றெழுத்து மாம். (௫)

End:

தோஷமடா வெகுநூலிற் சொன்ன வித்தைத்
துடிகட்சிப் பீடமது துணிந்து சொன்னேன்,
தோஷமடா சலாகவித்தை யோம்பட்சி நேசர்
கருகரு ஆங்காரி உருளு உருளு,
தோஷமடா கொண்டுவரச் சுவாமி யாணை
சொல்ல கருத்தடவ சுறுக்கு மெத்தத்,
தோஷமடா விம்முறையே வெளி விடாதே
சூத்திரந்தான் நூற்றிருபத் தைந்து மூன்றே. (௱௭)

(கு-பு.)—

இந்நூல் மந்திர விஷயமானது. இதில் அஷ்டகர்மமாகிய ஸ்தம்பனம், உச்சாடனம், மோகனம், மாரணம், பேதனம், ஆகர்ஷணம், வித்வேஷணம், பிராண ப்ரதிஷ்டை என்பனவும், அக்ஷரமாறல் முதலியனவும் வசியம் முதலியனவும் செய்யும் மந்திர வகைகள் விவரமாக வுள்ளன. இந்தப் பிரிதியில் நூற்றேழு பாடல்களே யிருக்கின்றன.

(c) ஒட்டியநூல், உரையுடன்.

OṬṬIYANŪL WITH COMMENTARY.

Foll. 198*a*—205*b*.

Deals with certain Mantras and with the due repetition thereof so as to enable one to get the desired object thereby.

Beginning:

ஒட்டியம், பாடலும் உரையும்.

சீரணி கொன்றைசூடுஞ் செஞ்சடையான் பங்கில்
நாரணி கவுரிமுக்கண் நாயகி முதல்வன்பெற்ற
காரண வுமையாள்தேவி கருமங்கள் தானாய்நிற்கும்
பூரணி பெற்றயானை முகவனைப் போற்றிசெய்வாம். (க)

செய்யதோர் வசியம்மோகந் தம்பன தேசுந்தன்னில்
வெய்யவுச் சாடனங்க ளேஷணை மிகுமாகர்ஷம்
வையகப் பேதனங்கள் மாரணக் கருவுந்தொட்டுத்
தையலா யொன்றுக்கொன்று சாற்றிய மந்திரங்கள். (உ)

மந்திர முன்னூலாய்ந்து வழங்கினே னொட்டியென்பேர்
தந்திரக் கருவும்பின்னுஞ் சாற்றிய வெழுத்தின்செய்கை
பைந்தமிழ் மனத்தினார்க்குப் பகர்ந்தனன் கருமத்தோடு
இந்தநூ லொட்டியமென்று யாவரு மியம்பலாமே. (ங)

End:

பிரிவுக்குச் சக்கரம்.

இதற்குப் பூசை.—காற்படி அரிசி பொங்கிப் பொரித்துச் சக்கரத்தில் இருவர்பேரும் தலைமாற்றி யெழுதிச் சுடுகாட்டில் புதைக்கவும் பிரியும். இதற்கு உருவு ௲. மது மாமிசம் வைக்கவும்.

* * * *

ஸ்ரீதேவி செங்கழுநீர்வேர் மை. வசியத்துக்கும்

ஓம் சிரீ லக்ஷ்மிதேவியே வா.

கன்னி நூலைச் சுற்றிக் காராம்பசுவின் நெய்யில் மை பற்றவைத்து ஷை வெண்ணெயிலிழைத்துத் திலகமிடவும் வசியம்.

(கு-பு.)—

இதுவும் மந்திர விஷயமானது. சில மந்திரங்களின் பீஜாக்ஷரம், மூல மந்திரம் முதலியனவும் அவற்றை ஜபிக்கும் முறையும், அவற்றாலடையும் பயனும் இதில் கூறப்பட்டுள்ளன.

R. No. 928.

Palm-leaf. $8\frac{5}{8} \times 1\frac{1}{8}$ inches. Foll. 131. Lines, 7 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Piḻḻai Avargal, Mylapore.

அகத்தியர் வைத்தியபரிபூரணம், நானூறு.
AKATTIYAR VAIDYAPARIPŪRAṆAM NĀNŪṚU.

Same work as that described under R. No. 190(c), Vol. II.

Complete.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்லாக் 190(c) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. இதன் ஏடுகள் சிறிது சிதைந்துள்ளன.

R. No. 929.

Palm-leaf. 14½ × 1 inches. Foll. 222. Lines 4, 5 in a page. Tamil. Much injured. Old.

Purchased in 1927-28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Piḷḷai Avargal, Mylāpore.

(a) திவாகரம்.
DIVĀKARAM.

Foll. 1a—85a.

Same work as that described under No. 25 of the D.C.T. MSS., Vol. I.

Contains one to four Tokudis

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 25-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் முதல் நான்கு தொகுதிகளே யுள்ளன. இதன் ஏடுகள் மிகவுஞ் சிதைந்திருக்கின்றன.

(b) சூடாமணிநிகண்டு.
CŪḌĀMAṆINIGHAṆṬU.

Foll. 86a—222b.

Same work as that described under No. 13 of the D.C.T. MSS., Vol. I.

Incomplete.

(கு-பு).—

இந்நூல், டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 13-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளது. ஆயினும், இந்தப் பிரதியில் மூலம் மாத்திரம் 1 முதல் 11 தொகுதிகள் உள்ளன.

R. No. 930.

Palm-leaf. 13¾ × 1⅜ inches. Foll. 238. Lines, 7 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1927-28 from M.R.Ry. C V. Jambuliṅgam Piḷḷai Avargal, Mylāpore.

போகநாயனார்நிகண்டு.
BHŌGANĀYANĀRNIGHAṆṬU.

A dictionary containing synonyms of certain medicinal salts and substances. The mode of purifying them is also explained herein. The authorship of the work is attributed to Bhōganāyanār

Complete.

Beginning:

ஸ்ரீராமஜயம்.

போகநாயனாருளிச்செய்த நிகண்டு களஉசு.

சவுக்காரச்சுத்தி.

அகண்டபரி பூரணமா மையர்பாதம் போற்றி
யடுக்கநின்ற மவுனத்தாய் பதத்தைப் போற்றி,
நிகண்டெனவே திருமூலநாயர் பாதம் போற்றி
நீங்காமற் காலாங்கி யையர்பதம் போற்றி,
புகன்றுநின்ற நாதர்களிருடிகள் பதம் போற்றி
பேரான வாக்குடைய வாணிபதம் போற்றி,
மூகன்றுநின்ற குஞ்சரத்தின் பதத்தைத் போற்றி
மூவுலகு மெச்சுதற்கு நிகண்டு கேளே. (௧)

கேளப்பா வறுபத்து நாலுமர புள்ளோர்
கெடியாகப் பாடியதோர் சாத்திரத்துக் கெல்லாம்,
வாளப்பா மறைப்பான சூத்திரத்துக் கெல்லாம்
மாலையைப்போல் பேர்மரபை வெளியாகச் சொல்வேன்,
சூளப்பா சவுக்காரஞ் சுண்ண மாகச்
சூட்சும மெல்லாம் நிகண்டுக்குள் சொல்லக்கேளு.
பாளப்பா சவுக்காரம் பாக்குப்போலே சீவிப்
பலமஞ்சு புத்தோட்டிற் பரப்பி டாயே. (௨)

* * * *

சவுக்காரப் பேர்தனையே சாற்றக் கேளு
சதாசிவமாம் வெண்சாரை தனித்த வண்ணன்,
உவற்காரஞ் சிற்பரியா முப்பான வழலை
யுசந்தகுரு முறையாகு முமையா ளீசன்,
நவக்காரம் வாதத்தி வாதி யானோன்
ஆதியாங் குடியானோன் கூர்மை யாளன்
சவுக்காரஞ் சோமன் ரவி வன்னியானோன்
சுயம்பாகி தேருயர்ந்த சித்தி யானே. (௱௨)

End:

களங்கத்தில் ரவிமதியா யிரத்துக் கொன்றீயக்
கண்டிடுமே தச மாற்றுக் கருதிப்பாரு,
இளங்கத் தகுருப்பண்ணு செந்தூரம் பண்ணு
தெட்சிணு மூர்த்தியென்ற பாட்டர் பக்கல்,
துளங்க[த்து](ற்று)த் தொண்டு பண்ணித் தீட்சைகேட்டேன்
சித்தமகிழ்ந் தப்போதே வுப்பைச் சொன்னுர்,
வளங்கத்தை யிற்றைநாள் மனதில் வைத்து
மகத்தான நிகண்டுக்குள் திறந்திட்டேனே, (கஎஉஉ)

*   *   *   *

வளஞ் சொன்னேன் பாட்டருடை மூலர்பாதம்
மலர்தூவிப் பதினெருகால் வணக்கஞ் சொன்னேன்,
வளஞ்சொன்ன பதஞ்சலியார் வியாக்கிர பாதம்
மறவாமல் தொழுதிறைஞ்சித் தண்டஞ் சொன்னேன்,
வளஞ்சொன்ன சிவயோக முனிதன் பாதம்
மகிழ்ந்திறைஞ்சிப் பாதத்தில் வணக்கஞ் சொன்னேன்,
வளஞ்சொன்ன தட்சிணு மூர்த்திக்குச் சரணம்
மகத்தான வகத்தியர்க்குச் சரணந் தானே. (கஎஉச)

தானுன சித்தருக்குச் சரண மாகுந்
தந்தை தாயாங் காலாங்கி யையருக்குப்,
பானுன பதினெருகாற் சரணஞ் சொன்னேன்
பரிவாகவெனை யீன்ற பரா பரிக்குந்,
தேனுகை நூறுதரஞ் சரணஞ் சொன்னேன்
சிவத்துக்கு மாயிரந்தான் சரண மாகும்,
ஆனுன ருஷிசித்த ரநேகங் கோடி
யடங்கலுக்குந் தண்டனிட்டேன் நிகண்டு முற்றே. (கஎஉரு)

Colophon:

ஸ்ரீதேவியம்மாள் துணை யுண்டாவதாகவும்.

பிரபவஹு புரட்டாசி ௴ ௰௨ கிருஷ்ணபக்ஷம், புதவாரம், துவாதசி, மகா நட்சத்திரத்தில் போகநாயனுரருளிச் செய்த நிகண்டு கஎஉரு-ம் எழுதி நிறைவேறிற்று முற்றும்.

திருமயிலாப்பூர் வீரவன்னியர் தலையாரித் தெருவிலிருக்கும் புலி. வயித்திய முத்துசாமி நாயகர் வாசிக்கிற புஸ்தகம் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், இந்துப்பு முதலிய உப்புவகைகள், அப்பிரகம், திமிளை முதலிய பொருள்களின் பெயர்களின்னின்னவென விளக்குவதோடு அவற்றைச் சுத்திசெய்யும் முறை முதலியவற்றையும் விவரமாகத் தெரிவிப்பது. செய்யுள் நடையிலமைந்தது. 1725-பாடல்களை யுடையது. இயற்றியவர் போக நாயனுர் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 931.

Palm-leaf. 9⅜ × 1 inches. Foll. 192. Lines, 7 in a page. Tamil. Injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Piḷḷai Avargal, Mylāpore.

இராமதேவர்கருக்கிடைசூத்திரம் ஐந்நூறு.

IRĀMADĒVARKARUKKIḌAISŪTTIRAM AINNŪṞU.

A treatise bearing on medicine, etc. The preparation of different kinds of medicines and the diseases cured by them are described herein. The authorship of the work is attributed to Rāmadēvar.

Complete in 523 stanzas.

Beginning :

ஹரி: ஓம். நன்றாக.

இராமதேவர் கருக்கிடை சூத்திரம், ஐந்நூறு.

கூாகூ௰௨௵ ஆனிமீ௴ நல்ல சிவன்சுவடி நன்றாக.

ஸ்ரீராமதேவர் சூத்திரம் பலதிரட்டு ஐந்நூறு. ௫௦௦.

ஆதியந்த மெய்ந்நிறைந்த சோதிபாதம்
அகண்டபரி பூரணத்தி னறிவிற்கூடிப்,
பாதியா முப்பொருளு மூன்றுமொன்றாய்ப்
பரவெளியாய் நின்றபரா பரையின்பாதம்,
நீதியாய் வாரணத்தின் முகவன்பாதம்
நிறைந்தமலர் வாணிகுரு கந்தன்பாதம்,
சோதியாய் நாதர்கள்பாதம் போற்றி(ச்)
சொல்லுவேன் சூத்திரத்தைச் சொல்லுவேனே. (௧)

சொல்லுவேன் வாதத்தின் சிறவுகோலுஞ்
சுளுவாக வட்டகர்மக் கருவும்நன்றாய்ச்,
சொல்லுவே னஞ்சனமும் வசியமாற்றஞ்
சோதியென்ற சவுக்கார வழலைப்போக்கும்,
நல்லுவேன் ஞானசித்தி மவுனவாலை
நாட்டாத கருக்குருவும் யோகதீட்சை,
மல்லுவேன் சித்தர்கள்தாம் மறைத்தபொருளெல்லா
மாட்டினேன் வெளிதிறந்து மைந்தாபாரே. (௨)

End :

பார்க்கவே யாத்தாளைத் தொழுதிறைஞ்சிப
பரிவான சின்மயத்தின் பாதம்போற்றி,
சேர்க்கவே யாதிகுரு பாதம்போற்றிச்
செப்பரிய நாதர்கள் பாதம்போற்றி,
ஆர்க்கவே யைஞ்ஞூற்றுச் சில் வாளம்சொன்னேன்
அநுபோகி யானக்கா லறிவாளென் னூல்,
மார்க்கமாய் மற்றமற்ற நூலைப்போலே
மைந்தனே வெளிகாட்டா மறைத்துவையே. (௫௱௨௰௩)

வையப்பா சகலகலைச் செய்தியெல்லாம்
வளமாக வடக்கிவெகு தெளிவாய்ச்சொன்னேன்,
அய்யமென்று நினையாதே புலைபேசாதே
யாத்தாளை யனுதினமும் மறவாதேநீ,
செய்யாதே தீவினைதான் கொடிதுபாவஞ்
செந்துவெல்லா மீசனென்று தெளிந்துகாணு,
மெய்யான குருபதத்தைப் பணிந்துபோற்றி
விளம்பினேன் கருக்கிடைச்சூத் திரந்தான்முற்றே.(௩௱௨௰௩)

Colophon :

இராமதேவ நயினுர் பாடல் முற்றும்.
தக்ஷிணுமூர்த்தி துணை. உலகம்மாள் பாதமே கதி.
௲௯௱௩௰௫ ஆடி மீ ௰௬௳ வெள்ளிக்கிழமை மிருகசீரிஷம்.
இந்தச் சுபதினத்தில் முகிந்தது.
குமரகுருபரன் முன்னிற்க.

(கு-பு.)—

இந்நூல் வயித்திய ஸம்பந்தமானது. அநேகவித மருநது வகைகளும் அவற்றுல் தீரும் நோய்களும் இன்னவெனத் தெரிவிப்பது. இரஸவாத முதலியவற்றையும் இடையிடையே கூறுகின்றது. ஐந்நூற்றிருபத்து மூன்று பாடல்களாலாயது. இயற்றியவர் இராமதேவரென்று சொல்லப்படுகிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. இந்நூல் முடிந்தபின்னர் மூன்று ஏடுகளில் இன்னின்ன எண்ணமைந்த பாடல்களில் இவையிவை பாடபேதங்களெனக் குறிக்கப்பட்டுள்ளன. நாலாவது ஏட்டில் வல்லாரை லேகிய முறையும், சுகபேதி முறையும் எழுதப்பட்டுள்ளன.

R. No. 932.

Palm-leaf. 14¼ × 1⅝ inches. Foll. 114. Lines, 11 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1927-28 from M.R.Ry. C. V. Jambulingam Piḷḷai Avargal, Mylāpore.

அகத்தியர் ஞானகாவியம் ஆயிரம்.

AKATTIYAR ÑĀNAKĀVYAM ĀYIRAM.

A treatise of a philosophical nature different from the one described under R. No. 199 (*a*) ante. The authorship of the work is attributed to Ahattiyar.

Complete.

Beginning :

ஹரி ஓம். நன்ருக.
அகத்திய சுவாமிகளருளிச்செய்த ஞானகாவியமாயிரம் என்றறிக.
பஞ்சநாதர்கள் உபதேசமறிக.

ஆதியந்தம் பூரணமாய்ச் சுழியாய்நின்ற
அமர்ந்தசுழி மூலகண பதியைப்போற்றி,
ஆதிமறை யோர்களர னுமைக்குச்சொன்ன
ஞானகருக் குருவினுடை ரவியைப்போற்றி,

நீதிமதி ரேசகமாய்ப் பூரகமாய்நின்ற
    நிகழ்ந்தபதி பாசவுப திடதமேபோற்றிச்,
சாதிபல வுயிரெறும்பு சிவமேயான
    சச்சிதானந்த பரிபூரணமே போற்றி. (க)

*   *   *   *   *   *

*   *   *   *   *   *

போற்றினதோ ரீசனுமைக் கருளிச்செய்தார்
    புகழுஞ் சவுந் தாதேவி புகட்டினாள்பார்,
நாற்றினதோர் ஞானக்கட லமுதஞான
    நந்தீசற் குபதேச மளித்தாள்கன்னி,
பாத்தமன மகிழ்ந்துநந்தி யருளினார்பார்
    பார்புகழுந் தந்வந்திரி பகவானுக்கு,
ஆற்றினதோர் தந்வந்திரி பகவானன்று
    அருளினா ரசுவிநிக்கு அருளினாரே. (ரு)

அருளினா ரசுவிநிதான் மெய்ஞ்ஞானத்தை
    யதீதபொருள் காவியந்தான் ஞானகாவியம்,
மருளினா ரவனுடைய வனுக்கிரகத்தால்
    மாட்டினா ரென்தனக்கு மாட்டினார்பார்,
நருளினார் யான்கண்டு புலத்தியன்யோகி
    நளினமதா யுன்தனக் குபதேசித்தேன்,
வருளினோம் வியாசரோ டெதிர்த்துநாமும்
    வசனித்தோம் பரஞானம் வருஷித்தோமே. (சு)

வருஷித்த காவியந்தா னாயிரமுஞ்சொச்சம்
    மகத்தான ருஷிதேவர் முனிவோர்கூடி,
அருஷித்த வாயிரந்தான் ஞானபீடம்
    ஆயிரத்தெட் டண்டமென்ற மவுனபீடம்,
பருஷித்த பரப்பிரமம் சொரூபபீடம்
    பரிசுடைய சருவேத கபாலபீடம்,
வெருஷித்த வகாரமென்ற வுகாரபீடம்
    வேதாந்த மென்றதோ ரிந்நூலாமே. (எ)

End:

ஆடப்பா புலத்தியனே மாற்றமையால்
    அதிக சித்தறுபத்து நாலுமாடும்,
நாடப்பா மையதனைக் கடுகிற்பாதி
    நன்மைதர வேணுமென்று திலதம்போட்டுச்,
சாடப்பா வாசியது மேலேயேறிச்
    சமத்தான குளிகைமணி வாயில்போட்டுத்,
தேடப்பா நீநினைத்த வித்தையெல்லாந்
    தேடினவறை நொடிக்குள் சித்தியாமே. (ரு௱௰உ)

சித்திபெற வாயிரந்தான் ஞானகாவியஞ்
    செய்சித்தி யாகுமடா சருக்கம்பத்து,
அத்தியுரித் திடைதரித்த வீசன்சொன்ன
    அதீதமடா வாயிரம்போ லொருநூலுண்டோ,

எத்திசைக்குங் குருநூலு ஞானபீட
    மியம்பினேங் காவியந்தான் ஞானகாவியம்,
முத்திபெறச் சதாகாலம் வாழுலாகும்
    முக்கியமாஞ் சருக்கம்பத்து முடிந்தவாறே. (௬௩)

வாறான வாயிரத்தைம் பத்து நான்கு
    வசனித்தோஞ் சருக்கம்பத்தில் வளங்கண்டோநாம்,
ஆறான விருக்கப்பா லேம்பத்துமூன்று
    அருளினேமெச்சமு மறிந்துபாரு,
தேறாத பேர்களெல்லாந் தேறலாகுஞ்
    சிவயோக ஞானமடா சித்தர்க்கெல்லாங்,
கூறான ஞானகாவியச் சருக்கமின்னூல்
    கூறினே மாதியந்த மகண்டமுற்றே. (௬௪)

Colophon:

தேவி சகாயம். பத்தாவது சருக்கம் முடிந்தது முற்றும். விக்கிரம௵ ஆவணிமீ ௧௨ சோமவார நாள் காலமே உதயலக்னத்தில் காசி முதலியாருக்குப் புட்டூர் முனியப்ப னெழுதின ஞானகாவியம் முடிந்தது முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக் 199 (n) நம்பர் பிரதியில் வந்ததினும் வேறானது ஞானவிஷயமானது. பத்துச் சருக்கங்களாலாகியது. ஆயிரத் தைம்பத்து நாலு பாடல்களால் நிரம்பியிருக்கின்றது. இயற்றியவர் அகத்தியர் எனச் சொல்லப்படுகிறது. இந்நூலில் நுதலப்படும் விடயங்களுடைய வரலாற்றைப் பாயிரத்து ஐந்தாறு ஆகிய இரண்டு பாடல்களால் தெளிந்துணர்க: இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 933.

Palm-leaf. 15¾ × 1¼ inches. Foll. 279. Lines, 6 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1927-28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Piḷḷai Avargal, Mylāpore.

வாகடம்.

VĀKAṬAM.

An elaborate treatise on medicine. The characteristics of a proper physician, the symptom and diagnosis of different kinds of diseases and the suitable medicines for curing them and the mode of preparation of these medicines are all set forth herein. The authorship of the work is attributed to Ahattiyar.

Complete.

Beginning:

வாகட நூல்.

பாயிரம்.

செந்திருவனைய மாதே செகமுழுதாளும் வெய்யோன்
மந்திரகிரியோன் வேத மாமுனி தவத்திறலே

யிந்திரபுவியின் மீ[து இ](தே)யியற்றிய வடநூலாய்ந்து
தந்திரமாகச் சொன்ன வாகடஞ் சாற்றுவோமே. (௧)

*   *   *   *
*   *   *   *

ஆதியங் கடவுளானை யடிதொழு தேற்றிநாளுந்
தீதுறு வியாதியெல்லாந் தெளிவுட னறியவேண்டி(க்)
கோதிலா நல்லோர்சொன்ன குணமிரு பாடல்தன்னை
நீதிசே ருலகமீது நிகழ்த்தினர் நெறிவல்லோரே. (௩)

வல்லவ ருரைத்தவிந்த மறையுற்ற வியாதியெல்லாஞ்
சொல்லியே தினங்கடோறுஞ் சுகம்பெற வறியவேண்டி
யெல்லையில் வயித்தியர்க ளியலது கிரியைதானும்
வெல்லவே யுலகின்மீது விளம்புவர் புலவர்தாமே. (௪)

பாயிரம் முற்றும்.

வைத்தியர் நிதானம் :—

மெய்யுளான் வேதஞான விதிமுறை தவறானாகிப்
பொய்யுரை பொருந்தானாகிப் பொருளின்மே லிச்சையில்லான்
கையினால் வஞ்சமில்லான் கடவுளைக் கருத்தில்வைத்துத்
துய்யனா யிருப்பானாகிற் சொல்லுவார் நல்லோர்தாமே. (௫)

தாமெனு மவர்கடங்கள் தகுதியை யுணர்ந்தபேரி
லாமென வுலகஞ்சொல்ல வழகுளான் பெருமையில்லான்
பூமணம் போலவாசம் பொருந்திய குணவானாலே
மாமதி வதனமாதே வயித்திய னென்னலாமே. (௬)

என்னவா மியாவருக்கு மிவனொரு பாலனாகித்
தன்னுடைத் தாரமன்றித் தன்மனம் புறத்தில்வையான்
முன்னிய வித்தைக்கெல்லா முறையது படித்துநித்தஞ்
சின்மயக் குருவின்பாதஞ் சுகமுற மறவானாமே. (௭)

ஆமேஞானத் தவநெறியு மன்புமருளு மிங்கிதமுந்
தாமேமதுரமொழி வாக்குந்தவறு துரையுஞ் சற்குணமும்
நாமேசொன்னோ மிந்நிலைமை நாடும்பெரியோர் வாகடநூல்
பூமாதருள்பெற் றேதுமிடைப் பொருளுந்தங்கும் பூபதியே. (௮)

வைத்தியர் குணக்குறி முற்றும்.

தேகக்குறி :—

தங்கியவாறி தெல்லாந் தரித்தவர்க் கரியதேகம்
மங்கையே பிரிதிவி யப்புதேயுவும் வாயுவுங்கூடி
யங்கிடும் விந்துசீவ னதிலென்பு சதைதோல் மேவி
யிங்கெலா நாம்புபாவி யிறையவ னமைத்தபோதே. (௧)

பெறுந்தந்தை கூறுநான்கு பெற்றதாய் கூறுநான்கு
மிறைதந்தை கூறுமாறு மெடுத்திடுஞ் சடலமாகும்
முறைநரம் பெலும்புமூளை மூளையுந் தந்தைகூறு
உறுசதை ரோமந்தோலு முதிரமு மன்னைகூறே. (௨)

End:

பறந்திடும் பட்சியாமை பகருந்தே னிலைகளென்னுஞ்
சிறந்தெண்ணெய் விட்டபோது சின்னதாய்ச் சிறிகினாலும்
புறந்தருங்கூந்தல் மானே பொங்கியே பரந்திட்டாலும்
மறந்திடாக் குறிகளெல்லாம் சாத்திய மாகுந்தானே. (௰௮)

இவ்வித மூத்திரத்தி லிலக்கண முற்றுமந்தச்
செவ்விய வாயுள்வேதஞ் செப்பிய வகைகளெல்லாம்,
நவ்விபோல் விழியினாளே நாடிடில் மானிடருக்காக
அவ்வியமில்லா நெஞ்சத் தகத்திய ருரைத்ததாமே. (௰௯)

* * * *
* * *

அரப்பொடி சுத்தி:—அரப்பொடியை எலுமிச்சம்பழச் சாற்றி லூற வைத்துச் சுண்ட எரிக்கச் சுத்தியாம்.

அரப்பொடியை நவ்லெண்[ணை](ணெய்) விட்டுத் தீபற்ற எரித்து ஆற விட்டு எடுத்துக்கொள்ளச் சுத்தியாம்.

திருச்சிற்றம்பலம். ஸ்ரீதேவி சகாயம்.

(கு-பு.)—

இந்நூல் வைத்திய விஷயமானது. இதில் வைத்திய விலக்கணம், உடல் கூறு, நோய்களின் வகைகள், அவற்றின குணங்கள், அவற்றுக்குரிய ஔஷத முறைகள் முதலியன விவரமாக விளக்கப்பட்டுள்ளன. செய்யுள் நடையிலாயது. இடையிடையே வசனமும் விரவியுளது. இதன் பின்னர், 280-ஆவது ஏடு முதல் 295-ஆவது ஏடு வரை பதினாறு ஏடுகளில் இந்நூலில் வந்துள்ள நோய், மருந்து முதலியவற்றின் அட்டவணை எழுதப்பட்டுள்ளது. இது மிகச் சிறந்த நூல். இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. அகத்தியர் இயற்றியதாகக் கூறப்படுகிறது.

R. No. 934.

Palm-leaf. 15¼ × 1½ inches. Foll. 234. Lines, 8 in a page. Tamil. Fair. Old.

Purchased in 1927-28 from M.R.Ry. C. V. Jambulingam Pillai Avargal, Mylapore.

(*a*) முதலாயிரம்.
MUDALĀYIRAM.

Foll. 1*a*—114*b*.

Same work as that described under No. 786 of the D.C.T. MSS., Vol. II.

Complete.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக் 786-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே; இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

(b) திருவாய்மொழி.

TIRUVĀYMOḺI.

Foll. 115*a*—234*b*.

Same work as that described under R. No. 58. ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடைக் காட்லாக் 58-ஆவது நம்பர் பிரதியில் வந்ததே ; இந்தப் பிரதியில் இது முழுதுமுளது.

R. No. 935.

Palm-leaf. 15¾ × 1½ inches. Foll. 225. Lines, 10 in a page. Tamil Injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Pil̤l̤ai Avargal, Mylāpore.

(a) பெரியதிருமொழி.

PERIYATIRUMOḺI.

Foll. 1*a*—150*b*.

Same work as that described under R. No. 33 (*a*). ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடைக் காட்லாக் 33 (a) நம்பர் பிரதியில் வந்துள்ளதே திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகங்களும் இதனுடனுள்ளன.

(b) இயற்பா.

IYAṞPĀ.

Foll. 151*a*—225 (*a*).

Same work as that described under R. No. 26. ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடைக் காட்லாக் 26-வது நம்பர் பிரதியில் வந்ததே. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

R. No. 936.

Palm-leaf. 12¼ × 1¼ inches. Foll. 218. Lines, 9–10 in a page. Tamil Injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Pil̤l̤ai Avargal, Mylāpore.

(a) ஞானவெட்டியான் நவரத்தின சிந்தாமணி.
NĀNAVEṬṬIYĀN NAVARATTINACINTĀMAṆI.

Foll. 1a—172b.

This work purports to be an abridgement in 800 stanzas of a big work on medicine in 1500 stanzas by Ṭiruvaḻḻuvanāyanār.

Complete.

Beginning :

சத்திக்கணபதயே நமஃ. குரு பாதாரவிந்தமே துணை. பாலாம்பிகை பாதாரவிந்தமே துணையாகவும். வாணி நமஸ்தே. திருவள்ளுவ நாயனா ரருளிச் செய்த ஞானவெட்டி ஆயிரத்தைந்நூறுக்குச் சூத்திரமாவது. நவ ரத்ந சிந்தாமணி வைத்தியம் எண்ணூறு சூத்திரம்.

பாயிரம், காப்பு.

சுழியின் முனையிடையின் [துரிய] துரியாதி தத்திற்
பொழியு மதி[ரவி]யின் பொற் கமலஞ்—சுழியின் [முனை]
அகர மதிலிலகு மைம்ப[த்தோர](த)க் கரத்தில்
புக[ழ்மூலக்]மூங் கணபதியைப் போற்று [வாழ்]
அரியுமாலயனரனடித் தொழுதுவன் பொறியில்
துரியமாமதிது துதித்து மெய்ஞ்ஞான வெட்டியதாய்ப்
பொரியுமைம் புலனிரவி செங்கதிரொளியிலகுங்
கரியமாமுகிற் கமல பொற்பாத மலர் காப்பாம். (க)
விதியினால் விதித்தருள்பர குறுமுனியருளால்
மதியினால் திருவள்ளுவனெனும் புகழ் பெறுநூல்
அதிதஞானமாயிரத்தைந்நூறதன் சுருக்கமதாம்
துதிய[ற்](ர)த் தி[ற்](ன)சிந்தாமணியெனுமெண்ணூற்றெரு
வாம். (உ)

* * * *

ஆதியுமடி யந்தமு நடு முடியதனில்
சோதி நீண்டுல காதிதம்வான் புவியனைத்தும்
நீதி நின்றருளிலகிய கருவியினோர் மை
வாதிகாளறி வைத்திய சிந்தாமணி வகுப்பாம். (ங)

* * * *

திருக்குறுங்குடியி லாலயங்க டொறுந்
தென்றிசைப் பொதிகை சார்வதுந்
தேசதேச பரிபாலனஞ் செய்தல்
சித்தர் கூடி நடமாவோர்
இருக்கு நாடுவிருபாட்சி நீலகிரி
மேலைநாடு வடபாரிசம்
மேரு நந்திகிரியாடு தீர்த்தம் வெகு
தேசங்கீழ்த்திசை நதிகள்தாம்,
நருக்கனுவதுருவருக்கன் பூவின் மலர்
ஆனவேரினிரு கூறினில்
அப்புவம் புனல்களருவி பாய்ந்து நதி
யாறுமோடுமேலை கீழ்வரை,

சுருக்கமாவ தவர்பாயி ரங்கவிதை
சொல்லும் பாடலிருபத்தைந்து
தொகையதாக் குரு கிருபை கூர்ந்தருள்
சூட்சுமமெண்ணூறு பதம் போற்றுவாம். (௨௰௪)

Colophon:

பாயிரம் முற்றும். திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த பெருநூல் ஞான வெட்டி ஆயிரத்தைந்நூறுக்குச் சூத்திரமாவது நவரத்தின சிர்தாமணி வயித்திய சூத்திரம். பாயிரம பாடல் ௨௰௫-உம் எழுதி நிறைவேறியது முற்றும்.

வாலாம்பிகை கிருபாகடாட்ச முண்டாவதாகவும்.

அகத்திய சுவாமிகள் சிஷ்யராகிய ஆதிவீரசிங்கம் புலியாகிய திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த ஞானவெட்டி ஆருடகுச சூத்திரமாவது:—நவரத்தின சிந்தாமணி எண்ணூறு வைத்திய சூத்திரம் முதல் வாரி முப்பூவுக்குப் பூர்வபடலம்.

திருவுருஞானசோதி செழித்திடுங்கணேச பாத
மருமலர் பொழியு நன்னூல் வசனமாயிரத்தைந் நூறில்
கருவுரு ஞானவெட்டிக் கருணை மெய்ஞ்ஞான பீடந்
தரு நவரத்நமெண்ணூறு தற்பரன் காப்புத்தானே. (௧)

* * * *

ஞானமாயிரத்தைந்நூறில் நவரத்நமெண்ணூறு சூத்ரம்
வான வியிடங்கொள்ளாத வயித்தியக் கருவைச் சொல்லத்
தேனெனுமொழி யிந்நூல் சிந்தாமணியுலகோர்க்காக
வானவர் முனிவர் சித்தர் மலர்பதங் காப்புத்தானே. (௨)

(இந்நூலிற் சொல்லிய வெல்லாமறிய)

மணிமந்த்ரவவிழ்தம் லேகியம் வாலை சிந்தூரம் பற்பம்
பிணியது நோய்கள் தீரும் பிரசண்டக்குழம்பு கிருதம்
தணியவுஞ்சுரங்கள் மாத்திரைத்தைலமஞ்சனமுஞ் செயநீர்
பனிபறந்ததுபோல் நோய்கள் பறக்கும் பண்டித மெய்யாமே. (௩)

End:

கனகமாமிது காயமுஞ்சித்தி தான்
தனமுனக்கென் சதாசிவம் நீயென
புனலதும்பரி பூரண தீட்சையால்
மனதுசஞ்சல மாய்கை நீங்குச்சுது.
உனதுளே யுவர்ச்சாரமுங் கட்டினூற்
செனனமேது செனிப்பதுமில்லை காண்
எனது ஞான நவரத்நமெட்டுநூ
றெண்பத்தொன்றுமே சித்திக்கு முற்றுமே. (௮௱௮௰௫)

Colophon:

திருவள்ளுவநாயனாரருளிச்செய்த ஞானவெட்டி ஆயிரத்தைந்நூறுக்குச் சூத்திரமாவது நவரத்தின சிந்தாமணி யெழுதி நிறைந்தது முற்றும்.

ருதிரோத்காரிஷூ பங்குனிமீ ௨௨ பூர்வபக்ஷம் புதவாரம் பௌர்ணமி உத்திரத்துக்கு மேல் ஹஸ்தம் விருத்தி நாமம் பவகரணம் இத்யாதி கூடிய வாக்ய பஞ்சாங்க சுபதினத்தில், திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த

ஞானவெட்டி ஆயிரத்தைந்நூற்றுக்கு சூத்திரமாவது நவரத்நசிந்தாமணி யெண்ணூறும் எழுதி நிறைந்தன[ம்]. இஃது திருமயிலாப்பூர் தலையாரித் தெருவிலிருக்கும் வீரவன்னியபுலி வயித்திய முத்துசுவாமி பண்டிதர் எழுதிய வாக்கியமென்றறிவது. முற்றும்.

(கு-பு)—

ஞானவெட்டி 'நவரத்ந சிந்தாமணி' என்னும் இந்நூல் திருவள்ளுவர் இயற்றிய ஞானவெட்டி ஆயிரத்தைந்நூறுக்குச் (சூத்திரமாய்) சுருக்கமாய் அமைந்ததெனத் தெரிகின்றது. 800 என்றிருப்பினும் எண்ணூற்றெண் பத்தைந்து செய்யுட்கள் இருக்கின்றன. வைத்தியத்தைச் சார்ந்ததாகும; என்னுமிதுவும் இந்நூற்பாயிரத்து " விதியினுல விதித்தருள் பரகுருமுனி யருளால்" என்னும் இரண்டாஞ்செய்யுளாலும, இந்நூற்பகுதியில் ஆங்காங்கு எழுதிய தலைப்பெயர் வசனங்களாலும் அறியக்கிடக்கறது: ஆகவே இது ஞானவெட்டி நூலை நோக்குழி வழி நூலாகும் என்க. இங்கு இத்திருவள்ளுவருக்குக்கூறிய 'அகத்யஸ்வாமிகள் ஶ்ரிஷ்யராகிய அதிவீர சிங்கப் புலியாகிய திருவள்ளுவர்' என்ற அடைமொழிகளான் இத்திருவள்ளுவர் வேறு, குறளியற்றிய ஆசிரியர் வேறு எனத்தெளிவாகிறது. இவ்வகத்தியரும் வேறு ஒருவர் என்க. இதனையியற்றியவர் இன்னாரெனத்துணிய வியலவில்லை.

(b) கருவூரார் ரசவாதம், முந்நூறு.

KARUVŪRAR RASAVĀDAM MUNNUṞŪ.

Foll. 173*a*—218*b*.

A treatise on Alchemy. The authorship of this work is attributed to Karuvūr Siddhar.

Complete.

Beginning :

கருவூரார் அருளிசசெய்த ரசவாத நொண்டி முந்நூறு. நூா.

சீருலவு கற்பமுறை போதமீறுஞ் செல்வரகத்தியர்
போக நாதரீசர்,
தாருலவு திருமூலர் சட்டைநாதர் தலைமயனேனுங்
கொங்கணவர் சகத்திரவேதை,
காருலவு சுரவில் கோரக்கநாதர் கையிற்செய் நாகார்ச்
சுனர்காலை மேய்த்த,
பாருலவு போக நிறைநாதர் தந்த பாலனெனக்
கருவூரான் பாடல்தானே. (க)

பாடுகின்ற ரசவாத நொண்டி பாரில்
பழமொழியாய்ப் பாடுதற்குப பாணிவாணி,
கோடுபெற்ற கொங்கை மின்னாள் கமலமாது
குகன்தலைமயனகத்திய மாருஷியெல்லோரும்,
நாடுகின்ற நாவதனில் குடிகொண்டேதான்
நலம்பெறவே பொருள் மிகுத் நாயனாரும்,
தோடணிந்த குழைபாள் சத்தி
தூர்க்கைதுணையெப்போதுந் துணைசெய்வாமே. (உ)

இவை யிரண்டுங் காப்பு.

நொண்டி.

பூவுலாவிய தேவியந்தரி போதசுந்தரி மாயசிற்பரை
பூணுநற்சிவ . . . சித்திகளே கொண்டாடவே,
காவுலாவிய போகநாதர் கடவுளகத்தியருஷிகள் தேவர்கள்
கருணைநந்தீசரெப்போது(ம்) வருந்துணையே—தனதானனு.

பாருலாவிய போகநாதர் கைப்பச்சையாகிய கொங்கணர்
பணமற்றத்தழையன்றுணைபெனுமே கொண்டாடவே,
நாவுலாவிய சட்டைமா முனிநாதராந் திருமூலநாயகர்
நாதர் கோரக்க நாதருந்துணையே—தனதானனு. (க)

விருத்தம்.

காசினியில் யான்படைத்த கற்பங்களாய்
கடிதான நூற்றெட்டுக் கற்பமாகும்,
நேசமுடன் சித்தியதாங் கற்பந்தின்றால்
நிலைபெற்றோனுகாச நெறிகள் பெற்றோன்,

பாசமற்று நேசமற்றுப் பாரில்வாழும்
பண்புதனை விட்டிகழ்ந்து பரத்தைத் தேடும்,
ஆசையது பேரின்பமாகுஞ் சத்தி
யடைவாகக் கற்பமுறை செய்திகேளே. (உ)

கேளப்பா வகத்தீசர் கற்பம்நூறு
கிருபையுள்ள நந்தீசர் கற்பம் நூறு,
நாளப்பா போகதிறை நாதர் கற்பம்
நாற்பத்து நாலு கற்பம் நன்றாய்க் கொண்டார்,

வேளப்பா சட்டைமுனி தின்றார் கற்பம்
மேதினியிலறுபத்தொரு கற்பங்கொள்வார்,
ஆளப்பா கொங்கணவரீரெட்டாகும்
அருந்தினர் கற்பமிக வருந்தினரே. (௩)

End :

குருபோக நாதரைத்தான் கூறுடன் பூசை செய்வாய்
குருமூலர் சட்டைநாதர் கொங்கணர் நந்திபூசை
குருவென்று பூசை செய்வாய் கூறிய சுவடிவைத்துக்
குருவென்று பாதங்காத்துக் கூறுவோர் வேதை காண்பாம்.

(௩௱௪)

ஆமப்பா புத்திசொன்னே னழிபுத்தி சொல்லவில்லை,
ஆமப்பா வேதைகண்டால் கற்பத்தைப் பின்புகொள்வாய்,
ஆமப்பா சித்தியாகு மரணரி பிரமமாவான்,
ஆமப்பா குருவின் பாதத்தடி தொழுதிருப்பாய்வாழி. (௩௱௫)

கடவுள் துணை - ஸ்ரீதேவி சகாயம் - ஸ்ரீராமஜயம்.

Colophon :

பிரஜோத்பத்தி ஞு ஆனிமீ 24வ அமரபக்ஷம் சதுர்த்தி நாழிகை 51—0 இதற்குமேல் பஞ்சமி சதயம் 51-0. ஆயுஷ்மான் யோகம் நா. 41-12. பாலவாகரணம் நா. 5-31. இதற்குமேல் கைதுலேகரணம். திவி. கய. கஅ. இத்தியாதி வாக்கிய பஞ்சாங்க சுபதினத்தில், உதயாதி நாழிகை உச-க்குக் கருவூரார் அருளிச்செய்த வாத கற்பம் ௩ா-எழுதி முகிந்தது. சித்தர்கள் பாதமே துணை.

(கு-பு.)—

இந்நூல் ரஸவாத விஷயமானது. இயற்றியவர் கருவூர் ஸித்தரெனக் கூறப்படுகிறது. முந்நூற்றைந்து பாடல்களையுடையது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. இதறகுக் 'கருவூரார் வாதகற்பம முந்நூறு என மற்றொரு பெயரும் உண்டெனத் தெரிகிறது.

R. No. 937.

Palm-leaf. 12 × 1½ inches. Foll. 374. Lines, 9—10 in a page. Tamil. Injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Pillai Avargal, Mylapore.

ஞானவெட்டியான் நவரத்தின சிந்தாமணி.
ÑĀNAVEṬṬIYĀN NAVARATTINACINTĀMAṆI

Same work as that described under R. No. 936 (*a*).

Complete.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்லாக் 936 (a) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. ஏடுகள் சிதைந்துள்ளன.

R. No. 938.

Palm-leaf. 10 × ⅝ inches. Foll. 225. Lines, 5 in a page. Tamil. Slightly injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Pillai Avargal, Mylapore.

(*a*) சித்தராரூடம்.
SIDDHARĀRŪḌHAM.

Foll. 1*a*—68*a*. 68*b* is left blank.

Same work as that described under R. No. 174 (*b*)

Complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக 174 (b) நம்பர் பிரதியில் வந்துள்ளதே, ஆயினும் இதில் சிற்சிலவிடத்துப் பாடபேதங் காணப்படுகிறது; இப்பிரதியில் எழுதின முறை நன்றாயிருக்கிறது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. இதன் பின்னர் 69 (a) முதல் ஐந்தேடுகளில் நல்ல பாம்பு கடித்தால் விஷம் இறங்கும் மந்திர முதலியவை எழுதப்பட்டுள்ளன.

(b) ஞானமதியுள்ளான்.

NĀNAMATIYUḶḶĀN.

Foll. 74*a*—174.

A treatise of a philosophical character embodying the story of a king who, desirous of liberation from the world's bondage gave up his kingdom and wandered about in several places, till atlast he got spiritual enlightenment and salvation by the grace of Goddess Dēvi.

Complete.

Beginning:

ஹரி : ஓம் நன்றாக : ஞானமதியுள்ளான். குருவே துணை.

அரிவிந்து நாதமுத்தி யானந்த பதத்தைப் போற்றிப்
பரிமுந்து பத்தர்சித்தர் பரிவுள்ளோர் த[ன்னை](ம்மை)வாழ்த்தி
உரிமுந்து வுழக்கிரண்டு ஒன்றென்ற பொருளினாலே
கரிவந்து மதியுள்ளாடுங் கணபதி காப்புத்தானே. (க)

தானென்ற வடிவாய் மூலந்தரு சதாசிவத்தினாலே
வானென்ற வல்லிகையில் வந்தவன் சிக்கிக்கொண்டு
மானென்ற கொந்திமன்னன் மதிகெட்டு மதியுள்ளாடும்
வேனென்ற பனுவல்கூற வேலவர்காப்புத்தானே. (உ)

மேல்வட்டமிட்ட கொந்தி மெய்ப்பதி யாண்டராசன்
பூவட்டலோகம் விட்டுப் பொன்னுலகாளவென்று
சேல்வட்டமிட்ட வல்லி செங்கையில் சிக்கிக்கொண்டு
கால்வட்டமிட்ட ஞானக்கருவுக்குள் களிறுகாப்பாம். (ங)

பாயிரம் முற்றும்.

ஞானமதியுள்ளான். நன்றாக.

வண்மையா யுலகையாண்டு வாழ்ந்துதான் கொந்திமன்னன்
உண்மையாம் நூல்கள் பார்த்து உறுபொருளிதுவே யென்று
நன்மையாம் பதத்திற்சேர்ந்து ஞானமாம் பதியிலேறித்
தண்மையாய் வல்லியாலேதான் மதிகெட்டுள்ளானன். (க)

மதிகெட்டுப் புத்திதொட்டு வாழ்நகர்தன்னைவிட்டு
பதிகெட்டுச் சதாசிவத்தின் பட்டணந்தன்னில்வந்து
விதிகெட்டு லச்சைகெட்டு மெய்ஞ்ஞானத் தாடிப்பாடி
நதிகெட்டுப் பூசைவிட்டு நற்சடையாண்டியானன். (உ)

ஆண்டியாய் மதிதான்கெட்டு அநேகமாம் பொருள்கள்தோற்று
வேண்டிய தேசத்துக்கு மெச்சுமந்திரியை வைத்துத்
தாண்டிய பதியைவிட்டுச் சச்சிதானந்த வல்லி
யூன்றிய வாசையாலே யுலகெலாஞ் சுற்றினனே. (ரு)

*   *   *   *

*   *   *   *

விருத்தம்.

பத்தனே சித்தன்தானே பரிவுள்ள மனிதன்தானே
கர்த்தனே கயிலையானே கள்ளனே வண்டத்தானே
வெத்தனே விகடன்தானே விச்சனை தன்னில்வந்தாய்
பித்தனே பிறப்பில்லானே பேயனே வகலப்போடா. (எ)

End:

வல்லியே மதிதான்பூண்ட மங்கைமால் தங்கையேநீ
அல்லிமா நகரிலென்னை யாட்கொண்டு மவுனதீட்சை
சொல்லியென் பிறவிதீரத் தொல்புவி யதனில்வந்தாய்
தல்லியே குருவேயோக சாதனைதருவாய் தாயே. (ருகஉ)

*   *   *   *

*   *   *   *

ஆதிவேதங்க ளோந்தாறுவீடு மால்சாத்திரங் கோத்திரம்வாழி
நீதியோதிய தேசங்கள்வாழி நித்தமுஞ் சித்துச்செய்வோர்கள்வாழி
சாதியோரிரண்டும் வகையுமுயரத் தருமநீதம் தழைக்தென்றும்வாழி
ஓதியே மதியுள்ளானுலகத் துணர்ந்தவர்வாழி வாழியதாமே. (ருகக)

விருத்தம்.

குருநெறி யருளினுலே கோந்திமா தேசத்துள்ளே
யரிகணி வளருஞ்சோதி யல்லிமா நகரிலேந்து
தருநெறி ஞானபோத சங்கிரம வித்தையோகம்
வருநெறி யவ்வுநன்மை வகுத்தொரு வயணமாகத்
திருநெறி மதிநூல் சொன்னன் சித்தா நந்தமுற்றே. (சா)

சற்குருவே துணை.

Colophon:

விசுவாவசுஷு தைமீ ௰௨ எழுதி நிறைந்தது.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. கொந்திதேசத்தரசன், தான் மாயப் பிறவி நீங்கி மோக்ஷமடையக் கருதி, நகர் முதலியவற்றைத் துறந்து தன் ராச்ய பாரத்தை மந்திரியினிடம் ஒப்புவித்துப் பலவிடங்களிலலேந்து வருந் திப் பின்னர் "சச்சிதாநந்தவல்லி" என்னும் தேவியருளால் ஞானமமை யப் பெற்றுப் பிறப்பு நோய் நீங்கித் தேவியைத் துதித்து மோக்ஷமெய்திய தாகக் கூறுவது; இது, நானூறு பாடல்களையுடையது. இதிலிடையிடையே பல இசைப் பாடல்களும் விரவியுள்ளன. இந்தப் பிரதியில் முற்றுமிருக கிறது.

(c) அகததியர் ஜாலநிகண்டு.
AKATTIYARJĀLANIGHAṆṬU.

Foll. 175*a*—225(*a*).

This work deals with magic and witchcraft and with the substances used in that connection. It is attributed to Ahattiyar.

Complete.

Beginning :

திருச்சிற்றம்பலம்.

அகத்திய சுவாமியார் அருளிச்செய்த சாலநிகண்டு
இருநூறுபடிக் கருத்தொழில்(?).

உன்னிய பொதிகைவாழு மொருமுனி யருளையோதி
இன்னில நிகண்டுபொடி யிந்திர சாலநூலைப்
பன்னிய பாஷைதோன்றப் பண்டிதர் வேதநாவுக்
கன்னியு முமையுமீசன் கந்தனுங் காப்புத்தானே. (க)

தானெனும் வழலையாதி தருகுரு வடிவுமீசன்
வானமும் புவியுமாகி மதிரவி வெளியில்நின்ற
ஞானமு மாகியம்மை நாதமும் விந்துமாகி
மோனமாய் நின்றபிண்ட முடிவுமே காப்புத்தானே. (உ)

(வேறு.)

காப்புக் குவிந்து வட்டக் கருவொளி
மூப்புக் குத்தி முன்னை வரைந்திடு
கோப்புக் கொன்னவர் கூட வளிப்பது
ஆப்பது போனு வாடாது தேரே. (ங)

தோனு மானல் சிகாரத்தில் வாலையை
ஆரணு மாறு லம்புவை மேலிடு
மாரண மானல் மசிநசி யென்றிடு
பேரினில் மூன்னும் பின்னு மெழுதிடே. (ச)

End :

பூட்டினே மிந்தப் பொன்னிரு நூறும்
வாட்டமு மில்லை மருந்து செய்வார்க்கு
ஓட்டமு மில்லை யொளிப்பது மில்லை
நாட்டமு மில்லை நமனென்ற பேர்க்கே. (உ௱)

பேர்பெற வாசான் பிரக்கினை வானாய்
நேர்பெறச் சொல்ல நினைவா யறிநீ
சீர்பெற வாலையைச் சிந்தித்து நில்லு
ஏர்பெறு காம விரையை யறுப்பையே. (உ௱க)

அறுப்பான் விளைந்த பருவத்தி வாசான்
திறுப்பான் தராசு நிறையெனக் கர்மம்
பொறுப்பான் றவத்தைப் பூட்டிய பேர்க்கு
வெறுப்பான் சகல விரோதமும் பாரே. (உ௱உ)

பாரினி லிந்த முறைப்படி பார்த்துத்
தேறிநீ பாவஞ் செய்யவும் வேண்டாம்
ஆறிநீ பாரு அறுபத்து நாலும்
நேரிரு நூறு நிகண்டிது முற்றே. (௨௱௩)

Colophon:

அகத்திய நாயனு ரருளிச்செய்த சால நிகண்டு நிறைவேறிற்று. சிவ கடாட்ச முண்டாகவேண்டியது.

(கு-பு.)—

இந்நூல், ஜால விஷயமானது. அகத்தியரியற்றியதாகச் சொல்லப்படு கிறது. ஆயினும், சங்ககாலத்து அக்த்தியர் இயற்றியதாகத் தோன்றவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 939.

Paper. 10½ × 9½ inches. Foll. 11. Lines, 20 in a page. Tamil. Good. New.

Restored in 1927-28 from a M.S. in the Library.

சித்தாந்தவிளக்கம்.

SIDDHĀNTAVIḶAKKAM.

Same work as that described under R. No. 143 (*b*). ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல், மூவருடக் காட்லாக் 143 (*b*) நம்பர் பிரதியைப் பார்த்து எழு தப்பட்டதே. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

R. No. 940.

Palm-leaf. 11¾ × 1 inches. Foll. 226. Lines, 4-6 in a page. Tamil. Much injured. Old.

Purchased in 1927-28. from Jambuliṅgam Piḷḷai Avargaḷ. Mylāpore.

(*a*) அகத்தியர்குருநாடி.

AKATTIYARGURUNĀḌI.

Foll. 1*a*—85*b*.

A treatise on pulse and the system of pulsation based on the three-fold humours, Vāta, Pitta and Ślēṣma.

This work does not appear to have been printed.

Complete in 309 stanzas.

Beginning :

அகத்தியர் அருளிச்செய்த குருநாடி.

ஓங்காரங்கொண்டெழுந்த பி[ற](ர)ணவத்தின்
செய்கையுடனிந்தச் சூத்திரமாயுரைத்தவாறு
மாங்காரங்கொண்டதொரு மனத்தைத்தேர்ந்து
மருவுருவ சுவரூபமென்று மந்தநேர்மை
பாங்கான நாடி நரம்பானவாறும்
பழமறைதானாராய்ந்து பாடிவைத்தேன்
நீங்காரகணபதியுங் கந்தன்றானும்
நிசமாக வந்துதவுங் காப்புத்தானே. (க)

தானான நாடி நரம்பானசெய்கை
தாரணியின் மானிடர்செய் தர்மகர்மம்
மூனான வுடலுயிராய்த் தேகமானவுரையறிந்து
முதித்துபிராய்நின்றவுண்மைக்கியானம்
வானான[னா](நா)டிவகைக் கெல்லாந்தன்னில்
வளமைபெறவொரு[னா](நா)டிமா(ர்க்)கங்கண்டு
தேனான குரு[னா](நா)டியாய்ந்து சொன்னேன்
தேவிமுதல் சிவனுடனே தெளிந்தகாப்பு. (உ)

காப்பு முற்றும்.

சீர்பெறு முனிவர் வேதந்தெளிந்து பின்னுலகத்தோர்கள்
பேர்பெறு (கருவிலுற்ற) பிணிபல[து](வு)ணர்ந்து தேர்ந்து
மூர்பலநாடிக் கெல்லா முயர்பெறுநாடி மூன்றில்
சேர்குரு[னா](நா)டி நேர்மைசெயலுடன்கூறலுற்றேன். (க)

உற்றிடுநாடி மூன்றிலுயிர்நிலை கருவைப்ப[த்தி](ற்றி)
நற்றிடு நரம்பின்வவ்வி நன்மணி[னா](நா)க்குப்போலே
பற்றிடுஞ் சுழினைத் தாக்கிப் பதிபசு பாசத்துற்று(ச்)
சுற்றிடும் ராட்டுப்போலே சுருக்குடன்ச[க்தி](ற்றி)யேறும்
மற்றுள்ளமண்டலங்கள் மூன்றையுமருவிமீளும். (உ)

மீளுமே வாதபித்தஞ் சேற்பனமூன்று மேவி
வாளுமே யாக்கைக்கொத்து வளர்ந்திடுங் குருவாம்நாடி
கோளுமே விளைந்து நோய்கள்கூடழிவாகஞ்செய்யும்
நாளுமே நடத்துஞ்செய்கை நவில்கிறேன் நாடிகேளே. (ங)

கேளெனச் சொன்னீரையா கிருபைவைத்தடியேன் கேட்க
தோளென மருவிநிற்குஞ் சூட்சுமத்தைத் தொட்டுக்காட்டி
யாளுமே நாடிக்கெல்லாமருள்பெறுங் குருவாம்(நா)டி
சூளு மெவ் வகைத்தானன்றாய்ச் சொல்லி நீர்துலங்குவீரே. (ச)

உற்றிடு முலகத்தோர்க்கு முறுபலவியாதி வந்தால்
பற்றிடுங்குணங்கள் தன்னைப் பகர்ந்துரைசெய்யவேண்டி
லொற்றிடுஞ்சொன்னவாறு முடலுயிரானவாறும்
மற்றுமா மலையில்வாழு மாமுனி வகுத்தார்தாமே. (ரு)

நூல் :—

தானெனுநாடி பத்தில் தரித்திடும்நாடி மூன்று
கோனெனுங் குருவாம்நாடி கருவினிற்றிருத்துமோங்கி
பூனெனும் திணமும் நெய்யுமுதிரமுஞ் சலமுமாகித்
தேனெனுந் தெளிவாம்நாடி செயலுடன் துலக்கலுற்றேன். (சு)

துலக்கவே வேதநாதன் தூண்டியசுழினை காட்டிப்
பிலக்கவே யிடைதான்வாதம் பிங்கலை பித்தமாகும்
நலக்கவே சுழிதான்சேத்மம் நலமுடன் மலமேவாதங்
கலக்கிடு ந்தீயே பித்தமையது நீரதாமே. (உ)

* * * *

End:

பண்புறு வாய்வுவெல்லாம் டோகினு மோர்வாய்வதுதான்
நண்பு சேர்நல்லோர் போல நயம்பெறுமுடலினின்று
திண்புறு வீக்கங்காட்டிச் செறியு(நா)ள் மூன்றுதன்னில்
தண்புற வெடித்து வற்றித் தனஞ்[செ]சயன் றலையாற்போமே. (௱௩௯)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், தமிழ்நாடிக் கிரந்தங்களில் ஒன்று. இது 'வாத பித்த சிலேஷ்மம்' என்ற மூன்று நாடிகளும் உடம்பில் பிரதானங்களாய் நின்று இயங்கி மற்ற நாடிகளையும் தமக்கேற்ப இயங்குவித்துக் கருவையுண்டாக்குந் திறனையும், கருவிலேயே உண்டாகும் பல நோய்களுடைய கூறுபாட்டையும் நன்கு முறையே அருமையாக விளக்குவது. அரிதான நூலாகும். அச்சிட்டதாகத் தெரியவில்லை. (௱௩௯) முந்நூற்றொன்பது செய்யுட்களாலாகியது. "அகத்தியர் குருநாடி (உ௲௫)" என்ற பேரான் வெளிவந்துள்ள நூலினும் வேறாகவே தோன்றுகிறது. மிகச்சிதிலம்.

(*b*) அகத்தியர் வாலை பரிபூர்ண வைத்யநாடி சூத்திரம்.

AKATTIYAR VĀLAI PARIPŪRṆA VAIDYANĀḌI SŪTTIRAM.

Foll. 81*a*—133*b*.

A treatise on medicine. The number of blood vessels in the body, the manner of feeling the pulse and of diagnosing the diseases are explained herein.

Complete in 139 stanzas.

Beginning:

ஹரி: ஓம். நன்றாக; குருவே துணை.
அகத்தியர் அருளிச்செய்த பாலை பரிபூர்ண வைத்யக்
கருக்கிடை காண்டம் எட்டில் முதல் காண்டத்தில் சொல்லிய
நாடி நூற்றுமுப்பது:—

குருநமச்சிவாயமெனுஞ் சிவஞானசக்தியருள் குமரன்பாதம்
திருவமெனு மண்டபிண்டம் நிறைந்துநின்றசாம்பவியி னுதிபாதம்
மருவளரும் நவசித்தர் வடமொழியில் நந்திகுருமறையோர் பாதம்
திருவுருவாயலங்கி[ற](கி)தமாய்க்கவி ரேதுதற்குத் தேவிகாப்பேய. (க)

நூற்பெயர்:—

ஓதுமொழி வாலைபரிபூரணமாம் நானூற்றை யுலகத்தோர்க்கு
வேதமதிலுள்ளபடி வைத்யக்கருக்கிடையா விளம்பயானும்
மாதுநின்று நடநமிடு மவுனமதில் விளையாட மகிழச்சித்தர்
போதமயமாகி நின்ற தாதுவிதிநாடிதனைப் போற்றலுற்றும். (க)

போத்த தாதுவிதிமறைநாடியையச் சாத்தயானும் சாத்தியாசாத்தியம்
பூத்த நாபிக்கமலங் கிழுந்தியிற் கோத்துப்பின்னலெ ழுந்தசுழிதனில்
காத்துப்பற்றிக் கனைத்து எழுந்ததோ ரேற்றநாடியெழு பத்தீராயிரம்
வீத்ததாது விளங்கிடுமென்னியி லாத்துமநாடியறிதிசை பத்ததே (உ)

பத்துநாடியும் பாரித்திருக்கையில் முத்துத்தாது மூலஞ்சுழிமுனை
வித்துநாடி விரைந்திடு மூன்றுபேருற்றுப்பாருயிர்வாத மிடகலை [ம்
தத்துத்தாது த–டடவென்றுமாய்ப்பித்தம்பி[ன்](ங்)கலைபின்னுமே யையமா
நித்தத்தாது எழும்பிடுநாடிபார் யுத்தாயுத்தமிரண்டு மறிவதே. (ங)

கருவியானதேகமில் கலந்துநாடி தாதுவுங்
கவிழ்ந்துவோடிமேவியே நரம்பெலாமெழும் பிடில்
குருவிசிட்டுப் போலவே குதித்துமே யசையுமாய்க்
குவிந்துநாடி பொங்கியே தவிழ்ந்துமே நடக்கிலாய்
இருவியான நாடியுமிருந்துமே யெழும்பிடி
லெறிந்துதாதுவறியே நடந்துமே யசையுமாய்
மருவியானவாதமும் வளைந்துவோடி புக்கிலா
மாள்வதில்லைசாத்தியம் மகிழ்ந்துணர்வதாகுமே. (கூம)

கொள்ளும் வன்னிராசனுங் குதித்துவந்துநாபியில்
குடுகுடென்று வோடியே யடிபட வொலிக்குமாய்த்
தெள்ளுந் தோழ[மா](ளு)கிடுந்திசைகலங்கும் வாயுவால்
தினமுமிப்படி வித(மம)ளிதமு மாகிடில்
வள்ளலாகியச் சடமழிந்து போமசாத்தியம்
மயக்கமாய்ப்பூராட நாளில் மாளுவாரறிந்திடல்
துன்னலா முவ்வாறுநாளில் இல்லமேயழிந்திடுந்
தொந்தமாகிய செடமுஞ் சிந்தையிலழிவதே. (கூஉ)

End:

உரைத்தனர் முன்னோராதி உடல்கருதாது மார்க்கம்
விரைத்தனர் சகத்தோருக்கு விள[ங்](க்)கிஞ ராயுர்வேதம்
மறைத்தமிழ் யானுங்கண்டு மாமறைக் கருக்களெல்லாங்
குறைதவறுதே சொன்னேங் குருமுனி யருளநன்றே. (கநகூ)

அருள்பெற வாலைசூத்திர மம்பிகைபதத்தைப் போற்றித்
திருபுரை யுரைக்கயானுந் திருத்தினேன் நானூறாக
மருவ[று](ரு)ட் கிருபைகூர்ந்து மமுர்தமே புகட்டினுள்பார்
பருவமா மாதுவாலை பதந்தனைப் பணிந்திட்டேனே. (கநஎ)

பணிந்திட வாலைதன்னைப் பாயிரம்முன்னே சொன்னாள்
துணிந்துயா னெட்டுநானூறு தொகுதியாய்ப் பாடினேன்பார்
கனிந்தவ ளமுர்தமூட்டிக் க[று](ரு)ணைகூர்ந் தென்னைவாழ்த்தி
மணிமுதல் தியானமந்திரம் மார்க்கமு முரைத்திட்டாளே. (கநஅ)

உரைத்திடு நாடிசூத்திரம் யோகவானவர்க்கே சித்தி
விரைத்திடும் வித்துதாது விளங்கிய கருக்கஎெல்லாம்
திரைத்திடும் ராசயோகம் திலேத்திடு மவர்க்கெந்நாளும்
மறைத்தமிழ் மு[ரைக்கனு](ஸ்றைகள்நா)டி மாமறை தாதுமுற்றே.
(கநக)

முற்றும்.

அகத்தியர் அருளிய வாலேபரிபூரணத்தில் முதல்காண்டத்தில் சொல்லிய நாடி எழுதிநிறைந்தது. முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் வைத்யநூலாம் பலவற்றில் நாடிக்கிரந்தங்களுள் ஒன்றாகும். இதுதான் உடலில் அமைந்துள்ள நாடிகள் (72,000) என்றும், ஆத்ம நாடிகள் பத்தென்றும், 'வாதம் பித்தம் சிலேட்டுமம்' என்ற நாடிகள் பேர்பெறும் விதத்தையும், அந்நாடிகள் தாம் இயங்கும் முறையையும், அவைகளால் ஏற்படும் பிணிகள் பலவற்றையும், மரணக் குறியையும் தெளிவாக வுணர்த்திச் சாத்தியா சாத்தியக் குறியையும் தெரிவிப்பது. நூற்று முப்பத்தொன்பது செய்யுட்களால் அமைந்தது. 'அகத்தியர் வாலே பரிபூரணம்' என்ற நூலின் ஒரு பகுதியாகும்.

(c) வான்மீகர் நாடிசூத்திரம் நூற்றுப்பதினைந்து.
VĀNMĪKARNĀḌISŪTTIRAMNŪṞṞUPPATINAINDU.

Foll. 146a—174b.

Similar to the above.

The nature of the diseases from which a person suffers and which can be diagnosed by feeling his pulse, and the curative rites to be performed are described herein.

Complete.

Beginning:

விநாயகாயநம:

வான்மீகர் அருளிச்செய்த நாடிசூத்திரம் (ககரு).

திட்டவொண்ணுப் பெருங்குஞ்சரப் பிள்ளைக் கையானைச்
செஞ்சரண கற்பகத்தைச் சிந்தைசெய்து
கூட்டமண்ணுய்ச் சமைத்ததனில் வா(ழ்)வைத் தந்த
கூடுதகர்ந் தெழுந்தரும்பி நிலைவைப்போல
ஆட்டியதோல் கருவை நரம்பெனவே யொன்றி
அறிவர்நல் லோர்கள் திரிநாடி யென்றே
நாட்டிய மெய்யிரண்டு மூன்றாகக் கூடி
நடக்குமென முன்னேர்கள் நவின்றவாறே. (க)

நாடி தெரியாத பேர்கள்.

விருத்தர்கள் பாலரேனும் வியாதியால் மெலிந்தபேர்கள்
வருத்தர்கள் சயங்கொண்டோர்கள் வழிநடை பட்டபேர்கள்
தெரித்திரர் செவிநோயாளர் சிற்றின்ப மடக்கினேரும்
ஒருத்தன[ரி]றி வார்கள்தாது உண்மையாய்த் தெரியாதன்றே. (உ)

பாயிரம் முற்றும்.

நாடிய கரிமுகன் நல்லபொற் பாதங்கள்
தேடியே என்மனச் சிந்தையில் வைத்துநான்
கூடிய நரம்புட் குற்றமும் நன்மையும்
பாடி[ஞு](நா) னுலகத்திற் பகுத்த வாறிதே. (௩)

ஐங்கரர்க் கிளையவன் ஞாறுமா முகன்
பங்கய பாதத்தைப் பணிந்தென் சென்னிமீ
திங்கிதம் பெறநரம் பிசைந்த சூத்திரம்
இங்கிது நலம்பெற இலங்கு மாறிதே. (௪)

ஈசனு மாலுங்கஞ்ச மிருப்பவர் தம்மைப்பேணி
வாசமாம் நாடிமூன்றும் வகுத்தல கறியச்சொல்வோம்
ஆசையா மகத்தியர் மற்றுள்ள மாருஷிகள்சொன்ன
பாசைவா கடத்தைமிஞ்சிப் பாரில் நானு ரைத்தவாறே. (௫)

எழுபத்து நாலுகோடி யெழும்பிடும் நரம்பின்செய்கை
பழுது[த்த](ற்ற)ப் பிணியும்பின்புப் பிறந்திடு நொடியுஞ்சொல்
[வோ
மழுத[த்தனு](ற்றநா)டி நோயை யாயிரத்துள்ளே காட்டி
விழுதற்ற நூற்றுக்குள்ளே விரும்பிநா னுரைக்கு[ம்வா](மா)றே.
(௬)

* * * *

End:

பல[வுரு](முறு) வாதநாடி பாம்பதுபோலே சுற்றில்
நலமுறு முன்னேசொன்ன நன்கறிதன்னை நீக்கி
இலையுறு மத்தமத்த வியல்கறி யுள்ளதெல்லாஞ்
சலமுறு வயிற்றில்தொங்கில் சத்திக்கும் வருடமொன்றே. (௧௧)

பலகறிப் பொசிப்புத்தொங்கில் பற்றியே யுடலில்நின்ற
வியல்சூறி தன்னையெல்லா மிருடிகளறியச் சொன்னோம்
கலகறி வருடம்பத்து கண்டுகொண் டுள்ளதெல்லாம்
வலுவறி புத்தில்மேவும் வான்மீகர் உரைத்தவாறே. (௧௨)

ஆகப் பாடல்கள் (௧௧௫). நாடி முற்றும்: குருவே துணை.

(கு-பு.)—

இதுவும் நாடி கிரந்தங்களுள் ஒன்றாகும். வான்மீகர் இயற்றியதாகத் தெரிகிறது. இவ்வாசிரியர் இந்நூலில் மற்ற இருடிகள் சொன்ன வகைகளிலும் வேறாகவும் விசேடமாகவும் கூறியிருப்பதாகக் கூறுகிறார். ஆகவே இது அருமையான நூலென்றே அறியக்கிடக்கின்றது. முற்றுமுள்ளது. இதிலே நாடிகள் இயங்கும் விதமும் அவற்றால் உண்டாகும் பிணிகள் பலவும், தோஷங்கள் பலவும் அவை யிற்றைநீக்கற்குரிய சில ஓமசாந்திகளும் யந்திரங்களுடைய பெயர்களும் இன்னோரன்ன பல அரிய விடயங்கள் பலவுங் கூறப்பட்டுள்ளன. நூற்றுப் பதினைந்து செய்யுட்களான் அமைந்துள்ளது.

(*d*) வான்மீகர்உறுப்புச்சூத்திரம்பத்து.
VĀNMĪKARUṞUPPUCCŪTTIRAMPATTU.

Foll. 175*a*—176*b*.

A short treatise in 10 stanzas explaining how, by feeling warmth, cold and sweat on certain parts of the body of a sick person it would be possible to predict whether he would live or die.

Complete.

Beginning:

விநாயகாய நம: வான்மீகர் அருளிச்செய்த உறுப்புச்சூத்திரம்.

உள்ளங்கால் முழங்கால்பள்ள முகந்திடு முள்ளங்கையும்
மெள்ளவே முழங்கைப்பள்ள மிருந்ததோர் மூக்கிரண்டும்
துள்ளிய பிடரிதொண்டை சுற்றிய நெற்றிமூக்குத்
தெள்ளிய வுச்சிசூத்திரஞ் செப்பும் வான்மீகர்தாமே. (௧)

இடதுள்ளங் காலேநீரா யிசைத்திட வலதுகாலிற்
சுடுகையு நெருப்பையொத்துத் தோன்றிடுங் குளிர்ந்ததண்ணீர்
விடுவது போலேகண்டால் மிகுபிணி தீராதென்று
படுவது திட்டஞ்சொன்னோம் பத்துநாள் சாவுதானே. (௨)

* * * *

End:

சூரியன் தேகமெல்லாஞ் சுட்டதுபோலே தோன்றிற்
பாரிய கையுங்காலும் பாங்கதாய் வெதும்பிநின்றால்
சீரிய முழங்கால்நெற்றி திறமுடன் காய்ச்சலுண்டே(ல்)
ஆரிய மாவிஞ்ஞை யவர்பிழைத் திருப்பர்தாமே (௰)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் உள்ளங்கால் முழங்கால் கைகள் முகம் முதலாய இன்னன்ன உறுப்புக்களில் சூடு குளிர்ச்சி வேர்வை முதலியன உண்டாகில் அவ்வுறுப்பாளர் பிழைத்திருப்பர்; இத்தனை நாளில் மரணம் அடைகுவர் என்றுற்றுணரும் அறிகுறியை உணர்த்துவது. வைத்யத்தைச் சார்ந்தது. நூலாசிரியர் வான்மீகர் என்று முதற்பாடலால் அறியக்கிடக்கிறது. பத்துப் பாடல்களாலுயது. முற்றும் உள்ளது. அருமையான நூலாகும்.

(e) வான்மீகர் அடிதலைகயிற்றுச்சூத்திரம்பத்து.
VĀNMĪKARAḌITALAIKAYIṞṞUCCŪTTIRAMPATTU.

Foll. 177a—178.

A treatise in 10 stanzas, showing how one may predict that a sick person will live or die by calculating the measurements of his body from head to foot with a string.

The authorship of the work is attributed to Vālmīki

Beginning:

வான்மீகர் அருளிய அடிதலைகயிற்றுச்சூத்திரம்.

வெள்ளை மாமத வாரண மேத்தியே
யுள்ளங் கால்கயி றுச்சி வரைக்குமே
மெள்ளவே யதின் மேவுங் குறிப்பெலாம்
வள்ளல் வான்மீக மாமுனி சொல்வரே. (௧)

அடிதலை கயிற்றை யூன்றியளந்திடச் சிரசுமட்டும்
பிடியையாடு முழமுஞ் சாணும் பெருவிரலளவுகண்டு
படியுறு நன்மைதீமை பகுத்ததைத் தொகுத்துச்சொல்லக்
கடிமல ருவந்தமாதுங் கந்தனுங் காப்புத்தானே. (உ)

அடிதலை யளந்துகொண்டா லணிக்கயிறளவு காணும்
நடியுறு வோட்டையெட்டு நால்விரற் கடையுங்காணும்
படியுற வளந்துதள்ளிப் பாரினிலறியச் சொல்வோங்
கடலதிற் றுயிலுமாயோன் கணபதி காப்புத்தானே. (ங)

அளந்திடுங் கயிறுதன்னை யணிமுழ மிரண்டுந்தள்ளித்
தளர்ந்தசாண் மூன்றுந்தள்ளித் தன்விர லெட்டும் போக்கிக்
குளிர்ந்திடு முழமோரொன்றுங் கூறிய சாணுமைந்து
விளைந்திடு விரலும்பத்து மேவிடில் மரணந்தானே. (ச)

* * * *

End:

சாத்திய கயிற்றை மேனித்தன்னடி சிரசுமட்டும்
சூத்திரமளந்து பார்க்கிற் சொற்குறி விளம்பகேளீர்
மாத்திர முழமேநாலு மணிவிரலி ருபத்தெட்டுங்
காத்திர மாஞ்சாணெட்டுங் கண்டிடிற் சாவுதானே. (ம)

அடிதலை கயிற்றுச்சூத்திரம் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், ஓர் கயிறு கொண்டு நோயாளர் தம் மேனியில் அடியிலிருந்து தலை வரையிலும் பிடித்த ளந்து இத்துணை யளவிருந்தால் அவர் பிழைப்பர் சாவர் என்று கூறி அளக்கு முறையையும் நன்கு தெரிப்பது. பத்துச் செய்யுட்களாலாவது.

(*f*) வான்மீகர் மணிக்கடை கயிற்றுச்சூத்திரம் முப்பது. VĀNMĪKAR MAṆIKKAḌAI KAYIṞṞUCCŪTTIRAM MUPPADU.

Foll. 179*a*—183.

Similar to the above. The various kinds of diseases from which a person is likely to suffer are also described herein.

Complete.

Beginning:

வான்மீகர் அருளிச்செய்த மணிக்கடைக் கயிற்றுச் சூத்திரம்.

கமலக்கை மணிக்கடை கயிற்றுச் சூத்திரம்
விமலனைப்போற்றி செய் வேடமாமுனி
திமிரமாம் பிணியதைச் சேரச் செப்பிட
விமலவான் மீகரும் விரும்பிச் சொன்னதே. (க)

வாசவன் தேவரு மாமுனிவோர்களும்
தேச முமறிந்திடச் செப்புஞ் சூத்திரம்
ஈசனுங் கரிமுகற் கிளையகந்தனும்
மாசற வென்முனம் வந்து காககவே. (உ)

மணிக்கடை நால்விரல் தள்ளியப்புறங்
கணக்குடன் கயிறு போட்டளந்து கண்டதைக்
கணித்திடும் விரலளவறிந்து காயத்தின்
பிணிககடை நோய்களைப் பிரித்துரை செய்யே. (௩)

பத்துவிரற்கடை.

ஈரைந்து விரற்கடை யிசைந்து காண்கையால்
ஓரைந்து வெம்பிணியுடம்பிற சார்ந்திடும்
நேரொத்த கால்கையு நெஞ்சுங் குத்திடும்
சீரொத்த வயிற்றினிற்றிரட்சி குன்மமே. (௪)

*　　*　　*　　*

End:

பன்னிரெண்டு விரற்கடை.

நண்ணிய பன்னிரண்டு விரல்நயந்து கண்டிடில்
எண்ணிய மருந்துடனியல்பு மில்லையே
மண்ணிலே பிறந்தது மாயுமாதலாற்
தண்ணுறச் சாவது தடுப்பதில்லையே. (உ௩)

முற்றும் :

இந்நூலின் அளவறிய விபரம்: கணுக்கை முதல் நான்கு விரற்கடை அவரவர் அங்குலிகளால் அளந்து அதற்கப்புறம் செம்பு, பித்தளை அல்லது வெள்ளிக்கம்பிகளால் சுற்றளவாக அளந்துகொண்டு மீண்டும் அவ்வளவைத் தத்தம் அங்குலிகளாலேயே இத்தனை விரற்கடை என்று தொகைப் படுத்தி அத்தொகைப்படியே இந்நூலிற் செப்பிய நோய்களின் கூறுபாட்டை யுற்றுணர்ந்து அறிந்தகொள்ளவும்.

வான்மீகர் அருளிச்செய்த மணிக்கடை கயிற்றுச்சூத்திரம் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் ஓர் கயிற்றைக்கொண்டு அளந்துபார்த்து இத்தனை விரல் கடையிருந்தால் இன்னன்ன பிணிகள் உண்டாகும் என்று பத்து முதல் கீழ் நோக்காகக் கால் விரற்கடை குறைத்து நான்கு எண்வரையிலும் செய்யுட்களால் கூறிச் சென்று கடையகத்துப் பனிரெண்டு விரற்கடையாயிருந்தால் மரணம் அடைகுவர் என்றுஞ் சொல்லிப்போந்து கடைசியில் அக்கயிற்றினிலக்கணத்தையும் வசனத்தான் உணர்த்துகின்றது. முற்றும் உள்ளது. இதனை இயற்றியவர் வான்மீகர் ஆவர்.

---

(9) வான்மீகர் பலவிரற்சூத்திரம் ஐந்து.
VĀNMĪKAR PALAVIRAṞCŪTTIRAM AINDU.

Foll. 184*a*—184*b*.
Similar to the above.
Complete in 5 stanzas.

Beginning :

வான்மீகர் அருளிச்செய்த பலவிரற்சூத்திரம்.

பரிந்திடும் பாகமாறிப் பத்தியவிரலும் பத்துந்
திரிந்திடு மிகுதிதோன்றுஞ் சேய்தனில் விரலோர்பத்து
புரிந்திடுந் தலையிற் சூழப்போக்கிய கயிற்றைநோக்கி
விரிந்திட வகுத்துச் சொன்னார் விரும்பிவான்மீகர்தாமே. (க)

முக்கயிறளந்து பார்க்கில் முழமுக்கால் பாகமொன்று
மிக்கயிறளவு மொன்றே டேற்றதோர் சாணுங்கண்டு
மிக்கவே விரலும்பத்து விரும்பியே காணுமாகிற்
கொக்கிற கணிந்தோரானை கூறிடு சாவதென்றே. (உ)

* * * *

End :

பத்திய பாகந்தள்ளிப் படுமுழமொன்றுந் தள்ளிச்
சுத்தியாம் விரலும்பத்து சூட்சமாய்த் தாழ்ந்துகண்டால்
வித்தகர்தம் மேலானை மேதினியறியச் சொன்னோம்
சித்தியாமருந்து செல்லுஞ் சீக்கிரம் பிழைப்பான்றானே. (ரு)

பலவிரல்சூத்திரம் முற்றும்.

(கு-பு.)—

இதுவும் முன்னூல்போல கயிறு கொண்டளந்து பார்க்கில் இத்தனையளவு இருந்தால் இத்தனை நாட்களில் சாவர் அல்லது பிழைப்பர் என்று அறிவுறுத்துவது. ஐந்துபாடல்களால் ஆயது. இதனை இயற்றியவர் வான்மீகர் என்று முதற்பாடலால் தெரிகிறது.

(*h*) வான்மீகர் தீபசூத்திரம்.

VĀNMĪKAR DĪPASŪTTIRAM.

Foll. 185*a*—186*b*.

It is stated here that, by observing the nature and colour of the flame of a lamp held before the face of a sick person, it would be possible to predict whether he would live or die.

Complete :

Beginning :

வான்மீகர் அருளிச்செய்த தீபசூத்திரம்.

ஏத்திய தீபந்தன்னை யேந்தியே முகத்திற்காணச்
சூத்திரந்தன்னைக் கேளீர் தூயநாசிகையில் வைத்து
நாற்றிசை யறியவோத நன்மையாய்ப் பிழைக்குமாறும்
மாற்றியுமுனி வான்மீகர் வகுத்தனர் சகத்திற்றானே. (க)
காந்திய தீபந்தன்னைக் கமலமா முகத்தினேரே
ஏந்தியே பார்க்கும் போதிலிடத்தினிற் கொழுந்துசாய்ந்து
சூழ்ந்திடும் புகையினோடு சுற்றியே நடுக்குமாகில்
தோய்ந்து நாமறியச் சொன்னோஞ் சுருக்கினிலன்றுசாவே. (உ)

* * * *

End:

முந்தின தீபந்தன்னை முகத்திடை நேரே தூக்கி
இந்திரன் கொலுவைப்போல வேந்தியே பார்க்கும்போது
சந்திரவளையம் போலச் சத்துவ குணத்தேநின்றால்
மந்திரமருந்து செல்லும் வரிசையாய்ப் பிழைப்பர்தாமே. (ம)
வான்மீகர் அருளிச்செய்த தீபசூத்திரம் முற்றும்.

உறுப்புச்சூத்திரம் கவி (ம), அடிதலை கயிற்றுச்சூத்திரம் கவி (ம), மணிக்கடை கயிற்றுச்சூத்திரம் கவி (உக), பலவிரற்சூத்திரம் கவி (ரு), தீபசூத்திரம் கவி (ம), ஆகக் கவி (சுமச).

(கு-பு.)—

இந்தநூல், மங்களகரமான தீபத்தை ஏற்றிக்கொண்டு பிணியாளரது முகத்திற்கெதிரே பிடித்தால் தீபச்சுவாலை இன்னன்ன பக்கத்திற்சாய்ந்து சிவப்பு வெளுப்பு,பொன்நிறம் முதலியவர்ணங்களோடுகூடி இருப்ப அதன் பயனாக அப்பிணியாளர் இத்தனைநாள் ஜீவித்திருப்பர்; இத்தனைநாட்குள்ளாக இறந்து விடுவர் என்று விளக்குவது, மிகவும் அரிதானது. வான்மீகர் இயற்றியது.

(*i*) சிவ வாக்கியர் நாடிசூத்திரம் (குணவாகடம்).
ŚIVAVĀKYAR NĀḌI SŪTTIRAM (GUṆAVĀKAṬAM).

Foll. 187*a*—197*b*.

On the three humours of the body Vāta, Pitta and Ślēṣma and on the effects produced consequent on the preponderance or otherwise of one or other humour in the body.

In the beginning, it is stated that the author of the work is Śivakkiyar.

Complete:

Beginning:

விநாயகாயநம: ஸ்ரீதேவிசகாயம்.
சிவவாக்கியர் அருளிச் செய்த நாடிசூத்திரம்:
(குணவாகடம்.)

வாதமான தேவனே யாதியாக நின்றவன்
வாதமான தேவனே வையகமமைத்தவன்
வாதமான தேவனே[ம](ய)று தொழில் வகுத்தவன்
வாதமான தேவனே வண்மைகண்டு கூறுமே. (க)

வன்னியோர் மிகுத்தவன் வரையெழுந்த மாருதி
தன்னையொத் திருககவே சமத்திலே மிகுத்தவன்
மின்னையொத்த காமகாரன் தன்னிலே மிகுத்தவன்
தன்னையொப்பி மெச்சிலான் சமர்த்தன் பித்தராஜனே (உ)

ஐயமான தேவனே யனுதியாக நின்றவன்
ஐயமான தேவனே யறுதொழில் வகுத்தவன்
ஐயமான தேவனே பைபவே நகைததவன்
ஐயமான தேவனே யறிந்துணர்ந்து கூறுமே. (ஙு)

வாதபித்த சே[ற்று](த்து)ம மருவியொக்க வோடிடில்,
ஆசைமிக்க சிவனுர் அலங்காித்து நின்றிடும்
வாசமுற்ற வாதமும் மனமிகுத்த பித்தமும்
சூசியொக்க நின்றிடில் சுரோண மிகுத்தபித்தமே. (௪)

End:

ஓடுகின்ற வாதமு முற்ற பித்த வையமும்
ஓசைகொண்ட போதிலேயுலாவி நின்ற பித்தமும்
கூடுகின்ற ரக்தமாங்கிஷங் கொதித்தெழுந்தங்கேறியே
குறைந்துநின்ற நாடியின் கொள்கை கண்டபோதிலே
ஆடுகின்ற பித்தமுமசைந்தபோது வையமும்
ஆதியான நாடியோடம(ர்)ந்திடும் பரிசிலே
வாடுகின்ற வாய்விஞ்ஞையா லு மூன்று மொன்றதாய்
மாயமான காலதூதன் வருவதான காலமே. (௩0)

அந்தவுந்தி தன்னிலே யமைந்தெழுந்த மூலமாய்
ஆதியான மூலநாடி யம(ர்)ந்திடும் பரிசிலே
வந்தடுத்தவப்புவின் வண்மை கொண்டவாதமும்
வன்னியை யெழுப்பியே வளைந்தடுத்த போரிலே
சந்து சந்து வோங்கியே தடம்புனல் சுழியிலே
சண்ட மாருதத்திலே சடங்கறுக்கும் போரிலே
வந்து வந்துதாவியே மாருதப்புனலினுல்
அசைவுகொண்ட காலதூதன்வருவதான காலமே. (௩௧)

முற்றும்.

(கு-பு.)—

இந்தநூல், வாத பித்த சிலேட்டுமங்களது குணங்களையும் அவற்றின் ஏற்றதாழ்வு சமத்துவங்களினுல் ஏற்படும் குணகுணங்களையும் மிக அருமையாகச் சொற்சுவையுடன் விளக்குவது ; இயற்றியவர் சிவவாக்கியர் என்று இதன் தலை யேட்டினுல் தெரிகிறது. இச்சிவவாக்கியர், நந்திதேவர் மகளுராய் ஒருகாலத்துத் திருமூலனுராய் மாறிய சிவவாக்கியரோ ? அன்றோ ? தெரியவில்லை.

(j) திருமூலர் வாகடம்.

TIRUMŪLARVĀKAṬAM.

Foll. 198*a*—204*a*.

In the beginning, the name of the author is given as Tirumūlar.

A medical treatise dealing with conception, and the development of foetus in the womb, the ten tubular vessels of the human body which are believed to be the principal channels of the vital spirit, the nature and characteristics of the five elements, etc.

Complete.

காரணமாய்ச் செந்தூரம் பற்பம்லேகியங்
கருவானதைலமொடு கிருதமுமெண்ணெய்ச்
சூரணமாக்கிராணமொடு கலிக்கம் மாத்திரை
சுளுக்கு குருநாடிமுதல் சொன்னேங்காணே. (க)

கரிமுகனடியை வாழ்த்திக்கைதனில் நாடிபார்க்கில்
பெருவிரலங்குலத்தில் பிடித்தடி நடுவே தொட்டால்
ஒருவிரலோடில் வாதம் உயர் நடுவிரலில் பித்தம்
தெருவிரல் மூன்றும் பின்னுஞ் சேட்டும நாடியாமே. (உ)

ஆகியநாடி மூன்றுமெழும்பிடில் சன்னியாகும்
வகினிலன்னங்கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய யாமையட்டை யிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்பு பொல்லாத சேட்டுமந்தானே.

* * * *

தானெனவுலகத்துள்ளே தயங்கிய நாடி பார்க்கில்
வானெனுமின்னே கேளாய் வரும்புலன் சொல்லக்கேளு
நானெனும் புருடர்க்கெல்லாம் நாடிதான் வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திடம் பெறவிடக்கைபாரே. (௱௧)

நாடி முற்றும்.

* * * *

End:

சூழ்கவே வியாதியெல்லாங் கடலே புக்கு
முக்கியமாய் அகத்தியர்க்குச்சபந்தான் பண்ணு
நெகிழவே தியானமது வெந்நேரமும் பண்ணு
நேரான தேவியைத்தான் தியானம் பண்ணு
திகழவே சிவன்தனையே பூசைபண்ணு
நேராக வியாதியெல்லாந் தவறுண்டேபோம்
மகிழவே யிருந்திடாமல் வைத்தியஞ் செய்தானாகில் ?
வையகத்திலொப்பாரு மீசன்தான்முற்றே (௱௬௬

முற்றும்.

ஏவிளம்பி ஞு ஆடி ௴ ௰௬௨ சுக்கிரவாரம் ஏகாதசி மிருகசீரிடம் கன்யாலக்கினத்தில் எழுதி நிறைந்தது ம. வே. முத்துஸ்வாமி ரத்னச்சுருக்கம்
ஸ்ரீரங்கநாயகர் பாதமே துணை.

(கு-பு.)—

இவ்வகத்திய வைத்யரத்னச்சுருக்கம் என்னும் நூல் முந்நூற்றறுபது செய்யுட்களான் அமையப்பெற்று அரிய பெரிய செந்தூரவகை பற்பவகை இலேகியவகை தைலவகை கிருதவகை எண்ணெய்வகை பலசூர்ணவகை ஆக்கிராணவகை கலிககவகை மாத்திரைவகை இன்னோன்ன பல விஷயங்களையும் உணர்த்துவதோடு கையில் நாடிபார்க்கும் விதத்தையும் அறிவுறுத்துவது. ஆரம்பத்தில் உள்ள செய்யுடகள் முப்பத்தொன்றும் " அகத்தியர் நாடி நிதானம் " என்ற பெயரான் அச்சிடப் பெற்றுள்ளன. மிகுதியான பாகமும் அச்சிட்டிருக்கலாம் என்று தோற்றுகிறது முற்றும் உள்ளது.

(b) அகத்தியர் பாலவாகடம் (ள).
AKATTIYAR BĀLAVĀKAṬAM (100).

Foll. 97a—118a. Fol. 118b is blank.

Deals with the various ailments and diseases which affect young children and with the preparation of suitable medicines for curing these diseases.

Beginning:

அகத்தியர் பாலவாகடம் : காப்பு :

திருமகள் சோதியாகுஞ் செகதல வல்லிமாது
மருமகளவளேயுந்தி மவுனத்தில் நந்திதோ[ண](ன்ற)
கருவதுநாமே சொல்வோங் கண்டத்தைவிண்டிடாதே
பருவமாம்பிள்ளைகட்குப் பட்சியின் தோடத்துக்கே. (க)

பட்சியின் தோடம்மூன்று பண்பான கணங்களெட்டு
உச்சியின் தோடம்மூன்று உகந்ததோர் மாந்தமெட்டு
மச்சமா மச்சிரமெட்டு வளர்நாக்கு முள்ளுமொன்று
வச்சமாம் நோவுவந்தால் வசமுடனுரைக்கக் கேளே. (உ)

வசம்புடனே மயிலிறகு சாம்பலாக்கி
வசமாக வேப்பீர்க்கில் முலைப்பால்வார்த்துக்
கசமாக நருக்கியதன் ரசத்தைவாங்கிக்
காலமே தினமுமொரு குளி(யுங்)கூட்டி
திசமாகச் சீரகமுங் கிரும்புஞ்சேர்த்து
திர்ணயமாய் திம்பவித்து மேலேதூவி
வசமாகவே யிதனை யருந்த மாந்தம்
வலிகளாறும் பொருமலொடு வாந்திபோமே. (ஈ)

செங்கிரந்தி கிரேகஞ்சிகப்பாங் கருங்கிரந்தி
பொங்குமிடறு கட்டிப்போம்—நங்காய்கேள்
பேய்போலச்சீறியழும் பெருத்த பட்சிதோஷம்
நீர்ப்பாலை தோடத்தை நேர். (க)

நேருய்த் திடுக்கிடுமே நின்றபுள்ளுதோடம்
வாருய்க்கனியும் பச்சையாகும்—நாருய்கேள்
அளிதோடங் கால்பின்னு மாகுமது வாந்திக்
குளிதோட மாமென்று கூறு. (உ)

* * * *

End:

* * * *

பொன்னுங்காணி வேருடனேபுளியனுர்க்கு வேப்பீர்க்கு
மின்ன வேரிரடியதனை விதமாங்கோழி யவரையின்வேர்
சொன்னேம்பல மே யரையதனில் துள்ளக்கருக்கி யெண்ணெய்விட்டு
உண்ணு பானுப்புடன் வைத்துவோடுங் கணமும்வாராதே. (கஈ)

நல்லவெல்லம் பழந்தண்ணீர் நாழியில்
வல்லபாதி பட்டை மகிழ்ந்துண்ண
தொல்லைவாரி சுவாரிவிடும் நீரிழிவு
இல்லையில்லை இராமன் கைபாணமே. (க)

கண்டசுக்கு கடுகொடு பேய்ப்பொடல்
விண்டதேக்கு மிகு கொத்தமல்லியுங
கொண்டநீரில் குறிக்கிக குடிப்பிராய்
அண்டவாய் வரோசிகந் தீருமே. (உ)

(கு-பு.)—

இந்த வைத்யநூல குழந்தைகளுக்கு ஏற்படும் பட்சி தோடங்கள் மூன்று, கணங்கள் எட்டு, உச்சிதோடம் மூன்று, மாந்தம் எட்டு, அச்சிரம் எட்டு, உள்நாக்கு வளர்தல் ஒன்று ஆகிய இவைகளது குணங்களையும் விரிவாகச் சொல்லி அவையிறறை நீக்கும் மருந்துகளையும் கிஷாய வகை இலேகிய வகைகளையும் உணர்த்துவதோடு மஞ்சட்காமாலை முதலிய பல பிணிகளையும் தெளிவாக உணர்த்துவது. அகத்தியர் பாலவாகடம் நூறு (செய்யுள்) எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. முதலில் வந்துள்ள எட்டு பாக்களும் அசசில் வந்திருககின்றன.

(c) அகத்தியர் பாலவாகடம இருபத்தொன்று.
AKATTIYAR BĀLAVĀKAṬAM IRUPATTONṞU.

Foll. 119*a*—125*b*.

Similar to the above.

The author of the work appears to be Ahattiyanār living in Potihai.

Complete.

Beginning:

ச[ற](ாா)ணமே குருவாழி தன்னைப்போற்றித்
தாள்பணிந்து அறிவுடனே மிகுந்துபாரு
காரணமே வாயுவினல் [நீர்ச்சல](ரச)ங்களாகிக்
கனமான ரசமதுதான் சுரோணிதங்களாகித்
தாரணமாய்ச் சுரோணிதத்தால் சுக்கிலங்களாகித்
த[ளை](ழை)த்துதப்பா உலகத்துள் தையல்தேடி
வாரணியுங் கொங்கைமயில் [மு](மி)ன்னுள்வந்து
மகிழ்ந்திருந்து வொருமணியாய வாங்கினளே. (க)

வாங்கினள் வைத்திருக்க இடமங்கேது
மயிர்நுனிபோற் சுழியுண்டு வதிலேசிக்கித்
தேங்கினள் (நா)தவிந்தா விரண்டுங்கூடித்
திரண்டதப்பா குமிழ்போலே பிண்டமாச்சு
தூங்கினள் மிகுந்தாசை சிங்காரங்கொண்டு
சுகித்திருந்தா ளசனத்தால் இனிப்பினலே
ஏங்கின ளினிப்பதற்கும் புளிப்பதற்கும்
இதமான வகைபுசித்தா ளின்பமாக. (உ)

* * * *

End :

கூட்டுவெள்ளை சாட்டரணைவேர் கொத்தான்வேர்[தான்]
 கோவைதயரே யேழுவகை பலமிரண்டா[க]ய்
ஈட்டுநற[ு](றுமாமண)க் கெண்ணெய்நாழி [சமூறு]சேர்த்து
 ஏலஞ்சீரக மிரண்டு ரோகணிக்காயுந்
திட்டுவகை பலமிரண்டு பொடித்துப்போட்டுத்
 தீயெரித்து மெழுகாக்கிக் காசிடையேவாரு
மூட்டோடே யோடுமடா வலியைந்துந்தான்
 மூன்றுநாள் பத்தியந்தான் முனைந்துபாரே. (உக)

முற்றும் :

(கு-பு.)—

இந்த அகத்தியர் பாலவாகடம் என்னும் நூல் குழந்தைகளுக்கு ஏற்படும் பல பிணிகளது வகையினையும் அதைத் தீர்க்கும் மருந்து வகையினையும் எளிதாக விளக்குவது ; அச்சியற்றப் பெற்றிருக்கிறது. நூலாசிரியர் அகத்தியனார் என்றிருப்பினும் பொதிகையில் வசிக்கும் அகத்தியனார் அன்று என்பது செய்யுட்களது நடைப்போக்கினாலேயே தெரிகின்றது.

(*d*) அகத்தியர் எழுவகைத்தோற்றம்.
AKATTIYAR EḺUVAKAITTŌṞṞAM.

Foll. 127*a*—129*b*.

A treatise attributed to Ahattiyar in which he says that a man may be judged by his qualities and actions as coming under one or other of the seven categories, viz., Dēvas, human beings, beasts, birds, matter, reptiles, water animals.

Complete.

Beginning :

அகத்தியர் அருளிச்செய்த எழுவகைத் தோற்றம்.

நலந்திகழுந் தேவர்களு மனிதராவர்
 நாடறிய மனிதர்களு மனிதராவர்
விலங்கினொடு பறவைகளு மனிதராவர்
 மிக்கமுள்ள தாபரமு மனிதராவர்
நிலந்தனிலே யூர்வனவு மனிதராவர்
 நீர்வாழுஞ் சாதிகளு மனிதராவர்
குலங்கள்தனை யின்னதென்று கூறுவென்றாற்
 குணங்களினு லவர்குலத்தைக் கூறலாமே. (க)

வானவரே கற்புடைய வராகி வாழ்வர்
 மனிதரே மனிதர்குண மாகி வாழ்வர்
ஆனகுலம் விலங்காகி யகந்தை யாவார்
 அகிலெடுத்துப் பறவைகளு மகன்றுபோகும்
ஈனமில்லாத் தாபரங்கள் விவேகமறியார்
 இடுவாரை யிகழ்ந்துரைக்கு நீரில்வாழ்வார்

மானமின்றிக் கையிரப்பா ரூர்ணையாகும்
வகுத்திந்தக் குலத்தொழில்கள் வகுத்தவாறே. (உ)

* * * *

End :

ஈனரெனுஞ் சிறியரெனும் பெரியரெனு
மிருநிலத்தி லருளுடைய குருவந்தெய்தில்
வானமெல்லாஞ் சென்றவர்தம் மடியிற்சார்ந்து
வன்னியெனக் குபதேச மருளவென்ன
ஆனபுக ழுபதேசஞ் செய்துவம்மா
அரனயன்மா லறியாத வருளுந்தந்து
ஞானமெனு மெழு[(பிற)]விக் கடலைநீக்கி
யும்பர்தொழு மின்பந்தேறி யுரைப்பர்தாமே. (ம)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் உலகத்திலே மனிதர் தாம் தேவர், மனிதர், விலங்கு, பறவை, தாவரம, நிலத்தூர்வன, நீர்வாழ்வன ஆகிய இவ்வெழுவகைத் தோற்றத்தையும் உடையவராகவிருப்பர் என்றும், அங்ஙனமிருப்பதையும் அவரவர் தொழில்களாலுங் குணங்களாலும் மிகத் தெளிவாக உணரலாம் என்றும் சொல்லிப்போந்து அக்குணங்களையும் தொழில்களையும் விரிவாக அறிவுறுத்துகிறது. பத்துச செய்யுட்களான் ஆகியது. அகத்தியர் நூலாசிரியர் எனத் தெரிகிறது. இது மூவருடக் காடலாக்கு 334(j) டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1240 ஆகிய இந்நம்பாகளில் 'எழுவகைத் தோற்றம்' என்ற பெயரால் வெளிவந்துள்ளதேயாகும் :

(e) பாலாம்பிகையகவல்.

BĀLĀMBIKAIYAKAVAL.

Foll. 130*a*—134*b*.

A eulogy on the goddess Bālāmbika, a manifestation of Śakti. The work is similar to the work described under R. No. 280 (*h*) ante. In the beginning and end, there is a note to the effect that the work is by Śaṅkarācārya.

Complete.

Beginning :

சங்கராசாரியர் பாலாம்பிகையகவல். குருவே துணை.
ஓம் அர ஹரா சிவசிவா
மூலத் தெழுந்த மூர்த்தியானவளே
ஞாலம் படைத்த ஞானக்கொழுந்தே
நான்முகன் வடிவாய் ஞாலத்தெழுந்து
வானுலகெங் கும்வகை வகையானாய்
கரியமா லென்னுங் காட்சியுமானாய்
உரியதோ ருத்திரனாகி யுவந்தாய்
மயேசுவர னென்னும் வடிவுமானாய்
தயாநிதி யென்னுஞ் சதாசிவமணியே.

* * * *

End:

காத்தெனை யாளக்கட னுனக்கேபாரம்
திரிபுர சுந்தரி காமக்கோட்டி
தீனதயாளு திவ்விய சொரூபி
ஆட்சியான வம்பி கைபுந்தன்
காட்சி கொடுக்குங் கருணை
நமஸ்தே நமோஸ்த்து.

சங்கராசாரியர் பாலாம்பிகை யகவல் முற்றும்.

(கு-பு.)—

இந்த நூல் பாலாம்பிகையின் தோத்திர ரூபமாய் அமைந்தது. சங்கரா சாரியர் இயற்றியதாகத் தெரிகிறது. இது மூவருடக் காட்லாக் 280 (*h*) நம்பர் பிரதிபோன்று சிறிது பிரதி பேதத்துடன் காணப்படுகிறது. அங்குப் "புவனேசுவரியகவல்" என்றிருக்கிறது. இறுதியில் இந்தத் தேவதைக்குரிய சக்கிரம் ஒன்றும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதற்கடுத்த (135, 136) ஆய இரண்டேடுகளில் வைத்ய விடயமாய் "உளமாந்தை மறைப்பு விவரம்" என்று அரும்பதப்பொருள் உரையொன்று எழுதப்பெற்றிருக்கிறது. ஆகவே அதற்கு "வைத்ய மறைப்பு விவரம்" என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது.

R. No. 942.

Palm-leaf. 9¾ × 1⅛ inches. Fol. 181. Lines, 7—8 on a page. Tamil Injured. Old.

Purchased in 1927-28 from M.R.Ry. C. V. Jambulingam Pillai Avargal, Mylapore Madras.

(*a*) புலிப்பாணி சாலத்திரட்டு இருநூறு.
PULIPPĀṆI JĀLATTĪRAṬṬU IRUNŪṚU.

Fol. 1*a*—52*b*, 53a—57b are blank.

In this work, Pulippāṇi who calls himself as the blessed disciple of Bhōgar, explains several kinds of magic and describes the processes for successfully exhibiting those magic before the public. From the 8th stanza in the Pāyiram, it is made out that the author composed another work entitled 'Palattiraṭṭu.'

Complete.

Beginning:

புலிப்பாணி முனிவர் அருளிச்செய்த
சாலத்திரட்டு இருநூறு.
காப்பு—பாயிரம்.

சத்தியே தயாபரியே ஞானரூபி
சாம்பவியே மனோன்மணியே கபாலிரூபி

முத்தியே வேதாந்தி பரையேயம்பாள்
முக்குணமே முச்சுடரே மாயாவீரி
வெத்தியே மூவருக்கு மருளாய்நின்ற
வேணியே சாமளையே பொன்னெமின்னே
சித்தியே சாலமிரு நூறும் பாடல்
சின்மயமாம் கணபதிதாள் காப்பாம் பாரே. (க)

பாரப்பா ஜாலமொடு சல்லியமொட்டியம்
பாங்கானதோட்டியந் தோட்டவசித்து
சாரப்பா நொடியானு மொடியானவித்தை
சார்வான கிரிகருணை யொட்டாரந்தான்
காரப்பாசித்து லட்சங்கல் சடாவித்தை
கருவான கக்கிஷமும் பஞ்சபட்சி
வாரப்பா சீனிவித்தை மாந்திரீகம்
வளமான படுபட்சி கைவல்லியமாமே. (உ)

ஆமப்பா பேர்வண்ணன் கேசரீயதீதம்
அடைவான வட்டகர்மம் வினோதங்காருடம்
தாமப்பா தண்டகமல பேனமுஞ்சிப்பி
தயவான யக்ஷிணியுந்தர்க்க சாத்திரம்
போமப்பா பட்சிணி தட்சிணியுங்கூடப்
புகழ்பரதஞ்சோதிடங் காவியத்தினோடு
நாமப்பா வைத்தியத்தோடி லக்கணந்தான்
நல்லசூடாமணியுந்தானின்னுங்கேளே ? (௩)

கேளடாசித்திராரூடங் கன்னங்
கணிதமாய்ச்சிமிழ்வித்தை கம்பிசூத்திரம்
சூளடா சூனியமுந் திறவுகோலுஞ்
சுகமான மந்திரமுநறுக்குச்சல்லியம்
வாளடா மதனநூல் சாத்திரந்தான்
வளமான பெருநூற் சல்லியமதாகும்
தாளடா விருப்பென்ற கடலையப்பா
தயவாகமலைதிகண்டு சொல்லக்காணே. (௪)

*   *   *   *
*   *   *   *
*   *   *   *

End :

ரசமணி.

பாடியே ரசம்பத்து சுத்திசெய்து
பண்பான நாகத்தின்வாயில் வார்த்து
ஆடியேமுப்பூவுங் கழஞ்சிபோட்டு
அடைவாகக் கட்டிநீ மேலேதூக்கு
கூடியேயதன்கீழே பானைவை [நீ]ப்பாய
கொற்றவனே பாம்பழுகி வீழும்பாரு
நாடியே ரசங்கட்டி மணியாய்ப்போகும்
நாயகனே வேதைமுதல் வசியமாமே. (உ௱க)

ஆமேநீகெந்தியிட்டுச் செந்தூரித்தாற்
அப்பனே நவலோகந்தன்னில்வேதை
வாமேநீஇருநூறு மிந்திரஜாலம்
வளமானகண்ணாடி போலேதோற்றும்
தாமேநீநவரத்நங் கோத்தாற்போல
தரணிதனிற்றான் விளங்கும் புலிப்பாணிதானும்
தாமேநீபோகருடை கடாட்சம்பெற்றேன்
நலமானசால மிருநூறுமுற்றே. (உ00)

முற்றும்.

புலிப்பாணி முனிவர் சாலத்திரட்டு இருநூறு முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் பல சாலங்களை நுதலும் சாலநூற்களைச் சார்ந்தது. போக முனிவர் தம் சீடராகிய 'புலிப்பாணி முனிவர்' இயற்றியதாகும். இவர் தாம் ஒவ்வொரு சாலத்தையும் உணர்த்தும்போது செய்யுளின் இறுதியில் 'போகருடைய கடாட்சம் பெற்ற புலிப்பாணி' என்று தம்மைச் சிறப்பித்துக்கூறு கிறார். அன்றியும் இதிற்கூறும் அரியபெரிய சாலங்கட்குச் சாதனமாம் ஐங்கோலத்தைலம் ஒன்றை "வீரடாபல திரட்டில் ஐங்கோலந்தான் விளம்பினேந் தைலத்தையெடுத்துக்கொண்டு" என்ற பாயிரத்தின் எட்டாஞ் செய்யுள் இரண்டாமடியிலே கூறுவதால் இவர் 'பலதிரட்டு' என்ற நூலொன்றும் இயற்றியதாகத் தெரிகின்றது. நூல் செய்யுட்டொகை இருநூறும் இதில் உள்ளன. 53—57 ஏடுகள் வேற்றேடுகள்.

(b) புலிப்பாணி முனிவர் சிதம்பர சக்ரபூசை இருபத்தைந்து.

PULIPPĀNIMUNIVAR CIDAMBARACAKRAPŪJAI IRUPATTAINTU.

Fol. 58a—64b. Fol. 65 is left blank.

On the mode of drawing and worshipping the Cidambaracakra which is considered to be of great help in performing magic and in curing diseases. By the due disposition of certain mystic letters in the various parts of this Cakra or diagram, it is considered possible to overcome one'ss enemie in various ways.

Beginning :

ஸ்ரீதேவிசகாயம் : புலிப்பாணி முனிவர் அருளிச்செய்த
சிதம்பரசக்கிரம் இருபத்தைந்து,
காப்பு.

அத்திமுகன்றனை யளித்த வரனேகாப்பு
அகிலமெங்கும் நிறைந்துநின்ற வருளேகாப்பு
முத்திதரும் வேதாந்த முதலேகாப்பு
முப்புரத்தைத் தகித்தெரித்த பரனேகாப்பு

சத்தியொரு பாகம்வைத்த வரசேகாப்பு
சஙகரனே யம்பரனே ஞானமூர்த்த
வெற்றியாஞ் சிதம்பரத்தின் பூசைமார்க்கம்
விளம்புகிறேன் கணேசனுடை பாதம்காப்பே. (௧)

சக்கிரம்.

காப்பான ஆறுவரை குறுக்கேகிறிக்
களங்கமில்லா ஆறுவரை நேரேகிறி
ஆப்பானவிருபத்தைந்தறையுமாச்சு
அடைவான மூலைதோறுஞ் சூலம்போடு
தாப்பான முதலறையில் நாலுகோணந்
தயவானநகாரமொடு அகாரங் கூட
வாப்பான ஐயோடு வகாரந்தானும்
வளமான லக்கமது பத்துமாமே. (௧)
ஆமப்பா வடுத்தறையிற் பிறைதான்கோணம்
அடைவான மகாரமொ டிகாரங்கூட
தாமப்பா கிலியோடு வகாரந்தானுந்
தயவான லக்கமது பதினெட் டாகும்
வாமப்பா வடுத்தறையின் முக்கோணந்தான்
வளமான சிகாரமொ டொகாரந்தான்
நாமப்பா சவ்வுடனே நகாரந்தொட்டு
நலமான லக்கமது பதினொன்காமே. (௨)
ஆமடா விதனருகே யறுகோணந்தான்
அடைவானவகாரமொ டேகாரந்தான்
தாமடா ஸ்ரீமுடனே யகாரங்கூடத்
தயவாக லக்கமது ஆறும்பாரு
வாமடா விதனருகே வட்டம்போடு
வளமான யகாரமொ டோங்காரந்தான்
நாமடா ஹரிஹமென்று நாட்டி
நலமான வகாரமொ டிலக்கமூன்றே. (௩)

* * * *

பூசித்த ஞானமது தொண்ணூற்றாறு
புங்கமுடன் பலதிரட்டு நூறுமாகும்
ஆசித்தேன் கொக்கோகம் நூறுபாதி
யப்பனே சாலம திரண்டுநூறு
வாசித்தேன் சோதிடந்தான் முந்நூறாகும்
வளமான வைத்யமோ வைந்நூறாகும்
வீசித்தேன் சண்முகத்தின் பூசைமார்க்கம்
விதமாக முப்பதிலே விளம்பினேனே. (௰௧
விளம்பினேன் சிமிழிவித்தை யிருபத்தைந்து
விதமான தேவியுடை பூசைமார்க்கம்
தளும்பவே யிருபத்தோ டொன்றினுள்ளே
தயவாகச்சொல்லிவைத்தேன் நன்றாய்ப்பாரு
கிளம்பவே சிதம்பரந்தான் இருபத்தைந்து
கெட்டியாய்ப்பாடினேன் உகந்து—ாரு

வளம்பவே போகருடை கடாட்சத்தாலே
வளமான புலிப்பாணி பாடினேனே. (உ௰)

* * * *

ஆமடா விறையாறு வீசமாகும்
அப்பனே பணிரண் டரைக்காலாகும்
தாமடா மூவெட்டுக் காலேயாகும்
தயவாக விதிவிரட்டி யரையேயாகும்
வாமடா விதிவிரட்டி முழுதென்பார்கள்
வளமான கனமப்பா நெற்கனந்தான்
நாமடா வீசமது ஒருநெல்லாகும்
நலமான சிதம்பரத்தின் பூசைமுற்றே. (உ௫)

(கு-பு.)—

இது, வைத்யம் ஜாலம் முதலியவற்றைச் செய்வதற்காய்ச் சித்தி பெறுவதற்கு உரிய சிதம்பர சக்கிரம் ' இவ்வகைத்து ' என்றும், அதனை எழுதிப் பூசிக்கும்விதம் இபபடியென்றும் விரிவாகக்கூறிக் கிருதயுகத்திலே பிரம்மாவும், திரேதா யுகத்தில் கௌசிகமாமுனிவரும், துவாபரயுகத்திலே போகநாதரெனுஞ் சித்தரும், கலியுகத்திற் புலிப்பாணி சித்தரும் இந்தச் சக்கிரத்தைப் பூசித்து வெகு சித்திபெற்றார் என்று பதினெட்டாஞ் செய்யுளால் உணர்த்துகிறது. முற்றுமுள்ளது. அன்றியும் இதில் நூலாசிரியர் புலிப்பாணிமுனிவர் தாம் இயற்றிய ஞானம் ஜாலம் வைத்தியம், கொக்கோகம், தேவிபூசை, சண்முகபூசை இன்னோரன்ன பலவிடயமான நூற்களும் அவற்றுள் செய்யுள் தொகை இத்துணைத்து என்றும் 18—20 ஆகிய மூன்று செய்யுட்களால் உணர்த்துகின்றார்.

இந்தச் சிதம்பர சக்கிரம் என்பதைப் பல சித்தர்களும் கையாண்டு இருப்பதாகத் தெரிகிறது. வச்யம், மோகனம், உச்சாடனம் மாரணம் இவைகளுக்கு அத்தந்தக் கட்டங்களில் எழுத்துக்களை அடைக்கும்விதத்தையும் மிகத்தெளிவாகக் கூறுகிறது. 65-ஆவது வெற்றேடு.

(c) புலிப்பாணி முனிவர் சிமிழ்வித்தை இருபத்தைந்து. PULIPPĀṆIMUNIVAR SIMIḺVITTAI IRUPATTAINDU.

Fol, 66(*a*)—72.

A treatise in 25 stanzas dealing with the making of certain small caskets having magical and mysterious properties. The authorship is attributed to Pulippāṇi disciple of Bhōgar.

Complete.

Beginning:—

புலிப்பாணி முனிவர் அருளிச்செய்த
சிமிழ்வித்தை இருபத்தைந்து.

காப்பென்ன சிமிழ்வித்தை சொல்லக்கேளு
கருவான மணிக்கழுகின் கருவினாலே
தாப்பென்ன வாண்கழுகு வெள்ளிநாளில்
தான்வதைத்து உயிர்போனவிடத்தில்மைந்தா

ஆப்பெண்ணா வாதித்த மதியந்தன்னில்
　　அடைவாக முப்பலியும் பொங்கலிட்டுச்
சாப்பெனை வத்துவுடன் சுத்திவைத்துச
　　சார்வாகப் பூசைசெய்து சொல்லக்கேளே. (க)

கேளுநீ முதுகெலும்பை யடுக்கடுக்காய்க்
　　கீறியேதா னெடுத்துச் சுத்திசெய்து
ஆளுநீ மூடி யெட்டுச் சிமிழ்தானெட்டு
　　அப்பனே பாக்குபோற் செய்துநீரு
நாளுநீ யதனஸ்த்தி நரமபோடொக்க
　　நலமாகக் கயிறு திரித்துச் சிமிழைக்கோத்து
வாளுநீ சிமிழ்நடுவே துவாரம்போடு
　　மைந்தனே யிதன்பெருமை சொல்வேனபாரே. (உ)

பாரேநீ முதற் சிமிழ்தான் வசியமாகும்
　　பண்பான மாரணந்தான் சிமிழ்தானிரண்டு
வீரேநீ மூன்றப்பா பேதனஞ்சித்தி
　　விதமாக நான்கப்பா தம்பனமே செய்யுஞ்
சீரேநீ யைந்ததுவும் வித்வேஷணந்தான்
　　சிறப்பான ஆறதுவும் உச்சாடிக்கும்
தீரேநீ யேழப்பா மோகனஞ்சித்தி
　　திறமான வெட்டதுவு மழைக்கும்பாரே. (௩)

பாரேநீ வசியமப்பா அங்கென்றூன்று
　　பண்பான மோகமப்பா மங்கென்று நாட்டு
வீரேநீ யழைப்புக்கு வங்காம்பாரு
　　விதமாகத் தம்பனத்திற்கு நங்கையூன்று
கூறேநீ சாடணந்தான் வங்கேயாகுங்
　　குணமான பேதனத்திற்கு யங்கென்றோது
தீரேநீ வேஷணந்தான் நங்கேயாகுந்
　　திறமான மாரணந்தான் சிங்கைக்காணே. (௪)

End :

சித்தியிலெட்டசித்து மாடவென்றால்
　　சிமிழெட்டுங் கருத்தொட்டுத் திறந்துமூடு
வெற்றிபெறத் திசையெங்குஞ் சிமிழ்தான்வித்தை
　　வெல்லலா முனக்கெதிரியில்லை யெங்கும்
புத்தியிலே யறிநீ வெளிவிடாதே
　　பொல்லாத பாவிகளுக்கீந்திடாதே
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
　　சார்வாகப் போகருடை கடாட்சந்தானே. (உ௯)

தானென்ற நூற்றொருகைதான் சொல்லக்கேளு
　　தயவான வைத்தியந்தான் ஐஞ்ஞூறோடு
மானென்ற சோதிடமுஞ் சாலமப்பா
　　மைந்தனே கொக்கோகம் பலதிரட்டு ஞானம்

தானென்ற சிதம்பரமுந் தேவியப்பா
    தனதாகச் சண்முகத்தின் பூசைவாடை
வானென்ற முன்யுகத்தில் தண்டபாணி
    மன்னவரைப் பூசித்தார் பிரமன்தானே. (உச)

தானென்ற சித்தர்க்குள் போகநாதர்
    தயவினால் புலிப்பாணி பூசித்தேன்பார்
கோனென்ற போகருமே மகிழ்ந்துமைந்தா
    குற்றமற்ற காதணிகள் சிறிதுமீந்தார்
நானென்று அவருடைய கடாட்சத்தாலே
    நாமிருந்தோங் கிரிதனிலே மகிழ்வாய்த்தானும்
தேனென்ற சிமிழ்வித்தை யிருபத்தைந்திற்
    திறமாகப் பாடிவைத்தேன் சித்திமுற்றே. (உரு)

புலிப்பாணி முனிவர் சிமிழ்வித்தை முற்றும்:

(கு-பு.)—

இந்த நூல், மணிக்கழுகுகளில் ஆண்கழுகை வெள்ளிக்கிழமையிற் கொன்று பூசைசெய்து நைவேத்யம் முதலியனவும் இட்டு முதுகெலும்பைக் கொண்டு எட்டுச் சிமிழும் எட்டுமூடியும் பாக்களவு செய்துகொண்டு நரம்பினால் கயிறுதிரித்துக் கோத்துவைத்து வசியம் மாரணம் தனசித்தி தம்பனம் வித்துவேஷணம் உச்சாடனம் மோகனம் அழைத்தல் ஆகிய இவ்வெட்டுக் கிரியைகளையும் மந்திர மோதிச்சிமிழ்களை மூடித்திறந்து அதற்குரிய மூலிகைகளைக்கொண்டு செய்யும் அருமையான வித்தையை உணர்த்துவதால் 'சிமிழ் வித்தை' என்று பேர்பெறுவதாயிற்று. போகரது மாணவர் ஆய புலிப்பாணி சித்தர் இயற்றியது. இருபத்தைந்து பாடலால் அமைந்துள்ளது. கடையகத்து இந்நூலாசிரியர்தாம் இயற்றிய நூற்களுடைய கோவையை உணர்த்துஞ் செய்யுட்களும் உள. அச்சிட்டிருக்கலாம் என்றே தோற்றுகிறது. முற்றும் உள்ளது.

(*d*) புலிப்பாணிமுனிவர் பலதிரட்டு நூறு.

PULIPPĀṆIMUNIVAR PALATIRAṬṬU NŪṞU.

Fol. 73*a*—100*b*.

Same work as that described under R. No. 199 (*e*) ante.

B Pulippānimunivar.

Complete in 100 stanzas.

(கு-பு.)—

இந்நூல், மூவருடத்திய காட்லாக்கின் 199 (e) நம்பர் பிரதி போன்றது. புலிப்பாணி முனிவர் இயற்றியது. நூறு செய்யுட்களால் ஆனது. இதில் முற்றும் உள்ளது. ஆயினும் அது ஆங்காங்குமிகக்கிழிந்திருப்பதால் இந்நூலில் உள்ளவைகளை முழுவதையும் உணர மிகவும் இது, உபயோகமாகியிருக்கிறது அன்றியும் ஆங்காங்குப் பாட பேதத்துடனே இது காணப்படுகிறது இதில் வசியம், மாரணம், வித்துவேஷணம், திருடர்களைப் பிடித்தல் சொக்குப்பொடி, புருஷ வசியம், பெண்கள் வசியம், இன்னோரன்ன அரிய

விஷயங்கள் அடங்கியிருந்தலோடு கடைசியில் இவ்வாசிரியர் தாம் இயற்றிய நூற்களது கோவையுணர்த்துஞ் சில செய்யுள்களும் உள்ளன, இதன் பெயர் அச்சிட்ட புத்தகங்களின் காட்லாக்கில் காணப்படுகிறது.

(e) அகத்தியர் மாந்திரீகம் ஐம்பது.

AKATTIYAR MĀNTIRĪKAM AIMPADU.

Fol. 101—117b.

A work in 50 stanzas dealing with the evil effects of bad deeds a well as the evils caused by witchcraft and with the manner of counteracting these evils.

Complete.

Beginning:

அகத்தியர் அருளிச்செய்த மாந்திரீகம் ஐம்பது.
கர்மங்கள் நிவர்த்தியாக :—

பத்தியுடன் பார்வதி(யை)ப் போற்றிசெய்து
பரிவான குறுமுனிதான் பாரிலோர்க்குச்
சத்தியமா முறைப்பாடு எவல்பில்லி
[சயி](சை)த்தாளுடு தெய்வகுற்றம் சரீரத்துன்பம்
முத்தியெழுங் குணங்குறிகள் நீங்குநேர்மை
முறையென்ன சொல்லென்று [முனி](னே)ந்துகேட்க
வஸ்துவென்ற வுமையவள்தான் மனமகிழ்ந்து
வன்மையுடன் வையகத்து வகைசொன்னாளே. (க)

வகையென்ன பொய்சத்தியஞ் செய்தபேர்க்கு
மாடுகன்று பிள்ளைகள் வலக்கைசேரும்
நகையான கண்ணுகெடு முயிரைப் போக்கும்
நாளிந்தக் குணங்கண்டால் நடுச்சந்திக்குள்
தொகையான மனோன்மணி[யே](யை)ப் பூசைசெய்து
சூத்திரமாய் வைரவன்தான் சக்கிரத்தைச்
சிதையான காரீயத் தகட்டிற்கீறிச்
சிவசிவாவென்றுசொல்லிச் சிரசிற்கட்டே. (உ)

பிசாசின் குணம் :

கட்டடா பிசாசுதான் பிடித்தபேர்க்கு
கால்லகைகள் சோர்வையிடுங் கனவுகாணும்
இட்டமுடன் பெண்களையாண் சுருபமாக்கும்
இனிதாணுனுல் மோகினியேகாணும்
நட்டாவில் வாய்பினத்துங் கருவழிக்கும்
நளிர்ச்சுரமாம் பெரும்பாடாம் நடுக்கம்பித்தம்
முட்டனவே பெண்புருடன் கூடிவாழார்
மூறைகண்டாற் கர்மந்திரும் முனிவுகேளே. (ங)

நிவர்த்தி :

கேளடா பிசாசினுடைப் பலத்தைப் பார்த்துக்
கீறடா பஞ்சாட்சரத்தைக் கிருபையாகத்
தாளிடாக் காரீயஞ் செம்புதங்கம்
தகடெழுதித் தலைக்கழுத்தில் இடையிற்கட்டு

ஆளடா வாண்பன்றி கோழிகாவு
அரி ஐஓ மென்றுவுரு வைந்நூறுபோடு
பாளிடாப் பாவாடைவீரன் காத்தான்
பறக்குமடா பிரம்மராட்சி பரிந்துபாரே. (௪)

* * * *

End :

கரையான வதர்வணத்துக் ஓதுவேயாதி
கண்டகண்ட மந்தரத்தைக் கருதவேண்டாம்
பரையான உமையவ[னே](ளைப்) பணிந்துபோற்றிப்
பார்தனிலே யித்தொழி[லே](லை)யாடிப்பாரு
வரையிட்டுக் குள்ளிருப்போர் உனக்கீடாமோ
மாந்திரீக ருனக்க[டு](டி)மை மகி(ழ்)வாரப்பா
உரைவிட்ட ஐம்பதுடன் முறைதப்பாமல்
உலர்ந்ததோர் துயரம்[னீ](நீ)ங்கி ஊழிவாழ்வார். (௫0)

அகத்தியர் அருளிச்செய்த மாந்திரீகம் ஐம்பதும் எழுதி நிறைந்தது
முற்றும்.

(கு-பு)—

இது மாந்திரீக நூலைச்சார்ந்தது. அகத்தியர் இயற்றியதாகக் குறிக்கப் பட்டிருக்கிறது. ஐம்பது செய்யுட்களால் ஆகியது. முற்றும் உள்ளது. இதில் கர்மங்கள் நிவர்த்தியாகும் முறையும், முறைப்பாடு, ஏவல் பில்லி, இவை முதலாயினவற்றிற்குக் குணங்களும், நிவர்த்தியாகும் முறைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. மாந்திரீகரது இலக்கணமும் இருக்கிறது.

(*f*) அகத்தியர் அட்டகர்ம பஞ்சாட்சரம் பத்து.
AKATTIYAR AṬṬAKARMA PAÑCĀKṢARAM PATTU.

Foll. 118*a*—123*b*. Fol 124 and 125 left blank.

Same work as that described under R. No 168 (*g*) ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல், மூவருடத்திய காட்லாக்கில் 168 (*g*) நம்பரில் வந்துள்ள 'பஞ் சாக்ஷரம்' என்ற நூற்போன்றது. மாந்திரீக நூலைச்சார்ந்தது. அகத்தி யர் இயற்றியதாமெனத் தெரிகிறது. இதிலே பாயிரத்தில் இந்த நூலை இன் னாருக்குக் கூறலாம், இன்னாருக்குக் கூறலாகாது என்று இதன் பெருமை நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. பின்னர் இந்தப் பஞ்சாட்சரத்தைக் கொண்டே அஷ்டகர்ம சக்கிரமும், சிதம்பர சக்கிரமும் எழுதுவித்துப் பூசிப்ப தென்றும், அந்தந்தச் சக்கிரங்களில் எழுத்துக்களை யடைக்கும் வகையும், மோகனம், வச்யம், மாரணம், சூன்னியம் போக்குதல், இவையாய கிரியைகளு

க்கு எழுத்துக்களை மாறியடைக்கும் விதமும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. பத்துபாடல்களால் ஆனது. இதில் முழுவதும் இருக்கிறது. நூல் முடிந்தபின்னர் சிதம்பர சக்கிரமும் அதற்குரிய மந்திரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

(*g*) அகத்தியர் அட்டகர்ம பஞ்சாட்சரம் பத்து.

AKATTIYAR AṬṬAKARMAPAÑCĀKSARAM PATTU.

Foll. 126—129*a*. Fol. 129*b* is left blank.

Same work as the above.

Complete.

(த-ப.)—

இந்த நூல் முன்பிரதி போன்றது. பத்துப் பாடல்களும் இதில் உள்ளன. ஈற்றதாகிய பத்தாவது செய்யுளில் "செப்பினேன் அன்பதற்குள் தெளிந்து முறறே" என்றிருக்கிறது, "பத்துக்குள் தெளிந்தென்று" இருப்பதே நலம் என்று தெரிகிறது; இந்நூலும் பத்துச் செய்யுட்களாலேயே அமைந்திருத்தலால் என்பது.

(*h*) ஊர்வசி இரத்தினச்சுருக்கம் பதினெட்டு.

URVAŚI IRATTINACCURUKKAM PADINEṬṬU

Foll. 130*a*—134*b*.

Same work as that described under R. No. 280 (*w*).

Complete.

(த-பு.)—

இந்த நூல், மூவருடத்திய காட்லாக்கில் 280 (w) நம்பரில் வர்ணிக்கப்படடுள்ள நூல் பிரதியை யொத்தது. யோகவிஷயத்தை யருமையாக விளக்கிப் பீசாட்சர மந்திரங்களையும் உணர்த்துகிறது. ஈற்றுச் செய்யுளில் "நீதி மொழியான பதினெட்டு மிவைமுற்றே," என்றிருப்பதால் "ஏகமாகியிருந்த பராபரம்" என்ற பாயிரச் செய்யுள் அன்னவரிடத்துப் பத்தியுள்ள ஒருவரால் செய்யப்பட்டிருக்கலாம்; நூற்செய்யுள் பதினெட்டும் இந்தப் பிரதியில் இருக்கின்றன.

(*i*) இராமதேவர் பரிபாஷை பதினெட்டு.

IRĀMADĒVARPARIBHĀṢAI PADINEṬṬU.

Fol. 135*a*—142*a*, fol. 142*b* is left blank.

Same work as that described under No. R. 197 (*d*) ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல், மூன்று வருடத்திய காட்லாக்கின் 197 (d) நம்பர் பிரதியைப் போன்றது. இராமதேவர் என்னுஞ் சித்தரால் இயற்றப்பெற்றது. பதினெண் சித்தர்கள் மறைத்துச் சொன்ன பரிபாஷையை இவர் விவரித்துச் சொல்லுவதாகக் கூறுகிறார். இருபத்தேழு செய்யுளாலாகியது. முற்றும் உள்ளது. சித்தர்களுக்காம் சித்திபெறும் முறையை உணர்த்துகின்றது.

(j) புசண்டமகருஷி ஞானம் எண்பது.

BHUJAṆḌAMAHAṚṢIÑĀNAM EṆPADU.

Fol. 143*a*—163*b*. Fol. 164*a* and *b* are left blank.

A treatise of a philosophical nature dealing with the Ñānam nad Yōgam of the Siddhars; The last ten stanzas deal with alchemy medicine and the eight ways of doing harm to one's enemies.

Complete.

Beginning:

புசண்டமகருஷியருளிய ஞானம் எணபது.
காப்பு:

சிறந்த பராபரமாகி யெங்குந்தானுய்த்
தீர்க்கமுடனிரவி மதியுஞ்சுடர் மூன்றாகிப்
பரந்தருளு மைம்பூதமாய்கை தோன்றிப்
பல்லாயிரங்கோடி யண்டம்படைத்த போதம்
வரம்பெருகி யனந்தானந்த முயிருமாகி
மதபேத மாகவுந்தான் வடிவைக்காட்டிச்
சரம்பெருகி யண்டத்திலெழுந்து நின்ற
சச்சிதானந்த மதைப்பணியுவோமே. (க)

ஓமென்ற சுழிமுனைதா னண்டவுச்சி
ஓமுடிந்த பட்டணத்திற் கப்பாற்சென்று
நாமென்று சொல்லார்கள் யோகம்ஞானம்
நாட்டுகிறேன் அஞ்சனமுந் திலதப்போக்கும்
வாமென்ற வைத்தியமும் அ[ஷ்]ட்டகர்மம்
வாதமென்ற வித்தையெல்லாந் தெளிவேயாகும்
காமென்ற பீடமதிற் கண்டுதேறிக்
காட்டுகிறேன் மெய்ஞானக் கருவைப்பாரே. (உ)

சேரடா வணுப்போலப் புருவத்திட்டுத்
தீர்க்கமுடன் நீதானுஞ் செல்லும்போது
ஆரடாவுனைத் தானுங் காண்பாரப்பா
அண்டமெனும் பிரம்மத்தி னருளினாலே
நேரடா திகைப்பூடு கொண்டுவந்து
நிச்சயமாய் முன்சொன்ன தைலம்விட்டு
வீரடா வரைத்தபின்பு புருவத்திட்டால்
வேசையர்கள் வெகுபேர்தாம் மயங்குவாரே.

*   *   *   *   *

*   *   *   *   *

பாரடா பரபிரம்மத்தூ டேசென்று
    பரிதிமதியக்கினியும் மூன்று மொன்றாய்
நேரடா வதீதந்தான் எதிரிதன்னை
    தி[க்ஷ](ச்சய)மாய்ப் பார்த்திடவே நீறிப்போவான்
கூறடா கோடான கோடிசித்துங்
    குறித்திடவே யாகுமடா பிரம்மத்தாலே
வீறப்பா இந்நூலைக் கொடுத்திடாதே
    வெற்றிபெற எண்பதுந்தான் வாழ்கமுற்றே. (அ௰)

புஜண்ட மகருஷி ஞானம் எண்பது முற்றும்.

புஜண்ட மகருஷி பாதாரவிந்தமே துணை.

(கு-பு.)

இந்நூல் புசண்ட மகருஷியினால் இயற்றப்பெற்று யோகம் ஞானம் என்ற இவ்விரண்டையும் முக்கியமாகச் சொல்லித் திலகம், வைத்தியம், அஷ்டகர்மம், இரசவாதம் என்னு மவைகளை நூலிறுதியிலே எழுபது செய்யுட்களுக்கு மேலாகப் பத்துச் செய்யுட்களால் உணர்த்துகிறது. இரண்டாஞ் செய்யுளது ஈற்றடியிலே 'காட்டுகிறேன் மெய்ஞானக் கருவைப்பாரே' என்றிவர் கூறியிருப்பதால் இந்த நூலுக்கு 'மெய்ஞானக்கரு' என்றொரு பெயர் இருக்கலாமெனத் தெளிவாகிறது. இரண்டாவது செய்யுளிலேயே ஆசிரியர் தாம் நூலில் நுதலப்புகும் விஷயங்களைக் கூறியிருக்கிறார். இது அரிதாமெனத் தோற்றுகிறது. இந்த நூலேடுகள் மிகவுஞ் சிதலுற்று இருக்கின்றன. முற்றும் உள்ளது.

(*k*) பதஞ்சலிமுனி ஞானம் ஐம்பத்தாறு.

PATAÑJALI MUNI ÑĀNAM AIMPATTĀṞU.

Fol, 165*a*—181*a*.

A work purporting to deal with Yōga, Ñāna and alchemy. It also gives the names of the various works of Ahattiyar and others, the number of stanzas contained in those works, besides indicating the abode of the Siddhars.

Complete.

Beginning :

பதஞ்சலி மகாமுனிவர் அருளிச்செய்த ஞானம் ருசு.

காப்பு வெண்பா :

சீலத்தரும்பொருளைத்தே சோமயப்பொழிவை
மூலத்தசைவை முதற்குருவை—ஞாலமுணர்ந்து
உய்யப்பதஞ்சலி முன்பொதியத் திருப்புகழ்க்கங் ?
கையணி ருபூஞ்சரணே காப்பு. (௧)

ஆறாதாரப் பொருளா யைம்புலனாய் வன்கரணக்
கூறாய்க்கான மூவசைவின் கொள்கையாய்ப்—பேறான
வாழிடமூன்றெய்தும் மனோன்மணி யன்பால்மகிமைச்
சூழும் பதஞ்சலி நூற்சொல். (௨)

வண்ண விருத்தம்:

பரமமெனும் பொருளேதோகாரணம்
விபரமறிந்ததுதானே சூசனே
பழுதுறவெஞ்சலு மாயாபேதைமை—யுறவாகிப்
பழகிநிறைந்தபின் வேறே யோர்பொருள்
கருவிலெழுந்ததுபோலே வாய்வது
பரிசநுழைந்திடு பூதாகாயமும்—அதுதானே,
கருவியனந்தமு மீளாவாணவம்
மலமிகக்கந்தைகள் மேலாய் நூல்வகை
கபடவலங் கிருதயோனீ பேதமும்—எழுகூறுயக்
கரையிலையென்பது சீவான்மாவுகள்
பசுசலனஞ் சமையாதியாகம
கலகமெனுந் திரையூடே முழ்கினர்—கதிமாறி

* * * *

இரவிகள் சந்திரர் வானுகாயமும்
உகமுடிவுஞ் சனனுதி மாயையில்
இது சகசந்தனிலே னேபுருவம்—இதுகாணும்,
இகபர மிரண்டென வேதானேதிய
இருவகை யுந்தளரா மெய்ஞானமும்
இது வதுவுஞ்சரிதானே மௌனமும்—இனிதாகும்.
சருகு கிழங்குகள் பால்நீர் காய்கனி
மிகவு மருந்துவர் வீண்வாய்ப்பேசியே
தடியின் முரண்டினர் தாமோர்வேணியின்—முடிவேதோ,
சருவமவன் செயல் தானேயாகிய
குருவை யுணர்ந்தவர் தாமே யோகிகள்
தனையுமறிந்தவர் பேசார் ஞானிகள்—தவியாரே. (௩)

* * * * *

* * * * *

End:

ஆகும் பெருவெளிமேல் உடலாடும் படிகவனம்
போகும்படி திடமாகிய பொருள்சேர் ரசமணியும்
தேகஞ் சிலநாள் நின்றிடவே செய்திடுந்திறமும்
யோகம்பெரு மௌனங்களு முப்பாமெனவுரையே. (௫௫)

முடுகு விருத்தம்:

நூறிவேறு போதிலாறு கேணியாகும்விந்தடா
நூறு நூறுஞ் சேருமாகில் மாரிபெய்யுமாறடா
வேறுமீசனேது ஞானவீதியேனும் போழ்திலே
வேதனுளு மாயனுளு மீசனுலும் வாசமாய்க்
கூறு நாவதேதடா சொல்மூல நாடியூகவே
கோணமா மூவாசல் ஏறப்பாழின் மீதிலேறடா
சாரடா கணேசர்பாதங் கேசாதி வீதியில்
சாருசேரு தாரகர் சதாசிவாய பிரம்மமே. (௫௬)

பதஞ்சலி ஞானம் முற்றிற்று.

(கு-பு.)—

இந்தப் 'பதஞ்சலி முனிஞானம்' என்ற நூல் பதஞ்சலி மாமுனிவரால் இயற்றப்பெற்று ஐம்பத்தாறு பாடல்களான் ஆயது; இதில் நூல் முற்றும் இருக்கிறது. ஏடுகள் பல சிதைந்துள்ளன. இஃது அகத்தியராதி பல சித்தருடைய நூல்களையும், அவையிற்றின் செய்யுட்களுடைய எண்களையும், அச்சித்தர்களுடைய இருப்பிடங்களையும் உணர்த்தி யோக, ஞான இரஸவாதங்களையும், செந்தூரவகைகளையும், இன்னும் இன்னோரன்ன பல விஷயங்களையும் எளிதாகப் பல விருத்தப்பாக்களால் அறிவுறுத்துகிறது பிழையுள. இந்நூல் "பதஞ்சலி மாமுனி ஞானத்திருப்புகழ்" என்ற பெயரால் அச்சிட்டு இருக்கிறது. அச்சுப் பிரதியில் இல்லாத சில பாடல் உள.

R. No. 943.

Palm-leaf. 9¾ × 1 inches. Fol. 217. Lines, 6 and 7 on a page. Tamil. Injured. Old.

Purchased in 1927—28. from M.R.Ry. C. V. Jambuliṅgam Piḻḻai of Mylapore.

(*a*) வான்மீகர் மணிக்கடை கயிற்றுச்சூத்திரம்.
VĀNMĪKAR MAṆIKKAḌAI KAYIṞṞUCCŪTTIRAM.

Fol. 6—10*a*.

Same work as that described under R. No 940 (*f*), ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல் பிரதி மூலவருடத்திய காட்லாக் 940 (*f*) நம்பர் பிரதிக்கு மற்றோர் பிரதியாகும். ஓரோவிடத்து சிற்சில பாட பேதங்களுடன் காணப்படுகிறது. முற்றும் உள்ளது. சிறிது சிதைந்துள்ளது. முதல் ஏட்டில் இந்த எட்டு நூற்களுடைய பெயர்களும் அவற்றின் பாடல்களுடைய மொத்த எண்களும் எழுதப்பெற்றிருக்கின்றன. ஐந்தாவதேட்டில் தேரையர் நாடிச்சூத்திரச் செய்யுட்கள் மூன்று எழுதியுள்ளன.

(*b*) வான்மீகர் அடிதலை கயிற்றுச்சூத்திரம்.
VĀNMĪKAR AḌITALAIKAYIṞṞUCCŪTTIRAM.

Fol., 10*b*—12*a*.

Same work as that described under R. No. 940 (*e*), ante.

Complete.

(கு-பு.)—

இந்தப் பிரதி மூலவருடக் காட்லாக் 940 (*e*), நம்பர் பிரதிக்கு மற்றோர் பிரதி. முற்றும் உள்ளது. ஆங்காங்குச் சிறிது பாடபேதங்களும் உள.

(*c*) வான்மீகர் பலவிரற்சூத்திரம்.
VĀNMĪKAR PALAVIRAṞCŪTTIRAM.

Fol. 12*b*—13*a*.

Same work as that described under R. No. 940 (*g*), ante.

Complete.

(கு-பு.)—

இந்தப் பிரதியும், மூவருடக் காட்லாக் 940 (*g*) நம்பர் பிரதிக்கு மற்றோர் பிரதியாகின்றது. ஐந்து பாடல்களும் உள்ளன. சிற்சில விடத்துப் பாட பேதங்களும் காணப்படுகின்றன. சிறிது சிதைவுற்றிருக்கிறது.

(*d*) வான்மீகர் உறுப்புச்சூத்திரம்.
VĀNMĪKAR UṞUPPUCCŪTTIRAM.

Fol. 13*b*—15*b*.

Same work as that described under R. No. 940 (*d*), ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல் பிரதி மூவருடக் காட்லாக் 940 (*d*) நம்பர் பிரதிக்கு மற்றோர் பிரதியாகிறது. ஓரோ விடத்துப் பாட பேதங்களும் உள்ளன. ஏடு சிறிது சிதைந்துள்ளது. அதிலுள்ள பத்துச் செய்யுட்களும் இதில் உள்ளன.

(*e*) வான்மீகர் தீபசூத்திரம்.
VĀNMĪKAR DĪPASŪTTIRAM.

Fol. 16*a*—18*b*.

Same work as that described under R. No. 940 (*h*), ante.

Complete.

(கு-பு.)—

இந்தப் பிரதியில் மூவருடத்திய காடலாக் 940 (*h*) நம்பர் பிரதிக்கு மற்றோர் பிரதி. சிற்சில பாட பேதங்களுடன் காணப்படுகிறது. இதில் உள்ள பதினொன்றுஞ் செய்யுள் அதில் காணப்படவில்லை. முற்றும் இருக்கிறது. ஏடுகள் சிறிது சிதைந்துள்ளன.

(*f*) திருநந்திதேவர் சனனசேகரம்.
TIRUNANDIDĒVAR JANANAŚĒKHARAM.

Foll., 19*a*—30*b*. 31, left blank.

A treatise dealing with the process of creation as related by Nandidēvar to Tirumular. The manner in which individual souls attain salvation by realizing Śiva is described in the end.

Beginning :

திருநந்திதேவர் திருமூலருக்கு அருளிச்செய்த சனனசேகரம்.

திருநந்திதேவர் திருமூலதேவருக்கு அருளிச் செய்த சனனசேகரம். இந்தச் சனனம் எடுக்கிற முறைமை எப்படியோ வெனில், பராபரமாகிய பரமே[ஸ்பா]சுவரன் தராதவம் படைக்கத் தன்னே [னிந](நினை)ந்தருளில், பராபரத்திலே பரந்தோன்ற, பரத்திலே சிவ(ன்) தோன்ற, சிவத்திலே சக்தி தோன்ற, சக்தியிலே நாதம் தோன்ற, நாதத்திலே விந்து தோன்ற, விந்துவிலே பசுபட்சி தாவர சங்கமங்கள் தோன்ற, பசுபட்சி தாவர சங்கமங்களிலே சதாசிவன் தோன்ற, சதாசிவத்திலே மகேசுவரன் தோன்ற, மகேசுவரனிலே உருத்திரன் தோன்ற, உருத்திரனிலே விஷ்ணு தோன்ற, விஷ்ணுவிலே பிரமன்தோன்ற, பிரம்மாவிலே ஆத்துமா தோன்ற, ஆத்துமாவிலே ஆகாசம் தோன்ற, ஆகாயத்திலே வாயு தோன்ற வாயுவிலே தேஜஸ் தோன்ற, தேஜஸ்ஸிலே அப்பு தோன்ற, அப்புவிலே பிருதிவி தோன்ற, பிருதிவியிலே ஓசை தோன்ற.

* * * *

* * * *

End :

முளையில்லாத விதை விதைத்து அங்கமென்னும் வாசக்கால் கட்டி மதமென்கிற மதகு திறந்து சாந்தமென்கிற தண்ணீரைப் பாயவிட்டு மெய்ஞானம் என்கிற தானியம் விளைந்து நிற்கும்படி நிறப்பகரு ? அந்த ஆகாசத்தின் வன்னம் மதவளத்தின் ஒளியாய் மின்னி . . விடப்பிரசாதத்தின் ஒளியாய் இருக்கும். அந்தம் என்கிற ரூபம் ரூபத்தை விழுங்கும். அப்போது ஆனந்தம் மிகவும் உண்டாகும். நிராமயத்திலே [ஞ](நா)ட்டமாய் இருந்ததும் மெய்யாம். இந்தப்படி என்று நந்திகேசுவரர் திருமூலதேவருக்கு அருளிச்செய்த [ெ]சனனசேகரம்.

நந்திதேவர் திருமூலருக்கு அருளிச் செய்த சனனசேகரம் முற்றும்.

கு-பு.)—

இச்சனன சேகரம் என்னும் நூல் வசன நடையான் அமையப்பெற்று உலகில் சீவராசிகள் பிறக்கும் வகையைத் தெளிவாக வுணர்த்துவது. இதைத் திருநந்திதேவர் திருமூலருக்கு அருளிச்செய்ததாகத் தலையங்கத்தில் தெரிகிறது. இது சீவராசிகள் தாம் பலவும் பராபரத்தின் சங்கல்பத்தால் பராபரத்திலிருந்து பரமும் பரத்திலிருந்து, சிவனும், சிவனிடத்திலிருந்து சக்தியும் என்னும் முறையாக உற்பத்தியாகும் விதத்தையும், கருவில் சீவாத்துமாக்கள் தரிக்கும் விதத்தையும் அறிவுறுத்திப் பின்னர் அவை சிவஞானம் பிறந்து முத்தியடையும் விதத்தையும் எளிதாகத் தெரிவிக்கின்றது.

---

(9) நாதாந்தசூத்திரம் நூறு.

NĀDĀNTAŚŪTTIRAM NŪṞU.

Fol. 32*a*—65*b*. Fol. 66 is left blank.

A treatise of a philosophical character dealing with Ñāna and Yōga. It is also stated in this work that Paramaśiva who burnt the Tripura is the Supreme - Brahman indicated by the mystic sound Nāda and that the Pañcākṣara (five syllabled prayer formula) is the highest Mantra.

Complete.

Beginning:

நாதாந்த சூத்திரம் :

திருமண்ணீ றணிந்து பலவேடம் பூண்டு
சிலபலநூ லாகமங்கள் பலவுங் கற்று
மரு மல(ர்)கள் கொன்றைதும்பை மல்கு?நுசாத்திர
மகா தேவன் மாயனென்றே பிரித்துரைப்பார்
தருவறக்கும் பொருடெரியா மூடர் சத்து
மூனமில்லா வுடலுயிரும் பொருளு மொன்ருய்ப்
பருவமறி [தரி](வரி)ய சிவனே யென்று
பகருவார்குரு பதத்தின் நிலையறியா[ற்] தாரும். (க)

நல்லதொரு கல்லுகளைத் தெரிந்துப் பார்த்து
நன்மைதருந் தெய்வமே யென்றே நாடிக்கொன்று
சொல்லுவார் மந்திரங்க ளனந்தங் கோடி
சேசடசோ பசாரத்துடனே ? செய்வா ரில்லை
எல்லையில்லா முறை புஷ்ப மேத்திறனும்
இன்பதுன்ப மவர்க்குண்டோ வின்றே கேளே
நல்லவொரு சத்குருவை வணங்கிப் போ[த்த](ற்றி)ல்
நன்மைதருந் தெய்வ மென்றே நாடுங்காலே. (உ)

எத்துணைதான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே யுங்களுக்கு மோட்ச முண்டோ
சுத்தமாய்ச் தலைமுழுகிச் சவுஞ் செய்தாலும்
சொல்லரிய பேரின்ப மெய்துமோ தான்
பித்த(ர்)களே கல்லுகளை விலைக்கு வாங்கி
பிராணனென்றே சிலையாலே முடிந்து கொண்டு
செத்தபின்பு கைலாசஞ் சேர்வோ மென்ருல்
சேர்வதில்லை யருநரக(ஞ்) சேர்வ தாமே. (ங)

* * * *

* * * *

End:

சாதிகுலம் பெருமை யெல்லாம் எங்களுக்கில்லை
சமயமோ நீறுற மெங்களுக் கில்லை
நீதிபெறு நால்வேத நேம மில்லை
நெறியான வைந்தெழுத்து மெங்களுக் கில்லை
ஆதியெனு மாதார மடுக்கு மில்லை
யப்பாலே நின்றதொரு வரூப மில்லை
சோதிகுலப் பெருமைதன்னை நாங்கள் சொல்வோம்
சொல்லுதற்கு வேறுமுண்டோ தோற்றந் தானே. (ராங)

உலகுள்ளார் வாழிவாழி யோங்கிய தேவர்வாழி
நிலைமையாஞ் சமயத்தோர்கள் நீதிமன்னர்கள்வாழி
பலபல பெரியோர்வாழி பார்தனிலுள் ளோர்வாழி
நலமையாம் பூமியுள்ள நாதர்கள் வாழிவாழி.

திருச்சிற்றம்பலம் : சிவமயம் : முற்றும்.
நாதாந்த சூத்திரம் ;

(கு-பு.)—

நாதாந்த சூத்திரம் என்னும் இந்நூல் வேதாந்தத்தைச் சார்ந்து யோகம் ஞானம் என்னுமவைகளைத் தெளிவாகத் தெரிவித்து ஐம்பத்தொன் பதாஞ் செய்யுளில் அட்டமாசத்தான் திரிபுரமெரித்த பரமசிவனை நாதாந் தீசுவரன் என்றும், பஞ்சாட்சரமதே சிறந்ததென்று இன்னுமொரு விடத்தி லும் விளக்கிப் போந்து தத்வஞானத்தை அறிவுறுத்துவது. நூறு பாடல்க ளான் நிறைந்துள்ளது. முற்றும் உள்ளது. சிறிது சிதிலம்.

(h) உடலறிவிளக்கம்.
UḌALAṚIVIḶAKKAM.

Foll. 67*a*—101*b*.

By Saṅkarācāriyar.

Same work as that described under R. No. 142, ante.

Wants 3 stanzas in the end ; otherwise complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக் 142-வது நம்பரில் வந்துள்ளதே. இதில் கடையகத்து மூன்று பாடல்களைத் தவிர்த்து எல்லாப் பாடல்களும் உள்ளன. சங்கராசாரியர் என்பவர் இயற்றியதாகக் குறித்திருக்கிறது.

(i) தக்ஷிணாமூர்த்தி பூரண பூசாவிதி இருநூறு.
DAKṢIṆĀMŪRTTI PŪRAṆA PŪJĀVIDHI IṚUNŪṚU.

Foll. 102*a*—166*b*. 167, left blank.

On the worship of certain deities after drawing certain diagrams with appropriate mystic letters in the various parts of these diagrams.

Complete.

Beginning :

தக்ஷிணாமூர்த்தி அருளிச்செய்த பூரண பூசாவிதி :

ஆதார மாறு மேல கண்ட குருபாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கம்—நாதமுடன்
விந்து மூலம் விளங்கும் பூசாவிதிக்கோர்
தந்தி முகன் தானே சரண்.

காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் புலத்தியா கேளு
பூரணமாம் மௌனமல்லோ ஞான வாழ்க்கை
புகழான வட்டாங்கம் நடன மாடுஞ்
சீரணமாய்ப் போகாமற் பூசை மார்க்கம்
செப்புகிறேன் மனந்தெளிந்த சித்தர்க் கெல்லாம்
வாரணமா முகத்தோனே முதலாம் பூசை
மற்றதொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. (உ)

* * * *
* * * *

End :

மைப்பான காயாசம் வாங்கச் சொன்னேன்
வீருக ரசபற்பங் கொள்ளச் சொன்னேன்
கைப்பான சீடருக்குப் புத்தி சொன்னேன்
கள்ளனென்ற சீடரைநான் தள்ளச் சொன்னேன்
பொய்யான பொய்யுரைக்கும் புலை சண்டாளர்
பொருளீந்து பிறர்க்குரைக்கும் பாவச் சீடர்
ஐயாவென் றடுத்தாலும் தள்ளச் சொன்னேன்
அஞ்ஞானி யவர்களுடன் பேச்சொண் ணாதே. (ாகக)

ஒன்றான மன துரிமை சீடருக்கு
உரைசொல்லப் பூசைவிதி யுரைக்கச் சொல்லு
விண்ணாட்டங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பற்றச் சொல்லு
சுண்ணாம்பு மஞ்சளும்போல் குறிகள் நாட்டிச்
சுழியிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டிக்
கண்ணாடிக்குள் குருவின் பதத்தைப் போற்றிக்
கருணைதரும் பூசைவிதி கருவாம் முற்றே. (உா)

தக்ஷிணாமூர்த்தி யருளிச்செய்த பூரண பூசாவிதி இருநூறு முற்றும் :
தக்ஷிணாமூர்த்தி பாதமே கதி : சிவமயம்.

(கு-பு.)—

இந்த நூல் யோகம் ஞானம் மாந்திரீகம் முதலானவைகளிற் சித்திபெறு தற்கு உரிமையான பற்பல சக்கிரவகைகளைக் கீறி எழுத்தடைத்துத் தேவதைகளைப் பூசிப்பதாம் மார்க்கத்தைத் தெளிவாகச் செய்யுணடையான் உணர்த்துவது. இருநூறு செய்யுட்களான் நிறைந்துள்ளது. நூலாசிரியர் தட்சிணாமூர்த்தியாவர் என்று தெரிகிறது. அன்றியும் இவ்வாசிரியர் தியானத்திற்குரிய இரேசக பூரக கும்பகவகை பிராணாயாமத்தையும், பூசைக்கு இன்றியமையாத அங்கநியாச கரநியாச சோடசநியாச சிவநியாசங்கள் செய்யும் முறைமையினையும், தீயகுணமுடைய ஆசிரியர் சீடர்களது இலக்கணத்தையும், பற்பல விடத்துக் கொங்கணமுனிவர் பெருமையினையும், மற்றும் பல. சித்தர்களைப்பற்றியும் தெளிவாகக் கூறிப்போருகிறார். அரிதென்றே தோற்றுகிறது. அச்சிட்டதாகத் தெரியவில்லை. பிழையுடன் காணப்படுகிறது.

(*j*) அகத்தியர்ஞானம் நூறு.
AKATTIYARÑĀNAM NŪṚU.

Foll. 168*a*—198*b*.

Same work as that described under R. No. 9(*a*), ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக்கு 9(a) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும். முற்றும் உள்ளது. சிற்சில விடத்துச் சொற்பேதங் காணப்படுகிறது. சிறிது சிதைந்திருக்கிறது. அச்சிடப் பெறவில்லை.

(*k*) மச்சமுனிமெய்ச்சுருக்கம் ஐம்பது.
MACCAMUNIMEYCCURUKKAM AIMPADU.

Foll. 200*a*—216*b*.

A treatise of a philosophical nature dealing with the N̆ānam and Yōgam of the Siddhars and stating where these Siddhars live: The authorship of this work is attributed to Maccamuni.

Complete in 50 stanzas.

Beginning:

மச்சமுனியார் அருளிச்செய்த சூத்திரம் ஐம்பது:

பத்தெட்டு மாகிப் பாரெட்டிரு சுழியைச்
செத்தெட்டுஞ் சித்திக்கச் செய்ததுவே—பத்தெட்டே
கண்டாடிய வெழிற் கற்பக மெய்ச்சுருக்கம்
கொண்டாடிக் கணபதியே கூறு. (க)

குறுமுனி யெந்நந்திக் குருபாத முட்கொண்
டுறுதிபெற மெய்ச்சுருக்க மோதக்—குறுமுனியைக்
கொண்டாடிக் கொண்டே குறிப்பறிந்து மெய்ப்பொருளைக்
கண்டார்க்குப் பூரணமே காப்பு. (உ)

*　　　*　　　*　　　*

End:

அறியலாம் பரப்பிர்மம் சத்திரூப மானந்த மதியமுதப் பதியுந்தோன்ற
வறியலா மேகநிராமயத்தின் சூட்சு மப்பா லு முப்பாழுக் கப்பால்நீயுக
குறியெலாம் நி(ர்க்)குணத்தின் குறியைக்காணக் குறிப்பறிய சற்குணமா
[மூலத்தோர்கள்
அறியாம லவரவர்கள் பேதாபேத மறிந்தகுரு வுபதேசமருளலாமே.
(ருய)

அருளான வருள்பரவுங் குருவுமாவார்
அட்டசித்தி பொ[ரி]றியாட்ட மெட்டிற்காண
பொருளான தொன்றுக்கு மெட்டோரடி ?
போக்கு வ[ரு](ர)த்துள்ள சூட்சமாட்சிபாதம்

பொருளான ததுகண்டு சாட்சிகண்டு
　　பொய்யாமன் மெய்ச்சுருக்க மையன் சொன்ன
பொருளான பொருள்பரவு மருளே பெற்று
　　போற்ற[றி](ரி)தா யிருப்பர் மெய்ச்சுருக்கமுற்றே. (௫௧)

மச்சமுனி மெய்ச்சுருக்க சூத்திரம் ஐம்பது முற்றும்.

திருச்சிற்றம்பலம்; நந்தன ஹூ மாசி மீ ௰௧௨ எழுதிமுடிந்தது.

(கு-பு.)—

"மச்சமுனி மெய்ச்சுருக்கம் ஐம்பது" என்னும் இந்த நூல் மச்சமுனிவரால் இயற்றப்பெற்று யோகம், ஞானங்கட்குரிய விடயங்களைத் தெரிவிப்பதோடு சித்தர்கட்கு உரிய பலவிடயங்களையும் நன்கு உணர்த்துகின்றது. அச்சிட்டதாகத் தெரியவில்லை. நூல் முழுதும் இருக்கிறது. கடைசியில் 217-ஆவது ஏட்டில் நளிர் சுவரத்துக்கான ஓர் மாத்திரை செய்யும் வகை வசன நடையால் எழுதப் பெற்றிருக்கிறது. நிற்க, இந்நூல் மூவருடக் காட்லாக்கு 175(j) 274(a) நம்பர்களில் "அகத்தியர் மெய்ச்சுருக்கம் ஐம்பத்தொன்று" என்ற பெயரால் வெளியிடப்பட்ட நூல்களை யொத்து முற்றும் இருக்கிறது. செய்யுட்கள் மாத்திரம் ஒன்றாய் இருந்து இரண்டேடுகளிலும் வேறு பெயர் பொறிக்கப்பட்டிருத்தலால் நூலாசிரியர் இன்னாரெனத் துணிய இயலவில்லை. 'தக்ஷிணாமூர்த்தி' என்று ஒரு பெயர் அகத்தியர்க்கும் உண்டெனத் தெரிகிறது. ஆய்ந்துணரவேண்டும்.

R. No. 944.

Palm-leaf. 9 × 1⅝ inches. Foll. 201. Lines, 8—9, in a page. Tamil. Much injured. Old.

Purchased in 1927–28 from M.R.Ry. C. V. Jambuliṅgam Piḷḷai of Mylapore.

(*a*) கொங்கணர்கடைக்காண்டம் ஐந்நூறு.
KOṄKAṆARKAḌAIKKĀṆḌAM AINNŪṞU.

Same work as that described under R. No. 275(*a*) ante.

Complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக்கில் 275(a) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலுக்கு மற்றோர் பிரதியாகும். இந்தப் பிரதியில் நூல் முற்றும் இருக்கிறது. அச்சிடப் பெறவில்லை. ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன.

(*b*) கொங்கணர்வகாரசூத்திரம் ஐம்பது.
KOṄKAṆARVAKĀRASŪTTIRAM AIMBATU.

Foll. 125—133.

A treatise by Koṅgaṇar disciple of Bhōgar dealing with alchemy and with medicines considered useful in promoting longevity.

Complete.

Beginnnig:

ஸ்ரீ தேவிஸஹாயம். கொங்கண நாயனார் அருளிச்செய்த
சூத்திரம் ஐம்பது - வாதம், கல்பம் :

பாதமுந்தலையு மொன்றாய்ப்பாரிலே பள்ளிகொண்ட
நாதமேயறிந்தவர்க்கு நன்மையுங் கையிலுள்ளே
வேதமேவிந்துநாதம் விளங்கும்பொன் மூலந்தா[ன்](னே)
காதிலே பலிக்கச்சொன்னார் கருவூருநாதன்றானே. (௧)

தானென்ற வுப்பேசோதி தாயுடன்செம்புவெள்ளி
போனென்ற புழுகுசேர்த்துப் பூதியைக்கண்ணிவிட்டால்
மானினி மயங்கிநிற்பாள் வங்காளதேசமெல்லாம்
சீனியே சிறந்துநிற்குஞ் சிதம்பரமாடவாமே. (௨)

ஆடலாங் கைக்குள்வாத மறிந்தவர்வெளியிற்சொல்லார்
தேடலாம் வீரம்சூத மதிகட்டிடுந்தேனுமுப்பு
சூடவாம் பிச்சிமாலை தொடுத்திடவாசமேனும்
ஓடலாங் கடையிற்சுக்கை யுரைத்திடுமாதிதானே. (௩)

End:

பாரிலே வளர்ந்தபோகர் பாதமேதொழுதுநானும்
நீரிலே கொங்கணர்[ரேயெ]என்று நிர்மல நின்பேர்படைத்தேன்
காரிலே வாதகல்பங்காட்டினே னைம்பத்தொன்றில்
மாரிலே யணைந்தோன்பச்சை வைரமும்பதக்கந்தானே. (௫௰)

தானமே செய்யவேணுந் தர்மமேகருதவேணும்
ஏனமே யறியவேணு மீசனைக்காணவேணும்
மானமே சொரியவேணு மங்கையைக்கூடவேணும்
பானமே கொள்ளவேணும் பார்வதிபாதமுற்றே. (௫௧)

Colophon:

ஸ்ரீ தேவிஸஹாயம். ரௌத்திரி௵ கார்த்திகைமீ" உகவ மங்களவாரம் மகாநக்ஷத்திரம் இந்தச் சுபதினத்தில் கொங்கண நாயனார் அருளிச்செய்த வகாரசூத்திரம் ஐம்பத்தொன்றும் எழுதி நிறைந்தது.

முற்றும். குருவே துணை.

(கு-பு.)—

இந்நூல் போகரது சீடராய கொங்கணநாயனார் என்னுமோர் சித்தரால் இயற்றப்பெற்றது. இரஸவாதம் கல்பம் ஆய இவ்விரண்டையும்பற்றிக் கூறுவது. நூல் முற்றும் உள்ளது. இரஸவாதஞ் செய்வார்க்கு மிகப் பயன்படுமென்று காணப்படுகிறது.

(c) கொங்கணநாயனார் வழலைசூத்திரம், நாற்பது.

KOṄKAṆANĀYANĀR VAḺALAISŪTTIRAM, NĀṞPADU

Foll. 134—144b.

A treatise on alchemy ; by Koṅgaṇar.

Complete in 40 stanzas.

Beginning :

விநாயகாயநம :

கைலாச கொங்கணநாயனார் அருளிச்செய்த வழலைச்சூத்திரம் நாற்பது.

சாத்திரந்தா னாறுகாண்டம் விரித்துச்சொன்னேன்
அதைக்குறுக்கி மூன்றுகாண்டம் ஐஞ்ஞூறுமுற்றும்
சூத்திரந்தான மூன்றுரைத்தேன் கற்பம்நூறுந்
தோடமில்லை மோசமில்லை சொன்னேன்கேளு
சூத்திரந்தான் நாற்பதுக்குள் வழலைமார்க்கந்
திறந்தப்பா பாடினார் சிறுநூலெல்லாங்
கோத்திரந்தான் மூலகுரு சீடவர்க்கங்
கூறினேன் போகருடை கஞ்சம்காப்பே. (௧)

கணபதியே போற்றி யந்தம் போற்றிக்
[கயி]கைலாச சட்டைமுனி பாதம்போற்றிக்
கணபதிக்கு மேனின்ற வையர்போற்றிக்
கருணைதரும் மணித்தாயின் கழலேபோற்றிக்
கணபதியு மாத்தாளுங் கூடும்போது
காசினியிற் பூரணத்துக் கலையைப்போற்றிக்
கணபதியை மூலத்தே யறிந்துபோற்றிக்
கனலெழுப்பக குண்டலிக்குள் நந்தியாச்சே. (௨)

உ யோகம் :

*   *   *   *   *   *   *   *
*   *   *   *   *   *   *   *

End :

விளம்பாத சாத்திரத்தைப் பார்த்தாலேது
விடியுமட்டும் பொழுதுதொட்டுப் படித்தாலேது
விளம்பாத வேதத்திலுள்ளபடி சொல்லார்
வியாசர்மேல் குற்றமில்லை சிவனுத்தாரம்
விளம்பாதே போனதென்ன வுலகம்பேயாம்
மேதினியில் சம்சார வாழ்க்கையில்லை
விளம்பாதே போனதுவும் மெத்தநன்று
விருதுபெற்ற சஞ்சீவி யிந்தநூலே. (௪௰)

இந்தநூல் பாரா[ட்டா](க்கா)ல் ஞானமேது
எடுத்ததொரு கைமுறையில் தவறுண்ணுது
இந்தநூல் பாரா[ட்டா](க்கா)ல் முப்புவேது
எழுசபையுங் கடப்பதற்குக் குளிகையேது
இந்தநூல் பாரா[ட்டா](க்கா)ல் தீட்சையேது
என்மக்காள் ஞானமொடு வறிவங்கேது
இந்தநூல் நாற்பதுந்தான் சித்தர்கட்கு
இயம்பினேன் சாத்திரத்துக் கிதுதான்முற்றே. (௪௧)

Colophon :

ரௌத்திரி௵ கார்த்திகைமீ ௩௰௨ குருவாரம் மூலாநட்சத்திரத்தில் கொங்கணநாயனுர் அருளிச்செய்த சூத்திரம் குருநூல் வாதம் நாற்பதும் எழுதி நிறைந்தது.

முற்றும். தேவிசகாயம் உண்டாகவும். குருவே துணை.

(கு-பு.)—

இந்த நூல் இரஸவாதம் என்னும் சித்தர் நூலைச் சார்ந்ததாகும். கொங் கணர் இயற்றியதாகத் தெரிகிறது. நாற்பது செய்யுள்களான் முற்றியது இது, அறுவகை நீரினையும், பலவகைச்சுண்ணங்களையும் செயநீர் வகையை யும் விளக்கிப்போருவது. ஏடுகளும் சிதைந்துள. அச்சிட்டதாகத் தெரிய வில்லை. நூலிறுதியில் "மெச்சிட்டார் சட்டைமுனி நாயன்தானும்" என்று தொடங்குமதாய ௩௯-ஆவது செய்யுளொன்றால் இந்நூலாசிரியர் தம் சிற ப்பை விளக்குகின்றார். எழுத்து பிழை சொற்பிழை மிகவதிகம்.

(d) கொங்கணநாயனுர் சூத்திரம், நாற்பது.

KOṄKAṆANĀYANĀR SŪTTIRAM, NĀṞPADU.

Foll. 145—151*a*; fol 151 (*b*) is left blank.

Similar to the above.

Complete in 40 stanzas.

Beginning :

கொங்கணநாயனுர் அருளிச்செய்த சூத்திரம் நாற்பது.

ஆயிரத்தைந்நூற்றிலே யறிந்தெடுத்தமந்திரம்
பாயிரத்துளானபாடல் பத்துநான்குமொன்றிலே
தாயிரக்கமானசத்தி தானறிந்துவாழ்வதோர்
ஆயிரத்திலொன்றடா வவன்பேரடியாகுமே. ? (௧)

அடிமதந்தளரியான யாதிமூன்றுமுப்படா
இடமுள்ளிந்தரியமஞ்சு சென்றபூரணமதாம்
விடமருந்துநாதமான வெண்மையானவுப்படா
உடல்மிகுந்தவுப்பினல் லுயர்ந்தகுருவாகுமே. (௨)

* * * * * *

* * * * * *

End :

அறி கோசபீசம் வேதைசரக்குகள் ?
அறிய வல்லார்க்குப் பொருள்காணுமப்பா
குறியான மோனங்குலாவு மவுனத்தில்
அறிவாய சிவத்தினடி சத்தியாமே. (௪௧)

Colophon :

ரௌத்திரி௵ மார்கழி மாஸம் சுக்கிரவாரம் கொங்கணநாயனுர் அருளிச்செய்த சூத்திரம் நாற்பதும் எழுதி நிறைவேறிற்று.

(கு-பு.)—

இதுவும் இரஸவாதநூலைச் சார்ந்ததென்று தெரிகிறது. இது இரஸவாதத்துக்குரிய பலவகை சுண்ணங்களையும் உப்பு வகைகளையும் செயநீர் வகையினையும் விளக்கிச் சங்கக்கட்டு நாகக்கட்டு முதலியனவும் இன்னும் இன்னோரன்ன அரிய பெரிய விடயங்கள் பலவற்றையும் அறிவுறுத்துவது. நாற்பது செய்யுள்களால் நிறைவேறியது. அச்சிடப்பெற்றதில்லை. ஏடுகள் ஒடிந்தும் மிகவுஞ் சிதைந்தும் உள்ளன பிழையதிகம்.

(e) கொங்கணநாயனர் தீட்சை, எட்டு.

KOṄKAṆANĀYANĀR DĪKṢAI, EṬṬU.

Foll. 152—153.

Eight stanzas dealing with the necessary initiation as a preliminary ceremony to the practice of alchemy.

Complete

Beginning:

கொங்கணநாயனா அருளிச்செய்த தீட்சை எட்டு. விநாயகாயநமஃ.

பராபர[மே மெ]மாய்ப்பொருளாய்ப் பரையிருக்கு[மு]ம்பொருளைத்?
தராதரமா யெனையாண்ட சசிதாநந்தன்பாதம்
காரதரமாய் மேனோக்கிக் கண்டத்திலுதித்தவாய்வு
உராகரமாய் நால்வட்ட முந்தியினபொருளைவைப்பாம். (க)
வைப்பதுஅகாரந்தானே வளப்பது உகாரமென்றோம்
மெய்ப்பது வகாரத்தாலே மேற்படு மெட்[டுரெ](டி)ரண்டு
கைப்பது துவர்ப்புமுண்டு காரணமானசோதி
உப்பது பொருளென்றெண்ணி யுந்தியில்முழித்துப்பாரே. (உ)
* * * * * *
* * * * * *

End:

வச்சிரம் போலிருக்குங்காயம் வளர்பிறை ரவியுந்தோன்றும்
முச்சிர வமிர்தமுண்டு முருப்பட்டார் சித்தரெல்லாம்
மெச்சிரங் குய்யத்துள்ளே யிருக்கின்றதீட்சைபெற்ற
அட்சரம் ஊ ஆவென்று அறிந்தவர்பெரியோர்முற்றே. (அ)

Colophon:

கொங்கணநாயனர் அருளிச்செய்த தீட்சை பாடல்கள் எட்டும் எழுதி நிறைவேறிற்று. முற்றும். சுபமஸ்த்து.

(கு-பு.)—

இந்த நூல் இரஸவாதம் முதலியன செய்வார் அதற்கங்கமாகத் தீட்சை பெறும் மார்க்கத்தை விளக்குவதென்று தோற்றுகிறது. எட்டுச் செய்யுட்களான் முற்றியது. இதிலே எழுத்துப்பிழை சொற்பிழைகள் மலிந்துள்ளன.

(f) போகர்காயகற்பம், எட்டு.

BHŌGARKĀYAKAṞPAM, EṬṬU.

Foll. 154—155. Fol 156 is left blank.
Deals with alchemy and how one can become a Siddha ; by Bhōgar.
Complete in 8 stanzas.

Beginning :

போகர் சுவாமிகள் காயகற்பம் எட்டு.

ஒன்றான வேதாந்த சூத்திரந்தான்
ஓதுகிறே னாதியுமை பாதம்போற்றிப்
பன்றான வைப்புமுதல் வாதம்ஞானம்
பாங்கான ப்ராணாயாமங் குளிகைசித்து
நன்றாகக் கருவித்தை யாகச்சொல்லி
நாட்டுகிறேன் றுலாத்தோற்குங் கன்னியோற்கும்,
கன்றான வாறுதல மட்சரந்தான்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் காணுவீரே. (௧)

காணப்பா முந்தியதோர் வழலைமார்க்கங்
கருசாலை வேப்பிலையுங் கலந்துஆட்டு
பூணப்பா வயக்காந்த மாறுதிங்கள்
புகழாகக் கொண்டபின்பு பிலத்துட்கொண்டு
ஊணப்பா கற்பமெல்லாம் பின்னேகொள்ளு
உத்தமமே தீட்சையது முன்னேகொள்ளு
ஆணப்பா கொண்டக்கால் வலப்பாலாகும்
அப்பனே பெண்தனக்கு இடப்பாலாமே. (௨)

பிராணாயாமம்.

ஆமப்பா ப்ராணாயாமக் குருவைக்கேளு
அப்பனே வங்குசிங்கு இரண்டுங்கூட்டித்
தேமப்பா மயேசுவரத்தி நிலையிற்றாக்கித்
திரிகோண வரைதனிலே யெழுத்து(மூன்றி)
ஊணப்பா போற்றிவிட எழுவட்சம்
உத்தமனே நகாரமது மகாரமாகும்
வாமப்பா வாதமெல்லா முனக்குள்ளாச்சு
வாகான குருபதத்தை வணங்கிக்காரே. (௩)

ஆச்சப்பா பெண்தனக்கு உபதேசித்து
அப்பனே யமுரியது வாங்கிக்கொள்ளு
பாச்சப்பா கற்பத்துக் கிதுவேயாச்சுப்
பாடியதோ ரிக்கருவை மறைத்தாரப்பா
ஓச்சப்பா விந்தவுப்புக் குகையினுள்ளே
உத்தமனே அருசுமது சுண்ணமாச்சு
மூச்சப்பா கருவெல்லாம் வெளியாய்ப்பாடி
முடித்துவிட்டே னெட்டினுள்ளே மூட்டுவீரே. (௪)

முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் போகநாயனார் என்ற சித்தரால் இயற்றப்பெற்றுச் சித்தராகும் முறையை விளக்கி இரஸவாத வகையையும்பற்றிக் கூறுவது. எட்டுச் செய்

யுள்களான் முற்றுப்பெற்றது. இதிலே இந்நூலாசிரியர் பாதாள அஞ்சனம் என்னும் ஓர் அருமையான மைவகையையுங் கூறி இருக்கிறார். வெற்றேடு ஒன்று இருக்கிறது. பிழையதிகம்.

(g) கூர்மானந்தர் சிவயோகம், ஐம்பது. KŪRMĀNANDAR ŚIVAYŌGAM, AIMPADU.

Foll. 157—168.

A treatise by Kūrmānandar in 50 stanzas dealing with Yōga, Ñāna and alchemy.

Complete.

Beginning:

கூர்மானந்தர் அருளிச்செய்த சிவயோகம் ஐம்பது.

திருந்து மதிமுகத்தா ளென்தாயார் பாதம்
சிந்தையுற்று யானைமுகன் பாதம்போற்றிப்
பொருந்திநின்ற சனகாதி ருஷிகள்பாதம்
போற்றிசெய்து காலாங்கி பாதம்போற்றி
அருந்தவஞ்செய் தட்சிணசின்மயமாந் தேவர்
அடிதொழுது சூத்திரமோ ரைம்பதுக்குள்
மருந்தினால் வாதமொடு யோகம்ஞானம்
வகையாகச் சொல்லுகிறேன் மனதுதானே. (க)
மனதுசய மானக்கால் வருமேஞானம்
வாதமென்ன யோகமென்னிரண்டு மெய்தும்
தனதுபண்ணிக்கொள்ளலாஞ் சித்தர்தம்மால்
சகலசித்துங் கைவசமாய்த் தானேகூடுந்
தினையளவு கற்பமறிந் துண்ணவேணும்
தேகசித்தியாவதற்குத் திறமையுண்டாங்
கனதையுள்ள சீடருக்கு வெய்துமிந்நூல்
கனமான யோகதிட்டைக் காட்டுமே[ற](வ)னே. (உ)
(* * * *)

End:

ஆச்சப்பா சுண்ணம்புக் கெட்டிலொன்று
அணைத்திடவே சாரத்தைப் பீங்கானுக்குள்
நீச்சய்யா சலமாகு மந்தநீரில்
திசமான வீரமொடு பூரஞ்சேர்த்துத்
தோச்சய்யா சரக்குகளை ரவியிற்காட்டத்
துடியடங்கிக் கடடிப்போஞ் சுன்னமாகும்
மேச்சப்பா போகாது துரிசிச்சுண்ணம்
இரதமென்ற ரசகுளிகையிதுக் குளாச்சே. (ரு)
உள்ளபடி சொல்லுகிறேன் இந்தநீரால்
உத்தமனே துரிசிவெள்ளை யாகுமாறும்
வெள்ளையென்ற சுண்ணத்தால் ரசத்தைநீற்றி
மேலான பரித்தகட்டிற் பூசிப்பாரு

கள்ளமில்லாச் சொர்ணமது சுண்ணமாச்சுக்
கதிரானதாம் மிரத்திற[கு](கொ)டுக்கச்சுன்னம்
பிள்ளைகளே யிதையெடுத்து[வெள்ளி] ஏழைக்கியப்
பிழைப்பதற்கு வழியுண்டாம் பேசிமுற்றே. (௫௧)

முற்றும் :

Colophon:

துந்துபி௵ பங்குனி மாதம் புதவாரம் சதுர்தசி சதய நட்சத்திரத்தில் கூர்மானந்தர் சிவயோகம் ஐம்பது எழுதி நிறைந்தது. முற்றும். முத்து ஸ்வாமி நாயகர் புத்தகம்.

(கு-பு.)—

இந்த நூல், கூர்மானந்தர் என்னும் ஓர் சித்தரால் இயற்றப்பெற்றது யோகம் ஞானம் இரஸவாதம் என்னும் மூன்று விடயங்களையும் பற்றிக்கூறுவது. ஐம்பது செய்யுட்களால் அமையப்பெற்றது. முற்றும் உள்ளது. ஏடுகள் சிதைந்துள்ளன. இதில் எழுத்துப்பிழை சொற்பிழை மிகவதிகம்.

(*h*) சட்டைமுனி மெய்ச்சுருக்கம்.
SAṬṬAIMUNI MEYCCURUKKAM.

Foll. 170—177*b*.

A treatise on the attainment of Ñana or spiritual enlightenment through Yōga.

Complete.

Beginning;

ஹரி : ஓம் :

சட்டைமுனி மெய்ச்சுருக்கம் . . . .

உபதேச குருநூல்.

. . . . முகமொ மறுப்புஞ் சித்தர்
செங்கமலப் பதமிரண்டுஞ்செவியும் நால்வாய்
பாரமுத்த விருவிழியுங் கர மோரைந்தும்
பரவுதொந்தி வ[யரு](யிற)முன்னூல் மார்புந்தோளும்
தாரமுத்த பொன்முடியுஞ் செம்பட்டையுந்
திரிசடையு மறைஞானும்பதி பாச்சல்பொலியுங்?
காரமுத்த மூலவட்டத்தொளி யோங்கார
கம்பத்தின் குஞ்சரமெந்நாளுங் காப்பாம். (௧)

எந்நாளு மிரேசகபூரக கும்பகத்துள்
என்னைவிட்டு நீங்காத கடவுளானைப்
பொன்னுடர் போ[த்து](ற்று)மது முகத்தினனைப்
புயமின்னுருடைய செவ்வே லகத்தினனை

மின்னுன பச்சைமரகதமா நீலமீறும்?
    மயிலேறிவருங் குருபரனை ஞாலம்
பன்னுனை யகத்தியர்க்குத் தமிழுரைத்த
    பரஞ்சோதிபதி குகன்றாள் காப்பாமே. (உ)

ஆமென்ற வகண்டபராபரமே காப்பு
    அம்மனொடு சிவன்காப்பு திருமால் காப்பு
ஓமென்ற வாணி கஞ்சன் (நி)ர்வாணி காப்பு
    உயர்ந்து நின்றநந்தி யகத்தீசர் காப்பு
வீரமென்ற திருமூலர் பதினெண்சித்தர்
    மரபிலுள்ள சித்தர்முத்தர் பத்தர்காப்பு
    சத்திய மெய்ஞ்ஞானிகளுங் காப்புத்தானே. (ங)

(*   *   *   *)
(*   *   *   *)

End:

ஒளிகாண விழிரெண்டு மொன்றாய்ச்சேரு
    உற்றுப்பார் புருவமையத்தி லூன்றிப்பாரு
அ[ளி](ழி)யாதசோதி திருநடனம் பாரு
    அத்திடந்தான் சகலசித்து மாதிபீடம்
வெளிகாணச் சதாசிவந்தான் மின்னல்கோடி
    வெளிச்சம்போல் கண்கூசும் பார்க்கப்போகா
வழிகாண முந்தியிந்தத் துவாதசந்தான்
    மகாசொர்க்க முத்தியுமாம் அட்டசித்தே. (௩௨)

அட்டசித்தா மெட்டெட்டு சித்துமாகும்
    அடிமுடியு மிரண்டெக்கும் வழிதானுகும்
விட்டெழுத்துந் தொட்டெழுத்தும் விடாதெழுத்தும்
    வேதாந்த சற்குருவை வணங்கிக்கேளு
சட்டமிட்ட வாதார மம்மட்டாச்சு
    சண்முகமே யாதாரக் கருவைக்கேளு
இட்டமுடன் மனதைவெல்லுஞ் சினத்தைவெல்லும்
    திருச்சிற்றம்பலம்போற்றி ஞானம் முற்றே. (௩௩)

Colophon:

சட்டைமுனியார் அருளிச்செய்த மெய்ச்சுருக்கம் முற்றும்.

அத்துபிஞூ பங்குனிமீ˚ ௨௨ புதவாரம்.

(கு-பு.)—

இந்நூல் யோகநிலையிலிருந்து பின்னர் அதுவாயிலாக ஞானம் பெறும் மார்க்கத்தைச் சொல்லுவதெனத் தெற்றென விளங்குகிறது. அங்ஙனம் ஞானம்பெற்றுச் சித்தராதற்குரிய வழியைக் கூறுவதால் இதுவும் சித்தர் நூல்களைச் சார்ந்ததென்றே துணியப்படுகின்றது. முப்பத்துமூன்று செய்யுட்களான் முற்றுப்பெற்றுள்ளது. பிழைமலிந்துள்ளது.

(*i*) இராமதேவர் வைத்யம் எண்பது.

IRĀMADĒVAR VAIDYAM EṆPATU.

Foll. 178—200. Fol. 201 is left blank.

A treatise dealing mainly with medicine and incidentally with Yōgam and Ñānam.

Complete in 80 stanzas.

Beginning:

ஸ்ரீராமதேவர் அருளிச்செய்த வைத்தியம் அக.

ஆதியிலே யமைத்தவிதி யெழுத்தைக்காண
அருளான நந்திபாதம் அன்பாய்க்கொண்டு
சோதியென நின்றிலங்கும் நாதரூபி
சுருதியுள்ள வாலைமனோன்மணியைப் போற்றி
நீதியுடன் சஞ்சாரசமாதி செய்து
நின்றதடா வாதியந்தம் நிலைக்கவேதான்
வாதியென வந்தோர்க்குக் குருவாயிந்நூல்
வசனித்தேன் எண்பதுமே வொன்றுமாமே. (க)

ஒன்றா[கி](யிர)ண்டா யொன்று மிரண்டும்
உடன்சேர்ந்த கருவறியா ருலகவாதி
நன்றாகச் சொல்லுகிறேன் கேளுமக்காள்
நாவிரண்டுமொன்றான கருவைப்பாரு
பன்றான சோதியடா பரப்பிரமமாச்சு
பார்க்கவென்றா லதின்பெருமை பகரொண்ணாது
கண்டாலுஞ் சொல்லார்கள் நாவோவில்லை
கடுங்கார மானதொரு கல்லைவாங்கே. (உ)

(* * * *)

யோகம் - ஞானம் :

வாசிதனை யறியாம லுலகத்தோர்கள்
மாண்டார்கள் மூச்சடக்கி மதியைப்பார்த்து
நாசிதனில் நின்றிலங்கும் நாதரூபி
நலமான பூரணமாம் வாசிரூபி
தேசியென நின்றபர தேசியான
திகம்ப(ர)மாம் பூரணத்தைத் தினமுநோக்கி
பாசிமனக் கசடகற்றி நின்றால்மைந்தா
பதியறிந்து வாசிதனைப் பணியலாமே. (கஎ)

பணியகுருபதி யறிந்தால் பலிக்குஞ்சித்தி
பகுத்தறிவில் நின்றுமதிபதியை நோக்கில்
கனியமிக மதி யமிருதங் கசிந்துகாணும்
கண்மூக்கு மத்தியிலே கருதிப்பாரு
வ[ளி](ழி)காணா வமுதகலைமதியை நே[ளா](நா)க்கும்
வந்தமதி பருதிதனை வணங்கிக்கொள்ளும்
மணியான [சசீறோன்](சிரோ)மணியை வணங்குமக்காள்
வந்தமதிப் பருதிதனை வணங்கிப்பாரே. (கஅ)

End :

தானனகற்பமது கொள்ளும்போது
 தயவாக நூலெடுத்துப் பார்க்கும்போது
தேனனை மதியமிருதங் கொள்ளும்போது
 சிவபூசை குருபூசை செய்யும்போது
நாணை வகம்போககிநீ தானென்று
 நன்மையுடன் மௌனமாயிருக்கவேண்டும்
கோனனை சத்குருவைக் காக்கவேண்டும்
 குணமுடைய பூரணத்தை வணங்கிமுற்றே. (அஉ)

வணக்கமுள்ள விந்நூலை வெளிவிடாதே
 வஞ்சருடன் பேசாதே வாயாடாதே
இணக்கமில்லா மாதருடன் இணங்கவேண்டாம்
 இன்பமுள்ள வயித்திய நூலீயவேண்டாம்
மணக்குமவர் மதிதனிலே மனதைவைத்து
 வைத்திய நூலென்பதுவும் வகையாய்ப் பார்த்துத்
தனக்குமிது பொ[று](ரு)ளெனவே வணங்கிப்போற்றிச்
 சதாகாலங் குருபதத்திற் சார்வாய்முற்றே. (அங)

Colophon :

குரோதனஹூ சித்திரைமீ" எஉ சோமவாரம் ஸப்தமி உத்திராட நட்சத்திரத்தில் ஸ்ரீராமதேவநாயனார் அருளிச்செய்த [சூத்திரச] வைத்திய சூத்திரம் எண்பத்தொன்றும் எழுதி நிறைவேறியது, முற்றும். இது, திருமயிலை தலையாரித் தெருவிலிருக்கும் புலிவைத்திய முத்துசுவாமி நாயகர் புத்தகம் என் றறியவும்.

(கு-பு.)—

இந்நூல், இராமதேவர் என்னும் சித்தர் ஒருவரால் இயற்றப்பெற்றது. முக்கியமாய் வைத்திய விடயங்களையும் நடுவில் யோகம் ஞானம் என்றவைகளையும் எடுத்துப் புகல்வது. எண்பது செய்யுள்களான் முற்றுப் பெற்றுள்ளது. இதிலே அநேக மருந்துவகை, பஸ்மவகை, வேகியவகை, சூர்ணவகை, மெழுவகை இன்னும் இன்னோரன்ன விடயங்கள் பலவும் அருமையாகக் கூறப்பட்டுள்ளன. ஏடுகள் சிதைந்துள்ளன. நடுவில் அகத்தியரது பட்சி நூலொன்றையும் கொங்கணருடைய நூலொன்றையும் காணும்படி நுதலிச் செல்கின்றது.

R. No. 945.

Palm-leaf. 8½ × 1 inches. Flol. 172. Lines, 7 in a page. Tamil. Much injured.

Purchased in 1927—28 from M.R.Ry. C. V. Jāmbuliṅgam Piḷḷai of Mylāpore.

(*a*) திருமூலர் வைத்யம் அறுநூறு.
TIRUMŪLAR VAIDYAM AṞUNŪṞU.

Foll. 1—112*a*. Fol. *b* is left blank.

A work in verse dealing with the diagnosis of diseases, their symptoms and with the appropriate medicine for curing them by ; Tirumūlar.

Complete.

Beginning :

திருமூலர் அருள்ச்செய்த [திருமந்தரம்] வைத்தியம் அறுநூறு.

காப்பு :

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை
இந்துவிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை
புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே. (க)

உன்னிய கருப்பக்குழியாம் வெளியிலே
பன்னிய[ஞ](நா)தம் பகர்ந்த பிருதுவியும்
வன்னியும் வாயுமாயுறு சுக்கிலம்
மன்னிச்சமனாய் வளர்க்குமுதகமே. (க)

உதகமுதிர முறுங்கனல் வாயுவால்
சிதகற வங்கங்கள் செய்துமுடித்திடும்
பதகுறு மே[ரு](ரா)மம் பகுந்த தசையதில்
திதகுற வொன்பது வாயிலு நீங்குமே. (௨)

End :

பாத்திடு மாயிரம்பாட்டிலு மெத்தவே
கோத்திடு மைஞ்ஞூறிற் கொட்டினேன்ஞானத்தைச்
சேத்திடு மிரண்டிரண்டையு மொன்றாகக்
காத்திடுஞ் சித்தைக்கடைந்தெழில் வெண்[ணை]ணையே (௬௨௭)

வெண்ணெய் கடைந்தேன் விரைந்தேழுவட்சத்தில்
எண்ணெயைப்போலே யிதயமுருக்கினேன்
கண்ணைத்திறந்த கடுஞ்ஞான வேதாந்தி
என்றைக்கும் பார்க்கலாமிந்த நூன்முற்றுமே. (௬௨௮)

Colophon :

விசய ௵ மார்கழி ௴ ௰௯௨ குருவாரம் புனர்பூசத்தன்றைக்குத் திருமூலர் அருளிச்செய்த [திருமந்திரம்] (வைத்தியம்) எழுதி நிறைந்தது. முற்றும்.

(த-பு.)—

இந்த நூல், 'திருமூலநாயனார்' என்னும் சித்தரால் இயற்றப்பெற்றது. வைத்திய விஷயத்தை விரித்துச் சொல்வது. நிற்க இதற்குத் 'திருமூலர் திருமந்தரம்' என்ற பெயரே அநேக பிரதிகளில் காணப்படுகிறது. ஆயினும், அப்பெயரான் அச்சிட்டு வெளிவந்துள்ள நூலிலே இதன் செய்யுள் ஒன்றேனுங் காணப்படவில்லை. அந்நூல் முகத்தே 'திருமூலர்' வைத்திய சாத்திரமும் ஒன்று இயற்றியுள்ளார் என்று குறித்திருக்கிறார்கள்; 'திருமூலர்

வைத்தியம் அறுநூறு' என்ற பெயரான் ஒரு நூல் மதுரையில் அச்சிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்நூல் செய்யுட்களும் அறுநூறாயிருப்பதால் இந்நூலுக்குத் 'திருமூலர் வைத்தியம் அறுநூறு' என்ற பெயரே இங்கு வைக்கப்பட்டது.

(b) திருமூலர் திருமந்திரசூத்திரம் இருநூறு.

TIRUMŪLAR TIRUMANTIRA SŪTTIRAM IRUNŪU.

Foll. 113—133b. Foll. 134—136 are left blank.

Same work as that described under R. No. 503 ante.

Incomplete.

(கு-பு.)—

இந்நூல், திருமூலர் இயற்றியதென்று தெரிகின்றது. இது, மூவருடக் காட்லாக்கின் 503-ஆவது நம்பர் பிரதிபோன்றது. இதிலே (௲) நூற்றூறு செய்யுட்களே உள்ளனவாதலின் முற்றுப் பெறவில்லை. இதன் பின்னர் மூன்று வெற்றேடுகள் உள்ளன.

(c) திருமூலர் வாலைதீட்சை.

TIRUMŪLAR VĀLAI DĪKṢAI.

Foll. 137—143b. Fol. 144 is left blank.

On the conduct of the worship of the Goddess Bālā who is a manifestation of Śakti, by Tirumūlar.

Complete.

Beginning :

ஹரி ஓம் : திருமூலர் அருளிச்செய்த வாலைதீட்சை. குருவேதுணை-

காப்பு.

ஆனைமுகத்தனை யடியிற்கணேசனை
நாணையமாக நமெந்திரத்தனை
வானை யீசன்வடிவு மகன்றனை
நாணையமாக நவில்வைப்போமே. (க)

வாலைபுவனை வடிவுளநாயகி
யாலைத்திரிபுரை யமர்ந்திடுஞ்சாமளை
கோலையமான கொடிகியாமளையொடு ?
மேலையபஞ்சரி சடாட்சரிபூசையே. (க)

பூசைதிசைதீட்சை புகட்டுவர்சித்தர்கள்
ஓசையுலகத்தோ ருறும்பூசைபஞ்சபஞ்ச
மாசையாய் வாலையடுக்குஞ்சம் சாரிகள்
காசைபுவனைக் கடுமந்திரர்க்கே. (உ)

கடுமந்திரம் வீடுகெண்டதிரிபுரை
கடுமந்திரயோகங் கண்டுசெபஞ்செய்வார்
நடுமந்திரஞானி நாடுவார்மூவரும்
ஓடுமந்திரமாமொடுங்கியவாலையே. (ரு)

* * * *

End—

முத்திபிறந்தது மூப்பாழ்வெளியிலே
சத்திபிறந்தது சத்குருபாதத்திற்
பத்திபிறந்தது பாரமார்த்தத்திலே
சித்திபிறந்தது சிறுவாலைமுற்றுமே. (சக)

(கு-பு).—

இந்நூல் யோகம் எனு நூலைச்சார்ந்ததென்று தோன்றுகிறது, திருமூலர் இயற்றியதாக உள்ளது. நாற்பது செய்யுட்கள் உள. வாலையைப் பூசிக்கும் விதமும் அவட்குரிய மந்த்ரமுங் கூறப்பட்டுள்ளன.

அகத்தியர் வைத்யசூத்திரம் ஐம்பது.

AKATTIYAR VAIDYASŪTTIRAM AIMBADU,

Foll. 145—164b, Fol. 165 is left blank.

A treatise in 50 stanzas dealing with medicine. By Akattiyar

Complete.

அகத்தியர் வைத்யம் ஐம்பது.

நாடியதோரகண்ட பரிபூரணமாய்நின்ற
நாதமுற்றகணேச னுடுகெந்தன்காப்பு
ஆடியதோர்சிவனுரு மென்னைப்பெற்ற
வாத்தாளு நாவதனிற் குடிகொண்டேதான்
பாடியதோர் வைத்தியமைம்பதுதான்சொல்வேன்
பண்பான புலத்தியனே யிந்நூலோடே
தேடியதோர் பூரணசூத்திரத்தில்நன்றாய்த்
தீட்சையொடு கருகுருவுந் திறமிதானே. (க)

தானான ஞானமது பத்துநூறு
தப்பாமலதைக்குறுக்கிச் சார்ந்துசொன்னேன்
தேனான வாதமதி[து]லட்சங்காப்பு
செப்பினேன் பனிரெண்டுகொண்டந்திறமாய்ப்
பானான விதைக்குறுக்கி யிருநூறுசொன்னேன்
பாங்கானவைத்தியத்தி விரண்[டு]டிலட்சங்
கோனானவதைக்குறுக்கி லட்சஞ்சொன்னேன்
கூறியதிற்படும்பகுதி கூறினேனே. (உ)

* * * *
* * * *

End:

தானுனை சவுக்காரமிது தானப்பா
சாதகமாய் நூல்தோறு மொளித்தார்சித்தர்
வீணனபயல்களுக்குச் சொன்னயானல்
விண்ணிடிந்து தலைதெறிக்குஞ்சொன்னேனப்பாரு
ஊனனை நாய்போலே திரிந்தலைவாய்ச்சொன்னேன்
உண்மையாய்மனதில் வைத்து[க்கை]முறையாய்ச்செய்து
தேனனசவுக்காரத்தைச் சுன்னமாக்கிச்
சயமாகவே யெட்டெட்டுங் கண்டால்நீறும். (சசு)

கண்டக்கால் வாதமெல்லாமடிக்கிழ்போற்றுங்
கருவானசவுக்காரமகிமைதன்னை
விண்டக்கால்நசித்திடுவாய் நூல்கூடாதே
வேதாந்தஞானி யென்றலவர்க்கீவாய்ப்பாரு
தொ[ண்று](ண்டு) செய்து பதினறுவருடங்கள்காத்து
சோதித்துப் பின்பவர்க் கீவாயப்பா
சண்டமாருதம்போலே வெளியதாகச்
சாற்றியதோர் வைத்தியமைம்பதுதான்முற்றே. (ரு0)
அகத்தியர் வைத்தியம்ஐம்பது எழுதிமுடிந்தது.

(கு-பு).-

இந்நூல்தான் ஐம்பது பாடல்களான் வைத்தியத்தைக் கூறுகின்றது. அகத்தியர் இயற்றியதாகக் கூறியிருக்கிறது. பிழைகள் அதிகமாய்ப் பொதிந்துள்ளன. இதிலே ஐம்பது பாடல்களும் இருக்கின்றன. ஏடுகள் சிதைந்துள.

அகத்தியர் பச்சை பதினறு.

AKATTIYAR PACCAI PADINĀṚU.

Foll. 166—171, Fol. 172 is left blank.

Same work as that described under R. 145 (e) ante., but with variations in the readings.

Complete.

(கு-பு).—

இந்த நூல் மூவருடக் காட்லாக்கில், 145 (e) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. அகத்தியர் இயற்றியது. முற்றுமுள்ளது. இது சில பாட பேதங்களுடன் தென்படுகிறது. சிதைந்துள்ளது.

R. No. 946.

Palm-leaf $7\frac{3}{4} \times 1\frac{1}{8}$ inches. Fol. 239. Lines, 6—8 in a page. Tamil. Much Injured.

Purchased in 1927–28 from M.R.Ry. C. V. Jambulingam Piḷḷai of Mylapore.

(a) தந்வந்திரி நிகண்டு முந்நூறு.

DHANVANTIRI NIGHAṆṬU MUNNŪṞU.

Foll, 3-127.

Same work as that described under R. No. 145(a) ante.

Complete.

(கு-பு).—

இந்நூல் சித்தர் நூல்களைச் சார்ந்த வைத்திய விடயங்கள் பலவற்றையும் நுவல்கின்றது. மூவருடக் காட்லாக்கு 145 (a) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. முந்நூறு செய்யுட்களால் அமையப்பெற்றது. இதில் நூல் முழுமையும் உள்ளது. ஏடுகள் சிதைந்துள்ளன. இதன் முன்னர் இரண்டேடுகளில் வசன நடையால் பல்வலிக்கு ஓர் மருந்துவகையும் 'புதிது' கிரையாலியற்றும் ஓர் மாத்திரைவகையும் ஆகிய இவ்விரண்டும் எழுதப்பெற்றுள்ளன. ஏடுகள் மிகக் கிழிந்திருப்பதால் படிக்கவியலாமல் இருக்கிறது.

(b) தன்வந்தரி கருக்கிடை இருநூறு.

DHANVANTARI KARUKKIḌAI IRUNŪṞU.

Foll, 128—193.

A treatise in verse on medicine dealing with the preparation of different kinds of medicine, medical powders, etc., By Dhanvantari.

Complete.

Beginning:—

தன்வந்திரி வைத்யம் இருநூறு.

ஆதியந்தமல்லாமல் அகண்டபரிபூரணமாய்ச்
சோதியந்தவாழ்மயிலே சொற்பெரிய—வாதியேகேள்
நாதியந்தமான நல்லவொருசரசுவதியே
வாதியெந்தன் பங்கிலுறைவாழ்வே (க)

வாதியென்றவல்லபையின் வளர்முகத்தின்கணபதியைச்
சோதியென்ற மணிவிளக்கின் சொற்பெரிய—நாதிமறை
நாதியென்றநான்முகவ னல்லவொருபிரமனவன்
காதியென்றென்றுவில் கணக்கே. (உ)

கணக்கென்ன[வயி](வைரவர்தன்) பாதங்காப்பு
கனமானநந்தீசர் பாதங்காப்பு
வணக்கென்னநாதர்கள் பாதங்காப்பு
வனமானசத்குருவின் பாதங்காப்பு
அணக்கென்ன ரவிமதியின்பாதங்காப்பு
ஆனதொரு சதாசிவத்தின்பாதங்காப்பு
மணக்கென்னதேவிசிவகாமிவாலை
மகத்தானதேவியம்பாள் பாதங்காப்பே. (ங)

காப்பென்றநந்தீச ரவரிடத்திற்
    கருவாக யானடுத்துப்பணிவிடைகள்செய்தேன்
வாப்பென்றவென்குணத்தை யறிந்தாரையர்
    எனையழைத்தாரவர் முன்னேயேகி நின்றேன்

ஆப்பென்றவமுதமதையூட்டினார்பார்
    அன்பானவுமையனைக்காதிற்சொன்னா
நாப்பெனறவமுதரசங்கனிந்ததையா
    நலமானசகலசித்து நினைவிலாமே. (௪)

* * * *

* * * *

End:—

பாரப்பா[ஞ](நா)ல்வேத தொகுப்பைக்காணு
    பண்பானவேதாந்தக்குறியைக்காணு
ஆரப்பாவாசியுடைக் குறியைக்காணு
    அப்பனே கண்ணோட்டமறிந்துபாரு
நேரப்பாநின்றநிலைதன்னைக்காணு
    நேரானகருவிகளோடொக்ககாணு
நாரப்பாநாதாந்தவைத்தியந்தான்[னிந்நூல்]
    நலமானகருக்கிடைதான்நன்றமுற்றே. (உ௱௧)

* * * *

Colophon:

சய௵ புரட்டாசி௴ ௧௬௳.
தன்வந்தரியார் அருளிச்செய்த வைத்யக்கருக்கிடை
சூத்திரம் உ௱ எழுதி நிறைந்தது முற்றும்.

(கு-பு).—

இந்த நூல் தன்வந்திரியார் இயற்றியதாகும். வைத்தியத்தைச் சார்ந்தது. இதில் முற்றும் உள்ளது. ஏடுகள் பல செல்லரிப்புண்டுள்ளன. இதுதான் அநேக மருந்து வகைகளையும் பற்பல பஸ்ம வகைகளையும் செந்தூர வகைகளையும் இன்னும் இன்னோரன்ன பலவகைகளையும் தெளிவாக உணர்த்துவது.

தன்வந்திரி வைத்தியம் எழுபது.

DHANVANTIRI VAIDYAM ELUPADU.

Foll. 194—218.

Similar to the above; by Dhanvantari.

Complete in 70 stanzas.

Beginning:—

தன்வந்திரி வைத்தியம் எழுபது.

ஆதியான்கணேசன்காப்பு வாதிமறைவேதங்காப்பு
சோதியாம்முனிவர்காப்பு சோதித்தபெரியோர்காப்பு
நீதிசேர்செம்பொன்காப்பு நிலைத்திடுஞானங்காப்பு
ஆதியாய்நின்றசக்தி யமைத்திடுந்தேவிகாப்பே. (க)

காப்பாகுமென்குருதான நந்தியீசர்
கருணைபெறவெந்தனக்குக் கருவாய்ச்சொன்னார்
வாப்பாகுமசுவினியே யுந்தனுக்கு
வகையாகச்சொல்லுகிறேன் மைந்தாகேளு
நீப்பாகும்பிருதிவியோடப்புமாகும்
நிலைத்ததொருதேயுவொடுவாயுவாகும்
ஆப்பாகுமாகாயத்தோடைந்துமாகும்
அறிந்ததொரு பிருதிவியுமப்புமாமே. (உ)

* * * *

பேரானவுத்திரத்தில் மூவாயிரம்பேர்
பிரபல்லியங்கைகண்டு தேர்ந்தார்பாரு
ஆறானவென்மொழிதான் மூன்றிலட்சம்
அப்பனேயதிலிருக்கும் வாதமெல்லாம்
வாறானமுந்நூற்றிற்றிறந்து சொன்னேன்
வளமானமுந்நூற்றைப்பாரு பாரு
நாறானவென்மொழியைக்கண்டபேர்க்கு
நலமாகச்சிவலோகப்பதவிமுற்றே. (எ௰)

(கு-பு).—

இந்நூலும் வைத்தியத்தைச் சார்ந்தது. தன்வந்திரியாரால் இயற்றப்பெற்றது. எழுபது செய்யுட்களால் அமைந்தது. இதில் முழுமையும் உள்ளது. ஆதியில் பஞ்சபூதத்தொகுப்பு விளக்கப்பட்டுள்ளது. பின்னர் கரு உத்பத்தியாகும் விதமும் சரீரவிலக்கணமும் உள. ஏடுகள் செல்லரிப்புண்டிருக்கின்றன.

(*d*) தன்வந்திரி செயநீர் ஐம்பது.

DHANVANTIRI ŚEYANĪR AIMBADU.

Foll. 219—239.

Deals with certain liquid preparations useful for alchemy and with the development of foetus in the womb; by Dhanvantri.

Complete.

Beginning :—

ஆதியெனுஞ்சின்மயத்தின் அருளைப்போற்றி
யகண்டபரிபூரணமாங் குருவைப்போற்றி
நீதிசேர்வாணிகுருவம்பாள்போற்றி
நினைத்ததொரு வாரணத்தின்விசுவன்போற்றி

ஆதியெனுமாதியந்தஞ் சோதிபோற்றி
மகத்தானகுண்டலித்தாய் மகிமைபோற்றி
வாதியென்றபேரான வழலைபோற்றி
வகாரசிவயோகமெனவாசிபோற்றி. (௧)

போற்றவேகணபதியுங் கந்தன்காப்பு
புகழானமுன்னோர்கள் பாதங்காப்பு
ஆற்றவே பூரணமா மருவேகாப்பு
அகண்டசதாசிவத்தினடிபணிந்தேன்காப்பு
போற்றவேமுக்குருவே சத்குருவாங்காப்பு
வளமானகுருநந்தி பாதங்காப்பு
நாற்றவெசெய (நீ)ரைம்பதுவேகாப்பு
நவமானசிவசத்தி பாதங்காப்பே. (௨)

* * * *

* * * *

End.—

ஆச்சென்றவறிவுள்ளோ னசுவனியேமைந்தா
அரகராசகலசித்து மடைவாயெய்தும்
மாச்சென்றவிந்நூலைப் பதனம்பண்ணு
மகத்தானபாடலைம் பதுந்தான்மைந்தா
நாச்சென்றநன்மையது மனதாலெண்ணு
நவமானசிவபதத்திலமர்ந்து தில்லு
காச்சென்றவிந்நூலை யறையில்வைத்துக்
கண்மணியேதொழுதுநித்தம் போற்றுமுற்றே. (௫0)

தன்வந்திரிபகவான் அருளிச்செய்த செயநீர் ஐம்பதும் முற்றும்.

(கு-பு).— இந்த நூல் செயநீர் வகைகளையும், கற்பவகைகளையும் பற்றிக்கூறுகின்றது. ஐம்பது செய்யுள்களால் அமையப்பெற்றது; தன்வந்திரி இயற்றியது.

R. No. 947.

Palm-leaf. 9¼ × 1 inches. Fol. 225, lines. 5 on a page. Tamil. Much injured.

Purchased in 1927—28. from M. R. Ry. C. V. Jambuliṅgam Piḷḷai Avargal of Mailapūr Madras.

(*a*) இராமதேவர் பூஜாவிதி சிவயோகம் இருநூறு.

IRĀMADĒVAR PŪJĀVIDI ŚIVAYŌGAM IṞUNŪṞU.

Foll 2—81 *a* ; fol. *b* is left blank

A treatise dealing with medicine, alchemy, Yōga and Ñāna of the Śiddhas. In the beginning, the conduct of the worship of Śakti with a view to becoming a Śiddha is described.

Complete.

Beginning:—

தேவீஸஹாயம்.

இராமதேவர் அருளிச்செய்த பூசாவிதி சிவயோகம் (உ௱.)

மூலமெனுமமுதப்பொருளா முத்திநடுவணையில்
    மூதண்டமானதொரு பிரம்மத்துக்கப்பால்
ஞாலமெனுந்தவமுடைய சத்திபதிமேலே
    நாதாந்தப்பெருவெளியினடுவொளியின்கீழே
நீலமிகுநெருப்பாறு மயிர்பாலத்தப்பால்
    நிறைந்தபரிபூரணமாய் நிட்களமதாகிச்
சீலமிகுந்தவமுடையோர் இருதயமேதானாய்ச்
    சிறந்துநின்றபரமகுருசீர்பாதந்துணையே. (௧)

பாதமெனும்வாசிதனை யறியவேண்டி
    பக்தியுடன்மனோன்மணியைக் கண்டுபோற்றி
வேதமெனும்பொருளறிய வேண்டுமென்று
    வேண்டினேன் நாதாந்தவேதத்தாயும்
நீதமுடன்வாராமதேவா நீயென்று
    நிலைநிறுத்திமதியமுதம் நினைவாயீந்தாள்
போதமிகுமதியமுதங்கொண்டபோழ்து
    புத்தியுடன்பூசைவிதி புகலென்றேனே. (௨)

புகலென்றபோதில் மனோன்மணிதான்வந்து
    பூரணமாய்மதியமுதம் புகட்டினாள்பார்
அகமென்றவகமதுவு முத்தியாச்சு
    வம்பரத்தின் தருசனமுமடுக்கலாச்சு
சகமென்ற சிவமயமுந்தெளியலாச்சு
    தேவாதிதேவனென்றபேருமாச்சு
சுகமென்ற பூசைவிதி தன்னைவந்தச்
    சுத்தமுள்ளசக்தியைநான் தொழுதேன்பாரே. (௩)

*   *   *   *
*   *   *   *

End:—

தனித்திருந்து சத்தி சிவபூசைபண்ணு
தண்மையுடன் பா[ன]லமுதந்தானேகொள்ளு
தொனித்திருந்த பூரணத்தைச்சுகமாய்ப்பூசி
சுகமாகச்சிவயோகத்துறையில்நில்லு
மணித்திருத்தாள் கமலமதிலமுதங்கொண்டு
மயங்காதபூரணத்திற் றீபங்காணும்

முற்றான சிவயோக மிருநூறுதன்னை
 முறையான குருவேயென் றெடுத்துப்பார்த்து
சித்தான சித்துவினை யாடுமைந்தா
 சிவயோக மார்க்கமடா திறந்தான்மெத்த
பற்றாசை கொண்டுமன மௌனமாகப்
 பதிவாகச் சிவயோகம் இருநூறுமப்பா
வித்தான பிறவியது வற்றுப்போகும்
 மேலான சிவயோகம் விளங்குமுற்றே. (உ௱க)

Colophon:

சத்குரு கடாட்சம் முன் நிற்கவும். தேவிசகாயம். பிலவ௵ கார்த்திகைமீ உ௰சு உ குருவாரம் ஸ்ரீ இராமதேவர் அருளிச்செய்த பூஜாவிதி. சிவயோகம் இருநூறும் எழுதி நிறைந்தது. முற்றும். மீனாட்சி துணை.

(கு-பு).—

இந்த நூலும் சித்தர் நூல்களைச் சார்ந்தது. இராமதேவரால் இயற்றப் பெற்றுச் சித்தராதற்கு இச்சையுடையார் வழிபடுந் தெய்வத்தைப் பூசிக்கும் விதத்தையும், யோகம், ஞானம், வைத்தியம், இரஸவாதம் முதலானவற்றை யும் விரிவாக உணர்த்துவது. இருநூறு செய்யுட்களான் அமையப்பெற்றது. முற்றும் உள்ளது.

(b) இராமதேவர் பரஞானகேசரி விநோதம் நூறு.

IRĀMADĒVAR PARAÑĀNAKĒŚARI VINŌDAM NŪṞU,

Foll. 82—124*a*, Fol. 124*b* left blank.

A treatise by Ramadēvar describing the wonderful things that he perceived through the grace of the goddess Ñānakēsarli

Complete.

Beginning:

ஸ்ரீராமதேவர் அருளிச்செய்த பரஞானகேசரி விநோதம் நூறு.

ஆதிபரா பரஞான கேசரியைத்தானும்
 அசையாமல் நெஞ்சகத்தி லறிவதனால்நிறுத்தி
நீதியெனும் பரஞான கேசரிவிநோதம்
 நேர்மையுடன் யான்பாடக் குருவருளேசரணம்
சாதியெனு மெழுவகையுந் தன்வசமாய்க்கண்டு
 சச்சிதாநந்த மென்றவமூர்த்த மதைக்கொண்டு
சோதியெனுஞ் சகச்சோதி ஞானமயமான
 தூண்டாத தீபமதைத் துணையெனக்கொண்டேனே. (க)

துணையான தீபமடா தூண்டாததீபஞ்
 சுயஞ்சோதி யானதொரு தீபமதிற்சேர்ந்து
வினையான கருவிகர ணாதிகளை நன்றாய்
 விவரமுடன் தானறிந்து வகக்கனலைமூட்டிச்
சுனையான மோகமெனுஞ் சுகதுக்கமிரண்டுஞ்
 சுட்டந்தப் பதியான துருவமதில்நின்று
நுனையான சுழிமுனை யென்னலாமத்தீவில்
 மூக்காலும் வலம்வந்து முன்னிலையைக்கண்டேனே. (உ)

கண்[ண](ட)ந்த முன்னிலையிற் பரஞானதீபங்
கருவான தீபமதிற் கருணைபெறநின்று
கொண்டந்தப் பரஞான கேசரியைக்கண்டு
கூர்மையுட னவள்பதியி னேர்மையுடன்நின்றேன்
விண்டந்தக் கேசரியும் வாராமாவென்று
விவரமுடன் விநோதவகை யருளுமிகவீந்தாள்
[ஆ](அ)ண்டர்பிரா னருள்கொண்டி ராமனுடைவாக்கியம்
அருளான வாக்கியமென் றறிந்துமிகநில்லே. (௩)

* * * * *

* * * * *

கண்டுமிக நின்றவொரு ஞானகேசரியைக்
கருவாகவிநோத மயமாக[னு] நூறதுவாய்
விண்டுமிகக் கொண்டந்தக் குருவினிடஞ்சென்று
விநோதமய மானகுரு ஞானகேசரியைக்
கொண்டந்தப் பாதமதில்வைத்து மிகநின்றேன்
குணமான பரஞான கேசரியை[நீ](நான்)தான்
பண்டுள்ள பொருள்களைநீ விநோதமயமாகப்
பாடினதை யாரறிவார் பயனறியத்தானே.

* * * * *

End :

தானேதான் தானவனு மிருந்ததுகொண்டு
தண்மையுள்ள பரஞான கேசரியைநோக்கித்
தேனேதா னதிலு[மிக] (மு)ருசியாநின்ற
திருவான கேசரி விநோதநூறும்
பூனேதான் மனதினிலே மௌனமாகப்
பூண்டுகொண்டு வட்டமா சித்துப்பார்க்க
வீணேதான் போகாதே விநோதம்பார்க்க
மெஞ்ஞான குருதீப சரணமுற்றே. (௱)

முத்தான பரஞான கேசரிவிநோதம்
முழுதுமிதை மௌனமதாய் மனதிற்கொண்டு
சித்தான சித்துவிளை யாடுமைந்தா
சிவயோக புனிதமதிற் சேர்ந்துநில்லு
வித்தாரந் தான்பேசித் திரிவாரோடே
வீரியங்கள் பேசாதே விண்ணைநோக்கிக்
கர்த்தாவே கதியெனவெண் கமலநோக்கி
கர்ப்பூர தீபமதிற் கருத்தாய்முற்றே. (௱௧)

Colophon :

ஸ்ரீ ராமதேவர் பரஞானகேசரி விநோதம் நூறு எழுதி முற்றும்.

(கு-பு.)—

இந்த நூலும் சித்தர் நூலைச் சார்ந்தது என்று தெரிகிறது. இதுவும் ‘ஞானகேசரி ஐம்பது’ என்ற நூலினும் வேறாயது. இது நூறு பாடல்களால்

அமைந்துள்ளது. இராமதேவர் இயற்றியது. இந்நூலாசிரியர் தாம், யோக மார்க்கத்தால் 'ஞானகேசரியென்ற தேவதையை'க் கண்ணிற் கண்டு அத னருளாற் சித்திபெற்று விநோதமாகத் தாம் கண்டவைகளை நூறு பாடல்க ளாய் இயற்றியதாக நான்முகத்துக் கூறுகின்றார்; ஆதலின், இந்நூலுக்கு இப்பெயர் காரணப்பெயராய் அமைந்ததுபோலும். பின்னர்வெற்றேடு ஒன்றுள்ளது.

(c) இராமதேவர் தண்டகம் நூறு.
IRĀMADĒVAR DAṆḌAKAM NŪṚU.

Foll. 125—168*a*, fol *b* left blank.

Deals in 100 stanzas with Yōga, Ñāna, medicine and alchemy.

Complete.

Beginning:

ஸ்ரீராமதேவர் அருளிய தண்டகம் நூறு.

மூலமுத லாதாரவிஞ்சை தனையோதி
 முனையான சு[ளி](ழி)முனையின் மேலாகநின்று
பாலமெனு மயிர்ப்பாலத் தந்தமதிற்றாவிப்
 பத்திகொண்டு நெருப்பாறிற் பதிவாகச்சென்று
சீலமுட னப்பதியில(க)க்காலே [ஞ](நா)ட்டிச்
 சின்மயமாஞ் சத்குருவைச் சிந்தைதனில்நினைந்து
தூலமுடன் சூட்சுமமாய்க் கா[ற](ர)ணமாய்நின்ற
 தொந்திவயிற் றைங்கரனைத் துணையெனக்கொண்டேனே. (௧)

கொண்டவொரு சிவஞான கேசரியைக் கண்டு
 குருவான மேருகிரி நடுவான பதியிற்
சென்றந்த மதியமுத மருவியதையுண்டு
 திருவான பூரணியைச் சிந்தைதனில் நினைந்து
அண்டர்பிரா னருளதனை யனுதினமும் நோக்கி
 அன்பான சிவயோகத் தந்தமதில் நின்றேன்
கண்டந்த மனோன்மணியும் வா ராமாவென்று
 கருவான தண்டகங்கள் கடாட்சித்தாள்பாரே. (௨)

(* * * *)

End:

போற்றடா பத்துவகைச் சூம்திரமொன்றாகப்
 புந்தியுடன் கோவைதன்னைப் பூரணமாய்ப்பார்த்தால்
நாற்றிசையும் வெல்வதற்குக் கருமானந்தோன்றும்
 நலமான காரியமும் வகையுடனே காணும்
பார்த்து[னீ](நீ) மகி[ளா]ழாமல் கேவலமாய் நின்றால்
 பரமான கைலாசவாசலது (தோன்று)[ணு]ம்
காத்து(நீ) கைலாசவாசல்தனைக் கண்டால்
 கண்ணுன நடுமனையின் கமலமது முற்றும். (௱௧)

இராமதேவர் தண்டகம் எழுதி நிறைந்தது முற்றும்.

(க-பு)—

இந்நூலும் சித்தர் நூல்களைச் சார்ந்ததெனத் தோன்றுகிறது. இதை இராமதேவர் என்னுஞ் சித்தர் இயற்றியதாகத் தெரிகிறது. இது யோகம் ஞானம் வைத்தியம் இரஸவாதம் என்றிவை முதலாம் பலவிடயங்களை உணர்த்துகின்றது. முற்றும் உள்ளது.

(d) இராமதேவர் கருமானச் சுருக்கம் முப்பத்தொன்று.

IRĀMADĒVAR KARUMĀNACCURUKKAM MUPPATTONṞU.

Foll. 169a—180b.

Same work as that described under R. No. 275 (h) ante.

Complete.

Beginning:

இராமதேவர் அருளிச்செய்த கருமானச் சுருக்கம் முப்பத்தொன்று.

ஆதிகுருவான வொருபிரமன் பாதம்
அனுதினமு நெஞ்சில்வை[ற்றி]த்தருளை நோக்கிச்
சோதி வெளிக்கப்பாலே துலங்குஞ்சத்தி
துணையெனவே கருமானச் சுருக்கஞ்சொல்ல
நீதியுள்ள வாலைமனோன்மணிதான் வந்து
நிலைத்தபொருள் கரு(மறைப்)பை நிலத்[தி](து)ள்ளோர்க்குச்
சோதனையாய்ச் சொல்லுவையோ ராமாவென்று
சொல்லி மனக்கசடகற்றித் துதித்தாள்பாரே. (க)

பாரப்பா வவளுடைய கடாட்சத்தாலே
பாடினே னிரண்டுபத்து பத்துங்கூட்டி
நேரப்பா முப்பதென்ற பொருளைக்காணூர்
நேரறிந்த சிவயோகிக் கிந்நூல்வேண்டுங்
காரப்பா சதாசிவத்தைக் கருத்துள்வைத்துக்
கருவான வுப்பெடுத்துக் கலசத்திட்டு
வாரப்பா சுத்தசலம் படிதானென்று
வளமான காரமது பலமும்ரெண்டே.
(* * * *)

End:

வரிசையுடனிந்நூலும் முப்பத்தொன்றும்
வகையுடனே வகையாக வெண்பத்தொன்றும்
உருசியுள்ள வமுதமென வு[ணி](ன்றிப்) பார்த்தால்
[வு](உ)ண்மையுள்ள வட்டகர்மஞ் சித்தியாகும்.
பருசுடைய பூரணத்தை வணங்கிப்போற்றிப்
பலகாலுங் கேசரத்தில் மனத்தைவைத்து
அருமையுட னமுதநிலைதனையே பெற்று
அருள்பெருகக்குருவினடியன்பா முற்றே. (கூ௧)

முற்றுமிதைப்பார்க்கையிலே மௌனமாக
மூவருடன் பேசாதே வாதாடாதே
சுத்தமுள்ள பெரியாரைத் தொண்டுபண்ணு
துவாத சாந்ததத்தில் மனந்துலங்கி நில்லு
சித்தமே சிவன்செயல்தான் அப்பாசொன்னேன்
திரிகோண முள்ளசத்தி யறிவாற்பாரு
உற்றபொருளிதுவல்லா லொன் றுமில்லை
ஊடாடும்வாசியை நீ வணங்குமுற்றே. (௩௧)

இராமதேவர் அருளிச்செய்த முப்பூ முப்பது எழுதி நிறைந்தது,

(கு-பு.)—

இதுவும் இரஸவாத நூல் என்னுஞ் சித்தர் நூலைச் சார்ந்தது. மூவருடக் காட்லாக்கு 275 (h) நம்பர் பிரதியில் வத்துள்ளதை ஒத்துள்ளது. முப்பது செய்யுள்களான் முற்றுப்பெற்றது. இராமதேவர் இயற்றியதாகும். இதில் இரஸவாதத்திற்குரிய சுண்ணவகை, பற்பவகை, லிங்க கட்டு முதலான கட்டு வகை, வைத்தியத்திற்குரிய தைலவகை, இலதம், ஆகிய அரிய பெரிய விஷயங்கள் பல மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இரஸவாதஞ் செய்கின் றூர்க்கு இ·து இன்றியமையாது.

(*e*) இராமதேவர் சோதிடம் பத்து.
IRAMADĒVAR ŚOṬIDAM PATTU.

Foll 181—185*a*.

Same work as that described under R. No. 266 (*d*) ante.

Complete.

Beginning:

இராமதேவர் சோதிட பத்து.

ஆதியிலே வேதியன்முன் அன்பாய்ச்சொன்ன
வருமறையின் பொருளான சோதிடத்தை
சாதியிலே முதலான ராமன் வாக்கியந்
தவறுமற் சத்குருவின் பாதம்போற்றி
சோதியிலே சகச்சோதி சோதியான
சோதிடமாம் நவக்கிரகமி ராசியப்பா
நீதியிலே நீடுலகில் நன்மை [தின்](தீ)மை
நேர்நிறைகள் சொல்வதற்கிந்நூல்பாரே. (௧)
பாரே யிந்நூலதுவும் பத்துஞ் சோதிடம் ?
பத்திகொண்டு கிரகநிலை ராசிபார்த்து
நேரேநீ சொல்லுவதால் நன்மையாகும்
நீடுலகிலிந்நூலை வெளிவிட்டக்கால்
சீராக மதிமறந்து பேய்போ லாவாய்த்
தீர்க்கமாய் நவக்கிரக நிலையைப் பார்த்து
கூறேடே குருபதத்தை வணங்கிப்போற்றிக்
குணமாக ராசியதைக் குறியாய்ச் சொல்லே. (௨)
(* * * *)

End:

ஆமென்ற கிரகநிலை ரவிபுதனும் வெள்ளி
    யமர்ந்திடுவார் ஒருராசியதனி லொருமாதம்
போமென்ற சந்திரனுள்ளி ரண்டேகாலாம்
    புத்தியுள்ள செவ்வாய்தான் மாதமொன்றரையாம்
காமென்ற சனியாண் டிரண்டரையாய் நிற்குந்
    தயவான வியாழ னோராண்டு நிலையாகும்
நாமென்ற நாகங்க ளிரண்டுமொன்றரையாம்
    நடுவான கிரகநிலை நலமறியமுற்றே. (௰௧)

இராமதேவர் அருளிச்செய்த சோதிடம் முற்றும். தேவீசகாயம்.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 266 (d) நம்பர் பிரதிபோன்றதே. பத்துப் பாடல்களால் ஆகியது. சோதிடத்தைச் சார்ந்தது. முற்றும் உள்ளது. இராமதேவர் இயற்றியதாகும். இதில் இன்னன்ன கிரகங்கள் இன்னன்ன இராசிகளில் இருந்தால் இன்னன்ன பலம் உண்டாகும் என்னும் விடயம் கூறியுள்ளது.

(*f*) இராமதேவர் பட்சபட்சி நூறு.
IRĀMADĒVAR PAÑCAPAṬCI NŪṞU.

Foll. 186—225*a*, Fol. 225 *b*—229 are left blank.

Similar to the work described under R. No. 189 (*c*) ante, by Rāma dēvar.

Complete.

Beginning:

ஸ்ரீராமதேவர் அருளிச்செய்த பஞ்சபட்சி நூறு.

ஆதியிலே [மு](ரா)மனருளைம்பூத வாக்கதனால்
    நீதிதரும் பஞ்சபட்சி நிலை[பி](பெ)றவே வாசியேகேள்
சோதியிலே புலத்தீசர் சொன்னபொருள் நான்கண்டு
    வேதியனும் வாலையுடை வி[ே ப](வ)கத்தாலே
சாதிகுலம் மாதியிலே மக்காவில் மகுடகொடிநாங்கட்டிச் ?
    சேதிபெற வமுர்த செங்கோல் செலுத்திப்
பாதிசரனதியிலே பரப்பிரம்ம நவசராசரங்கள் திசை
    வீதிபர ஞானவுடல் விளங்கும்பாரே (௧)

விளங்கும்பார் பரப்பிரம்ம . . . சோதியின்பாதம்
    விகடகணபதி பாதங் கந்தன்காப்பு
அளங்கும் பரஞானவுடல் விளக்கமான
    வாயிரத்தின் நவபீடமருளே காப்பு
களங்கமறுஞ் சித்தர்கட் குரையாய்நின்ற
    காவியந்தானயிரத்தின் கமலங்காப்பு
புளங்குகின்ற வென்குருதான் புலத்தியநாதர்
    புகட்டினதோர் பஞ்சபட்சிபுகழ் காப்பாமே. (௨)

*   *   *   *

ஆமப்பா தவமுனியே சொல்லக்கேளு
அருளுகிறேமிராமனப்பா வமுதவாக்கு
ஏமப்பா வென்குருவின் கடாட்சத்தாலே
யெடுத்தேனப்பா பஞ்சபட்சி நூறுஞ் சொச்சம்
ஓமப்பா வுடல்குறிதான் பஞ்சபூதம்
உத்தமனே [யன்](யைம்)பூத மதனுற்கேளு
நாமப்பா சொல்லுகிறேஞ் சித்தர்களுக்கு
நளினமென்ற வுடற்குறியி னன்மைகேளே. (௮)
(* * * *)

End :

செப்பினேம் வல்லூறு வரசதாகுஞ்
செயலான மயில்தூக்க மரணங்கோழி
அப்பினே மூ[ணே](ன்றே)கால் மயில்தானூணு
அருளினேங் கோ[ளி](ழி)நடை யரசுகாகம்
அப்பினேம் வல்லூறு மரணமென்க
மைந்தனே நாலே காலாந் தையூணு
தப்பினேம் வல்லூறு நடைதானுகுந்
தருவான மயிலரசு தண்மைபாரே. (௧௯)

பாரடாவென்மகனே தவமுனியே கேளு
பரிவான கோ[ளி](ழி)யது தூக்கமாகும்
காரடா காகமது மரணமென்க
கண்மணியே யஞ்சேகால் கோ[ளி](ழி)யூணு
ஆரடா காகநடை யரசுவாந்தை
யப்பனே வல்லூறு தூக்கமென்க
வாரடா மயில்மரணம் வெள்ளிவாரம்
வசனித்தோம் சனிவாரம் வளங்காண்பாயே. (௩௰)

வளமான சனிவாரம் பலத்தைக்கேளு
மைந்தனே (யொன்றே)காலாந்தை யூணு
மளமான . . . .
. . . .

(கு-பு.)—

இந்நூல் மூலவருடக் கேட்லாக் R. 189 (c) நம்பர் பிரதி போன்று பஞ்ச பக்ஷிகள் இருக்கும் நிலையை யறிந்து அதற்கேற்ப, இன்னன்ன காலத்தில் மரணம்-மாரணம் வசியம் ஆகிய இன்னோன்ன பலன்கள் சித்திக்கும் என்று சித்தர்களுக்கு அறியவேண்டும் பல அரியவிடயங்களை உணர்த்துவது. இராமதேவர் இயற்றியதாகத் தெரிகிறது. இதில் தொண்ணூற்றேழு பாடல்களே உள்ளன வாதலின் முற்றுப்பெறவில்லை. ஏடுகள் சிதைந்துள்ளன. இது சோதிட நூலைச் சார்ந்ததாகும்.

R. No. 948.

Palm-leaf. 13½ × 1¼ inches. Foll. 272. Lines, 8—10 in a page. Tamil. Injured..

Purchassed in 1927—28. from C. V. Jambulingam Pillai Mylapore.

(a) அகத்தியர் குருநூல்வைத்தியம் அறுநூறு.
AKATTIYAR KURUNŪL VAIDYAM ARUNŪRU.

Foll. 1—104.

A treatise on medicine attributed to Ahattiyar. It deals with the preparation of certain salts useful both for medicine and alchemy. This work is an abridgement of a bigger work entitled Ahattiyar Gurunūl.

Complete in 600 stanzas.

அகத்தியர் குருநூல் வைத்தியம் அறுநூறு. (வழலைப்பாகம்).

கருணைதரு மைந்தனே காப்புவாணி
    கலந்து விந்தச் சூத்திரந்தான் கருவாய்ப்பாடத்
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக்கேட்டுத்
    தெளிந்த குருநூலாகத் திரட்டிப் பாடக்
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்
    குபேரனென நிதிமருந்து கூடுங்கூடும்
பெருமை மிக்ககீர்த்தியுண்டாஞ் சித்தர்க்கெல்லாம்
    பெருநூலைக்குறுக்கியிந் தவறுநூறுந்தானே. (க)

தானென்ற ஞானமுதல் வாசி யோகம்
    தவறாது வாதமுதல் வைத்தியமுஞ் சித்தி
வானென்ற சிவயோக போதங் காணும்
    வைத்தியத்திற் கிதுவுயிர்தான் மருந்தின் வேகம்
நானென்ற வாணுவமு மாசை தள்ளி
    நடந்தக்கா லிந்நூலின் மகிமை மெத்த
தேனென்ற பாற்கடலுங் கருப்ப மாகுந்
    திரட்டியொரு கட்டியாய்த் தெளிந்த காப்பே. (உ)

தெளிந்தபெரு நூலெல்லா மாடிப் பார்த்துச்
    செப்புகிறே னிதிலேதான் வழலைப் போக்கு
பொழிந்தமழை யுவர்க்காட்டிற் சலத்தைப் பார்த்தால்
    புல்லன்றிச் சிவந்திருக்கும் பூமி நாதம்
கழிந்துமழை மீன்மேடம் பனியிற் பாரு
    கதிர்கதிராய்ப் புல்லையொட்டிப் படர்ந்து நிற்கும்
அழிந்துமழை யிடையிலேதான் பெய்யு முன்னே
    யப்பனே பூவையெல்லாம் வாரிக் கொள்ளே.

*   *   *   *
*   *   *   *

End:

பின்புசொல்வார் பூரணத்தின் பிலக்கும் வாசிதாரணையும்
நம்பிநூல்களுள்ள (வெ)ல்லாம் நலமாய்ப்பாரு மெனத்தருவார்
அன்பா மாயிரத்திருநூறு மதிலேபுதைத்த கருகுருவுங்
கம்பானுரை மேனோக்கிக் காட்டும் வாசிக்கைமுறையே. (௬௱௭)

முறையாம் வாதப் பொருள் காண
    மூட்டும் வழலை முடிப் போர்க்கும
கரையா மாசை மலை யேறிக்
    கடக்கும் ஞான வழி வசமும்
துறையா மெழுகு செந் தூரம்
    சூட்சு மங்கை யி லுள்ள வெல்வாம்
முறையாய்ச் சொல்வார் வைத்தி யத்துக்
    குடனே சூத்திர மைம்பதுண்டே. (சூ௱அ)

உண்டா மெழுகு வைத்தி யத்தில்
    ஒருநா ளொடக்க மெண்ப துண்டு
பண்டாங் குருநூற் (ை)ற[ன்](ம்)பதுக்குப்
    பகரும் வழலை [யன்](யைம்) பதுண்டு
வேண்டாம் நூல்க ளிது போ லும்
    விடாதே நூல்க ளொரு வருக்குங்
கண்டா லறுநூறு வெளி யாகக்
    காட்சி யெழுதி முடிந்த துவே. (சூ௱க)

குருகடாட்சம் உண்டாகவும். சித்தார்த்தி௵ ஆடிமீ உகஉ
அகத்தியனார் அருளிச்செய்த குருநூலறுநூறு எழுதிநிறைந்தது முற்றும்.

(கு-பு.)—

இந்த நூல் "அகத்தியர் குருநூல்" என்னும் நூலுக்குச் சுருக்கமாய் அறுநூறு செய்யுள்களால் அமைந்துள்ளது. அகத்தியரால் இயற்றப்பெற்றது. இதிலே வழலையையும் பற்றிக் கூறுவதாகத் தெரிகின்றது. வைத்தியத்தைச் சார்ந்தது. ஏடுகள் சிதைந்துள்ளன. இதன் பின்னர் இரண்டேடுகளில் மேக ராசாங்க பற்பமொன்றும், வாதத்திற்குத் தைலம் ஒன்றும் ஆய இவ்விரண்டும் புலத்தியற்கு உபதேசிப்பதாகச் செய்யுள் நடையான் வரையப்பட்டுள்ளன. அகத்தியர் இயற்றியதாகத் தெரிகிறது. அதன் பின்னரும் பஞ்சதீபாக்கினி லேகியம், பிருங்காமலகாதி தைலம், திப்பிலி ரசாயனம், வில்வாதித் தைலம் முதலியனவும், இன்னும் அரிதான மருந்துவகை பலவும் வசனத்தால் பத்தேடுகளில் எழுதப்பட்டுள்ளன. பின்பு வெற்றேடு ஒன்றுளது.

(b) அகத்தியர் அறுசுவைநிகண்டு.
AKATTIYAR AṞUŚUVAINIGHAṆṬU.

Fol. 114*a*—124*b*.

A dictionary of synonymous terms for various roots, unripe fruits, and greens that give the six different kinds of taste and flavour; By Ahattiyar.

Complete.

Beginning:

பூவார் சிரகிரியிற் பொன்னி[ன்] வரவழைத்த
மாவாரண முகனை வாழ்த்தியே—நாவார

ஆறுசுவை தேர்நிகண்டி ஞரியத்தைச் செந்தமிழாற்
றேறுசுவை செய்தேன் தெரிந்து. (க)

இரங்க விளங்கிரு தந்திலப் போகம் ?
நீரஞ்ந்தாவரி தேன் நீள்பனைகர்ச்—சூரமதுர
நானபலா சீதைநன் ஞரி வேர்ப்பலா கோன
லின்பமே வணக்கிக் கூறு. (உ)

கூறினிளி[லு]ப்பை மலர்க்கூத்தன் குதம்பை யெள்ளு
தாறினக்கதலி முனிசர்க்கரையுஞ்—சீறிநெல்லிக்
கன்னிகொடி வெள்ளரிக்காய் காஞ்சோரிவேர் மாகாளி
பன்னியிடில் வாருணி யம்பார். (ங)

* * * *
* * * *

End:

கம்புவாரி சங்கடல் சங்கின் பேராகும்
வெம்புமனலாங் குன்மம் வீட்டியிடுங்—கும்பி
யனலின்றி யன்ன மருவிருக்கு மந்தம்
புனலின்றி வி[ழ](ட) சுரமும் போம். (ாஉ௰)

சுரத்தகமுங் குரிசமுஞ் சொற்காவி கற்கே
யுரத்த துவராங்குளுமை யொன்றுமே—யிரத்தம்
விளையும் பைத்தியமு மேல்வெப்பு மோட்டி
யளையி னிடையே புகுதலாம் (ாஉக)

அக்கினியின் வல்லபத் தோடாந் தேவதூபமே
[னயிக்] ? க்குமொழி குங்கிலியத்தின் பெயரே—தககுணந்
தம்பன முட்டினமுந் தக்கதுவரோ டினிப்பாங்
கம்பனமாய்ப் போமலகை காண். (ாஉஉ)

(ஷட்ரஸ நிகண்டு.) அறுசுவை நிகண்டு முற்றும்.

Colophon:

பொதிகைமாமலையில் எழுந்தருளியிராநின்ற அகத்தியமா முனிவர் அருளிச்செய்த மணி வெண்பா சஹத்தில் முதல் சருக்கம் ஷட்ரஸ நிகண்டு. எழுதி நிறைத்தது. முற்றும்.

(கு-பு.)—

இந்த நூல் உலகிலுள்ள காய் கனி கிழங்கு அடகு முதலிய அறுசுவை பதார்த்தங்களை எடுத்துக்கூறி, அவற்றின் பெயர்களையும், குணங்களையும், சுவையினையும் நன்கு உணருமாறு தெளிவாக உணர்த்துவது. இது சொற் பிழை எழுத்துப் பிழைகளுடன் காணப்படினும் 'வெண்பாவான்' அமையப் பெற்று இருப்பதால், ஒருவாறு சீரிதாக்கலாம் ஆகலான் இது தமிழுலகற் கின்றியமையாத தொன்றாகும்; அகத்தியர் இயற்றியதாகத் தெரிகிறது. முற்றும் உளது. நிற்க, இஃது ஒரு பெரிய நூலின் பகுதியெனத் தோற்றுகிறது. சிதைந்துள்ளது. இதுகாறும் இஃது அச்சிடப் பெறவில்லை. மிகவும் அரியது.

(c) பேஷஜகற்பம்.
BHEṢAJAKAṞPAM.

Foll. 125—132.

A work purporting to give in verse the subjects dealt with in Sanskrit by Vāgbhaṭa in his Bhēṣajakalpa.

Complete in 135 stanzas.

Beginning:

பேஷஜ கல்பம்.

திருவார் சிரகிரிவாழ் செவ்வந்தி யானை
மருவார் கழ[லை](ல்)பதம் வாழ்த்தியே—தெருளவே
வாகடர்தம் பேடசத்தை வண்டமிழின் வெண்பாவாய்ப்
பாகடரச் சொல்வேன் பரிந்து. (க)

*   *   *   *

செஞ்சாலி நான்குநிறை செங்குன்றி யவ்விரண்டு
மஞ்சாடியாக வகுத்தார்கள்—அஞ்சாமற்
றூக்கிலஞ்சு மஞ்சாடி துய்யநிட்கங்கால் நான்கி
னூக்க விராகனெடை யொன்று. (௩)

ஒன்றியிட்டு நிட்கந்தான் ஓரிரண்டு கோலமாந்
துண்[டு](று) மிருகோல் நிறைசொன்னமாம்—நன்றாகச்
சொன்னமிரு பங்குதுலை மானிகை யிரட்டி
யுன்னப் பலமா முவந்து (ச)

*   *   *   *

உவந்தபலநூறு கொண்டா லோங்கு துலாமா
மிவந்த துலாந் தூக்கமிருபா—னுவந்திட்டால்
பாரமென்பார் நல்லோர் பகர்ந்தார் பலநிறையை
யாரவினிச் சொல்வா ரளவு. (௫)

*   *   *   *

End:

எண்ணெய்க் கெல்லாமதிக மெள்ளெண்ணெய் மூத்திரத்தில்
எண்ணும் பசுவி னீரேற்றமாம்—உண்ணுமுப்பில்
இந்துப்பு முக்கியமா மின்பாலி லான்பாலாந்
தந்தநெய்யிலா னெய்யே தான். (கஙஉ)

பாத்திர லட்சணம்:

கோதமுதலாய் மருந்து கொள்ளுதற்குப் பொன்வெள்ளி
சீதகலுங் கஞ்சமுதல் செய்யலாம்—ஏதேனும்
வள்ளத்தில் வார்த்தருந்தி வாம பாகத்தினிடை
மெள்ளக் கவிழ்க்க விளம்பு. (கஙங)

*   *   *   *

*   *   *   *

தாம்பூலங் கன்னிகையுந் தாரணியு நன்மருந்தும்
ஓம்புஞ் சாவக்கிராம மோரைந்து—மேம்பலினல்
கொள்வோன் கொடுப்போனுங் கூறிலிரு வோர்க்கும்
விள்வாய் பலஞ்சரியா மென்று. (கரு௫)

பேடசம் முற்றும்: தட்சிணாமூர்த்திபாதமே துணை.

(கு-பு.)—

இந்நூல், வடமொழி வாக்படர் பேஷஜ கல்பத்தைத் தமிழின் மொழி பெயர்த்ததாக அறியக்கிடக்கின்றது. வெண்பாவில் அமைந்துள்ளது. நூற்று முப்பத்தைந்து பாடல்களால் முற்றுப்பெற்றுள்ளது. இது 'சிந்தா மணி நாலாயிரம்' என்னும் நூலின் ஒரு பகுதியென்று ஊகிக்க விருக்கிறது. இதில் பலம், வராகனெடை, குன்றியெடை முதலிய அளவைகளும், பல அரிய பெரிய மருந்துகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் இன்னாரென்று தெரியாமலிருப்பினும் அகத்தியராய் இருக்கலாம் என்று தோன்றுகிறது. சிறிது சிதைந்தது.

(d) சிந்தாமணி (தாதுநிதானம்).
CINTĀMAṆI (DHĀTUNIDĀNAM).

Foll. 133—212. Foll. 213—227 are left blank.

A treatise on medicine in Veṇbā kind of composition dealing with the diagnosing of diseases by feeling the pulse, and with the preparation of various kinds of medicines, medicinal oils, pills for curing those diseases. The work is based on the Sanskrit Vaidya Cintāmaṇi.

Beginning :

ஒருவாயினல் வாய்மத மூன்றி லோர்
இருதாளின் முத்தாளி சைய—வருமோர்
களிற்றை யினிதுறக்கக் கலவியீர் போத்தா
வெளிற்றை யினி துரைக்கவே. (க)

தோற்றுமிம்ப ரும்பரெனச் சூழ்ந்தமர ராயிருப்பார்
சாற்றும் வைத்திய சிந்தாமணியைப்—போற்றியே
வெண்பாவாய் யானும் விளம்புதற் கென்னுவில்
வெண்பாவாய் மேவாய் விரைந்து. (௨)

எல்லாச் சமயத்தருக்கு மியாக்கை யிணை
யல்லாப் பயனில்லை யாமாகில்—வல்ல
வைத்திய சிந்தாமணியை வாழ்த்த விமையோரும்
தைத்தியரும் வானவருந் தான். (௩)

* * * *

அகத்து நோயைக் க[ரு](ர)தலா மலகம்போல்
பகுத்தறிவீர் நாடி பரீட்சை—தொகுத்தநீர்க்

கட்டுவகை சொல்விழிகள் காண்டமல மூத்திரநா
வெட்டு வகையாலு மறிவீர். (௬)

* * * *
* * * *

End:

உன்னுந் திரிகடுகோ டோர்திப்பிலி மூலம்
மன்னுசிறு நாகப்பூ வந்தவகை—குன்னுபலங்
காவி[துதன்](வற்றின்) தூள்கலந்தே காணமலைத் தேன்கலந்து
கோலு மிலேகியமாய்க் கொள் (௱உ௬)

கொள்ளீர் க்ஷயவாதங் கூ[ரா](ரு)மல பித்தந்
தள்ளியிடு மென்சுவாசங் காசந்—துள்ளுகுன்மம்
பாண்டடி சாரங்கிராணி பாழ்குசிகை வாய்வு
தூண்டருசி யத்தி சுரங்கள். (௱உ௭)

சுரங்கள் கிருகிருப்புச் சூழ்ந்தசத்தி பித்தங்
கரங்கள் திருவனையீர் காணும்—நிரந்தரம்போம்
மேலாஞ் சரபங்கி வில்வாதி லேகியமாம்
மாவா யுகந்தருந்தாய் வாழ்த்தி· (௱உ௮)

வேறு:

* * * *
* * * *

(கு-பு.)—

இந்த நூல் வடநூல் வைத்திய விடயங்களுக்குத் தமிழில் மொழிபெயர்ப்பாய் அமைந்ததென்று மாத்ரம் தெரிகிறது. வெண்பாவால் அமைந்தது. இது இத்துணைத்தென்றும் இன்னார் இயற்றினார் என்னுமதாய ஒரு செய்தியும் செவ்விதின் புலப்படவில்லை. இதில் அநேக பிரிவுகள் உள. அவை யாவன:—தாது நிதானம், சரக்கு சுத்தி, மாத்திரை வகை, வாத நிதானம், பித்த நிதானம், வாதத்துக்குத் தைலவகை, எண்ணெய் வகை என்பனவாம். இது வைத்தியஞ் செய்கின்றார்க்குப் பெரிதும் பயன்படும். அருமையான முறைகள் பல பொதிந்துள்ளன. அரைகுறையாய் இருப்பதால் நூல் முடிவுபெறவில்லை. அப்பகுதிகளையும் எழுதுவதற்கே சில ஏடுகள் வெற்றேடுகளாய் விடப்பட்டுள்ளன. அகத்தியரே இந்நூலை இயற்றியிருக்கலாமோவென ஐயமுறக் கிடக்கிறது. ஆராய்ந்துணரின் புலனும்.

(e) அகத்தியர் குருநூல் அறுபது.
AKATTIYAR KURUNŪL ARUPATU.

Foll. 228—239*a*, fol. 239*b* is left blank.

From the first stanza, it is made out that this work is an abridgement in 60 stanzas by Ahattiyar of his bigger work in 600 stanzas on alchemy.

Complete

Beginning:

அகத்தியநாயனார் அருளிச்செய்த குருநூல்
அறுநூற்றுக்குச் சூத்திரம் அறுபது. குருசெய்நீர்:

ஆதியென்ற பூரணமா மகண்டத் துள்ளே
யாத்தாளைத் தொழுதுநின் றைங்கரனைப் போற்றிச்
சோதியென்ற வறுநூறும் பெருநூல் தன்னைச்
சூத்திரந்தா னறுபதுக்குள் சுருக்கி வைத்தேன்
சோதியென்ற கருகுருவும் வெளிய தாகத்
திறந்திட்டேன கைப்பாக மருந்தின் பாகம்
வீதியென்றேன் கௌணத்தின் நாட்டம் போலே
விளைந்தமணி யி[ன்னா]ந்நூல்தான் சொல்லக் கேளே. (க)

கேளப்பா குருச்செயநீர் வகையைத் தானுங்
கேசரம்போல் மறைத்து வைத்தார் சித்தரெல்லாம்
வாளப்பா மறைப்பென்ன மென்று கேட்டால்
மகத்தான சவுக்கார மென்றே சொன்னார்
வேளப்பா வெரித்தசிவன் பாதத் தாணை
வெளியாகக் கருமறைப்பைச் சொல்ல வேண்டாம்
நாளப்பா ெ[னா](நா)டிக்குள்ளே செய்யு மார்க்கம்
நன்றாக வூசிநீர் படிதான் வாங்கே. (௨)

* * * *
* * * *

End:

அங்கென்ற புரியட்ட முத்து வாசி
யாதார மேல்மூலத் தடக்க மங்கே
பங்கென்ற மனம்புத்தி யாங்கார மூன்றும்
பஞ்சவர்க ளொத்துநின்ற பதியு மங்கே
சங்கென்ற பற்பந்தி கடனா டேறித்
தவசிருந்த குகையூடுத் தலமு மங்கே
வங்கென்ற கேசரமு ஞானவழி மார்க்கம்
மகத்தான முத்திகொண்ட வழிதா னங்கே. (௫௧)

வழியான சுடர்கோடிக் காந்தி மீறும்
மதியிரவி யொன்றான மா(ர்க்)கந் தோ(ன்று)ஞ்
சுழியான வடக்கக் கமல மாது ?
துரியமென்ற சாகரந்தான் (சுற்றி) யேறிக்
குழியான மனமுமொன்றாய்ப் பத்தி பற்றிக்
கூர்மைதரு மெஞ்ஞான வதீத முற்று
விழியான மறைகண்ட சோதி யெல்லாம்
வெளியான சூத்திரத்தின் விபர முற்றே. (௬௰)

* * * *

Colophon:

இரத்தாக்ஷி ௵ புரட்டாசி ௴ ௨௰௨ மங்களவாரம் துவாதசி மகா நட்சத்திரத்தில் அகத்தியமா முனிவர் அருளிச்செய்த வறுநூற்றுக்குச் சூத்திரம் அறுபது எழுதி முற்றும்.

(கு-பு.)—

இச்சிறுநூல், அகத்தியனார் இயற்றிய "குருநூல் அறுநூறு" என்னும் நூலுக்குச் சுருக்கமாய் அறுபது சூத்திரங்களாய் அமைந்தது என்று இந் நூலின் முதற்பாட்டான் அறியக்கிடக்கிறது. நூலாசிரியர் அகத்தியனார் என்றே தெரிகிறது. முற்றும் உள்ளது. இரஸவாதத்தைச் சார்ந்தது. பிழைகள் பொதிந்துள்ளன.

(*f*) அகத்தியர் முன்னெண்பது.

AKATTIYAR MUNNEṆPADU.

Foll. 240*a*—253*a*. Foll. 253*b*—272 are left blank.

Same work as that described under R. No. 268(*g*) *ante*.

Complete.

(கு.பு.)—

இந்நூல், மூவருடக் காடலாக் 268(*g*) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும்; இதை இந்நூலாசிரியர் தாமே சித்தர்களுக்கு இன்றியமையாத தொன்றென்று சிறப்பித்துக் கூறுகிறார். இப்பிரதியில் முற்றும் இருக்கிறது. ஏடுகள் சிறிது சிதைந்திருக்கின்றன. இந்நூல் அச்சிடப்பெற்றிருக்கிறது. இது முடிந்த பின்னர் சில ஏடுகள் வெற்றேடுகளாயுள்ளன.

R. No. 949.

Paper. 8½ × 7 inches. Foll. 264. Lines, 20 on a page. Tamil. Fair.

Presented in 1927-28 by M.R.Ry. Rājagopala Mudaliyār Avargal, Madras.

(*a*) பூரணாநந்தோதயம்.

PŪRAṆĀNANDŌDAYAM.

Foll. 1*a*—124*b*.

A treatise in praise of Kaṇṇuḍaya vaḷḷalar by his disciple Śivalinga Nāyanar who, by way of expressing his experience of bliss and the greatness of his Guru, brings out the truths of Śaivism.

Complete.

Beginning:

மஹான் சாங்கு சித்த சிவலிங்க நாயனார்
பூரணாநந்தோதய மாலை ;—

காப்பு :—

வேதமுத லாகமங்கள் வித்தாய் நின்றும்
விளைவித்துப் பயனுக்கு மெங்கோன் நாதன்
சாதனமே செய்வித்தோன் தாயே யானேன்
தந்தைகுரு வருண்மயமுந் தானே யானேன்

பூதபேதங்களெலாந் தானேயாகிப்
பூரணமா நிறைந்த செழும்புனிதமோன
நாத கரிமுகவனறு முகத்தோன் நற்றாள்
நாடினர்தந் தாண்மலரெந்நாளுங் காப்பாம்.

குளகம் :

பத்து சிறுவயதினளவிற் சிறந்தசாத்திரம்
பார்த்து பதின்மூன்றளவிற் பதினெண்பேர்கள்
சித்ததீத போதமெலாந்தேடி யாய்ந்து
தெளிந்து பதினறளவின மனுவிக்ஞான
சுத்த முதுப்பனுவல்பல விருபானுள்ளே
தோய்ந்து தள்ளித் தத்துவத்துட்பிரயோக பிரமம்
உற்றவிடம் யாங்கனெவே தேடித்தேடி
உளமயர்ந்து தலைமேலுன் மத்தனாகி (௨)

பித்தனைப்போலிருந்தோன் ஐயோ பேதாபேதப்
பிரமிப்பையோர் கணத்திற் பிரிக்குநாதன்
சித்தானதின்னெறிவி லொடுக்கஞ் சொல்லுந்
திருஞானசம்பந்தர் மரபில்வந்த
கர்த்தனே கண்ணுடைய வள்ளலே நின்
கைகாட்டிக் கண்ணிமைபோற்காத்து ஆண்டு
நித்தியமு மிடைவிடாதுதந்தும்பி
நெறியைப்போலென்றனையு நிதித்தியாக்கி (௩)

சத்தியுடன் பரமசிவந்தானே யாகிச்
சாதனத்தின் குறியுடனே தமியனேற்கு
முத்தான தீட்சையது ரகசியார்த் தந்தான்
மொழிந்தாரே முப்பதுக்குண் முடிந்தபின்னர்
பத்தான பத்துவயதுள்ளாள ஆத்தாள்
பாற்கடலை யுண்டன்றோ பரமஞான
வித்தாம் பூரணாநந்தோதயப் பேர்கொண்ட
வேதாந்தநூ லெளிதின் வித்தென்மன்றோ (௪)

End :

வாழி விருத்தம்.

வாழ்கவே வள்ளல்பாதம் வையகமுழுதும்போற்ற
வாழ்கவே சாதனத்தின் வழிதனில் நிற்போர்வாழ்க
வாழ்கவே குமரேசன்றாள் மாட்சிகண்ணுடையவள்ளல்
வாழ்கவே யடியார்க்காக வந்தெழு மவுனநாதன்
வாழ்கவே விசாரஞான மரபதைப் பிரயோகஞ்செய்க
வாழ்கவே யண்டகோடி மன்னுயிர் பலவுமென்றாம்
வாழ்கவே பூரணாநந்தோதய மகிமைநூலே.

பூரணாநந்தோதயம் முற்றிற்று.

(த-பு.)—

‘இப்பூரணாநந்தோதயம்’ என்னும் நூல், ‘திருஞானசம்பந்தர்’ என்னுஞ் சைவசமய குரவரது மரபில் உதித்தருளிய ‘கண்ணுடையவள்ளலார் எனும் ஆசிரியர்மீது, அவருடைய சீடராம் சிவலிங்கநாயனாரால் தமது அநுபவத்தில் உண்டான பூரணாநந்தத்திற்குப் போக்குவீடாய்த் துதிரூபமாகப் பாடபெற்றது ; ஆதலின் இதற்கு இப்பெயர் காரணப்பெயராய் அமைந்துள்ளது. இஃது இந்நூலாசிரியரைத் தடுத்தாட்கொண்ட கண்ணுடைய வள்ளலாரது பெருமையை உணர்த்தும் வாயிலானே சைவசமயத்தில் உள்ள நுண்மைப் பொருள்களை விரித்துணர்த்துகிறது. இது அச்சிடப்பெற்றிருக்கிறது. ஆயினும் இந்நூலினது அருமை நோக்கி இதை வைததிருந்தவர் இது கிழிந்துவிடவே இதைக் கையெழுத்துப் பிரதியொன்றாக எழுதி வைத்துக்கொண்டார் என்று தெரிகிறது. ஊடூடே அச்சிட்ட இந்நூலின் மூலப்பகுதியின் துண்டுகளும் உரையினது சிறு துண்டுகளும் ஒட்டிவைக்கபெற்றிருக்கின்றன. இந்நூல் முடிந்தபின்னர் 125 முதல் 131 வரையில் ஏழு ஏடுகளில் ஞானவாசிட்டச் சுருக்கம்’ என்னும் நூல் ஒன்று உரையுடன் பாயிரம் வரையில் எழுதப்பெற்று அரைகுறையாய் இருக்கின்றது. அதுவும் இக்காட்லாக்கில் R. 919 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே ; இதில் விரிவான பிரதி பதவுரையொன்று அதில் இல்லாதது இருக்கிறது.

(b) அகத்தியர் அடுக்குநிலை போதம்.

AKATTIYAR AḌUKKUNILAI BŌDHAM.

Foll. 131*b*—134*a*.

A treatise of a philosophical nature attributed to Ahattiyar. This work has been printed.

Complete in 10 stanzas.

Beginning :

அகத்தியர் அருளிச்செய்த அடுக்குநிலைபோதம் :

சொல்லிறந்த விடமெங்கே முப்பாழெங்கே
துவாரபாலகரெங்கே முதற்பாழெங்கே
நல்லசங்கு நதியெங்கே வைகுந்தமெங்கே
நாரணனுமாலிலைமேற் படுத்ததெங்கே
அல்லல்படும்ஐம்பூத மொடுக்கமெங்கே
ஆறஞ் சிதழிரண்டு முளைத்ததெங்கே
சொல்லவல்லாருண்டானால் அவரைநாமும்
தொழுதுகுருவெனப் பணிந்து வணங்கலாமே. (க)

உந்தியெனும் நிலையெங்கே யறுகோணமெங்கே
ஓங்கார நிலையெங்கே யுற்றவிடமுமெங்கே
மந்திரமுஞ்சாத்திரமும் பிறந்ததெங்கே
மறைநூலும்விரித்த வயன்தானுமெங்கே

முந்திவருங்கணபதியும் பிறந்ததெங்கே
முக்கோணமுனையெங்கே யடிதானெங்கே
இந்தவகைபொருளறிந்து சொல்வார்தம்மை
இறையவனென்றேகருதி யியம்பலாமே. (௨)

End:

ஆதி கதிர்சந்திரனும் பிறந்ததெங்கே
அவரொடுங்கிநிற்குமது விடமுமெங்கே
சாதிபலவொன்றாகக் கண்டதெங்கே
சத்திசிவம்என்றும் பிரியாததெங்கே
ஓதியுணர்ந்தேபூசை மறைந்ததெங்கே
உச்சிட்டரிட்டத்தே விடமுமெங்கே
சோதிபோல்ஞானமொன்று பெற்றபேர்கள்
சொல்லியதெல்லாமுடலிற் சொல்லுவாயே. (௯)

இருள்பிறந்த விடமெங்கே யொடுங்கிடமுமெங்கே.
இரண்டுதிருச்சங்குநின்ற விடமுமெங்கே
அருள்பிறந்துபாடிநின்ற விடமுமெங்கே
அறுத்தடைந்த வாசலொன்றுகண்டதெங்கே
திருப்பிறந்தவிடமெங்கே யெழுகிணறுமெங்கே
திருக்கிணற்றை யிறைக்கின்ற வேற்றமெங்கே
விருப்பமுடன் அடுக்கு நிலைபோதகத்தை
விளம்பினேன் மெய்ஞ்ஞான வறிவுளோர்க்கே, (௰)

அகத்தியர் அடுக்குநிலைபோதம் முற்றும்.

(கு-பு.)—

இந்த நூல் ஞானவிஷயமானதென்றும் சித்திபெறுபவர்க்கு இன்றியமையாதென்றும் தெரிகிறது. பத்துச் செய்யுட்களால் அமைந்திருக்கின்றது. முற்றுமுளது. இஃது அச்சிடப்பெற்றிருக்கிறது.

(c) ஞானரத்தினக் குறவஞ்சி.

ÑĀNARATTINAKKUR̤AVAÑCI.

Foll. 134*a*—139*a*.

A treatise of a philosophical nature dealing with the Ñānam of the Siddhars. It is in the form of questions put by a man of the Kuravai caste with suitable replies given by a woman of the same caste.

Complete.

Beginning:

ஞானரத்தினக் குறவஞ்சி;

காப்புச் செய்யுள்.

பொன்னுலகு பொருந்துமனப் பொருளறியத்தண்மதிய
மின்னுலகில் மெஞ்ஞானம்விளங்கக் குறவஞ்சிதன்னை
உன்னுமத்தன்னினைவி லுன்னியுதிப் பொருநான்காய்த்
தன்னிறையைத் தன்னினைவாய்த் தரிப்பதுவேகாப்பாமே.? (௧)

139

ஆதிக்குமுன்ன மநாதியுமென்னடி சிங்கி !
அந்தக்கருக்குழி மூந்தவிருளறைசிங்கா !
ஆதியாவந்தவரும் பொருளேதடிசிங்கி !
அதுசோதியிலாதி சொரூபமாய் எழுந்ததுசிங்கா !
சோதியிலாதி சொரூபமான தெப்படிச்சிங்கி !
அதுவேதமாய் முப்பொருளொன்றாய் முடிந்ததுசிங்கா !
முப்பொருளென்றுநீ முன்சொன்னதாரடிசிங்கி !
அதுஎப்படி உலகத்திலிப்படியுருவானேம்சிங்கி !
அது அப்பன்தன்னட்புக்கு வொப்பியதாயாலே சிங்கா !

*　　　*　　　*　　　*

*　　　*　　　*　　　*

End:

இடகலைபின்கலை யென்னத்தைச் சொல்லலாஞ்சிங்கி !
அது இடகலைசந்திரன் பின்கலைசூரியன் சிங்கா !
என்னத்தைச்சொல்லலாம் சந்திரன் சூரியன்சிங்கி !
அது இடமவலமாகவெழுத்தொடு மூச்சடா சிங்கா !
சந்திரன்சூரியன் ஒன்றான தெவ்விடம் சிங்கி !
அது கலையும்பொருந்து நடுச்சுழிமுனை சிங்கா !
என்னத்திலே பாலமேறிநின்றாடுகிறது சிங்கி !
அது உன்னுக்குள்வாசி நடனப்புரவிமேற் சிங்கா !
அது எற்றவும்ஆற்றவும் இணங்கிநின்றாடிப்பார் சிங்கா !
மாற்றிப்பிடிக்க மருந்தென்ன சொல்லடி சிங்கி !
அது மாளாமல்மாண்டு மறந்துஇருப்பதே சிங்கா !
அட்டகசங்கள் அறிந்திட மெவ்விடம் சிங்கி !
அது எட்டுவிதமாய் எழுதும்பலனடா சிங்கா !
உற்ற ஞானப்பொருள் உத்தியாய்ச் சொன்னதார் சிங்கி !
அது உற்றமாபீரு முகம்மதுரைத்தது சிங்கா !

ஞானரத்தினக் குறவஞ்சி முற்றும் :

(கு-பு.)—

இப்பிரபந்தம், ஓர் குறவன் ஒரு குறத்தியைக் குறித்துச் சித்தர்கள் கூறிய நூல்களில் உள்ள விஷயங்களை மேற்கொண்டு வினவுதலும், அதற்கு அவன் விடை யிறுத்தலும், ஆக வமைந்து சித்தர்களுக்குரிய ஞான விஷயங்களை விளக்கிச் செல்கின்றது ; இங்ஙனம், பாடும் செய்யுள் வகைக்குக் 'குறவஞ்சி' என்று பெயரிட்டு வழங்குவது தமிழர்களது பண்டையகால வழக்காகும்.

(*d*) வைராக்கிய சதகம் உரையுடன்.

VAIRĀGGIYA ŚATAKAM WITH COMMENTARY.

Foll. 139*b*—164*b*.

Same work as that described under No 1611 of the Tamil Descriptive Catalogue Vol. III.

Incomplete.

(கு-பு.)—

இந்த நூல் டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கின் 1611-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இதில் மூலமும் சேர்ந்திருக்கிறது. முதல் பத்தொன்பது பாடல்கள் வரையுமே இருக்கின்றது. நூலாசிரியர் 'திருத்துறையூர்' சாந்தலிங்கசுவாமிகளும், உரையாசிரியர் திருப்போரூர் சிதம்பரசுவாமிகளும் ஆவர்.

(e) அவதூத கீதை உரையுடன்.

AVADHŪTAGĪTAI WITH COMMENTARY.

Foll. 165*a*—203.

